198

ஆதாரக்கல்வி என்றால் என்ன?

198/1-61

மு. அருணாசலம்

TN3
N48-4
108001

ஆதாரக்கல்வி ஆசிரியர் துணைப்புத்தகம்-4

ஆதாரக்கல்வி என்றால் என்ன?

மு. அருணாசலம்

காந்தி வித்தியாலயம்

திருச்சிற்றம்பலம் - குத்தாலம்

1960

முதல் பதிப்பு : 10-12-1948
இரண்டாம் பதிப்பு : 1- 3-1952
மூன்றாம் பதிப்பு : 1- 2-1957
நான்காம் பதிப்பு : 2-10-1960

TN3
N48-4

விலை ரூபா இரண்டரை

ARCHIVES LIBRARY
108001

சாது அச்சுக்கூடம், மயிலாப்பூர், சென்னை-4

முகவுரை

ஆதாரக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கலாசாலையை நான் நடத்தி வந்த காரணத்தால், "ஆதாரக் கல்வி என்றால் என்ன ?" என்று என்னை அனேக ஆசிரியர்களும் பயிற்சி பெற்ற மாணுக்கரும் காந்தியத் துறையில் உழைத்த நிர்மாணத் தொண்டர்களும் மற்றையோரும் கேட்டு வந்தார்கள். தென்னார்க்காடு ஜில்லாவில் 1947 - 48 வருஷத்தில் இதுபற்றி வாரந்தோறும் ஆசிரியர், மாணுக்கர், கல்வியாளர் பலருக்கு இதுபற்றி நான் பேசியதுண்டு. ஒவ்வொரு தடவையும் ஒவ்வோர் அம்சத்தை வைத்தே பேச முடிந்தது. கேட்டோருக்கு அப்போது பூரண விளக்கம் ஏற்பட்டிருத்தல் சாத்தியமில்லை. இதை எண்ணி எல்லாக் கருத்துகளையும் ஒருசேரத் தொகுத்து 50 பக்கங்கொண்ட ஒரு சிறு புத்தகமாக 1948இல் வெளியிட்டேன். ஆதாரக் கல்வி அதிகம் பரவாத காலம் - பயிற்சிக் கலாசாலைகள் மிகச் சிலவே இருந்த காலம். ஆதாரக்கல்வி பற்றி அன்று, காந்தியடிகள் எழுதிய கட்டுரைத் தொகுதியும் ஆசாரிய கிருபலானி எழுதிய சிறு புத்தகமும் தவிர, ஆசிரியர்களுக்கு உதவக் கூடிய வேறு புத்தகம் எதுவும் இல்லை. அந்த ஆரம்ப நிலையில் பலருக்கு அச்சிறு புத்தகம் மிக்க உதவியாய் இருந்தது. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களுக்கும் மாணுக்கர்களுக்கும் அது நிரம்பப் பயன் பட்டது. பின் வந்த அனேக பயிற்சிச் சாலைகளில் அதை ஒருபாடப் புத்தகம் போல வகுப்பில் நடத்தியதையும் நான் கண்டிருக்கிறேன். இன்றும் அதற்குத் தேவை இருப்பதால் அதனுடைய நான்காம் பதிப்பை இப்போது வெளியிடுகிறேன்.

இப் பன்னிரண்டு வருஷங்களில் இப் புதுமுறைக் கல்வி எவ்வளவோ மாறுதல் அடைந்திருக்கிறது. இந்திய

அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்கள் யாவும், ஆதாரக்கல்வியே தங்கள் கல்வி முறை என்று பிரகடனம் செய்துள்ளன. தொடக்கத்தில் ஏற்பட்ட காந்தியக் கல்வி முறையிலிருந்து இன்று இக்கல்வி பெரிதும் வேறுகப் போயிருக்கிறது. காந்தியக் கருத்துக்களும் மாறுதலடைந்த கருத்துக்களும் ஓரளவு இப் புத்தகத்தில் தழுவப் பெற்றுள்ளன. ஒரே கருத்து, விளக்கத்துக்காக வெவ்வேறு தலைப்புக்களில் பல முறை கூற நேர்ந்திருக்கலாம். தெளிவு ஒன்றே இதன் நோக்கம்.

இப் புத்தகம் காலக் கிரமத்தில் வளர்ந்து இவ் வுருவம் பெற்றிருக்கிறது. பயிற்சிச் சாலைக்கான பாடப் புத்தகமாகவோ, வேறு பரீட்சைக்கான வினுவிடைப் புத்தகமாகவோ, இது எழுதப் பெறவில்லை. தத்துவ விளக்கமே இதனுடைய நோக்கம். நிர்வாகம் இதனுள் கூறப் பெறவில்லை.

இதைப் படிப்போர், கிருபலானி எழுதிய இன்றைய பேச்சு - ஆதாரக்கல்வி, ஆர்ம்ஸ்ட்ராங் எழுதிய வாழ்க்கைக்கான கல்வி என்ற இரு சாஸ்திர புத்தகங்களைப் படிப்பார்களாக. இந்நூலைப் படிக்குமுன், நான் எழுதிய ஆதாரக் கல்விக்குச் சோதனை என்ற தடைவிடைகளடங்கிய கட்டுரைத் தொகுதியும் படிக்கத்தகுந்தது.

மு. அருணுசலம்

உள்ளுறை

		பக்கம்
அறிவு பின்னமல்ல : பூரணமான ஒன்று	...	60
ஆங்கிலப் பாடம்	...	112
ஆசிரியர்	...	185
ஆணும் பெண்ணும் சேர்ந்து படித்தல்	...	50
ஆதாரக்கல்வி—	...	25
கலைத்திட்டத்தின் சிறப்பியல்புகள்	...	85
தோற்றுவாய்	...	27
கெர் கமிட்டி	...	34
பண்டைய வரலாறு	...	27
வர்தாக் கல்வி மகாநாடு	...	31
ஜாகிர் ஹுசேன் கமிட்டி	...	33
பாடத்திட்டம்	...	94
பிரிவுகள்	...	87
பெயர்	...	37
பொருள்	...	38
மூல தத்துவங்கள்	...	39
கல்வித்துறை அடிப்படை	...	48
சமூக அடிப்படை	...	41
பொருளாதார அடிப்படை	...	45
மனோதத்துவ அடிப்படை	...	46
ஆதாரக்கல்வியில் ஒழுங்கும் கட்டுப்பாடும்	...	118
ஆதாரக்கல்வியில் கண்காட்சி	...	173
ஆதாரக்கல்வியில் பரிசும் தண்டனையும்	...	121
ஆதாரக்கல்வியில் புத்தகம்	...	147
ஆதாரக்கல்வியின் சிறப்பியல்புகள்	...	194
ஆதாரக்கல்வியும்—		
உலக சமாதானமும்	...	167
குடிமைப் பயிற்சியும்	...	155

		பக்கம்
சர்வோதயமும்	...	161
நிர்மாணத்திட்டமும்	...	157
யந்திர யுகமும்	...	169
ஜனநாயகமும்	...	156
ஆதாரத்தொழில்—நூற்றல் ஏன்?	...	71
தொழில்கள் பல	...	73
ஆதாரப்பாடசாலை—சுய ஆட்சிமுறை	...	152
பாடசாலையின் இலக்கணம்	...	189
பாடசாலையும் சமூகமும்	...	163
ஆளுமையின் கல்வி	...	145
இயைபு முறை	...	149
இன்றைய கல்வி	...	21
பாடத்திட்டத்தின் குறைபாடு	...	24
உயர் ஆதாரக்கல்வி	...	100
உழைப்பின் உயர்வு	...	114
உழைப்பின் மூலம் கட்டுப்பாடு	...	116
உற்பத்திக் குறைவுக்குக் காரணம்	...	141
உற்பத்தி—கல்வியிலாகா திட்டம்	...	141
எழுத்துப் படிப்பும் கைத்தொழிலும்	...	146
கல்வி	...	14
கல்வி பிறக்கும் சூழ்நிலைகள்	...	125
கல்வியில் குழந்தையே பிரதானம்	...	54
சுதந்திரம்	...	129
காந்தியடிகள் கருத்துக்கள் சில	...	5
சத்தியமும் அஹிம்சையும்	...	192
சமய போதனை	...	108
சமூக லக்ஷ்யம்	...	9
சர்வ கலாசாலைக் கல்வி	...	104
சித்திரப் பாடம்	...	110
சில பரிகாரங்கள்	...	142

		பக்கம்
சுயதேவைப் பூர்த்தி	...	133
ஒழுக்கத்துறை	...	138
சமூகத்துறை	...	139
பொருளாதாரக் கருத்து	...	133
மனோதத்துவக் கருத்து	...	137
செய்து கற்றல்	...	64
செய்துகற்றல் பற்றிய சோதனைகள்	...	81
செயல் திட்டம்	...	108
செலவைச் சரிக்கட்டுதல்	...	133
தொழில் திறமை	...	177
தொழில் மூலம் கல்வி	...	76
தொழிலுக்கு வேண்டிய தன்மை	...	68
தொழிற் கல்வி	...	74
பரீட்சை	...	130
பழக்கங்கள்	...	181
பாலர் கல்வி (பூர்வாதாரக் கல்வி)	...	89
பிள்ளைகளின் தேர்ச்சி	...	197
பிற் குறிப்பு	...	204
பொருள் அகராதி	...	207
மனப்பான்மை	...	185
முடிவுரை	...	201
மூலப்பொருளின் தன்மை	...	70
மூவகைப் பண்புகள்	...	143
வயது 6—14	...	124
வயது வந்தோர் கல்வி	...	105
வாழ்க்கைக்கான கல்வி	...	56
வாழ்க்கை மூலம் கல்வி	...	58
வாழ்க்கையின் தேவைகள்	...	62
ஹிந்திப் பாடம்	...	111

*

" எது சித்தத்தைத் தூய்மைப்படுத்தவில்லையோ, மனத்தையும் புலன்களையும் அடக்கப் பயிற்சி யளிக்கவில்லையோ, வாழ்க்கைக்கு வேண்டுவன செய்து கொள்ளும் திறமையும் அஞ்சாமையும் எதிலிருந்து உண்டாகவில்லையோ, ஜீவனத்துக்குரிய உபாயத்தை எது காட்டவில்லையோ, அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்து சுதந்திரமாக வாழ்வதற்குத் தேவையான துணிவும் ஆற்றலும் உண்டாக்கவில்லையோ, அந்தக் கல்வியில் எத்துணை அறிவுச்செல்வம் சேமித்துக் கிடந்தாலும், தர்க்கத் தேர்ச்சியும் பாஷைப் பயிற்சியும் பொதிந்திருந்தாலும், அது கல்வியாகாது, அரைகுறைப் படிப்பேயாகும்."

—மஷ்ருவாலா

" பிள்ளைகளை நாட்டுப்புறத்தினுள் அழைத்துச் செல்வது ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் வாராந்த வேலையில் முக்கியமான ஒரு திட்டமென்று வலியுறுத்த வேண்டும்: நாட்டுப்புறத்தின் சஞ்சீவியை அங்குத்தான் நுகர முடியும்; அதனுடைய சுகமான தென்றலில் வலிமை பெற முடியும்; அதன் எழிலைக் கண்டு இன்புற முடியும். நீல வான வெளியின்கீழ் மிக உன்னதமான புலன் பயிற்சியும், ஆன்மப் பயிற்சியும், புத்திப் பயிற்சியும், இதயப் பயிற்சியும் அங்குத்தான் பெறமுடியும். உண்மையில் நாட்டுப்புறமென்பது, மேற்கூரை யில்லாத வெளி வகுப்பறையாகவும், நம் ஆசிரியர்கள் பயன்படுத்தத்தக்க தெய்விகக் காட்சிச்சாலையாகவும் ஆகவேண்டும்." —ரஸ்கின்

*

காந்தியடிகள் கருத்துக்கள் சில

"கல்வி என்று நான் சொல்லும்போது, குழந்தையிடமுள்ள எல்லாப் பண்புகளிலும்—உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றின் பண்புகளிலும் உள்ள சிறப்பியல்புகளைப் பூரணமாய் வெளிவந்து பிரகாசிக்கச் செய்வதையே குறிப்பிடுகிறேன். வெறும் எழுத்தறிவே கல்வி யன்று. ஆதலால், குழந்தை கல்விப் பயிற்சி பெறத் தொடங்கிய நேரம் முதல், அவனுக்குப் பயனுள்ள ஒரு கைத்தொழில் கற்பித்து, பொருள் உற்பத்தி செய்யப் பழக்குவதனாலேயே அவனுடைய கல்விக்குத் தொடக்கம் செய்வேன். இவ்விதம் செய்யும்போது, ஒவ்வொரு பாடசாலையும் தன் செலவைத் தானே சரிக்கட்டிக்கொள்ளும்படி செய்ய முடியும்; பாடசாலைகள் உற்பத்தி செய்த பொருள்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

"இவ்விதமான கல்வித் திட்டத்தில் மிக உயர்ந்த உள்ள வளர்ச்சியும், ஆன்ம வளர்ச்சியும் சாத்தியம் என்று நான் கருதுகிறேன். இதில், பள்ளிக்கூடங்களில் இன்று இயந்திரம்போல் கைத்தொழில் கற்பிப்பதுபோலக் கற்பிக்காமல் விஞ்ஞானரீதியாகக் கற்பிக்கவேண்டும் என்பது முக்கியம். அதாவது ஒவ்வொரு முறையையும், ஏன்? எப்படி? என்று கற்பிக்க வேண்டும். தைரியமில்லாமல் இதை நான் எழுதவில்லை. இந்த முறைக்கு நீண்டகால அனுபவம் ஆதாரமாக இருக்கிறது. தொண்டர்களுக்கு நூற்றலைக் கற்பிக்கும் இடங்களிலெல்லாம் இந்த முறையை ஏறக்குறைய முழுமையும் அனுசரிக்கிறார்கள். செருப்புத் தைக்கும் தொழிலையும் நூற்றல் தொழிலையும்கூட இதே வழியில் நானாகக் கற்றுக்கொண்டு நல்ல பலன் அடைந்திருக்கிறேன். இந்த முறையானது சரித்திர பாடத்தையோ, பூகோள பாடத்தையோ, விலக்கிவிடுவதில்லை. ஆனால் இப்படிப்பட்ட பொதுவான

தகவல்களை வாய்மொழியாக உரைப்பதே தகுந்த வழி என்று நான் காண்கிறேன். வாய்மொழியாகக் கற்பிப்பதாலும் வாசிப்பதாலும் எழுதுவதாலும் கற்பதைவிடப் பத்துமடங்கு அதிகமாக இந்த வழியில் கற்பிக்கமுடியும். இளஞ் சிறுவன் சக்கையையும் சாரத்தையும் வேறு பிரித்துக் காண அறிந்தபிறகு, தன்னுடைய சொந்தக் கலையுணர்ச்சியை அல்லது விருப்புக்களை ஓரளவு அவன் வளர்த்துக்கொண்ட பிறகு, எழுத்து வடிவங்களை அவனுக்குக் கற்பிக்கலாம். நான் சொல்வது மிகவும் புரட்சிகரமான யோசனை. ஆனால் இது அதிகமான கஷ்டப்பிரயாசையைக் குறைத்து, சிறுவன் பல வருஷங்கள் முயன்று கற்பதை ஒரே வருஷத்தில் கற்றுக்கொள்ள உதவுகிறது. எல்லா வகையிலும் சிக்கனம் என்பதே இதன் பொருள். கைத்தொழிலைக் கற்கும்போதே அவன் கணித சாஸ்திரமும் கற்றுக்கொள்கிறான் என்பதில் தடையில்லை.

"ஆரம்பக் கல்வியே மிகவும் பிரதானம் என்று நான் கருதுகிறேன். இது ஆங்கில பாடம் ஒன்றை மட்டும் நீக்கி மற்றெல்லாவற்றிலும் தற்போதைய மெட்ரிகுலேஷன் தரத்துக்குச் சமமாய் இருக்கவேண்டும் என்பது என் கருத்து.

"இன்று உங்கள் முன்னால் நான் கூறப்போகிற திட்டம், எழுத்து முறை என்று வழங்குகிற படிப்பு முறையோடு கூடவே சில கைத்தொழில்களையும் கற்பிப்பதற்கு ஆன திட்டமல்ல. கல்வி முழுமையும் ஏதேனும் ஒரு தொழில் மூலமாகவே கற்பிக்க வேண்டும் என்பது என் கருத்து. பண்டை நாட்களில் மாணாக்கருக்குக் கைத்தொழில் மட்டும் கற்றுக் கொடுத்தார்களே என்ன பயன் என்று சிலர் ஆட்சேபிக்கலாம். ஆனால் அப்போது ஜீவனத்துக்காக இருந்த இந்தப் பயிற்சியானது கல்வி என்ற நோக்கம் கைகூடும்படி செய்யவில்லை. தொழில்கள் அப்போது தொழில்கள் என்ற அளவிலே கற்பிக்கப்பட்டனவே அன்றி, புத்தியை வளர்ப்பதற்கு அவற்றின் மூலம் எந்த

முயற்சியும் செய்யவில்லை. ஆனால் இந்தக் காலத்தில் சில தொழில்வினைஞர்பரம்பரையில் பிறந்தவர்கள் அத்தொழிலை மறந்துவிட்டுக் குமாஸ்தா வேலையை ஏற்றுக்கொண்டு நாட்டுப்புறத்துக்குப் பயனற்றுப் போய்விட்டார்கள். ஆகவே ஒரு கைத்தொழிலின் கலை-விஞ்ஞானம் முழுமையும் செயல்முறையில் பயிற்சி அளிப்பதன் மூலம் போதித்து, அதன் வழியாகப் பூரண கல்விப் பயிற்சி தருவதே இந்த நிலைமைக்குப் பரிகாரமாகும்.

"நமது கல்வி முறையில் பெரும் புரட்சி வேண்டும். கை மூலமாய் மூளையைப் பயிற்ற வேண்டும்; அதாவது, புலன்கள் மூலமாய் அறிவை வளர்க்கவேண்டும். நான் ஒரு கவிஞனாய்ப் பிறந்திருந்தேனானால், இந்த ஐந்து விரல்களால் என்ன சாதிக்க முடியும் என்பதுபற்றிக் கவிதையாகப் பொழிந்து தள்ளி விடுவேன். மூளையே எல்லாம், கையும் காலும் ஒன்றுமில்லை என்று ஏன் நினைக்க வேண்டும்? அங்கங்களைப் பயிற்றித் திறமை பெறாதவர்கள், பழைய கல்வி முறை என்ற சுவட்டிலேயே போகிறவர்கள்; வாழ்க்கையில் லயம் குன்றியவர்கள். அவர்கள் பண்புகள் யாவும் விளக்கம் பெறவில்லை. ஏட்டுப் படிப்பு மட்டும் குழந்தையின் கவனத்தையும் உற்சாகத்தையும் முழுமையும் கவர்வதில்லை. வெறுஞ் சொற்களைக் கண்டு மூளை சோர்வடையவே, குழந்தைமனம் அலைய ஆரம்பிக்கிறது. இதனால் செய்யவேண்டாத வேலையைக் கை செய்கிறது; பார்க்க வேண்டாததைக் கண் பார்க்கிறது; கேட்க வேண்டாததைக் காது கேட்கிறது. வேண்டியதைச் செய்வதுமில்லை, பார்ப்பதுமில்லை, கேட்பதுமில்லை. எது தகுந்ததோ அதைத் தெரிந்துகொள்வதற்கான பயிற்சி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, அவர்கள் பெற்ற கல்வியே அவர்கள் கேட்டுக்கு வித்தாக முடிகிறது. நன்மையையும் தீமையையும் பகுத்தறிந்து, நன்மையை ஏற்றுத் தீமையை விலக்கக்

கற்பிக்காத கல்வியைக் கல்வி என்று கூறுவது மோசடியாகும்.

"கல்வியனைத்தையும் ஓர் ஆதாரத்தொழிலுடன் இயைபுபடுத்திப் போதிக்க வேண்டுமென்று நான் கூறியது உண்மை. எழு வயது அல்லது பத்து வயதுள்ள குழந்தைக்கு இப்படி ஒரு தொழில்மூலம் அறிவு புகட்ட முயலும் போது, அத்தொழிலுடன் இணைக்க முடியாத பாடங்களைத் தொடக்கத்தில் விலக்கி விடத்தான் வேண்டும். இப்படி விலக்குவதால், நாளாக ஆக, முதலில் விலக்கியவற்றையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பின்னர் தொழிலுடன் இணைத்துப் போதிப்பதற்கான வழிகளும் முறைகளும் தாமே புலப்படும். தொடக்கத்தில் எல்லாப் பாடத்தையும் சேர்த்துக் குழப்பாமலிருந்தால், ஆசிரியருடைய சக்தியும் பிள்ளைகளுடைய சக்தியும் வீண்போகாமல் முழுமையும் பயன்படும். நமக்கு வழிகாட்ட, முந்திய முறைகளெவையும் இன்று இல்லை ; புத்தகங்களும் இல்லை. ஆகவே நாம் மெதுவாகவே இப்பயிற்சியை நடத்தலாம். ஆசிரியர் எப்போதும் தம் உள்ளத்தில் ஊக்கம் குன்றாமல் விழிப்போடு இருப்பதே முக்கியமானது.

" கல்வி முறையானது தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்கிறதா என்பதே அக் கல்வி முறைக்கு உரைகல்லாகும். சென்ற நாற்பது ஆண்டுகளாக, இவ்வுண்மையை ஒரு திரைக்குப் பின்னிருந்து காண்பதுபோல் தான் நான் கண்டேனேயொழிய, துள்ளியமாய்க் காணவில்லை. இன்றைய சூழலில்தான் அதை நான் தெளிவாய் உணர முடிந்திருக்கிறது. முன்னமேயே இதை உணரவில்லையென்பதுதான் எனக்கு மிக்க வருத்தந் தருகிறது."

ஆதாரக் கல்வி என்றால் என்ன ?

" மனிதன் தேவநிலைக்கு வளர்ந்துவர வேண்டும்: வளராவிட்டால் மிருக நிலைக்கு இழிந்துபோய் விடுவான் " என்று கோலரிட்ஜ் என்ற பெரியார் கூறினாராம். இப்படி வளர்க்கும் முயற்சிதான் கல்வி ; ஆதாரக்கல்வி மட்டுமல்ல, எந்தக் கல்வியும் இதே நோக்கம் கொண்டதாகும்.

எனினும், ஒவ்வொரு கல்வி முறைக்கும் அடிப்படையில் தனியான ஒரு வாழ்க்கைத் தத்துவம் அமைந்தே யிருக்கிறது. அவ் வாழ்க்கைத் தத்துவம் மனித வாழ்க்கையில் ஒரு நிறைவு தருவதற்காகவே எழுந்தது. பூரண வாழ்வைக் குறிக்கோளாகக் கொள்ளாவிட்டால் மனித வாழ்க்கை - பகுத்தறிவு விளக்கம் பெற்ற வாழ்க்கை - என்பது இல்லை ; மிச்சமுள்ளது மிருக வாழ்க்கையே. ஆதலால் ஆதாரக் கல்வி என்றால் என்ன என்று அறியுமுன், மனிதவாழ்க்கை என்பதன் பொருள் யாது, கல்வி என்பதன் பொருள் யாது என்று அறியவேண்டும்.

1. சமூக லக்ஷியம்

சமீப காலத்தில் நடந்த யுத்தங்களின் பயனாய், ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் வாழ்க்கையில் புதிய மாறுதல்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன. கல்வித் துறையிலும் மாறுதல் பல. இம்மாறுதல்களை நம் நாட்டிலும் காணலாம். புதிதாய்ச் சுதந்திரம் பெற்ற நாடு நம் நாடு. ஆதலால் இங்கு வாழ்க்கையில் பல துறைகளிலும் மாறுதல் நிகழும். இம் மாறுதலுக்கு ஏற்ப, கல்வித் துறையிலும் இங்குப் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்க இடமுண்டு.

புதியதொரு கல்வித் திட்டத்தை ஆராய முற்படுமுன், எவ்விதமான சமூக அமைப்பைத் தோற்றுவிக்க இக் கல்வித் திட்டம் வகுக்கப் பெறுகிறது என்பதை நாம் அறிதல் வேண்டும். ஆதாரக்கல்வி என்பதும், ஒரு புதிய கல்வித் திட்டம். எனவே, இதற்கு அடிப்படையாக ஒரு வாழ்க்கைத் தத்துவம் அல்லது வேதாந்தம் அமைந்திருக் கிறது. இதைச் சமூகத் துறையில் நம் முன் இருத்த வேண்டிய லக்ஷ்யம் என்றும் சொல்லலாம். எனவே, முதலில் இந்த நமது சமூக லக்ஷ்யம் என்னவென்று வரையறை செய்துகொண்டு, பிறகுதான் கல்வித் திட்டத்தை அறிய முயலவேண்டும்.

காந்தியக் கல்விமுறையாகிய இவ்வாதாரக் கல்வியினல் உருவாகும் சமூகம் பின்வரும் லக்ஷணம் உடையதாயிருக்கு மென்று எதிர்பார்க்கிரேம்; அல்லது நாட்டின் நல் வாழ்வில் ஆர்வம்காட்டும் நாம் எதிர்கால இந்திய சமூகம் பின்வரும் தன்மையுடையதாய் இருக்கவேண்டும் என்று கருதுகிரேம்.

1. இது சத்தியத்தையும் அன்பையும் அடிப்படையாக வைத்து நிருமாணிக்கப்பெறும். 'சத்தியமே கடவுள்' என்பது காந்தியடிகளின் கோட்பாடு; எம்மதமும் இதை மறுக்காது. ஆனல் சந்திரமண்டலத்தில் கொடி கட்ட விரும்புகிற மனிதன் பூமண்டலத்தில் பிறருடன் ஒத்து வாழ அறியவில்லை. அமெரிக்கர் ஜப்பானில் போட்ட அணுக் குண்டானது, ஒரு சிறு குண்டின் சக்தியால் பல லட்சக் கணக்கான மக்கள் அடங்கிய பெருநகரத்தை எப்படி ஒரு விநாடியில் நிர்மூலமாக்கமுடியும் என்பதைச் சந்தேகமின்றி நிதரிசனமாய்க் காட்டிவிட்டது. அணுக்குண்டைவிட ஆற்றல் வாய்ந்த ஹைட்ரஜன் குண்டு முதலியன இருப்ப தாகப் பயமுறுத்துகிருர்கள். இவற்ருல் நாம் அறியவேண்டு வது, யாரிடம் அதிகமான ஆயுத பலம் இருக்கிறதோ அவரே உலகை ஆட்டி வைக்கக் கூடியவர். தருமம்

சத்தியம் முதலிய பேச்சுக்கு அங்கு இடமில்லை. ஆகவே உலகத்தில் பேரரசு எதனிடம் ஆயுதபலம் மிகுதியாக இருக்கிறதோ அதற்கே வெற்றி; முடிவான வெற்றி என்பது இல்லை. தன் ஆயுதபலம் பெரிதென்பதெல்லாம் எதிரியிடம் இதனினும் அதிக பலம் சேரும் வரையில்தான். ஆகவே ஹிம்சையும் ஆயுதபலமும் எதிர்காலத்தில் மேலும் மேலும் அழிவைத் தருமேயன்றி அழிவை நிறுத்துவதில் பயனற்றவை. சமூக வாழ்க்கையை இவை அழிக்குமே தவிர, நிலை நிறுத்தமாட்டா என்பதை நிரூபித்துவிட்டன. எஞ்சி நிற்பது, ஆயுத பலத்துக்கு மாருன அன்பின் பலம் ஒன்றுதான்.

2. பல வேறு மதங்கள் இருப்பினும், நாம் உருவாக்க எண்ணும் சமூகமானது எல்லா மதங்களிடத்தும் சம மரியாதை காட்டுவதா யிருக்கும்; மத வித்தியாசம் பாராட்டாது. தனி மதச்சார்பு இருக்கும். இதில் மதக் கொடுமை பிறக்காது, சகிப்பும் மரியாதையுமே நிலவும்.

3. இச்சமூகம் சாதி வேற்றுமை அற்றதாயிருக்கும்; பிறப்பால் உயர்வு தாழ்வு இருக்காது; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்-சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்ற கொள்கை நிலவும். இச்சமூகத்தில் ஆண் பெண் வேற்றுமை இராது; பெண்ணும் ஒத்த சுதந்திர முடையவளாக வாழ்வாள்.

4. போலியான உயர்வு தாழ்வுகள் நீங்கும். செல்வத்தால் உயர்வு என்ற நிலை மறையும்; தொழிலால் உயர்வு தாழ்வு என்ற நிலையும் நீங்கும். மெய்வருந்தி உழைப்பது தாழ்வானது, கஷ்டப்பட்டு உழைக்காமல் சோம்பி இருப்பதாகிய மேஜையடியில் வேலை செய்யும் மூளை-உழைப்பு, பேனு ஓட்டும் வேலை-உயர்வு என்ற இன்றைய நிலை மறையும். உழவு, தோட்டி வேலை, செருப்புத் தைத்தல் முதலாக, சமூக நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத எத்தொழில்களும் இழிந்தவையல்ல என்ற எண்ணம் நிலவும்.

எழுத்துப் படிப்புத்தான் உயர்வு என்றுள்ள போலிக் கௌரவமும் இராது.

5. அது மாத்திரமல்ல; மெய்வருந்திச் செய்யும் உழைப்புக்கு மதிப்பு ஏற்படும். "உத்யோகம் புருஷ லக்ஷணம்" என்று சொல்வார்கள். உத்யோகம் என்பது, விண்ணப்பம் போட்டுவிட்டு, சிபாரிசு தேடிப் பிடித்துக் கொண்டு, ஓர் அலுவலகத்தில் (ஆபிஸில்) போய்ப்பார்க்கும் வேலை என்று பொருள் பண்ணுவது பெரும் பிழை. உத்யோகம் என்றால் கைத்தொழில்; ஹிந்தியில் இன்று இச் சொல்லுக்குப் பொருள் இதுவே. கைத்தொழில் அல்லது உழைப்பு; உழைப்புத்தான் ஆண்மை தரும்; ஆள்வினை தரும். உத்-யோகம்; யோகம் என்பது மனிதனும், இயற்கையும் செம்மையான முறையில் ஒன்று கூடவும், ஒருங்கே இயைந்து தொழிற்படவும் செய்வது. "புருஷ" என்ற சொல் குறிப்பது ஆடவன் என்பதல்ல; மனிதன் என்பதே அதன் பொருள். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியார் குறிப்பிட்டது புருஷ லக்ஷணமான இந்தக் கருத்தையே.

6. நாட்டிலுள்ள மக்களில் எவரும் தம் சுதந்திரத்தை இழந்து பிறருக்கு அடிமை வேலை செய்யாமல், தம் உழைப்பினால் தம் ஜீவனத்தைக் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் நடத்திக் கொள்வதற்கான வசதி இருக்கும். ஒருவர் உழைக்க, மற்றவர் அவ்வுழைப்பின் பலனை அடைவதாகிய சுரண்டல் வாழ்க்கை இராது. பணம் படைத்தமை காரணமாக ஒருவர் மற்றொருவர்மீது ஆதிக்கம் செலுத்துதல் நடைபெறாது. வாழ்க்கையில் போட்டி என்பது இல்லாமல், ஒருவருக்கொருவர் உதவுவதாகிய கூட்டுறவு வாழ்க்கையே இருக்கும். லாபத்துக்கென்று தொழில் செய்வதால் வரும் போட்டி இராது; போட்டி ஒருவரை வாழ்வித்து மற்றவரை அழியச்செய்யுமாதலால்.

7. நாடு முழுமையும் இன்றுள்ள அசுத்தம் நிறைந்த, ஆரோக்கியமில்லாத நிலைமை மறைந்து, மக்கள் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாயும், நல்ல உடல் வலிமை படைத்தவர்களாயும் வாழ்வார்கள். சமூகமும் இயற்கையும், அகம் புறம் என்ற இரு வகைத் தூய்மையிலும் ஆரோக்கியத்திலும் பிறக்கத்தக்க அழகுடையனவா யிருக்கும்.

8. உண்மையான ஜனநாயக வாழ்க்கையும் ஆட்சி முறையும் நாட்டில் வழங்கும். மக்கள் அனைவரும் தங்கள் கடமையும் உரிமையும் நன்கு உணர்ந்திருப்பார்கள். நாட்டுப்பற்றுக் கொண்டிருப்பார்கள்; பிரஜாதத்துவ உணர்ச்சி ஓங்கியிருக்கும்; அதனோடு, 'உலகத்துப் பிரஜை' என்ற எண்ணமும் வளர்ந்து, சர்வதேச ஒற்றுமைக்கு இந் நாட்டுப் பற்று சாதகமாக இருக்கும். இதன் பயனாய், இந்தியா ஒரே தேசம் என்றும், தொன்று தொட்டு இந்நாடு உலகத்துக்குச் சேவை செய்ததுபோலவே இனியும் செய்ய வேண்டும் என்றும் மக்கள் உணர்ந்திருப்பார்கள்.

9. பேராசிரியர்கள் இன்பம் இரண்டு வகை என்கிறார்கள். ஒன்று, தன் இன்பத்துக்கான வசதிகளைத் தன்னிடம் பெருக்கி வைத்தல். மற்றது, தான் உலகத்துக்கு வேண்டிய இன்பத்தைப் பெருக்கி வருதல். உடைமை என்றும் ஆக்கம் என்றும் இவற்றை நாம் குறிப்பிடலாம். இச்சமூகம் உடைமையில் இன்பந் தேடாது, ஆக்கத்திலேயே இன்பந் தேடும். "ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் தாம் உடைமை - வைத்து இழக்கும் வன்கணவர்" என்ற திருக்குறள் கூறுவதும் இக்கருத்தே யாகும்.

10. கலை உணர்ச்சி பொருந்தியவர்களாய் மக்கள் வாழ்வார்கள். தாய்மொழியிலும் நாட்டின் பொதுமொழியிலுள்ள நல்லிலக்கியங்களையும் நாட்டின் அருங்கலைகளையும்

அரிய தொழிற்கலைகளையும் போற்றவும் சுவைத்து இன்புறவும் வளர்க்கவும் அறிந்திருப்பார்கள்.

11. இத்தகையதொரு சமூகம், இந்நாட்டின் உண்மையான நாகரிகம் யாது, பண்பாடு யாது, தருமம் அல்லது தனிப்பண்பு யாது என்று உணர்ந்த உண்மையான உணர்விலிருந்தே உதிப்பதாகும்.

2. கல்வி

1. கல்வி என்பது பயிற்சியும் வளர்ச்சியும். வளர்ச்சி தான் உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளம். உயிருள்ள மரம் ஓரிலையேனும் தளிர்க்கும்; தளிர்க்காவிட்டால் உயிரற்றது, பட்டது என்கிறோம். தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, வளர்ச்சி, தேவநிலையை நோக்கியாகும். "கற்றல் என்பது ஆற்றில் எதிர்த்துப் படகோட்டுதல்போல; முன்னேறவில்லை என்றால், பின்னால் போய்விட்டோம்" என்பது ஒரு சீனப் பழமொழி; எவ்வளவோ பொருத்த முடையது.

"உண்மையான கல்வியின் நோக்கம் முதன்மையான பயிற்சி; அறிவு பெறுதல் அடுத்தபடிதான்" என்பது ஓர் அறிஞர் கூற்று. சுயநோக்கமே கொண்ட குழந்தையைக் கூட்டுச் சமூக வாழ்க்கைக்கு ஏற்புடையவனுக்குவதே கல்வியின் பெருவேலை; இதையே பயிற்சி என்கிறோம்.

"பயிர் செய்வதால் செடிகள் வளர்கின்றன. கல்வியினால் மனிதன் வளர்கிறான்" என்ற அறிஞர் ரூஸ்ஸோ கருத்து இங்கு உணர்தற்குரியது.

2. மக்களினத்தின் ஆரம்பகாலத்தில் கடவுட் பக்தியே கல்வியின் நோக்கமாயிருந்தது; 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே.' (நன்னூல்.) கடவுளையடைய வழிகாட்டுவதே கல்வியின் நோக்கம். ஆனால், இன்று நோக்கம் அதுவன்று. உலகில், உலகுக்குப் பயனுள்ளவனாக வாழ வழி காட்டுவதுதான் கல்வியின் பெருநோக்கம்.

உலகமெங்கும் இன்று ஜனநாயக வாழ்க்கையே பெருகி வருகிறது. கல்வி இதற்கே குழந்தையைத் தகுதியாக்க வேண்டும்.

3. கல்வியானது மனிதனைப் பூரண மனிதனாக்க வேண்டும். குழந்தையிடம் உடல் உள்ளம் உயிர் என்ற மூன்று வகைப் பண்புகள் அமைந்திருக்கின்றன. இம் மூன்றையும் தக்கபடி பயிற்றி இவை ஒருமித்து வளர்ந்து பூரணப் பொலிவுபெறச் செய்வது கல்வியின் வேலை. "மனிதனுடைய பண்புகள் அனைத்தையும் ஒருமிக்க வளர்ப்பதே கல்வி" என்பது ஓர் அறிஞர் கருத்து. கல்வி யால் குழந்தையிடம் ஆரோக்கியமான உடலும் மெய் வருந்தி உழைப்பதற்கான வலிமையும் வரவேண்டும். தானாக ஒன்றைச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செய்வதற்கான புத்திக் கூர்மையும் விவேகத்தின் விளக்கமும் துணிவும் அமையவேண்டும். பரோபகாரம், இரக்கம், ஒற்றுமை, நீதி யுணர்ச்சி, பொறுத்தல், சகிப்புத்தன்மை முதலான சிறந்த நல்லொழுக்கப் பண்புகளும் பொருந்தவேண்டும்.

"நம்மைப் பூரண வாழ்வுக்குத் தயாராக்குவதே கல்வி ஆற்றவேண்டிய பணி" என்று ஹெர்பார்ட் என்ற நிபுணர் கூறுகிறார்.

4. மனிதனுடைய குணச்சிறப்பு மூன்று அம்சங் களைப் பொறுத்தது. இவை, பாரம்பரியம், சூழ்நிலை, பயிற்சி என்பன. பாரம்பரியம் எல்லோருக்கும் ஒன்றுபோல் இல்லை; பாரம்பரியத்தால் நல்ல பண்புகளும் அமைகின்றன, தீய பண்புகளும் அமைகின்றன. கல்வியின் வேலையாவது, தக்க பயிற்சி அளிப்பதாலும், தக்க சூழ்நிலையை அமைப்ப தாலும், தீய பண்புகள் வளராமல் தடுத்து நல்ல பண்பு களே வளரும்படி செய்வதாகும்.

5. சொல்லளவிலே ஏட்டுப் படிப்பாகச் சில செய்தி களைக் கற்பது கல்வியாகாது. "வெறும் எழுத்தறிவு கல்வியின் நோக்கமுமன்று, கல்விக்கு இது தொடக்கமும்

அன்று. ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி பயிற்றுவதற்கான பல முறைகளில் எழுத்தறிவும் ஒன்று; அவ்வளவு தான். எழுத்தறிவே கல்வியாகிவிடாது." (காந்தியடிகள்). படிப்பு என்பது உண்மைக் கல்வி வருவதற்கு ஒரு சாதனம்; வேறு சாதனங்களும் உள்ளன. நெட்டுருச் செய்யப் பழக்குவதோ, ஞாபகச்சக்தியை மட்டும் வளர்ப்பதோ கல்வியன்று. ஐந்து புலன்களின் திறமையையும் உடலுறுப்புக்களின் திறமையையும் நன்ருய்ப் பயிற்சி தந்து வளர்ப்பதே கல்வி.

6. மூளை நிரம்பத் திணிப்பது கல்வியன்று; மூளையைப் பழக்குவது கல்வி. குழந்தையின் மனமானது, மண் அள்ளிப் போட்டு நிரப்பவேண்டிய ஒரு பூந்தொட்டியன்று. அத் தொட்டியில் வளரும் பூஞ்செடியே மனம். அதற்குத் தனியான வாழ்வும் வளர்ச்சியும் உண்டு.

ரோமநகரத்துப் பண்டைய பேராசிரியரான புளூடார்க் கூறுவார்: "மனம் என்பது நிரப்பவேண்டிய ஒரு பூந் தொட்டியன்று; ஒளி உமிழும்படி செய்யவேண்டிய ஓர் அடுக்களையாகும்."

கூர்ந்து நோக்குந்திறன், விவேகம், புத்திக்கூர்மை என்ற பண்புகள் வெளிப்பட்டு, பயிற்சியால் வளரவேண்டும்; கூடவே, உடல் திறன்கள் யாவும் பண்பட்டு வளர வேண்டும். மூளை வளர்வதுடன் ஞானேந்திரியமான கண்ணும் காதும், கர்மேந்திரியமான கையும் காலும், தத்தம் வேலைத்திறனில் மேம்படவேண்டும்.

ஆகவே, செய்து பழகுவதால் வரும் அனுபவத்தால், மாணவர்களுக்குச் சாஸ்திர ரீதியான ஞானமும் தொழில் திறமையும் வளர்ந்து அபிவிருத்தி யடையவும் வேண்டும். அகமும் புறமும் தூய்மை, தன்னம்பிக்கை, சுயமுயற்சி, துணிவு, ஆராய்ச்சி, அர்ப்பணம் ஆகிய திறன்கள் விளக்கம் பெறவேண்டும். வாழ்க்கையின் நோக்கமான பண்பும் பயனும் கல்வியால் கைகூடவேண்டும். இதுவே பண்பு

களுக்கு ஒருமித்த வளர்ச்சி தரும்; வாழ்க்கை வாழ்வதற்கான கல்வி என்பதும் இதுவே.

7. "மக்கள் எதைச் செய்ய முயன்று வருகிறார்களோ அதையே முன்னிலும் மேம்படச் செய்யும்படி கற்பிப்பதுதான் கல்வி" என்று ரஸ்கின் கூறியுள்ளார். கல்லாதவன் செய்யும் வேலையைவிட, கற்றவன் செய்யும் வேலை கீழ்த்தரமாயிருக்கும் என்றால், இவன் கற்றது கல்வி என்று சொல்லலாகாது.

8. அடிமையாக நெடுங்காலம் நம் நாடும் மக்களும் இருந்தமையால், நமக்குச் சுதந்திர உணர்ச்சியே திடரென்று வருவதில்லை. கல்வியால் இந்த உணர்ச்சியும் உண்மையான நாட்டுப் பற்றும் வரவேண்டும். கோழைகள் என்ற நிலையைக் கடந்து ஆண்மை நிரம்பியவர்களாக நம் பிள்ளைகள் வளரவேண்டும். "அடிமைத் தளையிலிருந்து விடுதலை தருவதே கல்வி"—காந்தியடிகள். ஆண்மை தரும் கல்வி வேண்டும் என்பார் விவேகானந்தர்.

9. கல்வியானது அவனவன் வாழும் சமுகச் சூழ்நிலையைக் கண்டு புரிந்துகொள்ள உதவிசெய்ய வேண்டும். சமூகத்தின் லக்ஷ்யம் யாது, குறைபாடு யாது, முன்னேற்றத்துக்கு யாது தடை, மேம்படுத்தும் வழிகள் யாவை, இவை பற்றித் தன் பொறுப்பு யாது என்று, கல்வி கற்றவன் திட்டமாய் உணர்தல்வேண்டும். உணர்ந்து தன் கடமையை அவன் ஆற்ற உறுதியுடன் முன்வரவும் வேண்டும்.

10. மாறி வருகின்ற இன்றைய உலக வாழ்க்கையில், நல்ல சமூகப் பண்புகளும் கூட்டு வாழ்க்கைக்கான பண்புகளும் விளக்கம் பெறுவதோடு, ஜனநாயக லக்ஷ்யங்களைக் கிரமமாக உணர்ந்து போற்றும் திறன் கல்வியால் வர வேண்டும். வாழ்க்கை விவகாரங்களில் கிரமமான நியாய மனப்பான்மையோடு ஈடுபடும் பக்குவமும் பழக்கமும் வரவேண்டும்.

11. தன்னுடைய வளர்ச்சிக்கும், வாழ்க்கை யின்பத்துக்கும் மனச்சாந்திக்கும் உதவவல்ல விசேஷமான பற்றுக்களை வளர்த்துக்கொள்ளக் கல்வி உதவவேண்டும்.

12. சுயநலம் என்ற வெறும் பிராணி நிலையைக் கடந்து, பிறர்நலம் பேணும் தெய்வ நிலையை மனிதன் அடைவது கல்வியால்தான். தன் உணர்ச்சிகளையும் தேவைகளையும் கட்டுப்படுத்தி, பிரபஞ்சமனைத்துக்கும் சேவை செய்யும் பெருநிலைக்கு அவன் வரவேண்டும். 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின் - தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே' என்ற தாயுமானவர் கருத்து இதுவே. ஆண் பெண் காதல் என்பதைக் கூறும் அகப் பொருட் பகுதிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர், "காமம் சான்ற கடைக்கோட் காலை, ஏமம் சான்ற மக்களொடு துவன்றி, அறனும் அன்பும் என்ருங்கு, சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என்ற இறுதிச் சூத்திரத்தில் இக் கருத்தைக் கூறுகிருர்.

13. பிரபஞ்சம் விரிந்தது. வாழ்க்கையும் விரிந்தது. இவ்விரிவை ஓரளவு உணரக் கல்வி துணைபுரியும். ஒவ்வொரு குழந்தையும் தான் பிறந்துள்ள சூழலில் சிற்சில துறைகளையும் பொருள்களையுமே அறியமுடியும். இத்துறைகளையும் பொருள்களையும் விரிவாக்கிப் பலவற்றிலும் ஆர்வங் கொள்ளும்படி கல்வி செய்யவேண்டும். ஒவ்வொருவரும், அறிவுத் துறைகள் செயல் துறைகள் அனைத்தையும் சிறிதளவேனும் அறியும்படியும், அறிவதில் ஆர்வம் கொள்ளும்படியும் கல்வி செய்யவேண்டும். எல்லாவற்றிலும் நிபுணராகாவிட்டாலும், சிலவற்றிலேனும் நிபுணராக வேண்டும்.

14. "பெறத்தக்க பேறுகள் அனைத்திலும் சிறந்த பேறு பகுத்தறிவே" என்பது ஆன்ருேர் கருத்து. அரசியல் கொந்தளிப்புக்களும் கட்சிபேதங்களும் இன்று உலகில் எந்த நாட்டிலும் மலிந்து கிடக்கின்றன. நம்மைச் சூழ்ந்துள்ள நாடுகளைச் சற்றுக் கவனித்தால் இது விளங்கும்.

நம் நாடும், இதற்கு விலக்கன்று. இந்தச் சூழலில் வாழ வேண்டிய நம் குடிமக்கள், கல்விப் பயிற்சி மூலம் எந்தக் காரியத்தையும், தாங்களாக ஆழ்ந்து சிந்தித்து முடிவு காணும் ஆற்றல் பெறவேண்டும். எந்தப் பிரசார வலையிலும் சிக்காமல், சுயபுத்தியை உபயோகித்து ஆராயும் பழக்கமும் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் சக்தியும் அவர்கள் பெற வேண்டும். பிறரிடம் காணும் அறிவுடைய சிந்தனையையும் போற்றத் தெரியவேண்டும்.

15. ஓய்வு நேரத்தை லாபகரமாகவும், இன்பகரமாக வும் பயன்படுத்தப் பழக்குவதே கல்வி. உடல் வருந்தி உழைப்பவனுக்குத்தான் ஓய்வும் பொழுதுபோக்கும் என்பது நியாயம். இந்த ஓய்வை ஆக்கவேலையில் பயன்படுத்திய நம் முன்னோரால் கலைகள் பிறந்தன. எனவே உழைப்புத்தான் கலையைத் தோற்றுவிக்கும், முன்னேற்றம் அல்லது வளர்ச்சிதரும் என்பது ஒப்புக்கொள்ளக் கூடியது. இதை நிறைவேற்றிவைப்பது கல்வி.

16. வாழ்க்கையின் பொறுப்புக்களுக்குக் குழந்தையைத் தகுதியாக்கும் பயிற்சியே கல்வி. தினசரி வாழ்க்கையுடன் கல்வி தொடர்பு கொண்டிருக்கவேண்டும். வாழ்க்கை நடத்தத் தெரியாதவனிடம் என்னதான் திறமையோ, கலையோ, அறிவோ இருந்து யாது பயன்? வாழ்க்கையின் பொறுப்பு என்றால், உடல் உள்ளங்களின் அபிவிருத்தி, குடிமைப் பயிற்சி, குடித்தனம் நடத்தும் பயிற்சி, தந்தைமை தாய்மைக்கான பயிற்சி, சமூகப் பொறுப்பு, பொருளாதார ரீதியான பொறுப்பு—ஆகிய எல்லாம்.

கல்வியானது நம் சுற்றுப்புறம், சூழ்நிலை, அனுபவங்கள் ஆகிய அனைத்தினாலும் வருகிறது. குறிப்பிட்ட காலத்துக்குள்ளோ, குறிப்பிட்ட இடத்திலோ முறையிலோ கல்வி என்று வரையறை செய்துவிட முடியாது. அது வாழ்க்கை முழுமையும் நடைபெறுகிற ஒரு முன்னேற்றச்

செயல். "தொட்டில் முதல் மயானம் வரை" என்று மகாத்மா காந்தி இதைக் குறிப்பிடுவார்.

நாம் திட்டமிட்டாலும் இடாவிட்டாலும், தினந் தோறும் நாம் செய்கிற ஒவ்வொரு செயலாலும் நாமும் கல்வி பெறுகிறோம், பிறருக்கும் கல்வியளிக்கிறோம். புத்தி சாலியாயிருப்பவன் தன் அனுபவம், பிறருடைய தொடர்பு, தன் படிப்பு, தனது அன்றாடத் தொழில் ஆகிய எல்லாம் திட்டமான ஒரு நோக்கத்தோடு நடைபெறும்படியும் அதற்கு உதவும்படியும் தன் வேலைகளைத் தேர்ந்தெடுத்து முறைப்படுத்தி நடத்தி வருவான்.

கல்வி என்பது ஒரு முன்னேற்றப் பாதை. நம் வேலை எதுவாயினும், உழுவதாயினும், சட்டம் செய்வதாயினும், குடித்தனம் செய்வதாயினும், அதை நாளுக்குநாள் திறம் படச் செய்யும் ஆற்றல் பெறுவதற்கான பயிற்சியே கல்வி. ஈடுபட்ட வேலையைச் சிறப்பிப்பதற்கான ஆற்றலும், மனப் பான்மையும், பழக்கமும் அமைதல் வேண்டும்.

வீடு, தன்னைச் சூழ்ந்த சமூகம், பாடசாலை, தான் மேற்கொண்ட தொழில், வாழ்க்கையில் இன்பம் தரும் வேலை, விளையாட்டு, பொழுதுபோக்கு—இவற்றுக்கேற்ற திறமைகளும் பழக்கவழக்கங்களும் மனப்பான்மையும் அவனிடம் பொருந்தவேண்டும்.

பின்வரும் அறிஞர் கருத்துக்களும் இங்கு அறிதற் குரியன. "பூரண வாழ்வுக்கு நம்மைச் சித்தப்படுத்து வதே கல்வியின் லக்ஷ்யம். பூரணவாழ்வு பெறுவதற்கு, நம் உடலை எப்படி இயக்குவது, மனத்தை எப்படிப் பழக்கு வது, குடும்பத்தை எப்படி நடத்தி வளர்ப்பது, குடிமகன் என்ற முறையில் எப்படி ஒழுகுவது, நம் விவகாரங்களை எப்படி நிர்வகிப்பது, இயற்கை நமக்கு அளித்துள்ள இன்பத்துக்கான வழிவகைகளை எப்படிப் பயன்படுத்து வது, நமக்கும் பிறருக்கும் அதிகமான நலம் விளையத் தக்க முறையில் நம் பண்புகள் அனைத்தையும் எவ்வாறு

உபயோகிப்பது—என்று நாம் அறிதல் வேண்டும் ''— ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்.

ரஸ்கின் கூறுவார் : '' உண்மையான கல்வியின் நோக்கம் முழுமையும், மக்களைச் செம்மையான காரியங்களைச் செய்விப்பது மட்டுமன்று, செம்மையான காரியங்களில் இன்பங் காணச் செய்வது ; உழைக்கச் செய்வது மட்டுமன்று, உழைப்பினிடம் ஆவல் கொள்ளும்படி செய்வது ; கல்வி யறிவு பெறச் செய்வது மட்டுமன்று, அறிவினிடம் காதல்கொள்ளும்படி செய்வது; தூய்மையாயிருக்கச் செய்வதுமட்டுமன்று, தூய்மையையே விரும்பும் படி செய்வது ; நீதியாக நடக்கச் செய்வது மட்டும் அன்று, நீதியே வேண்டுமென்ற பசியும் தாகமும் கொள்ளும்படி செய்வது.''

3. இன்றைய கல்வி

1. வாழ்க்கையோடு தொடர்பு அற்றதாய் வெறும் ஏட்டுப் படிப்பாய் இருந்து வருகிறது. சுதந்திர உணர்ச்சியை ஊட்டவில்லை. உலகப் போக்கையும், நாட்டின் போக்கையும் தழுவி, மக்களுக்குத் தேவையானவற்றைப் போதிக்கவில்லை. வாழ்க்கை வாழும் முறையைக் கற்பிக்கவில்லை. ஆக்கத் துறையில் மாணவர் முன் லக்ஷ்யம் எதையும் நிறுத்தவில்லை. சமூகத்தின் அங்கத்தினர் என்ற முறையில் பயனுள்ள பொருள் உற்பத்தி செய்ய வல்லவராவதற்கு மாணவரைப் பழக்கவில்லை. கூட்டுறவும் அன்பும் சாந்தியும் தோழமையும் நிலவவல்ல சமூக அமைப்பைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக, போட்டியும், சுரண்டலும், ஹிம்சையும் பொருந்திய சமூகம் தோன்றவே இது துணை செய்கிறது.

2. பிள்ளைகளின் மூளையில் செய்திகளைத் திணிப்பதைப் பொருளாய்க் கொண்டிருந்ததே தவிர, மூளைக்குப் பயிற்சி தரும் நோக்கம் இதற்கு நடைமுறையில் இல்லை. இதுபோல,

பிள்ளைகளின் உடற்பண்புகளையும், உயிரின் பண்புகளையும் வளர்ப்பதும், பயிற்சி தருவதும், இன்றைய கல்வியின் நடைமுறையில் இடம்பெறவில்லை. உள்ளப்பண்பிலும்கூட, ஞாபகசக்தி யொன்றுக்குத்தான் அதிக இடம் இருக்கிறதே அன்றி, சுய சிந்தனைக்கு இதில் அதிக இடம் இல்லை.

3. இக் கல்வி பயின்று வந்தவர்கள் தேசிய வாழ்வில் கலந்து கொள்ள முடியாமற் போயிற்று. கல்விக்குப் பொருட் செலவு அதிகம் ஏற்பட்டது. இது காரணத்தால் பாமர மக்களுக்கு இக் கல்வியில் இடங் கிடைக்கவில்லை. ஏழை பணக்காரர் என்ற வேற்றுமையோடுகூட, படித்தோர் படிக்காதோர் என்ற வேற்றுமையும் விளைந்தது. எட்டுப்படிப்பும் மூளைவேலையும் உயர்ந்தவை, உடல் உழைப்பு இழிவானது என்ற எண்ணமும் படித்தோருக்கு வந்தது. இவ்விதமாகப் பல வழியிலும் இக்கல்வி நாட்டின் நல்வாழ்வைக் குலைத்தது.

4. நெடுங்காலம் ஆங்கில மொழியின் மூலமாய்க் கல்வி போதிக்கப் பெற்று வந்தமையால், படித்தோருக்குத் தாய் மொழிப் பயிற்சி குன்றிவிட்டது. இதனால், இவர்களுக்கும் பாமர மக்களுக்கும் தொடர்பு இல்லாமற் போயிற்று. இந்திய மொழிகளும் வளங் குறைந்தன. மேலும், படித்தவர்களுக்குத் தங்கள் புராதன நாகரிகத்திலும், கலையிலும், ஆசாரங்களிலும் பற்றுதல் குறைந்தது. இதன் பயனாய், இந் நாட்டில் அறிவு வளர்ச்சி மிகவும் தடைப்பட்டதோடு கூட, நம் புராதன நாகரிகம் சீர்குலைந்து, மேலை நாட்டு நாகரிகம் இங்கே காலூன்ற ஆரம்பித்து, போட்டி மிஞ்சி, சத்தியமும் அன்பும் மறையலாயின. பரீட்சையும் பதவியும் போட்டிக்கே இடமானபடியால், மக்களிடையே யிருந்த கூட்டுறவும் ஒப்புரவும் அடியோடு நீங்கின.

5. செயல் திறமையை இது புறக்கணித்துவிட்டது. சமூகத்தில் திறமையாகப் பழகி நடப்பதற்கான பயிற்சியையும் கைவிட்டு விட்டது.

6. இக்கல்வி இந்திய நாகரிகத்துக்கு முழுமையும் புறம்பானது.

7. ஆயிரக்கணக்கில் செலவு செய்யத் தயாராயிருந்தால் இக்கல்வியுண்டு ; பணம் இல்லாதாருக்கு இக்கல்வியில் இடமில்லை. ஏழை மக்களுக்கும் பாமர மக்களுக்கும் கல்வி வேண்டும் என்ற சிந்தனையே இங்கு இல்லை.

8. இக்கல்வி முறையில் பொருள் விரயம், சக்தி விரயம் அதிகம். அதாவது, முதல் வகுப்பில் சேர்ந்த பிள்ளைகளில் ஒரு சிறு பகுதிதான் ஐந்தாம் வகுப்பு முடிக்கிறார்கள். ஏழைப் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்புவரை படிப்பதில்லை ; பாதியில் பாடசாலையை விட்டுப் போகிறார்கள். படித்தாலும்கூட, பெற்ற அறிவு பயனற்றதாகவே இருக்கிறது. பாடசாலையை விட்டவுடனே அச் சொற்ப எழுத்தும் படிப்பும் மறந்துபோகின்றன. இடையில் படிப்பை விட்டவர்களின் எழுத்தறிவு மீண்டும் சூனியமாகிவிடுகிறது.

9. இக்கல்வி கற்றவர்கள், அமைதியான கிராம வாழ்க்கையை மறந்து, சஞ்சலம் மலிந்த பட்டண வாழ்க்கையில் தோய்ந்தவர்கள் போல் பாவனை செய்கிறார்கள். கல்வி கற்று முடித்ததும் செய்வதென்னவென்று அறியாது திண்டாடுகிறார்கள். தங்கள் குடும்பத்தாரின் வீட்டு வாழ்க்கைக்குக்கூட இவர்கள் தகுதியற்றவர்களா யிருக்கிறார்கள். வாழ்க்கையில் எவ்விதக் குறிக்கோளும் இல்லாதபடி இளம் பருவம் முழுமையும், பதினைந்து அல்லது பதினெட்டு வயது வரை, இவ்விதம் கழித்த காரணத்தால், பிற்கால வாழ்க்கையிலுங்கூட, படிப்பில்லாத மனிதனிடம் காணப்படுகிற வினைத்திட்பம், மனவுறுதி, சுய முயற்சி, தன்னம்பிக்கை, சூழ்ச்சி, துணிவு, சமயோசிதம், கற்றல், மனோபாவம் ஆகிய பண்புகள் இல்லாமற் போகின்றன. இவ்விதமாக இன்றைய கல்வி, கல்வியின் பொது நோக்கத்துள் ஒன்றையும் நிறைவேற்றவில்லை.

4. இன்றைய பாடத்திட்டத்தின் குறைபாடு

1. குழந்தைகளோ ஆசிரியரோ சுயேச்சையுடன் ஒன்றைச் செய்ய வழியில்லை. சுய முயற்சியோடு ஒன்றைத் தொடங்கவோ, முடிக்கவோ சந்தர்ப்பம் இல்லை.

2. ஒவ்வொரு பிள்ளையும் அவனவன் ஆற்றலுக்கும் போக்குக்கும் ஏற்றபடி வளர்ச்சிபெற இடமில்லை. ஏனெனில், வகுப்பு என ஒன்ருகச் சேர்த்து, வகுப்பு முழுமையும் ஒரே வகையான எழுத்துப் பாடமே ஒரே சமயத்தில் ஒரே அளவில் படிப்பிக்கவேண்டி யிருக்கிறது ; உபாத்தியாயருக்கும் பாடசாலைக்கும் நல்ல பெயர் வாங்கித் தரவேண்டி, எல்லோருமே 'கரையேற' வேண்டியிருக்கிறது. இதனல், தனிக்குழந்தை என்று கருதுவதே சாத்தியமில்லாது போகிறது.

3. இதன் பயனுக, பிள்ளைக்கும் உபாத்தியாயருக்கும், உபாத்தியாயருக்கும் பெற்ருேருக்கும், உபாத்தியாயருக்கும் சர்க்கார் பார்வையாளருக்கும், இடையே அமைய வேண்டிய நல்லுறவு அல்லது இயல்பான சுமுகத் தொடர்பு அமையாது போகிறது.

4. பாடங்களும் துண்டு துண்டாக ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் போய்விட்டபடியால், இந்தச் செயற்கைக் கல்வியும் போலியாகிவிட்டது.

5. பாடம் முழுமையும் முடிந்த பிறகு, பரீட்சை எனப் புறம்பாக ஒன்று இருத்தலினல், பிள்ளைகள் கற்பதில் ஆர்வமின்றியே கற்க நேருகிறது. இதனல் தன்முயற்சி அழிகிறது, கற்றதும் சீரணமாவதில்லை—அறிவில் ஒன்றுவதில்லை.

6. திட்டத்தில் பாடமே பிரதானம், புத்தகமே பிரதானம்; குழந்தை பிரதானமல்ல. குழந்தை வளர்ச்சிக்கு இதனினும் கேடு வேருென்றுமில்லை.

7. திட்டத்தில் போதனைமுறையே பிரதானமாயிருக்கிறது. குழந்தையின் இயல்பும் மனோதத்துவ அறிவும் தேவையும் சமூகத் தேவையும் பிரதானமல்ல.

8. இவற்றால், உபாத்தியாயராக வருபவருக்கு அவசியமான நல்ல பயிற்சி கிடைக்கவில்லை. தப்பான பயிற்சியே கிடைக்கிறது. ஊக்கமும் அனுதாபமுமுள்ளவர்கள் உபாத்தியாயராகத் தேர்ந்துகொள்ளப்பெறுவதில்லை.

9. திட்டம் உத்தியோகந் தருவதற்கு என்றே ஏற்பட்டதாகிறது. அதுவும் உடல் வருந்தி உழைக்கும் உழைப்பல்ல ; நகத்தில் அழுக்குப்படாமல் உழைப்பது. எனவே, இது, பாமர மக்களை விட்டு, கற்பவனைத் தெளிவாய் வேறு பிரிக்கிறது.

10. மேலைநாட்டு முறையிலமைந்த சர்வ கலாசாலையின் ஆதிக்கம் இங்கு அதிகமாயிருக்கிறது. பத்து வருஷம் படித்து முடித்துச் சர்வ கலாசாலை போக விரும்பினால், அப்போது அவர்கள்சொல்லைக் கேட்கவேண்டியிருக்கிறது. ஆகவே இப் பத்து வருஷக் கல்வியும், பிள்ளைக்கோ நாட்டுக்கோ வேண்டியதாயிராமல், சர்வ கலாசாலையாருடைய திட்டத்துக்கு வேண்டிய பாதையில் போவதாயிருக்கிறது.

11. இவ்வளவும் ஆனாலும், இத்திட்டம் வாழ்க்கைத் துறைகளனைத்தும் ஆழமாகத் தழுவியிருக்கிறதா என்றால் அதுவும்இல்லை.

12. கிராமங்களுக்கு இது ஏற்றதாயில்லை. கீழிருந்து, தேவையை யொட்டித் திட்டம் ஏற்படுவதற்குப் பதிலாக, மேலிருந்து உத்தரவுமூலம் ஏட்டளவில் நடைபெறுவதாயிருக்கிறது.

5. ஆதாரக் கல்வி

மேற்சொன்ன இத்தனைக் குறைபாடுகளையும் போக்கிக் கல்வித்துறையில் வளர்ச்சிக்கான ஒரு பெரும் புரட்சி

வரவேண்டு மென்று காந்தியடிகள் கருதினர். (" இது வரையும் எல்லோரும் என்ன செய்துவந்தார்களோ அதற்கு நேர்மாருக நீ செய்; நீ செய்வது சரியாக இருக்கும்" என்ற ரூஸ்ஸோ கருத்து இங்கு எவ்வளவு பொருத்தம்!) கல்வியானது நாட்டு மக்களின் பண்புக்கு ஒத்ததாய் இருக்கவேண்டும். இந்நாட்டில் மிகவும் அதிகமாயுள்ள மக்களின் படிப்பின்மையைச் செயல் முறையில் போக்க வேண்டும். இதையும் சுருங்கிய காலத்துக்குள் நிறை வேற்ற வேண்டும். ஏழைமக்களே மிகுந்த இந்த நாட்டுக்கு, கல்வியின் மூலம் ஜீவனத்துக்கும் வழிகாட்ட வேண்டும்; இத்தனை அம்சங்களும் பொருந்தி இருந்தால் தான் கல்வியானது அடிமைத்தளையில் துன்புற்ற இந் நாட்டை உண்மையான சுதந்திரம் பெற வல்லதாக்க முடியும்.

ஒன்றைக் கற்கவேண்டு மென்ருல் அந்த வாழ்க்கை வாழவேண்டும். நீந்தக் கற்கவேண்டுமானுல், நீரில் விழுந்து தானே ஆகவேண்டும்?

வாழ்க்கை வாழக் கற்பதே கல்வி. இக்கல்வியை வாழ்க்கை முழுமையும் கற்கவேண்டும். தாயின் கருப்பத்தில் சிசு உருக்கொள்வது முதல் மயானம் செல்வது வரையில் இக்கல்வி நடைபெறுகிறது என்று காந்தியடிகள் சொல்லுவார். பரீட்சை தேறுவதற்காகவோ, வேருெரு பதவிக்குத் தகுதி பெறுவதற்காகவோ கற்பது கல்வியாகாது. வாழ்க்கையில் என்னென்ன பிரசினைகள் எழக்கூடுமோ, அவற்றிலெல்லாம் பிள்ளைகள் கல்வி பயிலுங் காலத்துத் தாமாகவே ஈடுபட்டு முடிவு காண்பதே கல்விப் பயிற்சி. நாட்டில் பின்னர் நிலவ வேண்டுமென்று எண்ணுகிற சுதந்திர வாழ்க்கையும், உழைப்பும், சமாதானமும், கூட்டுறவும், பிரஜாதத்துவமும், மாணவர் வாழும் தினசரி வாழ்க்கையிலேயே பொருந்தவேண்டும்.

வாழக் கற்பது என்று சொல்லும்போது, எதிர்காலத்தில் இந்நாட்டில் எத்தகைய சமுதாயம் உருக்கொள்ள வேண்டும், எவ்வித ஜனநாயக ஆட்சி வழங்கவேண்டும் என்று நாம் எண்ணுவோமோ, அதையே மாணவர் வாழ்ந்து பயிலவேண்டும். ஆதாரக் கல்வி என்று சொல்லும்போது, வாழ்க்கையில் அதற்குரிய பண்பும் பயனும் பொருந்துவதற்கான கல்வி என்று பொருள்படும்; இக் கல்வி வாழ்க்கை வாழ்வதற்கு ஆதாரமான கல்வி.

வேலையின் மூலந்தான் கல்விவரும் என்பது உலகெங்கும் ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ள ஓர் உண்மையான கல்வித் தத்துவம். (வேலை - உடல் உழைப்பு.) காந்தியடிகள் இதனினும் ஒருபடி மேற்சென்று, செய்யும் வேலை அல்லது உழைப்பானது சமூகத்தில் அடிப்படையான பயன் விளைவிக்கவேண்டும் என்றும் கூறினர். தொழிலென்று நாம் கல்வித்துறையில் பேசும்போது அதன் சாரம் இது வாகும்; இதனுல்தான் ஆதாரக் கல்வியானது இன்று ஜீவாதாரமான தேவைகளுக்குரிய ஏதேனும் ஒரு தொழிலுடன் இணைந்திருக்கிறது.

6. ஆதாரக் கல்வியின் தோற்றுவாய்—

அ. பண்டைய வரலாறு

ஆரம்பக் கல்வி என்று சொல்கிற நம் இளங் குழந்தைகளின் கல்வியை இதுவரை யாரும் கவனிக்கவே யில்லை. ஆங்கிலேயர் நம்மீது சுமத்திய கல்வித்திட்டம், மேல் படிப்பைத் தனக்கேற்ற வழியில் ஒழுங்கு செய்ததே தவிர, ஆரம்பப் படிப்பை எவ்விதத்திலும் செம்மையாக்கவுமில்லை, மேம்படுத்தவுமில்லை; சர்வஜனக் கல்வி வேண்டும் அல்லது பாமரமக்கள் அனைவரும் கல்வி கற்கவேண்டும் என்று அக் கல்வித் திட்டம் எண்ணிப் பார்க்கவேயில்லை. இந்தியக் கல்வியைச் சீர்திருத்தும் எண்ணம் கொண்டிருந்த தேசபக்தர்கள் யாவரும் இதில் கவனம் செலுத்தினர்கள். கல்வி

அனைவருக்கும் கிடைக்கவேண்டும், அதிலடங்கிய விஷயமும் அனைவருக்கும் ஏற்றதா யிருக்கவேண்டும் என்பது அவர்கள் கருத்து; கல்வி ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமை என்ற உணர்ச்சி, கல்விக்கான பாடத்திட்டத்தில் அங்கீகரிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். கல்வியின் போக்கையே அடியோடு மாற்றி, மேற்கூறிய கருத்துக்கேற்ற புதிய அடிப்படையை அமைத்த பெருமை மகாத்மா காந்திக்குரியது.

தேசிய ஆதாரக் கல்வி என்று வழங்க ஆரம்பித்த புதிய காந்தியக் கல்வி முறையானது, 1937ஆம் வருஷம் அவர் தமது ஹரிஜன் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின் மூலந்தான் முதன் முதலில் உலகுக்குத் தெரியலாயிற்று. இங்கு அவர் கூறிய கருத்துக்கள் யாவும் புத்தகப் படிப்பினாலோ, மேல்நாட்டுக் கல்வி முறைகளின் ஆராய்ச்சியாலோ, வந்தமையவில்லை. இளமையிலிருந்து தாம் பெற்ற அனுபவத்தாலும் செய்த சிந்தனையாலும் அவை விளைந்தவை. குழந்தைகளிடம் அவருக்குப் பிரியம் அதிகம்; குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கவேண்டும் என்பதே அவருடைய ஆசை. உபாத்தியாயர் வேலைக்கு அவர் ஒரு சமயம் முயன்று வேலை கிடைக்காமல் போயிற்று!

தென்னுப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் முதன் முதலாகத் தொடங்கியபொழுது, இந்தியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பு அவருக்கு வந்தது. அப்போதுதான் அவர் கல்வித்துறையில் சிந்தனையைச் செலுத்த ஆரம்பித்தார். வெறும் ஏட்டுப் படிப்பு நமக்குப் பயனற்றது என்றும், உண்மையான கல்வி என்றால் அது குழந்தையின் உடல் உள்ளம் உயிர் ஆகிய மூன்று திறத்திலும் உள்ள பண்புகளைப் பூரணமாய் வளரச் செய்யவேண்டும் என்றும் அவர் கண்டார். அங்கு அமைந்திருந்த டால்ஸ்டாய் விவசாயப் பண்ணையில், உடற்பயிற்சியும் ஒழுக்கப் பயிற்சியுமே முதலிடம் பெற்றன. சிறந்த ஒழுக்கம் குழந்தை

களிடம் அமையுமானல், ஏட்டுக் கல்வியும் பிறவும் மிக்க எளிதாக வரமுடியும் என்று அவர் உணர்ந்தார். சமையல் முதல் தோட்டிவேலை வரையில் பிள்ளைகளையும் சேர்த்து ஈடுபடுத்தியதால், அங்குப் போதுமான உடற் பயிற்சி கிடைத்தது. தோட்டவேலையும் இருந்தது. இதில் பிள்ளைகளே பெரும் பங்கு கொண்டார்கள். விறகு உடைத்தல், குழி தோண்டுதல், மூட்டை தூக்குதல் முதலான கடின வேலைகளையும் அவர்கள் செய்தார்கள். செருப்புத் தைத்தலும் பழகினர்கள். இவற்றிலிருந்து, உடலுழைப்பே உண்மையான கல்விக்கு அடிப்படை என்று மகாத்மா காந்தி முடிவுசெய்தார். தன்னம்பிக்கையும், சுய முயற்சியும், புத்திக் கூர்மையும், ஆரோக்கியமும், ஒற்றுமையும், சமயோசித புத்தியும் வளர்வதால், கல்விக்குக் கருவி இதனினும் சிறந்தது வேறென்றில்லை என்று அவர் உறுதியாகக் கருதினர்.

பின்னர் அவர் பீகார் மாகாணத்தில் சம்பரான் என்ற இடம் போய் அங்கு நடந்த போராட்டத்தில் ஈடுபட்ட போது, அக்கருத்துக்கள் மேலும் உறுதிபெற்றன. சுகாதார வாழ்வுக்கான கல்வி பாமர மக்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை அங்கு நேர்முகமாய்க் கண்டார். பாடசாலையில் துப்புரவு, சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிப் பிள்ளைகள் பெறும் பயிற்சியிலிருந்து பெரியவர்களுக்கும் பயிற்சியளிக்க முடியும் என்பதை அவர் அங்குப் பார்த்தார்.

பிறகு ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த காலத்தில், தேசியப் பாடசாலைகளைத் தொடங்கி, அங்கு கட்டாயமான தொழிலாக நூற்றலைத் தொடங்கிவைத்தார். (முதல் முதலாக, செய்து கற்றல் என்ற புதுமுறையை நடத்தமுற்பட்ட அமெரிக்கக் கல்வி இயக்கத்தின் தந்தையான ஜான் டியூபி கூட, சிகாகோ நகரில் தாம் தொடங்கிய புதிய சோதனைப் பள்ளியில் நூற்றலையே தொழிலாகத் தொடங்கினர் என்பதும் இங்கு அறியத்தக்கது.) நூற்றல்மூலம் பாட

சாலை தன் செலவைச் சமாளித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அப்போதே ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், கைகால்களுக்கும் கண் காதுக்கும் பயிற்சி தராத கல்வி கல்வியல்ல என்பது அவருடைய திட்டங்களுக்கு அடிப்படை. ஆனால் அக்காலத்தில் (1921) நூற்றல் கலை பூரண அபிவிருத்தி அடையாமையால், தேசியப் பாடசாலைகளின் சோதனைகள் பூரண வெற்றியளிக்கவில்லை. அனேக தொண்டர்கள், முக்கியமாக வினோபாவும் அவருடைய மாணுக்கரும், செய்த இடைவிடாத முயற்சியினால், சுமார் 1937-க்குள் நூற்றல் கலையும் கருவிகளும் மிக்க அபிவிருத்தி யடைந்துவிட்டன. இப்போதுதான் அவர் திட்டமாகவும் ஆதார பூர்வமாகவும் தொழில்மூலம் கல்வி என்பதுபற்றி எழுதுவது சாத்தியமாயிற்று.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் மூலம், கல்வி என்ற இலாகா பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியருக்கு மாற்றப்பட்டது ; ஆனால் அதற்கான நிதியிலாகா மாற்றப்படவில்லை. இதனால் கல்வியில் சீர்திருத்தம் செய்ய எண்ணினாலும், நிதியின்மையால், செய்ய முடியவில்லை. அன்றியும் கல்வி முதலான அபிவிருத்தித் துறைகளுக்கான நிதி முழுமையும் மது வருமானத்திலிருந்தே வரவேண்டும் என்பது இந்திய சர்க்காரின் திட்டம். ஆகவே கள் குடியே ஒழிய வேண்டும் என்று தேசபக்தர்கள் சொன்னபோது, கல்விக்குப் பணம் என்று பேசவே வழியில்லை. குடியால் அரசாங்கத்துக்குப் பணம் வராவிட்டால், படிப்புக்குக் கொடுக்கப் பணம் இல்லை. “மகன் படிக்க, தகப்பன் குடிக்க” என்று இந்த நிலையைச் சுருக்கமாய்க் கூறுவது பொருந்தும்.

1935ஆம் வருஷத்துச் சட்டம், மாகாண சுயாட்சியளித்தது. அதன்படி பதினொரு இந்திய மாகாணங்களுள் ஏழில் காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டது. காங்கிரஸ் மந்திரிகளுக்குக் காந்தியடிகள் சொன்ன முதல்யோசனை, மதுவை ஒழித்தல். இரண்டாவது யோசனையே, பிள்ளைகளைப் பள்

ளிக்கூடத்தில் பயனுள்ள ஒரு தொழில்செய்யப் பழக்கி அதில் கிடைக்கும் வருவாயின் மூலம் செலவைச் சரிக் கட்டிக்கொள்ள முயலவேண்டும் என்பது. இந்த யோசனை களை அவர் ஹரிஜன் பத்திரிகையில் விரித்து எழுதியிருந்தார்.

" கல்வி என்று நான் சொல்லும்போது, குழந்தையிட முள்ள எல்லாப் பண்புகளிலும் - உடல் உள்ளம் உயிர் ஆகிய மூன்றின் பண்புகளிலும் - உள்ள சிறப்பியல்புகளைப் பூரணமாய் வெளிவந்து பிரகாசிக்கச் செய்வதையே குறிப் பிடுகிறேன். வெறும் எழுத்தறிவே கல்வியன்று. ஆதலால், குழந்தை கல்விப் பயிற்சிபெறத் தொடங்கிய நேரம் முதல், அவனுக்குப் பயனுள்ள ஒரு கைத் தொழில் கற்பித்து, பொருள் உற்பத்தி செய்யப் பழக்குவதனாலேயே அவ னுடைய கல்விக்குத் தொடக்கம் செய்வேன். இவ்விதம் செய்யும்போது, ஒவ்வொரு பாடசாலையும் தன் செலவைத் தானே சரிக்கட்டிக்கொள்ளும்படி செய்யமுடியும்; பாட சாலைகள் உற்பத்திசெய்த பொருள்களை அரசாங்கம் எடுத் துக்கொள்ளும் " என்பது அவர் எழுதியவற்றின் சாரம்.

7. தோற்றுவாய்—ஆ. வர்தாக் கல்வி மகாநாடு

1937ஆம் வருஷம் சென்னை மாகாணத்தில்தான் முதன் முதலாக மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. ராஜாஜி மந்திரி சபையானது, சேலம் ஜில்லாவில் அக்டோபர் மாதம் முதல் தேதி சட்ட பூர்வமாய் மதுவை ஒழித்தது. இதனால் மது வருமானம் போய்விடும், கல்வியே போய்விடும் என்ற கூக்குரல் நாடெங்கும் பரவலாயிற்று. (அன்று கல்விக்குச் செலவான நாலு கோடி ரூபாயும், கள் வரியிலிருந்தே கிடைத்தது.) மது, கல்லாமை என்ற இரண்டு கேடுகள்: இவற்றுள் கல்லாமை இருந்தாலும் இருக்கட்டும், மது ஒழி யட்டும் என்றுகூட மகாத்மா துணிந்து கூறினார். பிறகு இதற்குப் பதிலளிக்கும் முறையில், மகாத்மா காந்தி தம் கல்வித்திட்டத்தின் இரண்டாவது அம்சமாகிய உழைப்பின்

மூலம் செலவைச் சரிக்கட்டுதல் என்ற கருத்தை விளக்கி எழுதினர்.

இதற்கிடையில், 1937 ஆம் வருஷம் வர்தா நகரத்தில், மார்வாரிக் கல்விச் சங்கம் என்ற சங்கமானது தன் வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அச்சமயம் அது அகில இந்தியக் கல்வி மகாநாடு ஒன்றை அங்குக் கூட்டிற்று. அக்டோபர் 22, 23 ஆம் தேதிகளில் நடந்த அந்த மகாநாட்டுக்கு மகாத்மா காந்தி தலைமை வகித்தார். அடிமை ஆங்கிலக் கல்வி முறையைப் போக்கி, நாட்டுக்கு ஏற்ற தேசியக் கல்வித் திட்டமொன்றைப் புதிதாக வகுப்பதே அந்த மகாநாட்டின் முக்கிய நோக்கம்.

மகாநாடு கூடுவதற்கு மூன்று மாதங்கள் முன்னதாக காந்தியடிகள் கல்வியைப் பற்றித் தாம் தமது ஹரிஜன் பத்திரிகையில் விளக்கி எழுதியிருந்த கருத்துக்களை, மகாநாட்டாருக்கும் தெரிவித்தார். நாடெங்குமிருந்து கல்வி நிபுணர்களும் கல்விமந்திரிகளும் கல்வி யிலாகா டைரெக்டர்களும் அங்குக் கூடியிருந்தார்கள். மகாநாட்டார் அவற்றை நன்கு ஆமோதித்தபின், பின்வரும் நான்கு தீர்மானங்களை நிறைவேற்றினர்கள் :

1. இந்த நாட்டில் எல்லோருக்கும் ஏழ வருஷ காலம்* இலவசமாக கட்டாயக் கல்வி தேசமெங்கும் பரவக்கூடிய ஒரு திட்டப்படி போதிக்க வேண்டும்.

---

*இந்த ஏழுவருஷக் கால அளவை 1950இல் பாட்னுவில் கூடிய கல்விச் சங்கத்தார் எட்டு வருஷமாக்கி யிருக்கிறார்கள். இது நாடு முழுமையிலும் பொதுவாக விளைந்த பலவகைக் கூக்குரல்களின் விளைவால். ஆனல் இன்று ஆரம்பக்கல்வியே முன் போல் எட்டு வருஷமாக இராமல், ஏழாகக் குறைக்கப்பட்டுள்ளதை நோக்கும்போது, கல்விச் சங்கத்தார் வகுத்துக்கொண்ட ஏழு வருஷக் கல்வியே பொருத்தமானது என்று கருதுவதில் தடையில்லை.

2. கல்வி போதிக்கிற மொழி தாய்மொழியாகவே இருக்க வேண்டும்.

3. இந்த ஏழு வருஷ காலக் கல்வியானது பயனுள்ள ஏதேனுமொரு கைத்தொழிலை ஒட்டியதாய் இருக்கவேண்டும். இந்தக் கைத்தொழிலும் குழந்தை வாழ்கிற சூழ்நிலைக்குப் பொருத்தமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். குழந்தையினிடம் அபிவிருத்தி செய்யவேண்டிய மற்றெல்லாச் செயல் திறனும், குழந்தைக்கு அளிக்கவேண்டிய எல்லாப் பயிற்சியும், இயன்ற வரையில் இந்தக் கைத்தொழிலுடன் பூரணமாய் ஒன்றிய தொடர்பு கொண்டதாய் இருக்க வேண்டும்.

4. இந்தக் கல்வித் திட்டமானது காலக்கிரமத்தில் பள்ளிக்கூடத்தின் தொழில் வருவாய் மூலம், உபாத்தியாயர்களுக்காக ஏற்படும் செலவைச் சரிக்கட்டிக்கொள்ளும்.

8. தோற்றுவாய்—இ. ஜாகிர் ஹுசேன் கமிட்டி

பிறகு, இதை யடுத்து (1938 மார்ச்சு மாதம்) ஹரிபுராவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாடும், இந்தத் தீர்மானங்களை ஏற்று, வருங்காலத்தில் இந்தியாவின் தேசியக் கல்வி இம்முறையில் அமைய வேண்டும் என்று முடிவு செய்தது. மகாநாட்டில் செய்த இத்தீர்மானங்களை ஒட்டிப் பாடத்திட்டம் முதலியன தயாரிப்பதற்கு, டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களைத் தலைவராகவும், ஸ்ரீ அரியநாயகம் அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்ட ஒரு கமிட்டி நியமனமாயிற்று. மற்ற அங்கத்தினர்: கே. ஜி. சையத்தீன், காகா கலேக்கர், கிஷோரிலால் மஷ்ருவாலா, ஜே. சி. குமரப்பா, கிருஷ்ணதாஸ் ஜாஜு, விநோபா பாவே, ஆசாதேவி ஆவர். இந்தக் கமிட்டியார் ஒரு மாதங் கழித்து, இத்தீர்மானங்களை ஒட்டிய விரிவான கல்வித் திட்டத்தை மகாத்மா காந்தியிடம் சமர்ப்பித்தார்கள். இத்திட்டமே, ஜாகிர் ஹுசேன் கமிட்டி அறிக்கை

என்று வழங்குவது. இந்தத் திட்டத்தை நடத்துவதற்காக இதே தலைவரையும், காரியதரிசியையும் கொண்ட ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் (அதாவது அகில இந்திய கல்விச் சங்கம்) என்ற சங்கம் நிறுவப்பெற்றது. அப்போது மகாத்மா காந்தி வர்தாவுக்கு அருகிலுள்ள சேவாகிராமம் என்றகிராமத்தில் தங்கியிருந்தார். அங்கு இச்சங்கத்தார் சுமார் இருபது வருஷகாலமாக ஒரு பாடசாலையையும் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையையும் வைத்து நடத்திவருகிறார்கள். இவர்கள் நடத்திவரும் கல்வி முறையைத்தான் பிற மாகாண அரசாங்கங்கள் ஓரளவுக்கு ஏற்று நடத்த முயல்கின்றன. நாம் ஆதாரக் கல்வி என்று கூறுவதும் இக்கல்வி முறையேயாகும்.

காந்தியடிகளுக் கேற்பட்டிருந்த நூற்றல் - பைத்தியம் என்றும் கிறுக்கு என்றும் அனேகர் கருதி ஒதுக்கிவிட்டிருந்த அதே கருத்துக்களை மேல்நாட்டு முறையில் தேர்ந்த கல்வி நிபுணர்களும் குழந்தை மனோதத்துவ நிபுணர்களும் பூரணமாய் ஆதரித்தது, நம்மவர்கள் அனேகருக்குக் கூடப் பெருவியப்பாகத்தான் அப்போது இருந்தது. இந்திய சர்க்கார் அமைத்திருந்த மத்திய அரசாங்கக் கல்விச்சபையின் ஆலோசகராக வந்த சர் ஜான் சார்ஜெண்டும் இப்புதுக் கல்வி முறையில் ஆர்வம் கொண்டார். மறுவருஷம் புனாவில் கூடிய கல்வி மகாநாட்டிலும் அவர் கலந்து கொண்டார்.

9. தோற்றுவாய்—ஈ. கெர் கமிட்டி

மத்திய அரசாங்கத்தின் கல்வி ஆலோசனை சபை இந்தப் புதிய திட்டத்தின் சிறப்புக்களை நன்றாய் உணர்ந்து, இந்த வர்தாத் திட்டத்தைப் பரிசீலனை செய்வதற்காக, அப்போது பம்பாய் அரசாங்கத்தின் கல்வி மந்திரியும் முதல் மந்திரியுமாய் இருந்த திரு. பி. ஜி. கேர் தலைமையில் ஒரு கமிட்டி நியமித்தது. இந்தக் கமிட்டியார் செயல்மூலம்தான்

கல்வி வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டார்கள். ஆனல் கீழ் வகுப்புக்களில் இந்தச் செயல் என்பது அனேக விதமாக இருக்கலாம்; இதன்மூலம் சிறு குழந்தைகள் தங்களுடைய பல்வேறு வகையான ஆர்வங்களை வெளிப்படுத்தவும் செயலில் ஈடுபடுத்தவும் நிரம்பிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும், இந்தச் செயல்கள் பின்னர் ஓர் ஆதாரத் தொழிலில் போய் முடியும், இதில் உற்பத்தியாகும் பொருள்கள் விற்பனைக்கு ஏற்றனவாக இருக்கும் என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்களுடைய சிபாரிசுகளில் முக்கியமானவை பின்வருவன :

1. ஆதாரக் கல்வித் திட்டத்தை முதல்முதல் கிராமப் பிரதேசங்களில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

2. ஆதாரக் கல்விக்கான கட்டாய வயது 6 முதல் 14 வரையில்; ஆனல் ஐந்து வயதிலேயே குழந்தைகளை ஆதாரப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளலாம்.

3. ஆதாரப் பாடசாலையிலிருந்து மற்றப் பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் போக விரும்பினல், ஐந்து வகுப்புக்கு மேல், அல்லது பதினெரு வயது முடிந்த பின், வேறு பள்ளிக்கு அனுப்பலாம்.

4. தாய்மொழியிலேயே பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்க வேண்டும்.

5. இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி அவசியம்; இது இந்துஸ்தானியாக இருக்கவேண்டும்.

6. வெளியார் பரீட்சை தேவையில்லை. ஆதாரக் கல்வி முடிந்தவுடன் பாடசாலைப் பரீட்சை முடிவின்மேல் ஓர் அத்தாட்சிப் பத்திரம் கொடுத்தால் போதும்.

கெர் கமிட்டியார் செய்த இந்தச் சிபார்சுகளை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆதாரக் கல்வித் திட்டத்தைச் சாதாரண உயர்தரக் கல்வியோடு இணைப்பதற்காக அதே கெர் தலைமையில் மற்ருெரு கமிட்டியும் மத்திய

அரசாங்கத்தார் நியமித்தார்கள். ஆதாரக் கல்வி ஆறு வயது முதல் பதினுலு வயது வரை ஆகிய எட்டு வருஷ காலம் நடைபெறவேண்டும் என்பது அவர்கள் முடிவு. இதில் ஜூனியர் வகுப்பு ஆறு முதல் பதினொரு வயது வரை உள்ள ஐந்து வகுப்பு; மற்றது சீனியர் வகுப்பு, மிச்சமுள்ள மூன்று வருஷம். இந்தத் தீர்மானங்களை யெல்லாம் மத்திய கல்வி ஆலோசனை சபையார் ஏற்று, தங்களுடைய யுத்தப் பிற்காலக் கல்வித் திட்டத்தில் சேர்த்துக்கொண்டார்கள் (1944). பொதுவாக கெர் கமிட்டி அறிக்கை ராஜ்ய அரசாங்கங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போது, ராஜ்ய அரசாங்கங்களினுடைய ஐந்து ஆண்டுத் திட்டங்களில் ஆரம்பப் பாடசாலைகளை ஆதாரப் பாடசாலைகளாக மாற்றத் திட்டமும், ஆதாரப் பாடசாலைகளை அதிகரிக்கும் திட்டமும் விஸ்தரிக்கும் திட்டமும் காணப்படுகின்றன.

இவ்விதமாக முடிவில் ஆதாரக் கல்வியானது ஏளனம், கண்டனம், அவநம்பிக்கை என்ற நிலைகளை யெல்லாம் கடந்து, இந்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும், எல்லாக் கல்வி நிபுணர்களும் ஒப்புக்கொண்டு நடத்த வேண்டிய திட்டமாக ஆயிற்று. பாடசாலையில் செய்யும் தொழில் உற்பத்தியால் வரும் லாபம், ஆசிரியர் சம்பளம் நடைமுறைச் செலவு ஆகிய வருஷவாரிச் செலவுக்கு ஈடு செய்ய வேண்டும் என்பது, காந்திய ஆதாரக் கல்வி முறையில், முக்கிய நிபந்தனை. ஆனல் மத்திய ஆலோசனை சபையின் திட்டத்தில், ஆதாரத் தொழில்மூலம் வரும் லாபம் செலவைச் சரிக்கட்டவேண்டும் என்ற அம்சத்தை வற்புறுத்தவில்லை. காந்தியத் திட்டத்தில் ஆதாரக் கல்வி முழுமையும், பிரிக்கமுடியாத ஒரே கல்வி. இந்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான பிள்ளைகளுக்குக் கிடைக்கப்போகிற கல்வி யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் ஆரம்பக்கல்விக்கு அதிகமாக எதுவும் இருக்கப்போவதில்லை. ஆகவே

அக்கல்வி பின்னப்படாமல் இருப்பதே நியாயம். ஆனால் மத்திய திட்டத்தில் இதைப் பெயரளவில் இரண்டாகப் பிரித்து, முதல் ஐந்து வருஷம் ஜூனியர் என்றும், அடுத்த மூன்று வருஷம் சீனியர் என்றும் பெயர் வைத்திருக்கிறார்கள். வேறுபாடுகள் இவ்வளவே.

தாலிமி சங்கத்தாரும் மத்தியக் கல்வி இலாகாவும் ஆதாரக் கல்விக்கான அனேக புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆதாரக் கல்வி வெற்றி தருமா என்ற நிலையைக் கடந்து நாம் நெடுந்தூரம் வந்துவிட்டோம். இது புதிய கல்வி முறை, வளர்ந்து வரும் கல்வி முறை; ஆதலால், ஆசிரியர்களுடைய அனுபவத்தையும் வேலைத் திறமையையும் சாதனையையும் நாட்டின் தேவையையும் குறித்த சமூகச் சூழ்நிலையையும் ஒட்டி, புதிய புதிய சோதனைகள்மூலம், திட்டங்களும் முறைகளும் பாடங்களும் வேலையும் வளர்ந்து கொண்டும் மாறிக்கொண்டும்தான் வரும். காலக்கிரமத்தில் தான் திருத்தமும் தெளிவும் ஏற்படமுடியும்.

10. இக்கல்வியின் பெயர்

ஆதாரக்கல்வி என்று நாம் இங்கே கூறுவது மேற்குறித்த காந்தியக் கல்விமுறை. ஆங்கிலத்தில் இதை பேஸிக் எஜுகேஷன் என்பார்கள். ஹிந்துஸ்தானியில் நயீ தாலீம் (புதுமுறைக் கல்வி) என்றும், புனியாதி தாலீம் (ஆதாரக் கல்வி) என்றும் சொல்லுவார்கள்; தாலீம் - கல்வி. வர்தா நகரில் கூடிய கல்விமகாநாட்டில் இக்கல்வி முறை உருக்கொண்டமையால், இதை வர்தாக் கல்வித்திட்டம் என்றும், அகில இந்தியக் கல்விச் சங்கம் இக்கல்வி முறையைச் சேவா கிராமத்தில் நடத்திவந்த காரணத்தால் சேவா கிராமக் கல்வி முறை என்றும் இதைக் குறிப்பிடுவார்கள். தமிழில், மூலக்கல்வி, மூலாதாரக்கல்வி, அடிப்படைக் கல்வி, புதுக் கல்வி, வேர்க்கல்வி, தொழிற்கல்வி, தொழில்மூலம் கல்வி, காந்தியக் கல்வி என்றெல்லாம் இக் கல்வி முறை வழங்கப்

பெறும். சில பெயர்கள் பொருத்தம், சில பொருத்தமில்லை. இதை நாம் ஆதாரக் கல்வி என்றே எங்கும் வழங்குவோம்.

11. ஆதாரக் கல்வியின் பொருள்

ஆதாரக் கல்வி என்று இங்கு நாம் கூறுவதன் முக்கிய மான அம்சங்கள் பின்வருவன ஆகும் :

1. இது எல்லோருக்கும் கல்வி. இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி ; கட்டாயக் கல்விக்கான பொறுப்பும் ஏற்பாடும் அரசாங்கத்தைச் சேர்ந்தவை.

2. இக்கல்வியானது, குழந்தைக்குச் சுமார் ஆறு வயதில் தொடங்கி 14 வயதுவரை நடைபெறும். இக்கல்வியை முடித்த பையனுக்கு ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் குறிப்பிட்டுள்ள அறிவின் தரம் அல்லது திறமை ஏற்பட்டிருக்கும். (இதை ஏறக்குறைய மெட்றிகுலேஷன் தரம் என்று முன்னமே சொல்லி வந்தார்கள் ; அப்போது ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி என்றும் உயர்தரக் கல்வி என்றும் சொல்பவை யாவும் ஆதாரக் கல்வியினுள் அடக்கினார்கள். ஆனால் இப்போது நிலைமை வேறு. புதிய ஏற்பாட்டின்படி ஆரம்பக்கல்வி மட்டும் இதனுள் அடங்கும் ; அதாவது புதிய ஏழு வகுப்புக்கல்வி.)

3. கல்விப் பயிற்சிக்குப் புத்தகமே கருவி என்றிருந்த நிலை நீங்கி, குழந்தையின் சூழ்நிலையை ஒட்டி மக்களின் ஜீவாதாரத் தேவைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு கைத்தொழிலே கல்விக்குக் கருவியாக இருக்கும். குழந்தையின் அறிவை இந்தத் தொழிலோடு தொடர்பு படுத்தி வளர்க்கவேண்டும்.

4. குழந்தைகளை இவ்வாறு பயனுள்ள ஓர் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுத்துவதன் மூலம், பாடசாலைக்கு வருவாய் கிடைக்கும். இந்த வருவாயானது காலக்கிரமத்தில் பாடசாலைக்கு ஏற்படும் நடைமுறைச் செலவுகளுக்கு (அதாவது

உபாத்தியாயர் சம்பளம் முதலியவற்றுக்கு) ஈடுசெய்ய வேண்டும்.

5. இக்கல்வி முழுமையும் தாய் மொழியின் மூலந் தான். இந்த எட்டு வருஷ காலத்தில் ஆங்கிலத்துக்குப் பிரதான இடம் இராது. சுமாராகப் பேசுவதற்கும் எழுது வதற்குமான ஹிந்துஸ்தானி மொழிப் பயிற்சி உண்டு.

[இப்படிச் சொன்ன மாத்திரத்திலே அனேகர் ஆங் கிலமே இல்லாமற் போய்விடுகிறதே என்று வருத்தப் படுகிருர்கள். நிலைமை இதுவல்ல. சர்வ ஜனங்களுக்காகவும் நாம் திட்டமிடுகிருேம். சர்வ ஜனங்களுக்கும் ஆங்கிலம் இன்றியமையாத தேவையல்ல ; ஆனல் தாய்மொழியின் வழியே பூரணமாய்க் கல்விப் பயிற்சி பெறுவது எல்லோ ருக்கும் அவசியம், உரிமையுங்கூட. அடிப்படையாக ஓரளவு கல்விக்குத்தான் நாம் இப்போது திட்டமிட முடி யும் ; இதுவே கட்டாயமாகவும் இலவசமாகவும் இருக்கும். தேவையானவர்களும் விருப்பமுள்ளவர்களும், இதற்கு மேல் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம். அதற்கு இப்போது செலவிடுவதுபோல் அதிகமான வருஷங்கள் செலவிட வேண்டியதில்லை. தாய்மொழி மூலம் பூரணத் தேர்ச்சி கைவந்த பையன் பிற பாடங்களில் எளிதாகத் தேர்ச்சி பெறுவான். அதுபோலவே, வேண்டுமானல் அவன் ஆங்கில மும் எளிதாகக் கற்றுத் தேர்ச்சி பெறுவான். ஆங்கில மொழியறிவு பெறவிரும்புவோருக்கு அப்போதும் போதிய அறிவு பெறத் தாராளமாக இடம் உண்டு.]

12. ஆதாரக் கல்வி—மூல தத்துவங்கள்

1. தனி மனிதர் ஒவ்வொருவரிடமும் அமைந்துள்ள உடற் பண்புகள், உள்ளப் பண்புகள், ஆன்மப் பண்புகள் என்ற மூவகைப் பண்புகளையும் ஒருமித்து அழகுபெற வளரச்செய்தல். மனிதர் என்ருல், ஆண் பெண் குழந்தை வயதுவந்தவர் ஆகிய அனைவரையும் குறிக்கும்.

ஆளுமை என்ற ஒரு புதுச்சொல் இன்று வழக்கத்துக்கு வருகிறது. ஆங்கிலத்தில் பெர்சனலிட்டி என்று கூறும் கருத்தை விளக்குவதற்காக இவ்வொரு சொல்லைத் தமிழ் மொழிபெயர்ப்பாளர் இன்று ஆட்சிக்குக் கொண்டு வருகிறார்கள். ஆண்மை - ஆள் - மை ; ஆளும் தன்மை ; ஆளுமை என்பது வெறும் தோற்றம் மட்டுமல்ல ; உடல் தகுதி, புத்தி, ஒழுக்கம், செயல்திறமை ஆகிய திரண்ட கருத்தைக் குறிக்கும் ஒரு சொல். ஆதாரக் கல்வி யென்பது வெறும் எழுத்துப் படிப்பை மட்டும் வளர்க்கும் கல்வி யன்று; இன்னும் மேலானது. எழுத்துப் படிப்பு என்பது உடல் பண்பை வளர்ப்பதல்ல; ஒழுக்கப் பண்பை வளர்ப்ப தல்ல; கேவலம் உள்ளத்துள் ஒரு பகுதியாகிய புத்தியில் ஓரளவு ஞாபகசக்தியை மட்டும் வளர்க்கும் அம்சம் என்றால் பொருந்தும். கல்வியோ, மூன்றையும்—உடற் பண்பு, உள்ளப் பண்பு, ஒழுக்கம் ஆகிய உயிர்ப் பண்பு ஆகிய மூன்றையும்—ஒருமித்து வளர்ப்பது. எனவே, கல்வி யென்பது விரிந்த ஒரு பயிற்சி ; எழுத்துப் படிப்பு, அதில் மிகச் சிறிய ஓர் அம்சம். ஆகவே, ஆளுமையின் கல்வி என்பது, இந்த விரிந்த பயிற்சி; உடல், உள்ளம், உயிர் என்ற மூன்று திறப்பண்புகளின் ஒருமித்த வளர்ச்சி. ஆதாரக் கல்வி என்பது இக் கருத்தேயாகும் ; ஆளுமையின் கல்வி அல்லது ஆளுமையின் முழுவளர்ச்சி.

2. இது வாழ்க்கைக்கான கல்வி; வாழ்க்கை முழுமை யும் பெறுகிற கல்வி. தொட்டில் முதல் மயானம் வரை என்றே காந்தியடிகள் இதைக் குறிப்பிடுவார். வாழ்க்கை யின் பல்வேறு பருவங்களை ஒட்டிக் கல்வியும் பல பிரிவுகளா யிருக்கும். இவை பாலர் கல்வி, ஆதாரக் கல்வி, உயர் ஆதாரக் கல்வி, சர்வகலாசாலைக் கல்வி, வயது வந்தோர் (முதியோர்) கல்வி என்பன.

3. பயனுள்ள ஒரு கைத்தொழிலைக் குழந்தைக்குக் கற்பித்து, கல்விப் பயிற்சி தொடங்கிய நேரம் முதல்

ஏதேனும் பொருள் உற்பத்தி செய்ய வல்லவனாகக் குழந்தையை ஆக்கவேண்டும். இதுவே தொழில் அல்லது உழைப்பின் மூலம் கல்வி என்பது. பள்ளிக்கூடத்தில் நடைபெறும் குருட்டுப் பாடமுறை என்ற கொடுங்கோலிலிருந்து இது குழந்தைக்கு விடுதலையளிக்கிறது. குருட்டுப் பாடம் குழந்தை இயல்புக்குக் கொஞ்சமும் ஒவ்வாது. உழைப்பினால் குழந்தையிடம் செயல் திறனும், அதனடியாக அனுபவமும், அனுபவத்தின் மூலம் அறிவின் திறனும் வளர்ச்சியடைகின்றன. உடலும் உள்ளமும் ஒத்து வளர்கின்றன. அச்செழுத்தைப் படிப்பதுதான் கல்வி என்ற போலி முறையை விட்டு, தன் கண்-காது-கை-காலையும், மூளையையும், உண்மையாகவே பயனுள்ளதொரு காரியத்தில் பழக்கும் திறமையைக் குழந்தை பெறுகிறான். இதுவே பண்புகள் யாவும் ஒருமித்த முழு வளர்ச்சி யடைவதற்கான கல்விபெறுதல் என்பது.

13. மூல தத்துவங்கள்—சமூக அடிப்படை

4. உடல் வருந்தி உழைப்பவர்களுக்கும் பணம் படைத்து உழைக்காமல் சோம்பி யிருப்பவர்களுக்கும் இடையில் இன்று பெருத்த வேற்றுமையைச் சமூகத்துறையில் காண்கிறோம். உழைப்பது தாழ்வு என்ற எண்ணம் இப்போது மலிந்திருக்கிறது. பிள்ளைகள் அனைவரும் தங்கள் கைகால்களை உழைப்பில் பழக்குவதன் மூலம் இவ்வேற்றுமையைக் காலக்கிரமத்தில் குறைப்பதும், இத்தாழ்வு உணர்ச்சியைப் போக்குவதும், உழைப்பு கௌரவம் பொருந்தியது, மக்களனைவரும் ஓரினம் என்ற எண்ணங்களைப் பெருக்குவதும், நோக்கம்.

கல்வித்துறையில் எல்லாப் பிள்ளைகளும் கூடி, பயனுள்ள ஓர் உற்பத்தித் தொழிலில் ஈடுபடும்போது, உயர்வு தாழ்வு ஏது? பணக்காரப் பையனும் ஏழைவீட்டுப் பையனும் ஒரே வேலை செய்கிறார்கள். பிராமணப் பையனும்

ஹரிஜனப் பையனும் அதே வேலையைச் செய்கிறார்கள். படித்தவன் உயர்ந்தவன், படிக்காமல் வேலை செய்பவன் தாழ்ந்தவன் என்ற நினைப்பு இருவருக்குமே கேடானது. இங்கு இக்கேடு தோன்றவே வழியில்லை. "ஒன்றே குலமும்" என்ற உணர்வும், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனையும்" தாமே பிறக்கின்றன.

5. வயிறு வளர்ப்பதற்காகப் பல சமூகத்தார் கடின உழைப்பு மேற்கொள்ளவேண்டி யிருப்பதால், இன்றும் சாதி வேற்றுமைகள் அப்படியே இருந்து வருகின்றன. உழைப்பினால் தாழ்வு இல்லை என்ற உணர்ச்சியைப் பெருக்கி இச் சாதி வேற்றுமையைப் போக்குவது சமூகத்துறையில் உள்ள ஒரு நோக்கம்.

"உழைப்பில், வேலை துன்பம், பலன் இன்பம். இத் துன்பமின்றி இன்பமில்லை. உலகத்தின் பண்டைய சரித்திரத்தை ஆராய்ந்தோமானால், உழைப்பின் கஷ்டத்தை விட்டுத் தப்ப எண்ணிய நாகரிகங்கள் யாவும் அழிந்துபோயிருக்கக் காண்போம். பாபிலோன், கிரீஸ், ரோம் ஆகிய புராதன நாகரிகங்கள் இத்தகையன. இவை, உழைப்புக்கான கஷ்டத்தைத் தாங்கள் படாமல் அடிமைகளிடம் விட்டு, இன்பத்தை மட்டும் அடைய முயன்றமையால், அழிந்தேபோயின. தொழிலுக்கு வந்தனை, இந்திய நாகரிகத்தில் கருத்தளவிலேனும் உண்டு. இது வாழ்க்கையிலும் இன்று நிலைபெற்றால்தான் இந்நாகரிகம் நிற்கும்; இல்லையானால் இது அழியும்."—குமரப்பா.

6. ஜனநாயகக் குடியரசாகிய இந்திய நாட்டில் ஒவ்வொருவரும், தம் பூரணப் பொறுப்பை உணர்ந்த உத்தமப் பிரஜையாக ஆதல் வேண்டும். ஆதாரக் கல்வியானது பாடசாலையின் வேலை அமைப்பு, வாழ்க்கைமுறை ஆகியவற்றின் துணையால் இந்த நோக்கம் கைகூடப் பாடுபடுகிறது.

தனிப்பட்ட மனிதர் என்ற அளவில் நம்மில் பெரும்பாலோர் உயர்ந்த திறமை வாய்ந்தவர்கள், உத்தம ஒழுக்க

முடையவர்கள். ஆனல், சமூகமாயும் கூட்டாயும், வேலை யிலும் பொது வாழ்க்கையிலும், ஈடுபடும்போது, திறமை வெளிப்படுவதில்லை; ஒத்துழைப்பு இருப்பதில்லை. ஒழுக்கம் குறைகிறது, பொறுப்புணர்ச்சியும் இருப்பதில்லை. குற்றம் பொறுத்தல், சகிப்புத்தன்மை ஆகிய பண்புகள் இல்லை; பணிந்து நடத்தல் இல்லை. ஆகவே தருணத்தில் தலைமை தாங்கி வெற்றியை நோக்கி நடத்திச்செல்லும் ஆற்றலும் சூனியமாகிவிட்டது. இந்த நிலையைப் போக்கி, உரிமை யுணர்ச்சியை மட்டுமல்ல, கடமை யுணர்ச்சியை ஊட்டி நம் முடைய நாட்டுக் கிராமங்களின் சமூக வாழ்க்கையை எல்லா விதத்திலும் மேம்படுத்துவது ஆதாரக் கல்வியின் நோக்கம்.

7. தனி மனிதனிடத்தில், அவன் அங்கமாயுள்ள சமூகத் தின் சிறப்பு, பண்பாடு, நாகரிகம் ஆகியவை அனைத்தும் காணப்படவேண்டும். சென்ற காலத்தின் பழுதிலாத் திற னும் இனி வருங்காலத்தின் சிறப்புக்கு வித்தும் அவனிடத் தில் அமைதல் வேண்டும். அவனல் அவன் காலத்துச் சமூக மும் பின்வரும் சந்ததிகளும் பயனடைதல் வேண்டும். இது இக் கல்விமுறைக்கு மற்ருெரு நோக்கம்.

8. மத வேற்றுமையால் துன்பமுற்ற இந்த நாட்டில் கல்வியானது மதப்பொறையைப் பெருக்கவேண்டும். மத வெறி என்பதில்லாமல் பரஸ்பர மரியாதையும் அன்பும் பூண்டு எல்லோரும் வாழவேண்டும். சமய பக்தி எல்லோ ரிடமும் இருந்தாலும், இது பிறரைக் கௌரவிப்பதாக இருக்கவேண்டுமே யன்றிப் பிறரைத் தாழ்த்துவதாகவோ துன்புறுத்துவதாகவோ இருக்கக் கூடாது.

9. பொதுவாக, இன்று நாகரிகம் முன்னேற்றம் என்ற பெயரால், நம்மவர்களுக்குக் கிராமவாழ்க்கையில் பற்றுதல் குறைந்து, நகரவாழ்க்கையில் மோகம் பெருகியிருக்கிறது. ஆனல் இன்று நகரத்தின் மேம்பாடு முழுமையும் கிராம மக்களால்தான். கிராமவாழ்க்கை தன் பண்பிலும், பெரு

மையிலும் நலிந்து போகப்போக, நகர வாழ்க்கையின் நிலை மிகவும் சீர்கேடடையும். அதுமட்டுமன்றி தேசத்தின் பொதுவளர்ச்சி மிகவும் சீர்கேடடையும். இது உலக முழுமையிலும் ஒப்புக்கொள்ளவேண்டிய ஒரு பேருண்மை. கல்வி, சமூகத்துறைகளில் நிபுணராகிய அமெரிக்க அறிஞரான டாக்டர் மார்கன் என்பவர் இதைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் வற்புறுத்தி வருகிறார். இந்த நோக்கத்தை ஆதாரக்கல்வி நிறைவேற்ற எண்ணுகிறது. நம் பிள்ளைகள் கிராம வாழ்க்கையில் பற்றுக்கொண்டவர்களாய், கிராமப் பண்பு நிறைந்தவர்களாய், அதையே பயனென்று கருதுபவர்களாய், வளர்க்கத் திட்டமிடுகிறது.

பொது. ஆதாரக் கல்வி பயின்ற பையன் தொடக்கத்தில் குறிப்பிட்ட சமூக லக்ஷ்யத்தை உருவாக்க வல்லவனாயிருப்பான். உறுதியான உடல், கூர்மையான அறிவு, அன்பும் சத்தியமும் கொண்டுள்ள ஆன்மா ஆகியவை அவனிடம் பொருந்தியிருக்கும். சிறந்த நாகரிகம் கலை என்பன அவனிடம் குடிகொள்ளும். நாட்டு வாழ்வில் - அரசியல் சமூகம் பொருளாதாரம் நாகரிகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் - எதிர்கால மக்களிடம் உண்மையான ஜனநாயகம் வழங்கும். கல்வி பயின்றவன் எவனும் இத்துறைகளில் எழும் பிரசினைகளை உணர்ந்து தன் கடமைகளைச் செய்யவும் உரிமைகளை நிலை நாட்டவும் வல்லவனாதல் வேண்டும். பூரண அறிவுத் திறனோடு இவற்றைச் செய்தல் வேண்டும். இவன் தன்னுடைய புத்திபூர்வமான சேவையைச் சமூகத்துக்கு அளிக்கவேண்டும். சமூகத்துக்குப் பாரமாக இருத்தல் கூடாது. அதாவது இவன் உழைப்புக்குத் தயாராக இருந்து, தான் பொருள் உற்பத்தி செய்யவேண்டும். ஏழையாயினும் பணக்காரராயினும் அவரவர் உழைக்காத வரையில், உழைப்பு இழிவானது என்ற எண்ணம் பிறந்துவிடும். இது இந்தியாவுக்கும் உண்மை ஜனநாயகத்துக்கும் என்றுமே கேடானது.

14. மூல தத்துவங்கள்—பொருளாதார அடிப்படை

10. இந்தியாவில் மக்கள் தொகை மிகவும் அதிகம்; அதாவது உழைப்பு ரூபமாய்ப் பயன்படத் தக்க மனித சக்தி அதிகம். அறிவோடு வேலை கொடுத்தால், இந்தச் சக்தி அவ்வளவும் பயனுள்ளதான ஆக்க வேலையில் ஈடு பட்டு நாட்டின் தேவைக்கு வேண்டிய பலவற்றையும் அமைக்கும். அப்போது இச்சக்தி - கூட்டுறவு முழுமையும் செவ்வையாக உபயோகமாகும். இது காரணமாக மக்க ளிடம் உடலுறுதி, மனத்திடம், ஒழுக்கம், திறமை ஆகிய தன்மைகள் வளரும். அப்படி இன்றி, இயற்கையில் அமைந் துள்ள இச்சக்தியைப் பயன்படுத்தாமல் விட்டால், அவ்வள வும் வீண் விரயமாகும். இந்த ஏழை நாட்டுக்கு இப்படிப் பட்ட சக்தி விரயம் பெருங்கேடானது. எல்லாச் செல்வத்தி லும்மனிதச் செல்வம் உயர்வானது. இதை வீண் போக்கா மற் காப்பதுதான் உண்மையான சிக்கனவாழ்க்கையாகும். அனைவருக்கும் உழைக்க வழிகாட்டுகிற கல்விதான் இச் செல்வத்தைப் பாதுகாத்துப் பயன்படுத்துவது. பொருளா தாரத் துறையில் இக்கல்வியின் பெருநோக்கம் இதுவே.

ஆதாரக் கல்வியைப் புத்திக் கூர்மையோடும் திறமை யோடும் பயின்ற பையனுக்கு வாழ்க்கையில் உற்பத்தித் திறன் பெருகியிருக்கும் என்பதில் தடையில்லை.

11. மேலும் அளவற்ற வறுமை குடிகொண்ட இந்த நாட்டில், ஒருவன் தினசரி வருமானம் இரண்டணாக்கூட இல்லை என்று நிபுணர் கூறுவார்கள். சாஸ்திரோக்தமாக உழைக்கும் பழக்கத்தையும் திறமையையும் அனைவருக்கும் அளிப்பதன் மூலம், நாட்டிலுள்ள நாற்பது கோடி மக் களின் பொருள் உற்பத்திச் சக்தியைப் பெருக்கி, பெரும் பாலும் சோம்பியே கழிக்கிற அவர்களுடைய அதிகமான ஓய்வு நேரத்தை அவரவருக்கு அவசியமான ஏதேனுமொரு பொருள் செய்து கொள்ளுவதில் உபயோகிக்கச் செய்து,

அவர்கள் வாழ்க்கைத் தரத்தைச் சுய முயற்சியால் அபி விருத்தி செய்வதும் இந்த நோக்கத்துள் அடங்கும்.

12. உற்பத்தி வேண்டும், அதன் மூலம் சுய தேவைப் பூர்த்தி நடைபெற வேண்டும் என்று சொல்வதன் மற்றொரு கருத்து வேறிடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இலவச மான கல்வி இந்த ஏழைநாட்டில் எல்லோருக்கும் கட்டாய மாக வேண்டும். வருவாய் குறைவாகவே உள்ள நிலையில் இதற்கு வழி? கல்விக்காக எந்தப் பள்ளிக்கூடமும் இன்று அரசாங்க உதவியை எதிர்பார்த்து நிற்கிறது. கல்வி என் றால் அரசாங்கத்துக்குச் சுமை. எல்லாத் துறையிலும் முன் னேற வேண்டுமென்று நாம் கருதும்போது, கல்விக்கு எல்லா நிலையிலும் அரசாங்க உதவியை எதிர்பார்த்துக் கொண்டு போவது விவேகமோ தேசபத்தியுடைய செய லோ ஆகாது. ஆதலால் ஒரு பள்ளி தன் தேவைகளை ஓரள வுக்கேனும் பூர்த்திசெய்ய வல்லதாக ஆகியதானால், அந்த அளவுக்கு அரசாங்கத்தை அது எதிர்பார்ப்பது குறையும். அதே அளவுக்கு அரசாங்கமும் வேறு பள்ளிக்கூடங்களைத் தொடங்கவோ,கல்வியை இன்னும் விரிவாக்கவோ, முயலக் கூடும். எனவே, பொருளாதாரத் துறையில் இந்த நோக் கத்தைக் கல்வியாளர் சிந்தனையில் நிறுத்தவேண்டும்.

15. மூல தத்துவங்கள்—மனோதத்துவ அடிப்படை

13. வளர்ச்சிக்கு அடிப்படை ஆனந்தம். குழந்தைகள் எந்நேரமும் சுறுசுறுப்பா யிருப்பார்கள். "குழந்தை யென்றால், சும்மா இருப்பவனல்ல; செய்பவன்; அவனே பிரம்மா" என்று புரோபெல் கூறுவார். தங்கள் கைகால் களால் எந்நேரமும் ஏதேனும் வேலைசெய்து கொண்டே யிருப்பதுதான் அவர்களுக்கு ஆனந்தம் தரும். இந்த வேலை யைப் பயனுள்ள உற்பத்தி வேலையாக ஆக்குவது மனோ தத்துவ ரீதியாக அவர்களுக்கு இன்பந் தருவதோடு, உறுப்புக்களுக்கும் புலன்களுக்கும் போதுமான பயிற்சி

தருவதால், வேண்டிய உடல் வளர்ச்சிக்கும் அதன்மூலம் அறிவு வளர்ச்சிக்கும் இடம் தருகிறது.

குழந்தையின் இயல்பு, சுறுசுறுப்பு நிறைந்தது ; கைகால்களை உபயோகித்து வேலைசெய்யத் துடித்துக்கொண்டிருப்பது. ஆகவே வெறும் வாய்மொழிப் பாடமாகிய ஏட்டுப்பாடம்-கிளிப்பிள்ளைப் பாடத்தில் துன்புற்று, இதை எப்படி விட்டொழிப்போம் என்று சதா ஏங்குகிருன். கையால் வேலை செய்யும் பயிற்சியானது இவ்வகைக் கொடுங்கோலிலிருந்து குழந்தைக்கு விடுதலை அளிக்கிறது. சுதந்திரநாட்டில், குழந்தை மட்டும் செயற்கையான திட்டத்துக்கு அடிமையாக இருக்கவேண்டுமா ? தன்னை அடிமைப் படுத்துகிற கல்வித் திட்டத்தை எதிர்த்துக் குழந்தை புரட்சி பண்ணுகிருன். "வாத்தியார் சாகாரா வயிற்றெரிச்சல் தீராதா" என்ற பாடல்களெல்லாம் இப் புரட்சியின் கோஷங்கள் என்று சொல்வது மிகையல்ல. எனவே, குழந்தைக்கு விடுதலை தருகிற இந்தச் செயல்-கல்வி பெரிதும் விரும்பத்தக்கதே.

14. புத்தியினுல் பெறுவதும் ஓர் அனுபவம் என்பது உண்மையே. ஆதாரக்கல்வியானது, இந்த அனுபவத்தையும் செயலில் வரும் அனுபவத்தையும் ஒற்றுமைப்படுத்துகிறது. எனவே இரண்டையும், அதாவது உள்ளத்தையும் உடலையும், ஒருமித்துப் பழக்குகிறது. குழந்தைக்கு இங்கே வரும் படிப்பு, எடுத்த புத்தகம் படிப்பதாகிய வெறும் எழுத்துப் படிப்பு மட்டும் அல்ல; பயனுள்ள ஓர் ஆக்கவேலையில் தன் கைகால்களைப் புத்தியின் வழிச் செலுத்தத் தூண்டும் வல்லமையாகிய மிகவும் முக்கியமான பயிற்சி. புத்திக்கு மாத்திரம் படிப்பு என்றில்லாமல், குழந்தையின் பண்புகள் அனைத்துக்கும் இங்குப் பூரணமான ஒருமித்த படிப்பு கிடைக்கிறது. முழு ஆளுமையில் படிப்பு என்று முன்னமே குறிப்பிட்டதும் இதுவே. வல்லமை என்பது பலதுறை வல்லமை.

15. மாணவன் தன்கல்விச் செலவுக்காகத் தான் உழைக்கும்போது, அதனுல் பிறக்கிற தன்னம்பிக்கையும் மனோதைரியமும் ஒருபுறமிக்க, மறுபுறம் இதுவே அவனுடைய ஆனந்தத்துக்கும் இடமாயிருக்கிறது. அன்றியும், படித்தபின் தான் திண்டாட வேண்டியதில்லை, தான் கற்ற உழைப்பால் உயிர் வாழலாம் என்ற உறுதி அவனுக்கு இருக்குமாதலால், இதுவும் அவனுக்கு ஆனந்தத்துக்கு இடமாகும். மேலும், தாய்மொழி மூலம் அறிவதால், கற்பது எளிதாகி உற்சாகம் தரும். அன்னிய மொழிப் பாடம், தான் தாழ்வு என்ற உணர்ச்சியைத் தந்து, மன வளர்ச்சியைக் குலைக்கிறது. தாய்மொழியில் வரும் பாடம், தான் தாழ்வில்லை என்ற உணர்ச்சி யூட்டுவதால், இது கிரமமான வளர்ச்சிக்கும் துணையானது.

16. மற்றொரு கருத்தும் கருதத்தக்கது. குழந்தைகளுக்கு விளையாட்டு, வேலை என்ற வேறுபாடு இல்லை. விளையாட்டின்மூலம் கல்வி என்ற கருத்து, உலகெங்கும் கல்வியாளரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் அடிப்படைத் தத்துவம். வேலை, கஷ்டம் என்று பெரியவர்கள் கருதுபவற்றைச் சிறுவன் அதிகநேரம் அயர்வின்றித் தன்னளவுக்கு மிஞ்சியும்கூட நன்றாக செய்துவிடுகிறான். செய்வதெல்லாம் பெற்றோரோ, ஆசிரியரோ அவனுடைய மனத்தைப்பக்குவப்படுத்துவதைப் பொறுத்தது. ஆதலால் மனோதத்துவ ரீதியாக, சிறுவன் மகிழ்ச்சியோடு விளையாட்டாக அளவற்ற காரியங்களைச் சாதிப்பான் என்ற உண்மையே ஆதாரக்கல்விக்கு மற்றோர் அடிப்படையாக இருக்கிறது.

16. மூல தத்துவங்கள்—கல்வித்துறை அடிப்படை

17. தொழிற் பயிற்சியின் மூலந்தான் ஸ்தூலமான திட்டமான அறிவு - அதாவது வெறும் சொற்களைக் கடந்த காரிய ரூபமான அனுபவ அறிவு - குழந்தைக்கு வரும். செய்து பார்த்து அறிவது என்பது, வெறும் ஏட்டுப் பாட

முறையில் இல்லை. தானே செய்து பார்ப்பதால் வரும் உண்மை யறிவு பெரிது. இது, குறித்த ஒரு பயனுள்ள உற்பத்தித் தொழிலில் குழந்தையை ஈடுபடச் செய்வதன் மூலம் அவனுடைய அறிவு உண்மையாயும் செயல் ரூபமாயும் இருக்கச் செய்வதால், கல்வி அறிவு வாழ்க்கையோடு ஒட்டியே வருகிறது; உறுதியாயும் இருக்கிறது. பெறுகிற அறிவு, வாழ்க்கையோடு தொடர்புகொண்டிருப்பது மட்டுமன்றித் தன் பல்வேறு பிரிவுகளுக்குள்ளும் ஓர் ஒற்றுமை பெற்றும் இருக்கும். கல்வித்துறையில் ஆதாரக் கல்வியின் நோக்கம் இதுவே.

18. பயிலும்போதே பொருள் தேடிக்கொள்வது என்பதும் இன்றைய கல்வித் துறையில் வளர்ந்துவரும் புதுக்கருத்துக்களிலொன்று. பிள்ளைகள் உற்பத்தி செய்கிற பொருள், விலை மதிப்புடையதாதலால், ஆதாரக் கல்வித் துறையில் இந்தக் கருத்தும் நிறைவேறுகிறது.

19. உண்மையான கட்டுப்பாடு உழைப்பின் மூலம் தான் உதிக்கும். கட்டுப்பாடு அகத்திலிருந்து வருவதேயன்றிப் பிறர் விதிப்பதால் வராது. பரிசுமுறை, போட்டி மனப்பான்மையை வளர்க்கும். ஆகையால், திறமைக்கும் உழைப்புக்கும் பாராட்டுதல் உண்டே யொழிய, இங்கு போட்டியை வளர்க்கும் நோக்கம் இராது. அப்படியே, திருத்தும் நோக்கம் பிரதானமே யன்றி, தண்டிக்கும் நோக்கம் தனியாக இருத்தல் ஆகாது.

20. ஆதாரக் கல்வியின் நோக்கம், உண்மையான எந்தக் கல்விக்கும் இருக்கவேண்டிய நோக்கம். அதுவே குழந்தையின் பூரண ஒருமித்த வளர்ச்சி; மூவகைப் பண்புகளுக்கும் கல்வி பயிற்றுவது. இந்த ஒருமித்த கல்வி, வெறும் எழுத்துப் படிப்பினால் கைகூடுதல் இயலாது; செயல் செய்வதால்தான் இயலும். செயலுக்காக வாழ்க்கைக்கே ஆதாரமான தொழில்களில், ஒன்றைத் தேர்ந்து கொள்ளுகிறோம். ஆகவே தொழில் செய்வதால் பொருள்

உற்பத்தியாவது உண்மைதான்; இதில் நம் பிரதான நோக்கம் குழந்தையின் கல்வி என்பதை மறக்கமுடியாது. உற்பத்தியே நம் லக்ஷ்யமன்று; கல்வியே லக்ஷ்யம்.

17. மூல தத்துவங்கள்— ஆணும் பெண்ணும் சேர்ந்து படித்தல்

சமூக வாழ்க்கையில் எங்கும் ஆடவரும் பெண்டிரும் சேர்ந்தே பழகவேண்டியிருக்கிறது. ஆதலால் பாடசாலை வாழ்க்கையும் சமூக வாழ்க்கையை உண்மையாகப் பிரதி பலிப்பதாய் இருக்கவேண்டுமானால், இங்கும், ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து வாழ்வதே நடைமுறையாக இருத்தல் வேண்டும். இருபாலாரும் தனித்தனியே இருப்பது, ஒழுக்கக் குறைவுக்கு ஒரு காரணம் என்றும், அதிகமான பழக்கம் இருவருக்கிடையிலும் ஏற்படும்போது பரஸ்பர நம்பிக்கை அதிகமாகி ஒழுக்கம் நிலை பெறுமென்றும் கூறலாம். ஒருபாலார் மட்டும் பயில்கிற பாடசாலையில் நிர்வாகச் சிக்கல் குறைவு என்பது உண்மை. எனினும், சிக்கலைக் கண்டு அஞ்சாது, இருபாலாரும் சேர்ந்து பழகுவதில் சாமானிய சகோதரபாவம் நிலவச்செய்தல் வேண்டும். இது பிள்ளைகளின் பாடசாலை, பயிற்சிப் பாட சாலை இரண்டுக்கும் பொருந்தும்.

இன்று குழந்தைப் பருவத்தில், அதாவது ஆரம்பப் பள்ளி (எலிமெண்டரிப் பள்ளி) நிலையில், சிறுவனும் சிறுமி யும் சேர்ந்து படித்தல் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. சில வருஷங்களாக கல்வி இலாகாவும் இதை அமுல் நடத்த முயன்றுவருகிறது. உயர்நிலை பள்ளிக் குப் பிற்பட்ட கல்லூரி வகுப்புக்களிலும், இந்தக் கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டு, கல்வி இன்று நடைபெறுகிறது. ஆனால் உயர்நிலைப் பள்ளி அளவில் இந்தக் கருத்துக்கள் ஒப்புக்கொள்ளப் பெறவில்லை. பால் உணர்ச்சி காரணமாகச் சிக்கல்கள் ஏற்படும் என்ற அச்சத்தினால் இளங்குமரப்

பருவத்துக்குப் பொருத்தமான உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் சேர்ந்து படித்தல் கூடாது என்பது கொள்கையாகக் கொள்ளப்பட்டுள்ளது. இது, மாறி வந்திருக்கின்ற இந்தியச் சமூகச்சூழ்நிலையை நோக்கும்போது, அவ்வளவு சரி என்று கருதுவதற்கு இயலவில்லை. சமூக வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாறுதல் காரணமாக இன்று ஆண்களும் பெண்களும் எங்கும் கலந்தே பணியாற்றுகிறார்கள். ஆசிரியர்களாகப் பள்ளிகளில் வேலை பார்க்கிறார்கள்; அரசாங்க அலுவலகங்களிலும், தனிப்பட்ட வேலைச் சாலைகளிலும், படிப்பில்லாமல் கூலியாக வேலைசெய்யுமிடங்களிலும், இருவரும் கலந்தே செய்கிறார்கள். ஆகவே, இன்று வளர்ந்து வந்திருக்கிற இந்திய நாட்டில், ஆணும் பெண்ணும் கலந்து ஈடுபடுகிற சம்பவங்கள் அதிகமாகிவிட்டன. எனவே குறிப்பிட்ட ஒரு நெறியில் மட்டும் இவர்கள் கலந்து பழகுவது கூடாது என்று கட்டுப்படுத்துவது சரியா என்பதை ஆலோசிக்கவேண்டும். சரியல்ல என்றே தோன்றும்.

"எங்கள் திட்டத்தின்படி ஆண்களும் பெண்களும் சேர்ந்து பயில்வது நடைமுறையில் உள்ள பழக்கம். பாடசாலையே ஒரு சிறு உலகம். அங்குள்ளது மெய்யான வாழ்க்கை. தொடர்புகள் அங்கு பூர்த்தியாக இருக்கின்றன. பலவகைத் தொழில்கள் உள்ளன. இதனால் வாழ்க்கை சிக்கனமாயிருக்கிறது. பெண்களின் தகுதியே நாகரிகத்தின் லட்சணமென்று சொல்லுகிறார்கள். அப்படியானால் ஆண்களை மட்டும் தனியே படிப்பித்தால் சமூகம் எவ்வாறு மேம்படும்? சுதந்திரம் பெற்ற பெண் பழைய அடிமை நிலையிலேயே இருக்கிறாள். பெண்மைக்குரிய சிறப்பும், மேம்பாடும் என்னவோ அவை சிறிதும் அவளிடமில்லை. இருவருக்கும் நாம் சமமான சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும். உயர்ந்த ஒழுக்கத்துக்கு எவ்விதக் குறைவும் ஏற்படாதபடி இருபாலாரையும் சேர்த்துப் படிப்பிப்பதே

பரஸ்பரம் நன்மை தருவதற்கான வழி" என்று ஜெனரல் ஆர்ஸ்ட்ராங் கூறுகிறார்.

உலகில் ஆண் பெண் சேர்ந்து படிக்கும் பள்ளி நடத்தி அனுபவம்பெற்ற ஆசிரியர் அனைவரும், இருவரும் சேர்ந்து பயில்வதால் ஏற்படும் குறைபாட்டைவிட நிறைவு அதிகம் என்று கூறுவர். காந்தியடிகள்கூட அவ்விதமே அபிப்பிராயப்படுகிறார். காந்தியடிகள் நிர்மாணித்திருந்த ஆசிரமங்கள் அனைத்திலும் அவர் அதனையே வற்புறுத்தியிருந்தார். பெண்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சியால் சுதந்திர உணர்ச்சி, சமத்துவ உணர்ச்சி, ஒழுக்கம், கட்டுப்பாடு, செயல்திறன், தன்னம்பிக்கை, சுய முயற்சி ஆகிய பண்புகள் பல மடங்கு மேம்பட்டிருப்பதாக அனுபவத்திலிருந்து அவர் சொல்லுகிறார்.

ஆண் பெண் சேர்ந்த கல்வி முறையினால் அரசாங்கத்துக்குள்ள அனுகூலங்கள் பல. கல்விச் செலவு, நிர்வாகச் செலவு முதலியன மிகவும் குறையும்.

வாழ்க்கையை வாழ்ந்தே கற்கவேண்டும் என்று கூறுவது போலவே, கூட்டு வாழ்க்கையையும் கூட்டாக வாழ்ந்துதானே பயிலமுடியும்?

குறைபாடுகளும் ஒழுங்கீனங்களும் ஏற்படுகின்றன என்று சொல்லுவது உண்மை. ஆனால் கூட்டுக்கல்வி இல்லாமலே எத்தனை ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன? ஆகவே இதை ஒரு பிரசினையாகக் கருதினால், இதைக் கல்வித்துறையில் எழுந்த ஒரு சவால் என்று பாவித்து, சிலராவது நேர்முகமாக சிக்கலுக்கு முடிவுகாண முயலவேண்டும். அரசாங்கப் பள்ளிகள் அந்த அளவுக்குச் சவாலை ஏற்கமுன்வர முடியாவிட்டால், தனிப்பட்டோர் கல்வி நிலையங்கள் முன் வந்து வெற்றிகரமாக இக்கல்வியை, ஆணும் பெண்ணும் சேர்ந்து படிப்பதை, நடத்தி வழிகாட்ட முன்வரவேண்டும். இப்படிப்பட்ட கல்வி நிலையங்களில் அர்ப்பணவாழ்க்கையை யுடைய ஆசிரியர்களும், ஆசிரியைகளும் இருக்கவேண்டும்.

இயல்பாக ஒரு குறை உண்டு. பெண்ணின் தன்மையை ஒட்டி பாடத் திட்டங்களும் செயல்முறைகளும் சில அம்சங்களில் ஆணுக்கு வேருகவும், பெண்ணுக்கு வேருகவும்தான் இருக்கமுடியும். பணிசெய்யும் ஆசிரியர்கள் இதைக் கருத்தில் வைத்துக் கல்வியையும் வேலையையும் இதற்கிசைய அமைத்துக் கொண்டால் போதும்.

"ஆணும் பெண்ணும் சேர்ந்து படிப்பது கட்டாயம் என்று ஜாகிர் ஹுசேன் கமிட்டியார் சொல்லவில்லை. பெண்களுக்குத் தனிப் பள்ளிக்கூடம் தேவையாயிருக்கும் போது, அதற்கு ஏற்பாடு செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு. இந்த விஷயம் அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது. காலத்தின் போக்குக்கேற்ப நிலைமை சரியாகும். என்னைப் பொறுத்த வரையில் இந்த சோதனையை யாரேனும் நடத்த விரும்பினல் நான் அதைத் தடுக்கமாட்டேன்" என்று காந்தியடிகள் 1938இல் எழுதினர்.

ஆனல் இதன்பின்னர், இருபாலாரும் சேர்ந்து படிப்பதே தாலிமி சங்கத்தின் கொள்கையாயிற்று. இந்தக் கொள்கை, சென்னை ராஜ்யத்தில் கல்வி மந்திரியாயிருந்த அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள், சென்னைக்கு உவந்தது அல்ல என்று குறிப்பிட்டார். "குழந்தைகளும், நன்மை தீமை தெரிந்த பெரியவர்களும், இருபாலாரும் சேர்ந்து படித்தல் பொருத்தம். ஆனல் 15–16 வயதில் பெண்கள் பயிற்சிப் பள்ளிக்கு வருகிருர்கள். இந்த வயதில், கண்டதையே மனம் பற்றக்கூடிய பருவமாதலால், இருவரும் சேர்ந்து படித்தல் பொருத்தம் அன்று" என்பது அவருடைய கருத்து.

இதைக் காந்தியடிகள் ஏற்கவில்லை. "பள்ளிகளில் இருபாலாரையும் சேர்ந்து படிக்கச் செய்து, பயிற்சிப் பள்ளியில் மட்டும் விலக்கிவைத்தால் எங்கோ கோளாறு என்று குழந்தைகள் நினைப்பார்கள். நான் சேர்ந்து படிப்பதால் ஏற்படும் ஆபத்தை ஏற்கச் சித்தமாயிருக்கிறேன்.

என்றைக்காவது ஒருநாள் பால் பற்றிய இந்தப் பயத்தை நாம் போக்கிக் கொள்ளத்தான் வேண்டும். இதற்காக மேலை நாட்டை அப்படியே பின்பற்றவேண்டிய அவசிய மில்லை. பயிற்சிப் பள்ளியிலுங்கூட, உபாத்தியாயர்கள் அறிவுடையவர்களாயும், நல்ல உள்ளமுடையவர்களாயும், புதுக் கல்விக் கொள்கையை நன்கு உணர்ந்தவர்களாயும் இருப்பார்களானால், எந்தப் பயமுமில்லை. தவறுகள் நிகழ்ந்த தனாலேயே நாம் பயந்துவிடக்கூடாது. தவறுகள் எங்கும் நடக்கின்றன. நான் இப்படிச் சொல்வதனால் ஆபத்துக்கள் எனக்குத் தெரியா என்று நினைக்கவேண்டாம். உங்கள் உசிதம்போல் நீங்கள் நடத்திக் கொள்ளுங்கள் " என்றார் காந்தியடிகள்.

18. கல்வியில் குழந்தையே பிரதானம்

சிறந்த கல்வியாளர் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ள முதல் முக்கியமான கருத்து. ரூஸ்ஸோ, பெஸ்டலோஸ்ஸி, புரோபெல், ஹெர்பர்டு, டியூயி, மாண்டிசோரி ஆகிய கல்வித்துறை நிபுணர் அனைவரும் இக்கருத்தையே வலி யுறுத்தினார்கள். பெரியோரைச் சமூகத்தில் மதிப்பதுபோல, பாடசாலையில் குழந்தைக்கு மதிப்புத் தரவேண்டும் என் பதை அமெரிக்கக் கல்விப் புரட்சியின் தந்தையாகிய டியூயி சொல்லிவந்தார்.

1. குழந்தை சிறியவன், மற்றவர்கள் பெரியவர்கள், வேற்றுமை இவ்வளவே என்று எண்ணுவது தவறு. அவ னுடைய மனமும் நடத்தையும், பேச்சும் பாணியும் வயது வந்தோரினும் முற்றிலும் வேறானவை. உருவத்தால் சிறியவன், ஆதலால் பண்பாலும் சிறியவன் என்று எண்ணலாகாது.

2. ஒவ்வொரு குழந்தையும் தனி. குழந்தைகள் யாவ ரும் ஒன்றே என்பது தப்பிதம். சில பொது இயல்புகள்

இருந்தாலும், தனித்தனியாகப் பாவித்தே கல்வி பயிற்ற வேண்டும்.

3. குழந்தை, தனக்கெனச் செயலின்றிக் கற்றுக் கொடுத்ததைக் கற்கும் கிளிப்பிள்ளை யல்லன். தன்னிச்சை யோடு கற்கிறான். தன் சித்தம் தன் இச்சை தூண்ட, ஒவ்வொரு நோக்கமும் நிறைவேற அவன் தன்னைச் செலுத்து கிறான்.

4. குழந்தை, முழுமையும் பாரம்பரிய வசப்பட்டவ னல்லன். அவனுடைய குணவிசேஷத்தையும் மனப் பான்மைகளையும் உருவாக்குவதில் சூழ்நிலை பெரும்பங்கு கொள்கிறது. வயது வந்தோரைவிடக் குழந்தைக்குச் சூழ்நிலை மிகவும் முக்கியமானதென்றும், பிறப்பட்டு அவ னுக்கு வரவிருக்கும் தன்மைகள் யாவும் குழந்தைப் பருவத் திலேயே உருவடைந்துவிடுகின்றனவென்றும், சூழ்நிலையே உருத் தருகிறதென்றும் உளநூல் நிபுணர் அனேகர் கூறு வார்கள்.

இந்த உளநூற் கருத்துக்களை ஏற்று இவற்றுக்குப் பொருத்தமாக ஆதாரக் கல்வி திட்டமிடுகிறது.

பழைய கல்விமுறையில் புத்தகமே சகலவல்லமையுள்ள தாயிருக்கிறது. பாடங்கள் என்று ஏற்பட்டவுடனே அவை தொடர்பின்றித் துண்டாகத் தமக்குள் இயைபின்றி, ஒவ்வொன்றும் தனியாக நின்றுவிடுகின்றன; வாழ்க்கை யோடு இயைபின்றியும் நின்றுவிடுகின்றன. அங்கு பாடமே நோக்கமாகிவிடுகிறது. இருபது முப்பது பிள்ளை கள் ஒருவகுப்பில் இருந்து ஒரே தரத்துக்கு வரவேண்டும் என்று முயலும்போது, குழந்தை யியல்பையோ தனிப் பட்ட வேற்றுமையையோ கவனிக்கும் எண்ணமே வர முடிவதில்லை.

புதுமுறையில், பிள்ளைகள் செயலில் ஈடுபடுவதால், அவர்கள் தேவைக்கும் பற்றுக்களுக்கும் வாழ்க்கைப் பிரசினைகளுக்கும் கல்வி போதனை ஒத்துவருகிறது: பிள்ளை

கள் உழைக்கிறார்கள். உழைப்பே நோக்கமல்ல: உழைப்பினால் வரும் வளர்ச்சியும் மேம்படுமே முக்கியம். மேம்பாடு பண்பு ஆற்றல் இரண்டிலும். இங்கு பிள்ளைகளின் தனி இயல்புகளை ஆசிரியர் கவனிக்கிறார். வேலை இருப்பதால், தனித் திறமைகள் வெளிப்பட இடமிருக்கிறது. கற்பதிலுள்ள வேறுபாடுகளை அனுசரித்துத் திட்டமிடவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. வகுப்பின் தரம் என்று, ஆசிரியர் முக்கியமாய் பிள்ளைகளின் இயல்புக்கும் தேவைக்கும் போக்குக்கும் முரணாகக் கருதுவதில்லை. பிள்ளைகளில் ஒவ்வொருவனும் திறமையாகத் தன் வேலை செய்கிறானா, முழு ஆர்வத்தோடு செய்கிறானா என்பதே அவர் கவலை. போட்டி இல்லாமையால், அவனவன் தன்னம்பிக்கையோடு தனக்குரிய முறையில் முழுமையும் வளர முடிகிறது.

ஆசிரியருக்கும் இது லாபகரமானது. மனநூல்முறையை அறியச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. குழந்தைகளை இன்னும் நன்றாய் அறியவும் அறிந்து திட்டமிடவும் முடிகிறது. புதிய பண்புகளைக் கண்டுணர்ந்து அவற்றில் நல்லதைப் பிரகாசிக்கச் செய்ய அவருக்கு ஊக்கமுண்டாகிறது.

19. வாழ்க்கைக்கான கல்வி

தம்முடைய புதுக்கல்வி பற்றி மகாத்மா காந்தி கூறிய போது, இது வாழ்க்கைக்கான கல்வி - வாழ்க்கை மூலம் கல்வி என்று குறிப்பிடுகிறார். "இந்தப் புதுக் கல்வியினுடைய வியாபகமானது தாயின் வயிற்றில் குழந்தை கருவாக உருக்கொள்ளத் தொடங்கியது முதல் மனிதனாகி மயானத்தில் முடிகிற வரையில்" என்றும் அவர் கூறுகிறார். வாழ்க்கையில் எவ்வளவு சிறிய விஷயமாயிருந்தாலும் கல்விக்குச் சம்பந்தம் இல்லாதது எதுவும் இல்லை. சுகாதார வாழ்வு, உடல் நலம் பேணுதல், சத்தான உணவு உண்ணுதல், புதியவர்களோடு பழகுதல், உழைப்பால் லாபம் பெறுதல், வீட்டில் தாய் தந்தையருக்கு உதவியாகப் பல வேலைகளி

லும் பங்கு கொள்ளுதல் போன்ற வாழ்க்கைப் பகுதிகள் யாவும் அடிப்படையில் ஆரம்பக்கல்வி என்ற கருத்தில் அடங்குகின்றன. இவ்விதம் கருதும்போது வாழ்க்கை எவ்வளவு விரிவோ, கல்வியும் அவ்வளவு விரிவாகிறது. துப்புரவு, உடல் நலம், குடிமைப் பயிற்சி, வேலையும் வழி பாடும், விளையாட்டும் பொழுதுபோக்கும்—இவைபோன் றவை யாவும் பாடத்திட்டத்தில் அடங்கும் தனிப்பாடங்கள் அல்ல; ஒருமித்த பூரண வாழ்க்கையின் வளர்ச்சிக்கான தொடர்ந்த கல்விமுறைகளேயாகின்றன.

ஆகவே, இந்த புதிய கல்வித் தத்துவத்தின் முடிவான நோக்கமானது பூரணமான ஒருமித்த வளர்ச்சிபெற்ற தனி மனிதனுடைய வாழ்க்கை மட்டும் அல்ல: பூரணமான ஒருமித்த இன்ப நிலையுடைய புதிய சமுதாயத்தின் தோற்ற மும் ஆகும். இந்தச் சமுதாயத்தில் இல்லாதவரென்றும், உடையவரென்றும், விபரீதமான ஒரு பாகுபாடும் இராது. அனைவருக்கும் ஜீவனத்திற்கு அவசியமான ஊதியம் நிச்ச யம் கிடைக்கும். அனைவருக்கும் பூரண சுதந்திரமும் இருக் கும். எனவே, இந்தப் புதுக்கல்வி முறையின் நோக்கம் நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமுதா யத்தைத் தோற்றுவிப்பது. இதுவே வாழ்க்கைக்கான கல்வி என்று கூறுவதன் கருத்து.

வாழ்க்கை என்றால் நமக்குப் பொதுவாக நாட்டுப்புற வாழ்க்கை; கிராமங்களில் நல்ல தண்ணீர் நல்ல காற்றுக் குப் பஞ்சமில்லை. நல்ல உணவுக்கும் நல்ல உடைக்கும் மாணாக்கன் பயிற்சி பெறவேண்டும்.

பெரும்பான்மையான பையன்கள் படித்துக் குடும்பங் களிலேயே நின்றுவிடப் போகிறவர்கள். அவர்கள் தாங்கள் கல்வி பயிலும் காலத்திலேயே தங்கள் உணவையும் உடை யையும் தேடிக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றுவிடுவார்களா னால் இது அவர்களுக்குப் பிற்கால வாழ்க்கையில் எவ்வளவு சிறந்த உதவியாயிருக்கும்! இதன் பொருளாவது, வாழ்க்

கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலைகளில் பங்கு கொள்ளும்படி பழக்குவதே வாழ்க்கைக்கான கல்வி யாகும். சாமானிய பழங்கல்வி முறையில், எண்ணும் எழுத்துமே பிரதானம் என்ற கருத்தோடு பள்ளிப் பயிற்சி நடைபெறுகிறது. ஆனால் இங்கு நாம் எண்ணை எழுத்தைக் குறை சொல்லவில்லை, புறக்கணிக்கவும் இல்லை; மற்றப்படி, வாழ்க்கைக்கான தயாரிப்பே கல்வியில் முக்கியம் என்று கூறுகிறோம்.

20. வாழ்க்கை மூலம் கல்வி

இனி வாழ்க்கை மூலம் கல்வி என்று கூறும்போது காந்தியடிகள் இதை உழைப்பின்மூலம் கல்வி என்றும் கூறு கிறார். இந்த நாட்டு மக்களில் பெரும் பகுதியினர் ஏழை மக்கள். ஆகவே, ஏழைப் பிள்ளைகள் ஆகிய நம் பிள்ளை கள் அனைவரும் தங்கள் குடும்ப உழைப்பில் தாங்களும் பங்கு கொள்வதுதான் கல்விக்கு வித்தாகும். உழைப் பின்றிக் கல்வி இல்லை. உழைப்பானது விஞ்ஞான ரீதியில் நடைபெறுமானல் அதன்மூலம் உடல் உள்ளம் உயிர் என்ற மூன்றின் பூரணமான ஒருமித்த வளர்ச்சி கைகூடும். இதுவே, வாழ்க்கைமூலம் கல்வி என்று கூறுவதன் அடிப் படைத் தத்துவங்களில் ஒன்ருகும்.

ஆரோக்கியக் குறைவான நிலையிலுள்ள இந்திய நாடு, ஆரோக்கியம் நிரம்பிய நாடாகப் புத்துரு எடுக்கவேண்டும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். பள்ளியில் பயில் கிற சிறுவன் தன் பள்ளிச்சமூகம் ஆரோக்கியம் நிரம்பிய சமூகமாக இருக்கத் தான் பாடுபடுகிருன்.

தன் பள்ளிச்சமூகம் ஒரு சிறந்த ஜனநாயகமாக நடை பெறுவதில் தானும் பங்கு கொள்ளுகிருன். ஆசிரியரும் பிள்ளைகளும் ஆகிய பள்ளியும் வகுப்பும் குடும்பமாகின் றது. தலைமை தாங்குதல், ஒத்துழைத்தல், கீழ்ப்படிந்து நடத்தல், அநீதிகளுக்கு முறையாகப் பரிகாரம் தேடல்,

பொறுப்பைத் திறமையாக நிறைவேற்றுதல், இரக்கங் காட்டுதல், துன்பங் கண்டு இரங்குதல் முதலான பண்புகள் இந்த வாழ்க்கையில் வளர்ச்சிபெறுகின்றன.

நடைமுறை வாழ்க்கையிலுள்ள அலங்கோலங்களை நீக்கி, அழுக்கைத் துடைத்து அழகு பொலியச் செய்யும் முயற்சியும் கூடவே நடைபெறுகின்றது. பேச்சு, பாட்டு, ஆட்டம், ஓவியம், அலங்காரம் போன்றவற்றால் கலைப் பயிற்சி தானாக உதிக்கிறது.

இவையாவும், திட்டவட்டமான கூட்டுறவு நிறைந்த உழைப்பிலிருந்து உதிக்கின்றன. உழைத்து அறிவதால், இந்தப் பயிற்சிகள் யாவும் ஒருவர் கற்பித்த சொல் அல்ல ; குழந்தையானவன் தன் புலன்களால் பெற்ற சொந்த அனுபவம். இதுவே, வாழ்க்கைமூலம் கல்வி என்பதனுடைய செயல் முறை ஆகும்: நீரில் இறங்கித்தான் நீச்சல் பயிற்சி வரமுடியும். அதுபோலவே, இந்த வாழ்க்கையை நடத்தியே பிள்ளைகள் இந்தக் கல்வி அறிவையும் பெறுகிறார்கள்.

இந்த முறையின் பயன் யாது? ஒரே சொல்லாகச் சொல்வதானால் தன்னம்பிக்கை என்று சொல்லலாம். படிப்பை முடித்த பையன் இன்றுள்ள மாதிரி குடும்பத்துக்குப் பாரமாக இருக்கமாட்டான். வேலை இல்லாத் திண்டாட்டம் என்ற வெட்ககரமான நிலைக்குப் பலியாக மாட்டான். எந்த வேலையையும் உயர்வு தாழ்வு கருதாமல் யோக்கியமாகச் செய்து ஜீவனம் நடத்தத் துணிவு உடையவனாக இருப்பான். பாரதியார் கூறிய, "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற கருத்தை மட்டும் அனேகர் இன்றைக்கு விடாப்பிடியாக பிடித்துக் கொள்கிறார்கள். ஆனால் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற கருத்தை அவர்கள் மதிக்கிறதில்லை. புதுக்கல்வி பயின்று வருகிற பையனே, உழவு அல்லது தொழிலைத் தான் செய்து அதற்கு வந்தனையும் செய்து இதன் மூலமாகவே இந்

நாட்டு மன்னனுகவே விளங்குவான் என்று நாம் சொல்லத் தடையில்லை.

21. அறிவு பின்னமல்ல : பூரணமான ஒன்று

இது ஆதாரக் கல்வித் தத்துவத்தின் முக்கியமான கருத்துக்களில் ஒன்று. கல்வி, துண்டு துண்டான, தொடர்பற்ற பாடங்களின் தொகுதியன்று. பாடம் என்ற பெயர் வேண்டியதுதான். பாடம் என்பது, பலவேறு தகவல்களையும் முடிவுகளையும் ஒரு சேரத் தர்க்கரீதியாகத் தொகுத்து வைத்தது. மக்கள் வாழ்க்கைத்துறைகளும் அறிவும் வளர்ந்துவரும் நிலையில் இத்தொகுப்பு அவசியமே.

ஆனல் இன்றைய கல்வி முறையில் இது தலை கீழாகி விட்டது. யதார்த்த தத்துவங்களான தகவல்களையும், ஆராய்ந்த முறைகளையும் விட்டு, முடிவுகளைமட்டும் பாடம் என்று சொல்லி, இதுவே கல்விக்குரிய பொருள் என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. பிள்ளைகள் பலர்; வயது, முதிர்ச்சி, அனுபவம், ஆற்றல், மனப்போக்கு, பழக்க வழக்கங்கள், பற்று, தேர்ச்சி, மற்றச் சூழ்நிலை—இவற்றில் கணக்கற்ற மாறுதல். இந்த மாறுதல்களுக்கு இடங்கொடாமல், படிப்பவன் படித்தறிந்து கொள்ளவும் அவனுக்குப் போதிக்கவும் என்றே பாடப் புத்தகங்கள் தோன்றின. ஆதியில் அடிப்படையாயிருந்த அனுபவம் இங்கு சூனியமாகிவிட்டது. பள்ளிக்கூடங்கள் ஏட்டுப்படிப்பை விநியோகம் செய்யும் கடைகளாகிவிட்டன. அனுபவம் இல்லாமல் அறிய முற்படும்போது, ஞாபகசக்தி ஒன்றுதான் தேவைப்படுகிறது. பிற ஆற்றல்களுக்கு இடமில்லை. ஏட்டுப் படிப்பு வாழ்க்கைக்குப் பயன்பட்டதா என்பது பற்றிக் கவலையில்லை. ‘ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகாது’ என்ற பழமொழி இந்த உண்மையைத் தெளிவாய்க் காட்டும்.

அறிவு வளர்ச்சி எதற்காக? வினை இயற்றுவதில் ஆற்றல் மேற்பட. ஆற்றலைப் பெருக்காத அறிவு எதற்கு?

வினை இயற்ற இயற்ற, ஆற்றலும் மேம்பட்டது, அறிவும் மேம்பட்டது. செயல்படும் அறிவில் பாகுபாடு இல்லை. இது ரசாயனமா, பௌதிகமா, பொருளாதாரமா, கணிதமா - என்ற கேள்வி தோன்றாது. எனவே செயல் செய்வதில், எனக்குப் பயன் என்ன, இதற்குப் பொருள் என்ன என்பதே கேள்வி; குறித்த ஒரு பாடவரையறை மட்டுந்தான் செயல் என்பதில்லை.

சாமானியமாய்ப் பாடமே மையமாக உடைய இன்றைய கல்விக்கு மாற்று ஆதாரக்கல்வி—அதாவது குழந்தையை மையமாக உடைய கல்வி. அடிப்படையில் வேற்றுமை. பாடம் என்ன என்பது கேள்வியல்ல. பாடம் என்ன சாதிக்கிறது என்பதே கேள்வி. இங்கு குழந்தை, உபாத்தியாயன் பிடித்துப்போடுகிற களிமண் அல்ல. தன் முயற்சியோடு தானே இயங்கித் தானாய் வளரும் ஆற்றல் வாய்ந்த ஓர் உயிர். இயங்குகிற உயிருக்கு, அறிவுக்கான திட்டம் பாடப்புத்தகங்களின் தொகுதி என்று கொள்வது பெரும் பிழை, இயற்கைக்கு முரண்.

உலகம் தினமும் மாறிவருகிறது. குழந்தையின் சூழ்நிலை தினமும் மாறிவருகிறது. அவனும் தினமும் வளர்ந்து கொண்டும் மாறிக்கொண்டும் வருகிறான். அவனுக்கு, திட்டமான சட்டம்போட்டு ஆணியடித்துத் தொங்கவிட்டதுபோன்ற நெகிழ்ச்சியற்ற கல்வித்திட்டமும் பாட அமைப்பும் சிறிதும் பொருந்தமாட்டா. புதிய கல்வித் திட்டமும் பாட அமைப்பும் அவனுடைய வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் ஏற்றபடி வளர்ந்தும் மாறியும் வரக் கூடியவை.

விஞ்ஞான அறிவை இன்று பெரிதாய்க் கருதுகிறோம். இதுவும் புத்தகத்தில் படிக்காமல், துண்டான பாடமாய்ப் படிக்காமல், வாழ்க்கை அனுபவமாய்ப் பெற்றால் பொருள் உடையதாகிறது. செம்பில் களிம்பு, இரும்பில் துரு : ஈயம்

வெள்ளியில் இல்லை; ஏன் இப்படி என்று ஆராய்வதிலும் அறிவதிலும் விஞ்ஞானமே உயிர்பெறுகிறது.

தவிர, பாட அமைப்பு, வயது முதிர்ந்தவர்களுக்கே. குழந்தைக்கோ அறிவு வேண்டும். பாட அமைப்பு வேண்டியது குறைவு, அனுபவ அறிவே நிரம்ப வேண்டும்.

இங்ஙனமாக, பாடம் வேண்டாம், அறிவு வளர்ச்சிக்கு அனுபவமே பெரிது என்று சொல்லும்போது, கல்வி என்பது பூரணமான ஒன்று, பாடல்களின் தொகுதியல்ல என்ற உண்மையை ஆதாரக் கல்வி அடிப்படையில் கொண்டிருக்கிறது. பிராஜெக்டு (சுயநோக்க முயற்சி) முறையும் இதையேதான் காட்டும்.

சிறந்த கல்வியானது, விஷயங்களுக்குள் ஓர் ஒற்றுமையும் தொடர்பும் காட்ட வேண்டும். பாடமும் வாழ்க்கையும் ஒற்றுமை பூண்டிருந்தாலொழிய, கலைத்திட்டம் பயனற்றது. ராமாயணம் படித்தால் பெருமாள் கோயில் இடிக்க முடியாது. கற்க, நிற்க என்று இரண்டே சொற்களில் தன் உபதேசத்தை முடிக்கிறது, குறள். கற்பது நிற்பதாக மாறும் முயற்சி இருந்தாலொழிய, குழந்தைக்கு, உலகமே அர்த்தமற்றதாகவும் சூனியமாகவும்தான் தோற்றும்.

22. வாழ்க்கையின் தேவைகள்

மனித வாழ்க்கையில் உடல் உள்ளம் உயிர் என்ற மூன்றுக்கும் போஷிப்பு வேண்டும். 'சோறு மட்டும் மனிதனை வளர்ப்பதில்லை' என்ற ஆங்கிலப் பழமொழி வாக்கியம் உண்மையானது. சோறு உடலை வளர்ப்பது போலவே உள்ளத்தை வளர்க்கக் கலைகள் முதலியனவும், உயிரை வளர்க்கச் சமயமும் வேண்டியிருக்கின்றன. எனினும், பொதுப்படையாக நாம் பார்க்கும் போது, பிந்திய இரண்டும் அவரவர் தாமே அமைத்துக்கொள்வன; முந்தியதாகிய உடலின் தேவையைத்தான் இங்கு நாம் பேச முடியும்.

" உடம்பார் அழியில் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

என்ற திருமூலர் திருவாக்கும் கருதத்தக்கது. உபாயம் அறிந்து என்ற சொற்கள் மிக்க பொருளாழம் உடையன. உடற் பயிற்சி, சத்துணவு என்ற பகுதிகள் இச்சொற்களுள் அடங்கும்.

மக்கள் அனைவருக்கும் அடிப்படையான தேவைகள் மூன்று; உணவு, உடை, இருப்பிடம் என்பன.

" அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் : மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல் "

என்று மணிமேகலை பண்டைக் காலத்திலேயே இத்தேவைகளை வரையறை செய்துவிட்டது.

மக்கள் தொகை உலகெங்கும் மிகவும் பெருகி யிருக்கிறது. போதுமான உணவு தானே கிடைப்பதில்லை; செயற்கையான உடை வேண்டியிருக்கிறது; தங்கியிருக்கத் தக்க இடமும் அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இடத்துக்கு இடமும் பருவத்துக்குப் பருவமும், மக்களினத்துக்கு மக்களினமும், இவை மூன்றுமே மாறுகின்றன. மாறியபோதிலும், எல்லோரும் இவற்றைத் தேடிக்கொள்ள வேண்டித்தான் இருக்கிறது. இத்தேட்டத்தில் விளைந்ததே போட்டியும் சுரண்டலும், ஆண்டான் - அடிமைத்தனமும்; உயர்வு தாழ்வும் இதனுல் வந்தனவே. தத்தமக்கு வேண்டியதைத் தாமே தேடிக்கொள்வதானுல், இக்கேடுகள் பெருகமாட்டா; நீங்கும் என்றும் கூறலாம். ஆதலால், தொழில் செய்யக் கற்பதன் மூலம் மனிதன் கல்வி பெறவேண்டும் என்று கூறுகிற ஆதாரக்கல்வி

முறைக்கு உரிய தொழில்களாக, இம் மூன்று தேவைகளே யும் பூர்த்திசெய்கிற தொழில்களேயே நாம் கொள்வது நியாயம். இவை தவிர்ந்த மற்ற எத்தொழிலும் எல்லோருக்கும் வேண்டியதாயிருத்தல் அருமை. ஆகவே, கல்விப் பயிற்சிக்குரிய இடமாக மற்ருென்றைக் கொள்வது முழுமையும் பொருந்தாது.

உணவுபற்றிய தொழிலாவது பயிர்த்தொழில், தோட்ட வேலே, சமையல் வேலே; இவற்ருேடு ஒட்டிய ஆடு மாடு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பனைவெல்லம் காய்ச்சுதல் போன்றன. உடை பற்றிய தொழிலாவது நூற்றல், நெசவு, சாயமிடுதல், துணியில் அச்சிடுதல், தைத்தல், தோல் தொழில். இருப்பிடம் பற்றிய தொழிலாவது, தச்சு வேலே, கருமான் வேலே, கொத்துவேலே முதலியன; மண்பாண்டம், நார்த்தொழில், பாய்நெசவு, எண்ணெயாட்டுதல், செங்கல் சுடுதல் முதலான பல துணைத்தொழில்கள்.

23. செய்து கற்றல்

ஆதாரக்கல்வி, செய்து கற்றல் என்ற தத்துவத்தைப் பயன்படுத்துகிறது. இது புதிய தத்துவமன்று. உபாத்தியாயர் சொல்வதைக் கேட்பதாலும் புத்தகம் படிப்பதாலும் பிள்ளேகள் அறிவது மிகவும் குறைவு. நினைத்துப் பார்ப்பதால் வரும் கல்வி அறிவு அவர்களுக்குக் குறைவு. செய்துவரும் அனுபவமே அவர்களுக்குக் கல்வியறிவு என்பது முழுமையும் உண்மை. சாமானியக் குழந்தை எதுவும், இயங்குகிற, வளர்கிற, ஓர் உயிர்த் தத்துவம். காலந்தோறும் அவன் தனக்கென்று ஒரு நோக்கமும் திட்டமும் வகுத்து நடத்திக் கொண்டே வருகிருன். கட்டுதல், ஆக்குதல், புதியதைக் காண அவாக்கொள்ளல் என்பன அவனுடைய இயல்பான ஊக்கங்கள். சூழ்நிலே அவனேப் பாதிப்பது ஒருபுற மிருக்க, அவன் தானும் தன் சூழ்நிலேயை மாற்றப் பார்க்கின்ருன். தன் விருப்பு வெறுப்புக்கள், பற்றுக்கள், தேவைகள் இவற்

றுக்கு ஏற்ப அவற்றை மாற்ற முயல்கிறான். அவன், நடப்பதை, தான் புறம்பாக நின்று, செயலற்றுப் பார்த்துக் கொண்டிருப்பவன் அல்லன்; தானே நடத்துபவன். சூழ்நிலையை அறியவும் மாற்றவும், தானே நடத்தவும் அவன் முற்படும்போது, அவன் முயற்சிகள் யாவும் கல்வி தரும் கருவிகள் ஆகின்றன. உடம்பு விழிப்பாயிருந்து ஒவ்வொன்றாலும் பயன் அடைய முற்படும்போது, மன விழிப்பும் வளர்கிறது. இதுவே கல்வி. தன் முயற்சி இல்லாமல் கல்வி இல்லை. துறு துறுவென்று ஏதேனும் செய்யும் குழந்தை கல்வியறிவு பெறுமே தவிர, சும்மா விஷமம் செய்யாமல் இருக்கிற 'நல்ல' குழந்தை—சாதுவான குழந்தை—உண்மையான அறிவு பெறுவது அபூர்வம். பள்ளிக்கூடப் படிப்பிலே உயர்ந்த தேர்ச்சி பெறாதவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வருகிறார்கள் என்றால், அதன் ரகசியம் இதுதான்.

செயல்களையும் செயல்களின் நோக்கங்களையும் வெற்றிக்கான குறிக்கோளையும் பையன் திட்டமாய்த் தன் கண் முன்னே காணும்போது, வெற்றிகரமான, அதிக அளவான கல்வி கைகூடுகிறது. பிள்ளைகள் சதா ஏதேனும் செய்கிறார்கள். நர்ஸரி பாடசாலைகளும் மாண்டிசோரி முறைகளும் இந்த இயல்பைத் தினசரி வேலைத்திட்டத்தில் கைக்கொள்வதால், அவை வெற்றிகரமாகக் காண்கின்றன. இப்படிப் பச்சிளங்குழந்தைகளின் வாழ்க்கையில் கண்டறிகிற தத்துவத்தை, ஆரம்பப் பாடசாலை நிலையில் நடத்தித் தருவதற்கு நாம் தயங்குகிறோம். நடத்த வேண்டும், இதுவே நியாயம் என்ற எண்ணம் எழுவே இல்லை. இந்த நிலையில் வழக்கமாய் நாம் இதுவரை செய்து வருவது, மனத்தின் பயிற்சி, புத்திக் கூர்மையை வளர்த்தல்: இதற்கு வழியாகக் கொண்டிருப்பது ஏட்டுப்படிப்பு, செய்திகளைக் கேட்டறிதல். இம்முறை குழந்தை இயல்புக்கும் தேவைக்கும் முற்றும் மாறுபட்டது என்பது வெளிப்படை. மற்றப்

படி, குழந்தையானவன் தன் பற்றுக்களுக்கும் தேவைக்கும் ஏற்பச் செயலில் புகும்போதுதான் உயிரூட்டும் கல்வி நிகழ்கிறது என்பது இன்று எல்லோரும் ஒப்புக்கொள்வது. இதுவே உண்மை.

ஆனல், குழந்தையின் பற்றுக்கள் தேவைகள் யாவும் நியாயம் என்பதும் பூரணமாய்ச் சரியல்ல. நியாயமல்லாததை, சமூக வாழ்வுக்கும் தேவைக்கும் புறம்பானதை, ஒதுக்கப் பழக்குவதே பாடசாலையின் வேலை. அவனுடைய தேவையை அடியோடு புறக்கணித்து விட்டால், ஆக்கம் வேண்டியதற்கு ஆக்கம் அளிக்கவும் முடியாது, ஒதுக்க வேண்டியதை ஒதுக்கும் பயிற்சியும் அளிக்க முடியாது.

தானகச் செய்தல் என்பதே ஆதாரக் கல்வியில் கல்வி போதனைக்கான கருவி. சாமானியப் பாடசாலைகளில், பாடத்திட்டம் தனி, குழந்தையின் பற்றுக்கள் தனி. இரண்டுக்கும் இடையில் நிரம்ப வேறுபாடு. பற்றுக்களுக்கு இடம் கொடுத்தால் பாடம் கெட்டுவிடும் என்று ஆசிரியர் எப்போதும் எச்சரிக்கையா யிருக்கிருர். இங்கு நிலைமை அப்படியல்ல. பற்றுக்களை ஒட்டியே பாடம் நடைபெறுவதால், வேற்றுமையும் இல்லை முரணும் இல்லை. பற்றுக்களை ஆரோக்கியமாய் வளர்ப்பதே இங்கு நடைபெறுகிற கல்வி முயற்சி.

குருட்டுப் பாடம் சரியன்று என்று ஆதிகாலம் முதல் கல்வியாளர் தலையடித்துக்கொண்டு வந்திருக்கிருர்கள். எனினும், நம் பாடசாலையில், நெட்டுருப்பண்ணும் யந்திரமாகவே பையன் வளர்ந்துவிட்டான். இதை மாற்றுவதே முதல் வேலை. சுயமாகச் சிந்திக்கவும், வாழ்க்கை வாழவும் கற்பிப்பதே நம் கல்வியில் முக்கிய நோக்கங்கள்.

புதியது காணும் அவா செயல்மூலம் திருப்தியடைகிறது. தானய்ச் செய்யும்போது, அவன் தானே புதிது புதிதாய் அனேக தகவல்கள் அறிகிருன். செயல் என்பது ஒரு

வகையில் சோதனை ஆனபடியால், இந்த அவா பூரணமாய்த் திருப்தியடைகிறது.

விஷமம் செய்கிறான் என்று சொல்கிறோம். உண்மையில் விஷமம் அல்ல. விரல்களால் எதையேனும் அமைக்க வேண்டும் மாற்ற வேண்டும் என்ற முயற்சியே அது. கையால் ஆட்ட, திருக, பிய்க்க, உடைக்க—எல்லாக் குழந்தைகளுக்கும் ஆசை. ஆனால் இதற்குச் சந்தர்ப்பம்? தன் விருப்புக்கள் அனைத்தையும் உபயோகிக்கச் சந்தர்ப்பம் உண்டுபண்ண அவன் ஏதேனும் செய்யப் பார்க்கிறான். இதை நாம் விஷமம் என்கிறோம். பாடசாலைச் செயலானது இவ்வாசைக்கு நியாயமான சந்தர்ப்பம் தருகிறது. விஷமம், பயனுள்ள வேலையாகவும் அறிவும் இன்பமும் தரும் கருவியாகவும் இங்கு மாறுகிறது.

ஆக்க வேலையும் இதை ஒத்ததே. இதில் இன்பமும் வளர்கிறது. கோலம் போடுவது மண்ணால் உருவம் செய்வது முதலியன யாவும் இன்பம் வளர்க்கும் முயற்சிகளே.

ஆதாரக்கல்வி முறையில் இயல்பான இந்தப் போக்குக்களைத் தக்க மேற்பார்வையில், பயனுள்ள உற்பத்தித் துறையில், திருப்பிவிடுகிறோம். குழந்தைக்குக் கல்வியும் இன்பமும் வளர்வதோடுகூட, சமூக வாழ்க்கைக்கும் நன்மை விளைகிறது. அவன் சுகாதார பாடம் கற்கிறான் என்றால், தன் உடலின் துப்புரவு, உடை, வகுப்பறை, சுற்றுப்புறம், வீடு, ஊர் ஆகிய துப்புரவு வேலைகளை அவன் செய்கிறான். தவறாமலும் செய்கிறான். கணக்குப்பாடம், நூல் கணக்குப் பண்ணுவதிலும், காய்கறி நிறுப்பதிலும், வயல் அளப்பதிலும் கற்கிறான். இங்கெல்லாம் சொல்லைக் கற்கவில்லை; செய்கிறான். வள்ளுவர் சொன்ன "கற்க - நிற்க" என்பதில், கற்பதும் பின்பு நிற்பதும் இல்லை. மற்றபடி கற்பதே நிற்பது ஆகிறது. இப்படியே மொழியறிவு, பிற பாடங்கள் யாவும். கற்கும்போதே கற்ற வழியில் நின்று வருகிறான்.

வாழ்க்கையின் பண்பும் பயனும் அவன் பள்ளி வாழ்க்கையில் அழகாகயும் பூரணமாயும் ஒன்றிவிடுகிறன.

இதுவரையில் பையன் பள்ளியில் கற்றபோது, ஒரு பொருளைப் பற்றிப் பாடம் கற்றுன்; பொருளைக் கற்றதில்லை; அதாவது பொருளின் இலக்கணம் கற்றுன். ஆனல் செயல்மூலம் கற்கும்போது, பொருளை ஐந்து புலன்களாலும் கற்கிருன்; சொல்லையோ இலக்கணத்தையோ கற்கிறதில்லை. எனவே, இவன் கற்பதால் வருவது உண்மையான அறிவு என்று கூறத் தடையில்லை.

24. தொழிலுக்கு வேண்டிய தன்மை

ஆதாரக் கல்வித்துறையில் தொழில் என்று குறிப்பிடும்போது, மக்களுடைய ஜீவாதாரத் தேவையான மேற்கூறிய மூன்றில் ஒன்று சம்பந்தமான தொழில் என்பதுதான் பொருளாகும். இத்தொழிலை நாம் ஆதாரத்தொழில் என்று கூறுவோம். ஆதாரத்தொழிலைத் தேர்ந்து கைக்கொள்வதில் பின்வரும் அம்சங்கள் கவனத்தில் இருக்கவேண்டும்.

1. மேற்கூறியபடி ஜீவாதாரத் தேவைக்கு உவந்ததுதான் ஆதாரத்தொழிலாகும். பிற தொழில்கள் எவ்வளவு எளியன ஆயினும், எவ்வளவு பொருத்தமாயினும், எவ்வளவு பணவருமானம் தந்தபோதிலும், அவை ஒருகால் துணைத்தொழிலாக உதவக்கூடுமே யன்றி, ஆதாரத்தொழிலாக அமையமுடியாது.

2. தேர்ந்து கொள்ளும் ஆதாரத் தொழிலானது பிள்ளைகளின் கல்வி யபிவிருத்திக்குப் போதுமான இடம் தருவதாயிருக்கவேண்டும். கல்வித் திட்டத்தில் என்னென்ன பாடங்கள் வரக்கூடுமோ, எந்தெந்த வழிகளில் பிள்ளைகளின் அறிவுப் பெருக்கம் ஏற்படவேண்டுமோ, அவற்றுக்கெல்லாம் இவ்வாதாரத்தொழில் தொடர்புடையதாயிருக்கவேண்டும். மக்கள் வாழ்க்கையிலுள்ள முக்கியமான காரி

யங்கள் நோக்கங்கள் நிலைமை ஆகியவற்றுடன் அதற்குத் தொடர்பிருக்க வேண்டும். இத்தொடர்பு இருந்தால்தான் இதன்மூலம் தொழிலேயும் பாடத்தையும் இயைத்துப் போதிக்க முடியும்.

3. தொழிலானது மக்களுடைய வாழ்க்கை நிலைக்குப் பொருத்தமாக இருக்கவேண்டும். கிராம வாழ்க்கைக்கு ஏற்றதாயும் சூழ்நிலைக்குப் பொருந்துவதாயும், பொதுவாக, மக்களுடைய விருப்பத்தைத் தன்பால் இழுக்கக் கூடியதாயும் இருக்கவேண்டும். இயல்பாகவே அதனிடத்தில் அவர்களுக்கு ஆர்வம் உதிக்கவேண்டும்.

4. கூடுமான வரையில் மூலதனச் செலவோ, பணச் செலவோ அதிகம் வேண்டாததாயும் இருக்கவேண்டும். இவ்விதம் இருந்தால்தான் பள்ளியில் நடப்பதை ஊரார் பார்த்துத் தாமும் மேற்கொள்வதற்கான தூண்டுதல் பிறக்கும்.

5. யாரும் எந்த நிலையினும் எந்தப் பருவத்திலும்கூட, குறித்த தொழிலில் ஈடுபடத் தக்கதாய் இருக்கவேண்டும்.

6. தொழில் கற்பதென்ருல் வெறும் யந்திரம்போலக் கற்பதன்று. சிறுவன் குருட்டுத்தனமாக ஏதோ ஒரு பொருள் செய்யக் கற்பது கல்வி யன்று. தொழிலைக் கற்பிக்கும்போது, அறிவியல் ரீதியாக, சாஸ்திர பூர்வ மாக, அவனுக்குக் கற்பிக்க வேண்டும். குறித்த தொழில் நுட்பம் ஒவ்வொன்றையும் அவன் ஏன், எப்படி என்று மிகவும் திட்டமாக உணர்ந்துகொள்ளும்படி கற்பிப்பதே தொழிற்கல்வி. கல்விக்குக் கருவி புத்தகந்தான் அல்லது அச்சடித்தவார்த்தைதான் என்று இதுவரையில் இருந்ததை மாற்றி, இப்போது கல்விக்குக் கருவி தொழில் என்று அமைப்பதனல், பிள்ளைகளனைவரையும் திறமை வாய்ந்த தொழிலாளிகளாக மாற்றுவது நோக்கமன்று. முன்ன முள்ள பாடத்திட்டத்துடன், அதிகமாக நூற்றல் நெசவு அல்லது தச்சு வேலை என்று, கூட ஒரு பாடத்திட்டத்தைப்

புதிதாய்ச் சேர்ப்பதும் பொருளன்று. ஒருதொழில் செய்வதால்தான் திட்டமான அறிவு வரும், குழந்தையின் பண்புகள் யாவும் பூரண விளக்கம் பெறும் என்ற தத்துவமே இதில் பிரதானமானது.

7. இவ்விதம் தொழிலே அறிவியல் ரீதியாகக் கற்கும்போது, உற்பத்தியாகும் வஸ்துவுக்குத் திட்டமான பண மதிப்பு உண்டு. இம்மதிப்பு, மூலப்பொருளின் மதிப்பும், பிள்ளைகள் உழைப்புக்குரிய நியாயமான கூலி மதிப்பும் சேர்ந்தது. உற்பத்தியாகும் பொருள் விரைவிலேயே விற்பனையாகத்தக்கதாக அல்லது உபயோகிக்கத்தக்கதாக இருக்கவேண்டும்.

8. பயனுள்ள, பணமதிப்பு மிகுந்த, உற்பத்தியில் பிள்ளைகள் ஈடுபடுவதால், அவர்களிடையே கூட்டு முயற்சி, திட்டமிட்டுச் செய்யும் திறமை, எக்காரியத்தையும் பற்றிய திருத்தமான அல்லது துள்ளிபமான அறிவு, துணிவான தன் முயற்சி, தன்னம்பிக்கை, உழைப்பில் மகிழ்ச்சி, தனிப் பொறுப்பு, தலைமை, பணிவு ஆகிய அம்சங்களில் அவர்களுக்குப் பயிற்சி ஏற்படுகிறது. தொழிலானது இப் பயிற்சிக்கு இடம் கொடுக்கவேண்டும்.

25. மூலப் பொருளின் தன்மை

1. தேர்ந்துகொண்ட மூலப்பொருளானது அதை உபயோகிக்கும் சிறு பிள்ளைகளின் சக்திக்கு ஏற்றதாயிருக்கவேண்டும். ஐந்து வயது முதல் பள்ளியில் பிள்ளைகள் உற்பத்தித் தொழிலில் ஈடுபடப் போகிறார்கள்.

2. சுகாதாரத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் கேடு செய்யாததாய் இருக்கவேண்டும். தொழில் செய்த பின்னும் செய்யு முன்னும் பொருளையும் இடத்தையும் துப்புரவாய் வைத்திருப்பது சாத்தியமாயிருக்கவேண்டும்.

3. கூடியவரையில் மூலப்பொருள் அந்தப் பாடசாலையிலோ அல்லது அந்தந்தப் பிரதேசத்திலோ உற்பத்தியானால்

நல்லது. மற்றப்படி விலை மலிவாய்ப் பெறத்தக்கதாயிருத்தல் வேண்டும்; கூடுமானால் பாடசாலை நேரம் போக மற்ற நேரத்தில் பிள்ளைகள் தங்கள் வீடுகளில் அதே பொருளைத் தாங்களே உபயோகித்து உற்பத்தியில் ஈடுபடத் தக்கதா யிருக்கவேண்டும்.

4. அப்பொருள் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டி மேலும் மேலும் வளர்த்து வரவேண்டும். ஆர்வத்தோடு தொடங்கிப் பின் ஆர்வ மிழந்துபோகும்படி யிருக்கக் கூடாது.

5. பிள்ளைகளிடத்தில் அழகுணர்ச்சியும் கலையுணர்ச்சி யும் உண்டுபண்ணத் தக்கதாயிருக்கவேண்டும்.

26. ஆதாரத் தொழில் நூற்றல் ஏன்?

ஆதாரத் தொழிலாகக் கொள்ளத் தக்கவை பின்வரு வன ஆகும். 1. நூற்றல் நெசவு, 2. தோட்டவேலை, பயிர்த் தொழில், 3. அட்டை வேலை, தச்சுவேலை, கருமான் வேலை, 4. தோல் பதனிடுதல், செருப்புத் தைத்தல், 5. குறித்த பிர தேசத்தின் இயற்கை நிலைமைக்கும் சமூக வாழ்க்கைக்கும் ஏற்ற வேறு தொழில்—உதாரணம்: மீன் பிடித்தல். இவற்றுள் ஒவ்வொரு தொழிலையும் பற்றிய சில இயற்கை நிலைமைகளை நாம் அறிதல் வேண்டும்.

தோட்டவேலை ஆதாரத் தொழிலாக இருக்கவேண்டு மானால், பிள்ளைகளுக்கு வயது குறைந்த பட்சம் பத்துக்கு மேல் இருக்கவேண்டும். மண்வெட்டி பிடித்துக் கொத்த வும், ஏர் பிடித்து உழவும், பிள்ளைகள் குழந்தைகளா யிராத படி சற்றுப் பெரியவர்களாயிருத்தல்வேண்டும். ஆனால் ஆறு வயதுப் பிள்ளைகளுக்குத் தொழிலை வைத்தே நாம் கல்வி போதிக்க முற்படும்போது, இத்தொழிலை ஆதாரத் தொழி லாய்க் கொள்வது மிகவும் கடினம். நான்கு வகுப்புக்களுக் குப் பிறகு, இது பூர்த்தியான அல்லது முக்கியமான துணைத் தொழிலாக அமையக்கூடும். ஆரம்ப வகுப்பிலுங்கூட இது

இயன்ற அளவு துணைத்தொழிலாக இருக்கலாம். (ஐந்துக்கு மேற்பட்ட வகுப்புக்களில் இது ஆதாரத் தொழிலாக அமைந்தாலும் மிகவும் பொருத்தம்.)

தவிர, பயிர்த்தொழில் ஓரளவுக்கு இயற்கை வசதி, இடவசதி, நீர் வசதி, பருவகால மாறுதல் என்பவற்றையும் பொறுத்தது. மழை பெய்யும்போது வயல்வேலை செய்ய முடியாது. நல்ல கோடையில் எங்கும் நீர்வற்றி இருக்கும் போதும் வயல்வேலைக் கிடமில்லை. ஆகவே, தோட்டவேலை ஆதாரத் தொழிலாயிருக்குமானால், இந்தப் பருவங்களில் என்ன செய்வது என்ற கேள்வி எழும்.

அட்டை வேலைக்கு, இன்றியமையாத மூலப்பொருள் பற்றிய செலவு கிராம வாழ்க்கைக்குப் பொருந்தாது. நகரப் பிரதேசத்துக்கு மட்டும் பொருந்துவதாயிருக்கலாம்; மூலப் பொருள் விலைக்கு வாங்கல் எளிது. உற்பத்தியான சாமான் எளிதில் விற்பனையாகும். தச்சுவேலை, கருமான் வேலை, தோல் பதனிடும் தொழில் முதலிய தொழில்கள் யாவும், சற்றே திறமை பெற்றுச் செய்ய வேண்டியவை என்று சொல்லலாம். குழந்தையின் பருவம் இதற்கு முக்கியம். பள்ளியில் கல்வி தொடங்கும் ஆறுவயதுப் பிள்ளைக்கு இத்தொழில்கள் ஏற்றவை ஆகா. ஆதலால், ஆரம்ப வகுப்புக்களில் இவையும் ஆதாரத் தொழிலாயிருப்பது சாத்தியமில்லை.

நூற்றல் தொழில் ஒன்றுதான் இக்கேள்விகள் அனைத்துக்கும் சமாதானம் தருகிறது. ஐந்து வயதுப் பிள்ளைக்குக்கூட, நூற்றல் தொழில் கற்பித்துப் பொருள் உற்பத்தியும் அறிவு வளர்ச்சியும் செய்விக்கலாம்; தொழிலில் ஆர்வத்தையும் பெருக்கலாம். இயற்கைவசதி இருக்குமானால் பருத்தி பயிரிட்டுக் கொள்ளலாம். இல்லாவிட்டால் வேறு இடத்திலிருந்து தருவிக்கலாம். பருவகாலத்தைப் பற்றிக் கவலை இல்லை. மழையாயினும், வெயிலாயினும், கால இடை- ஈடின்றிப் பயிற்சி தொடர்ந்து நடைபெறும்.

மேலும், நூற்கிற நூலும், நெய்கிற துணியும், எல்லோருக்கும் தேவையானபடியால், பிற்கால வாழ்க்கையிலும் அவரவருக்கு இத்தொழில் பயன்படவல்லது. அன்றியும், வகுப்பிலும், வீட்டிலும், இத்தொழிலை எந்த நேரத்திலும் தொடங்கலாம், எந்த இடத்திலும் நிறுத்திக் கொள்ளலாம். ஆதலால், மற்றெல்லாத் தொழில்களையும் பார்க்க, நூற்றல் நெசவுத் தொழிலே பிரதான ஆதாரத் தொழிலாய் இருப்பதில் வியப்பில்லை. நெசவுப் பகுதி மட்டும் சற்றே வயது முதிர்ந்த பிள்ளைகள் செய்யத்தக்கது.

மேலும், சேவாகிராமத்திலுள்ள கல்விச் சங்கத்தார் சென்ற பத்து வருஷகாலமாக இத்தொழில் மூலம் கல்வி கற்பிப்பதில் சோதனைசெய்து இப்பயிற்சி முறையை வளர்த்து, திட்டமான தரங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (வேறு எத்தொழில் சம்பந்தமாகவும் இத்தகைய சோதனையும் திட்டமும் இன்று கிடைக்கவில்லை.) அவர்களுடைய திட்டமும் முடிவுகளும் நமக்கு முன் மாதிரியாயிருக்கின்றன. ஆதலால், பாடசாலையிலும் இத்தொழிலைக் கொள்வதுதான் இப்போதைக்கு எளிது. ஏனெனில், நம் வேலையை அவர்கள் வகுத்துள்ள தரங்களோடு ஒப்பு நோக்கிப் பார்த்துத் தேர்ச்சியை அளவிடமுடியும்.

27. பல ஆதாரத் தொழில்கள்

ஒரு பாடசாலையில் ஒரே ஆதாரத் தொழில்தான் இருக்கமுடியும். பல பாடசாலைகள் ஒரு கிராமத்தில் இருக்குமானால், அவை அனைத்திலுங்கூட, ஆதாரத்தொழில் ஒன்றாகவே இருக்கும். குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தின் மக்கள் நிலை, இடத்தின் வசதி, கல்விப் பயிற்சிக்கான வசதி ஆகிய எல்லாவற்றையும் ஆராய்ந்து ஆதாரத்தொழில் என்று ஒன்றைத் தேர்ந்துகொண்டபின் அதை மேலும் மேலும் வளர்க்க வேண்டுமேயன்றி, அடிக்கடி தொழிலை மாற்றமுடியாது. வாழ்க்கைக்கும் கல்விப் பயிற்சிக்கும்

ஏற்ற பிற தொழில்களைத் துணைத் தொழிலாக வைத்துக் கொள்ளலாம். தேர்ந்தெடுக்கும் எந்தத் தொழிலும் குழந்தையின் திறனெல்லாம் சமமாகவும் பூர்த்தியாகவும் வெளிப்பட்டு விளக்கம்பெறச் செய்ய வல்லதாய் இருக்க வேண்டும்.

ஒரு பாடசாலையில் ஆதாரத்தொழில் ஒரே தொழிலாக இருந்தால் பிள்ளைகளுக்கு அதில் அலுப்பு ஏற்பட்டுவிடும் என்றும், பல தொழில்கள் இருந்தால் அலுப்பு வராது என்றும், கல்வி போதனைக்குப் பல தொழில்கள் இருப்பதே நல்லதென்றும் அனேகர் எண்ணுகிறார்கள். இவ் வெண்ணம் சரியானதல்ல. ஒரே தொழிலிலுங்கூட பிள்ளைகள் பல வகையான பொருள்களையும் கருவிகளையும் கையாளுவதால், அவர்கள் விழிப்போடும் சுறு சுறுப்போடும் இருப்பதில் தடையில்லை. மேலும் ஒரே வேலையில் அவர்கள் தீவிரமாக முனைய முனையத்தான், கல்வியபிவிருத்தியும் அதிகமாகும் என்பது கல்வி நிபுணர் கூறும் உண்மை. கவனம், சமயோசிதம் முதலிய பண்புகள் ஒரு தொழிலிலேயே, ஒருமுகமான முயற்சியிலேயே, நன்றாக வளரும். இப்படிப் பண்புகள் விளக்கம்பெற்ற பையன் பின்னர் எந்த வேலைக்கும் தகுதியுடையவனாயிருப்பான்.

28. தொழிற் கல்வி

ஆதாரக் கல்வியை அறியாதவர்கள் இதைத் தொழிற் கல்வி என்று சொல்லுகிறார்கள். இது தொழில் மூலம் கல்வியே தவிர, தொழிலே கல்வியல்ல. இங்கு தொழில் கற்பிப்பதில் நமது நோக்கம் குழந்தையின் வளர்ச்சி. இது வரை கல்வித்துறையில் கல்விக்குக் கருவியாகப் புத்தகத்தைக் கொண்டார்கள். ஆதாரக் கல்வியானது கல்விக்குக் கருவியாக, புத்தி பூர்வமாகச் செய்கிற உழைப்பைக் கொள்ளுகிறது. இதுவே தொழில். மாணவன் நூல் நூற்பது பெரிதன்று. ஆனால், இந்நூற்பின் மூலம் அவனுடைய

இரண்டு கைகளுக்கும் கண்ணுக்கும் ஏக காலத்தில் பயிற்சி கிடைக்கிறது. காதுக்கும், காலுக்கும், உடலுக்கும், தொடுதல் புலனுக்கும் பயிற்சி உண்டாகிறது. இந்தப் பயிற்சிதான் கல்வி வளர்ச்சி தரும். கைத்திறனும், கண்ணின் திறனும் வளர்வதுதான் மனத்தின் வளர்ச்சி. வேலையில் கண்ணையும் மனத்தையும் பழக்கியவனுக்கு, வாழ்க்கையில் இதுவே பயிற்சியாக அமையும். இந்தப் பயிற்சி இன்றி மூளையை மட்டும் பழக்கியவனுக்கு வாழ்க்கைப் பயிற்சி சிறிதும் இல்லை. ஆதலால் இவன் எதிர்காலச் சமூகத்தில் தன் கடமையையோ, பொறுப்பையோ செம்மையாக நிறைவேற்ற இயலாது. அத்தகைய சோம்பேறிக் கூட்டத்தை இன்னும் பெருக்கிக்கொண்டு போவது, நாட்டின் நல் வாழ்வுக்கு ஒவ்வாது.

மற்றப் பாடசாலைகளில் இன்று தொழில் கற்பிக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அத்தொழிலில் திட்டமான வரவு செலவுக் கணக்குப் பார்ப்பதில்லை. பல வகுப்புப் பாடங்களோடு கூட இதுவும் ஒரு பாடம் – அதிகப்படியாகச் சேர்த்த பாடம் – என்ற அளவிலேதான் அங்குத் தொழிற் பயிற்சி இருக்கிறது. ஆதாரக் கல்வித் துறையில் நிலைமை வேறு. இங்கு தொழிலும் ஒரு பாடம் என்ற நிலைமை இல்லை. இங்கு, தொழில் மூலம்தான் மற்றெல்லாப் பாடங்களும். உபயோகிக்கிற மூலப்பொருளுக்கும் மாணவனுடைய உடல் உழைப்புக்கும் பணமதிப்புப் போட்டு, உற்பத்தியாகும் பொருள் மதிப்பு இதை விட அதிகமாக இருக்கவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். தொழில் என்பது இங்கே வேடிக்கையான பரிசோதனை அன்று: உண்மையான திட்டமான தினசரி வாழ்க்கையேயாகும்.

பள்ளிக்கூடத்தில் இளம் பிள்ளைகளின் கல்விப் பயிற்சிக்கு முக்கியமான ஆதாரம் ஆனந்தம். பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பாக ஒன்றைச் செய்வதில் ஆனந்தமே தவிர, கைகட்டி மௌனமாக இருப்பதில் ஆனந்தமில்லை, சோர்வு

தான். ஆகவே பிள்ளைகளைத் தொழிலில் ஈடுபடுத்தித் தொழில் செய்வதில் பிறக்கும் ஆனந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு அறிவை வளர்ப்பதுதான் ஆதாரக் கல்விமுறை. பாடசாலை என்பது தொழிற்சாலை அல்ல; விளையாட்டுச் சாலையும், விஞ்ஞானசாலையும் ஆகும் என்பது பொருந்தும். தொழிலே விளையாட்டும் விஞ்ஞானமும் ஆகிறது.

29. தொழில்மூலம் கல்வி

பாடசாலையில் தொழில் கற்பித்தாக வேண்டும் என்று சொல்வதற்கு மேற்குறித்தபடி பல காரணங்கள் முக்கிய மானவை.

1. எந்தக் கல்வித் திட்டமும் இரண்டு வகை அடிப் படையில் அமைக்கப்பெறும். ஒன்று, குழந்தை மனோதத் துவத்தைப் புரிந்துகொண்டு அதை அனுசரித்து அமைக்கப் பெறும்; மற்றது, சமூகத்தின் தேவையை உணர்ந்து அதை அனுசரித்து அமைக்கப்பெறும். தொழில்மூலம் கல்வி என்பது, சுதந்திரம் பெறுமுன் மட்டும் இல்லை, இன்றுங்கூட, இந்த இரண்டு அடிப்படைகளையும் தழுவி யதாயிருக்கிறது. குழந்தையின் இயல்பாயுள்ள சுறுசுறுப்பு என்ற அம்சத்தை அடிப்படையாகவைத்து இக்கல்வித் திட்டம் எழுகிறது; இரண்டு, இந்த ஏழை நாட்டில் சமூகத் துக்கு, உழைப்பும் லாபகரமான உற்பத்தித் தொழிலும் அடிப்படைத் தேவைகள் என்பது.

2. கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்லச் சந்தர்ப்பம் இருந்தால்தான் பிள்ளைகளுக்குப் பூரண வளர்ச்சியுண்டு. தொழில் செய்தல் என்பது குழந் தைகளுக்கு இயல்பு. செய்தால்தான் கற்றல் சாத்தியம். மாண்டிசோரி அம்மையார் முதலான கல்வி நிபுணர் அனை வரும் இதையே வற்புறுத்துகிறார்கள். நோயாளிக்கு, இன்று நிபுணர் கூறும் வாழ்க்கை அல்லது சிகிச்சை முறை களில், பயனுள்ள தொழில்செய்தல் என்பதும் ஒன்று;

இதுவும் இங்கு நினைவுகூரத் தக்கது. குழந்தையானவன் கையினால் ஒன்றைச் செய்து பழகும்போது, தானாகக் கற்கிற அறிவு, வேறு எத்தனை விதமான பாடபோதனையாலும் வரவே வராது.

3. கண்ணும் மனமும் நன்றாய் ஒத்தியங்கவே, பிள்ளைக்குத் தன் திறன்களை அடக்கியாளும் தன்மையும் குறித்த நிலைமையைச் சமாளிக்கும் ஆற்றலும் பொருந்துகின்றன. தன்னம்பிக்கையும் சாமர்த்திய உணர்ச்சியும் பொருந்தி, அவனிடம் ஒருமித்த பூரண வளர்ச்சி ஏற்பட இது துணை செய்கிறது.

4. செயல் செய்யும்போது அனுபவம் உண்டாகிறது. அனுபவத்தால் தொகுதிகளை ஆராய்ந்து காணும் முடிவே விஞ்ஞான அறிவு. மனிதகுலம் காட்டுமனித நிலையிலிருந்து இன்றைய நாகரிக நிலைக்கு வளர்ந்து வந்துள்ளது. இத்தகைய அனுபவங்களின் தொகுதியினின்றும் பிறந்ததே அறிவு. ஆகவே விஞ்ஞான ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் பார்க்கும்போது 'தொழில்மூலம் கல்வி' வளர்ச்சிக்கு ஏற்றதாயிருக்கிறது.

5. புதிதாகத் தான் ஒன்றைப் படைக்கவேண்டும் என்று குழந்தையிடம் இயற்கையாகவே உள்ள ஆக்கவுணர்ச்சியை இது பேணி வளர்க்கிறது. கையிலெடுத்த பருத்தி பஞ்சாகி நூலாகித் துணியாவதைத் தன் கண் முன்னே குழந்தை காணும்போது, அது தரும் இன்பமும் தன்னம்பிக்கையும் எவ்வளவு பெரியவை, உண்மையானவை ! இவற்றால், அழிவு வேலையே மலிந்துள்ள இந்த உலகில் ஒவ்வொரு குழந்தையும் ஆக்கத்துறையில் முன்னேறச்செய்ய முடிவது எவ்வளவு பெரிய சாதனை !

6. ஓய்வு நேரத்தை என்ன செய்வது என்பது பெரிய பிரசினை. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள நல்ல ஆக்க வழியில் உபயோகிக்க இக்கல்விமுறை ஒவ்வொரு குழந்தைக்கும் வழிகாட்டுகிறது. அவனிடம் பொருந்தியுள்ள பலவகை

உள்ளுணர்வுகளும் (இயல்பூக்கங்கள்) தாமாக வெளிப்பட்டுத் தொழிற்பட ஓய்வு நேரத் தொழில் உதவி செய்வதால், அவனிடத்து ஒருவிதச் சாந்தியும் திருப்தியும் நிலவுகின்றன. அழகுணர்ச்சி, தொழில் தேர்ச்சி, புலன்களின் தேர்ச்சி முதலான நல்ல பண்புகள் அவனுக்கு உண்டாகின்றன. விகாரத்தைக் கண்டு அருவருக்கும் தன்மையும் வருகிறது.

7. உழைப்பது தாழ்வு என்ற தப்புணர்ச்சியைப் போக்கி, எல்லோரும் சமமென்பது உறுதியாக்கும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனையும், வீணில் உண்டு களித்திருப்போர்க்கு நிந்தனையும் ஏற்பட்டு, உண்மையான சர்வோதய சமுதாயம் பிறக்க இது அடிகோலும்.

8. பிள்ளைகளின் பெற்றோர் இன்று வாழ்க்கையில் எத்தனையோ துறைகளிலும் தொழில்களிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். பிள்ளைகளின் ஏட்டுக்கல்வி முறையால் இத் தேர்ச்சி முழுமையும் அக்கல்விக்குப் பயனற்றுப் போவது நாடு செய்த பாவம். தொழில்மூலம் கல்வி கற்பிக்கும்போது, பெற்றோருடைய அறிவுச் செல்வம் பாடசாலை வேலையிலும், பிள்ளைகளின் வீட்டு வேலையிலும் பயன்படச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. பின்னர் அவன் படிப்பு முடித்து வாழ்க்கையில் இறங்கும்போதுகூட, அவர்கள் அவனுக்கு வழிகாட்டவும் முடிகிறது.

9. கல்வி என்பது இதுவரையில் நம்மிடையே வெறும் ஏட்டுப்படிப்பாக இருந்துவந்திருக்கிறது. அதிகமாய்ச் சொன்னால், கல்வியானது, இரண்டு கோணல் எழுத்துக் கற்பிப்பதோடுகூட, ஓர் "உத்தியோகம்" வாங்கித் தருவதற்கான அனுமதிச் சீட்டாக இருந்தது. மனிதனை மனிதனாக்கும் முயற்சியோ மனிதனைப் பாவிக்கும் நோக்கமோ அதற்கு இல்லை. நாகரிகவுணர்ச்சி, ஆன்ம வளர்ச்சி முதலியன அக்கல்வியினிடம் பூஜ்யம். தொழில்மூலம் கல்வி

என்று கூறுவது, முதலாவதாக இத்தனைக்கும் மாற்றுத் தேடும் நன்முயற்சியாகும்.

10. பாடமே பிரதானம் என்றிருந்ததை மாற்றிக் குழந்தையே பிரதானம் என்று ஆக்குவதற்கான முயற்சிகளுள் இக் கல்விமுறையும் ஒரு முயற்சி.

11. இது சோதனையை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான ரீதியான ஒரு புதுக் கல்வி முயற்சி.

12. குழந்தையின் கல்வியில், போதனை, கற்றல் என்ற இரண்டு சொற்கள் இங்குக் கவனத்துக்குரியன. தொழில் மூலம் கல்வி என்பது, போதனையைக் குறைத்துக் கற்றலைத் தூண்டிவிடும் முயற்சி ஆகும். இது மிகப் பெரிய புரட்சி என்பதில் சந்தேகமில்லை. இம் முறையானது தன்னடக்கம், ஆராய்ச்சியுடன் கூடிய சிந்தனைசக்தி, ஆக்கத்திறன், விரும்பத்தக்க நல்ல சமூகப் பழக்கம் ஆகிய பண்புகளைக் குழந்தையிடம் இயல்பாக உதிக்கச் செய்கிறது. குழந்தையின் அனுபவம், குழந்தை தானே தயாரிக்கும் வேலைத் திட்டம். எழுதிவைக்கும் பதிவேடுகள், திட்டத்தை நிறைவேற்றி ஒப்பிடும் முறை ஆகிய அம்சங்கள் கல்வியை வளர்க்கின்றன. குழந்தையின் தேவைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற மாதிரியாகப் போதனைமுறைகளையும், கருவிகளையும் அமைத்துக் கொள்வது இங்கு முக்கியமானது.

13. முக்கியமாக இந்தக்கல்வி, பாடசாலையிலும், வீட்டிலும், சமூகத்திலும், நட்புரிமை பொருந்திய கூட்டுறவான ஜனநாயக வாழ்க்கை வாழக் கற்பிக்கிறது.

14. சிறு குழந்தையின் வாழ்க்கையில் விளையாட்டுக்கும் வேலைக்கும் அதிக வித்தியாசம் இல்லை. விளையாட்டின் மூலம் கல்வி என்பது கல்வித்துறையில் ஒரு புதிய இயக்கம். இதற்கும், தொழில்மூலம் கல்வி என்பதற்கும் அதிக வேறுபாடில்லை.

உழைப்பு என்ற அம்சத்தைத் திரண்ட வடிவமாக நாம் கருதுவோமானுல் அதில் உடல், ஆன்மா என்ற இரு பகுதி

கள் இருப்பதை உணரலாம். உழைப்பினால் உண்டாகும் உற்பத்தியானது, திட்டமான பொருள் அல்லது பணரூப பான லாபம். இது உழைப்பின் உடல்போன்றது. உழைப்பவனுக்கு உழைப்பினால் உண்டாகும் திறன்கள் அனைத்தின் மேம்பாடு ஒரு வகை ஆன்மலாபம். இது உழைப்பில் உயிர் என்ற பகுதி. ஆகவே, உழைக்கும்போது நாம் இரு வகைப் பயனையும் பெறவேண்டும். ஆதலால் பக்தி பூர்வமாக உழைத்தால் இருவகைப் பயனையும் பெறலாம் என்பது குமரப்பாவினுடைய கருத்து.

அமெரிக்கப் படைகளின் மேஜர் ஜெனரலாயிருந்து ஹாம்ப்டன் கல்வி ஸ்தாபனத்தை நடத்திய ஆர்ம்ஸ்ட்ராங் என்பவரின் பின்வரும் கருத்துக்களும் இங்கு, அறியத் தக்கவை. (உலகப் பிரசித்திபெற்ற புக்கர் வாஷிங்டன் தமது குரு என்று ஆர்ம்ஸ்ட்ராங்கை எப்போதும் பக்தியுடன் குறிப்பிடுவார்.) :

"முதலாவதாக, இந்த அப்பியாசம், வாஸ்தவமான வேலை; இது வாழ்க்கைக்கு வலிமையும் பயனும் தருகிறது. செய்யும் வேலையில் பிறக்கும் ஆர்வம், கவனம், திருத்தம், கடைபோகச் செய்தல் ஆகிய நற்பழக்கங்கள் வாஸ்தவ வேலை என்ற அப்பியாசத்தால் விளைகின்றன. வேலையில் நோக்கம் பொறுப்பு என்ற தன்மைகள், வியாபார ரீதியான யோசனைகள், இது சம்பந்தமான அளவைகள் ஆகியவை தருகிற வலிமையும் இந்த மேம்பாட்டுக்குக் காரணமாகும்.

"நாம் கைத்தொழில் செய்வதால் பணலாபம் வருவது தற்செயலான பலன்; இது அவசியம் வேண்டும் என்பதில்லை. ஆனால், செய்ய உபயோகித்த மூலப் பொருளின் மதிப்பையும் பிள்ளை செய்த உழைப்பின் மதிப்பையும் அடைவது அவசியமாகும். எனினும், ஒரு ரூபா சம்பாதிப்பது, ஒரு ரூபா செலவழிப்பதைவிட மேல். அப்படியே, மனிதப்பண்பு உண்டாக்குவதே முதல்வேலை,

பணம் சம்பாதிப்பது இரண்டாவது வேலைதான். ஆனல், பணம் சம்பாதிப்பதிலும்கூட, அதனல் வரும் திறமையும் பயிற்சியும் மக்களுக்கு நன்மை தரக்கூடும்.

"உற்பத்தியைப் பெரிதாய்க் கருதுவதுபோல, அதில் கல்வி போதனையையும் பெரிதாய்க் கருதவேண்டும். வேலைச்சாலை பையனுக்காக ஏற்பட்டது; பையன் வேலைச் சாலைக்காக ஏற்படவில்லை.

"தனக்குத்தானே உதவுதல் என்ற கருத்து, பொருள் உற்பத்தி செய்கிற தொழில் நிலையங்களில்தான் நிறைவேறக்கூடும். எதற்கு என்ன மதிப்பு தரவேண்டுமோ அதைக்கிரமமாய்த் தருவதால், உழைப்பானது கல்விக்கும், மற்றெல்லாப் பெருஞ் சிறப்புக்கும் செலுத்தவல்ல ஒரு வழியாகவும் ஏணியாகவும் அமைகிறது."

30. செய்து கற்றல் பற்றிய சோதனைகள்

1. ஹாம்ப்டன் கல்விச்சாலை

அமெரிக்காவில் படை கலைக்கப்பெற்ற பிறகு நீக்ரோ படை வீரர்களை வாழ்க்கையில் சௌகரியமாக அமர்த்தும் பணியில் ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர் இருந்தார். அவர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பையும் அவரே ஏற்ருர். வர்ஜீனியா மாகாணத்தில் 1868இல் ஹாம்ப்டன் கலாசாலை என்ற ஒரு பள்ளியை அவர் தொடங்கினர். 1892 வரையில் அதன் தலைவராக இருந்து நீக்ரோ கல்வியை நடத்தி வந்தார். புக்கர் வாஷிங்டன் பயின்றது இங்கேதான். அவர் ஆரம்பித்த கல்வி இயக்கம் எல்லா அமெரிக்கக் கல்விச்சாலைகளின் போக்கையும் முறையையும் ஓரளவு மாற்றிற்று.

மூன்று வகையான பயிற்சிகள் முக்கியம் என்பது அவருடைய கருத்து: உறுப்புக்களின் பயிற்சி, மனத்தின் பயிற்சி, ஒழுக்கத்தின் பயிற்சி என்பன. உடலைவருத்தி

உழைக்காமல் மக்களின் முன்னேற்றம் இல்லை என்பது அவருடைய சித்தாந்தம். பள்ளியில் திறமையான கைத் தொழில் அமைப்பு வேண்டும். உயர்ந்ததரமான ஒழுங்கு முறையும், கட்டுப்பாடும் நிலவவேண்டும். உறுதியான நிர்வாகம் வேண்டும். மிகவும் திறமையான கல்விபோதனை நடைபெற வேண்டும். இந்நான்குமே நல்ல கல்விச்சாலை யின் அடையாளங்கள். முக்கியமாக, கல்விபயிலும் மாணாக் கர் தங்கள் உணவுக்கும், உடைக்கும் ஆகும் செலவை, தங்கள் உழைப்பின்மூலம் ஈடு செய்யத் தக்கபடி கல்விப் பயிற்சி அமையவேண்டும். ஆண்களும் பெண்களும் சேர்ந்தே பயிலவேண்டும். பாதிநேரம் வேலை பாதிநேரம் படிப்பு என்பதே கல்விமுறை.

நீக்ரோ மக்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதில் இந்த கலாசாலை அருஞ்சேவை செய்திருக்கிறது என்பதை அமெரிக்கச் சரித்திரம் சொல்லும்.

2. புக்கர் வாஷிங்டன் கலாசாலை

இவர் சரித்திரம் உலகம் முழுமையும் நன்கு அறிந்தது. டஸ்கஜி என்னும் ஊரில் 1882ல் ஒரு நீக்ரோ பள்ளி தொடங்கினர். தாமே நீக்ரோவாகப் பிறந்திருந்து, தம் முடைய சேவையின்மூலம் வெள்ளை அமெரிக்கர்கள் இவரை ஒரு மகாத்மா என்று கொண்டாடுமளவுக்குப் பெருஞ் சேவை செய்தார். ஆரம்ப காலத்தில் அவர் முற்கூறிய ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங்கின் தொடர்பைப் பெற்ருர்.

இவருடைய கல்விச்சாலையில் அடிப்படையான கருத் துக்கள் சில: கல்வியானது, சுற்றுப்புறத்துப் பிரசினை களைத் தீர்க்கும் முறையில் இயங்கவேண்டும். தேவையான செயல் செய்வதில் ஆற்றல் வளரவேண்டும். புத்திகூர்மை யும், நல்லொழுக்கமும் வளர்வதோடு, தன் வாழ்க்கைத் தேவைகளைத் தானே செய்துகொள்ளத் தக்கவனாக ஒரு மாணவன் ஆகவேண்டும். படிப்பை முடித்து வெளியேறு

கிற பையனே, பெண்ணே, உண்மையான உழைப்புத்தான் ஊதியம் தரவல்லது என்ற எண்ணத்தோடு வெளியேற வேண்டும். பிள்ளைகள் எல்லோரும் விவசாயப் பயிற்சி பெறவேண்டும்.

இவருடைய பள்ளியின் தினசரிக் கால அட்டவணை யானது, காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் சாமா ணிய ஆதாரப் பயிற்சிப் பள்ளியின் வேலைத்திட்டம் போலவே அமைந்திருக்கிறது.

3. டியூயி ஆரம்பித்த சிகாகோ பள்ளி

அமெரிக்கக் கல்வி இயக்கத்தின் பிதாஎன்று சொல் லத்தக்க ஜான் டியூயி என்ற பெரியார் ஆரம்பத்தில் சிகாகோ நகரில், ஐந்து ஆறு வயதுள்ள பிள்ளைகளுக் கென்று ஒரு புதிய புரட்சிகரமான கல்விச்சாலை தொடங்கி ஞர். கைகால்களைக் கொண்டு உழைத்தால்தான் கல்வி வரும் என்று அவர் கருதியமையினுல், பள்ளிக்கு வந்த மிகவும் செல்வர்களாயுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் உடல் உழைப்புக்கு ஏற்பாடு செய்தார். எளிதாகச் செய்யக் கூடியது என்று கருதி அவர் அப்பள்ளியில் எல்லோருக்கும் நூல்நூற்கும் தொழிலைப் பழக்கினுர் என்ற செய்தி ஆதாரக் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள நாம் அறிந்து மகிழ்தற் குரியது.

4. டால்ஸ்டாய் பண்ணை

மகாத்மா காந்தி தென்னுப்பிரிக்காவில் இருந்தபோது பீனிக்ஸ் என்ற ஊரில் ஒரு புதிய சமூகத்தைத் தோற்று விக்க எண்ணி ஓர் இயக்கம் ஆரம்பித்தார். டால்ஸ்டா யிடம் அவருக்கிருந்த பக்தி காரணமாகத் தம் ஸ்தாபனத் துக்கு டால்ஸ்டாய் பண்ணை என்று பெயரிட்டார். 100 ஏகரா நிலத்தில் அது நடந்தது. அவருக்கு மூலமந்திரமாக இருந்தது, ரஸ்கின் என்ற ஆங்கில அறிஞர் எழுதிய 'கடை யருக்கும் இங்கு கடைத்தேற்றம்' என்ற சிறுநூல். இது

1904இல். அங்கு எல்லா வேலைகளையும் அங்கு வசிப்பவர்களே செய்யவேண்டும். வெளியார் யாரையும் கூப்பிடுவதில்லை என்பது அவருடைய திட்டம். மலஜலத் துப்புரவு, மரம்வெட்டுதல், வீடு கட்டுதல், செருப்புத் தைத்தல், விறகுடைத்தல், துணி வெளுத்தல் முதலிய எல்லா வேலைகளையும் அவர்களே செய்துகொண்டார்கள். ஆசிரியர் மாணாக்கர் என்ற பேதம் இல்லாமல் இருந்தது. உடலுழைப்பில் ஈடுபட்ட பிள்ளைகளுக்கு, கல்வியில் அதிகத்திறமை வந்தது அவருடைய அனுபவம்.

இந்த அனுபவங்களை யொட்டியே பிற்காலத்தில் சபர்மதி ஆசிரம வாழ்க்கையையும் சேவாக் கிராம ஆசிரம வாழ்க்கையையும் காந்தி அமைத்துக்கொண்டார். இந்த அனுபவங்களே இன்றைய ஆதாரக்கல்வியின் தோற்றத்துக்கு வித்தாய் இருந்தன.

காந்தியடிகளின் சீடராகிய குமரப்பா வர்தாவின் ஒரு பகுதியில் மகன்வாடி என்ற இடத்தில் ஒரு கிராமக் கைத்தொழில்பள்ளி தொடங்கினர். எண்ணெயாட்டுதல்,சோப்பு செய்தல், காகிதம் செய்தல், கையால் அரிசி குத்துதல், பனைவெல்லம் செய்தல் முதலிய இன்றைய எல்லாக் கிராமத் தொழில் பயிற்சிகளும் இங்கு பிறந்தன என்று சொன்னால் மிகையன்று. இங்கு எல்லோருக்கும் கடின உழைப்பு உண்டு. லக்ஷ்யம் சுயதேவைப் பூர்த்தி. இங்கு வாழ்க்கை முறை காந்திய ஆசிரம வாழ்க்கை முறை. குமரப்பா கைத்தொழிற் கல்வியே ஆதாரக் கல்வி முறையில் சர்வகலா சாலைத் தரத்துக்குரிய கல்வி என்று கருதிவந்தார். அம்முறையில் மகன்வாடியே ஒரு சர்வகலாசாலை என்பது அவருடைய கொள்கை. அங்கு வேலையாள் என்பது இல்லை. எல்லோரும் எல்லா வேலையும் செய்தே ஆக வேண்டும்.

இவ்விதம் காந்திய முறையில் நாடெங்கும் அமைந்த கல்விச் சோதனைச் சாலைகள் எண்ணிறந்தன.

5. சாந்தி நிகேதனம்

வங்காளத்தில் ரவீந்திரநாத் தாகுர் அமைத்த சாந்தி நிகேதனம் உலகப் பிரசித்தி பெற்றது. இங்கு மற்ற எல்லா மேல் படிப்புக்களுடன்கூட, அருங்கலைப் பகுதியும், தொழிற் பகுதியும் சிறப்பாக உள்ளன. தொழிற் பகுதியில் சிறப்பான கைத்தொழில்கள் யாவும் இடம் பெற்றிருக்கின்றன. காந்தியப் பள்ளிகளுக்கும் இதற்கும் வேறுபாடுகள் நிரம்ப உள்ளன. காந்தியப் பள்ளிகளில் பணச் செலவு அதிகம் கூடாது என்பது ஓர் அடிப்படைத் தத்துவம். ஆனால் செலவுக்குப் பணம் இல்லையென்றால் சாந்தி நிகேதனக் கல்வி இல்லை!

31. ஆதாரக்கல்வி-கலைத்திட்டத்தின் சிறப்பியல்புகள்

1. வளர்ந்துவரும் குழந்தைக்கும் அவனுடைய சூழ்நிலைக்கும் ஒற்றுமை ஏற்படுத்த முயல்கிறது.

2. அவனுடைய குழந்தைப் பருவ வாழ்க்கை அனுபவம் திட்டமான உருவமில்லாதது. ஆனால் நிரம்பிய அனுபவம், சுறுசுறுப்பான செயல் நிறைந்தது: இவ்வனுபவமே இங்கு குழந்தைக் கல்விக்குத் தொடக்கமாகிறது. அனுபவங்களுக்குள் தொடர்புண்டாக்கி, இவற்றுள் ஒழுங்கும் பொருளும் முறையும் வருவிக்கிறது; ஸ்தூலமான அனுபவங்களுக்கும் ஏட்டுப் படிப்பால் வரும் அறிவுக்கும் இடையில் உள்ள வேற்றுமையைப் போக்க முயல்கிறது.

3. இது செயலை அடிப்படையாய்க்கொண்ட திட்டம். சில பாடங்கள் பற்றிய செய்திகளைப் புகட்டுவது இதன் நோக்கம் அல்ல. பல் வேறு வகையான செயல்களைப் பாடசாலையில் உருவாக்கி அவற்றைக் கூட்டாய் செய்வதுமூலம் குழந்தை தேவையான அறிவைப் பெறும்படி செய்வதோடு, பயனுள்ள முக்கியமான சில சமூக மனப்பான்மைகளையும், ஒழுக்கம் பற்றிய மனப்பான்மைகளையும், புத்திப் போக்குக்களையும் இக்கலைத்திட்டம் அபிவிருத்தி செய்கிறது.

4. பாடம் என்பது பழைய திட்டங்களில் துண்டு துண்டாய் இருக்கிறது. இப்படியுள்ள பலவற்றினிடையே யும் ஓர் இயைபும் ஒற்றுமையும் வேண்டும் என்பதை இது வற்புறுத்துகிறது. பாடங்களைத் துண்டிக்காமல், இயல்பான பொருத்தம் எங்கிருக்கிறதோ அங்கெல்லாம் இவற்றை ஒன்றுபடுத்துகிறது. உதாரணம்: சமூகசாஸ்திரம், விஞ்ஞானம் ஆகியவை.

5. பாடத்திட்டம் என்று தயாரிப்பதிலும், பாட விஷயத்தைப் பொருளுள்ள விரிவான தனிப்பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளுகிறது. இப்பிரிவுகள், வாழ்க்கையை விட்டு விலகியனவாகாமல் நெருங்கிப் பிணைந்தனவாகவே யுள்ளன. உதாரணமாக, விஞ்ஞானபாடம் என்று எடுத்துக்கொண்டால், இப்பாடத்தைக் குழந்தையானவன் தன் உடல், உடை, தான் தினசரி அறிந்தவைகளான நீர் நெருப்பு காற்று, உணவு என்ற ரீதியில் கற்கிறான். இப்படிக் கற்பதில் குழந்தை நிலையில் பற்றுதலுண்டு, பொருளுண்டு. விஞ்ஞான உண்மைகளை வயது வந்த கற்றோருக்குத் தர்க்கரீதியாக அமைத்திருப்பது பொருத்தம்; அதுவே எல்லா நிலையிலும் இன்றைய பாடமுறை: ஆனால் அது குழந்தை நிலையில் பொருத்தமில்லை.

6. கலைத்திட்டத்தில் வாழ்க்கைத் தொழில்களுக்கு நியாயமாய்த் தரவேண்டிய முதன்மையான இடத்தை இப்போது இத்திட்டம் கொடுக்கிறது. கொடுத்து, கையையும் கருத்தையும் ஒருமித்துப் பயிற்ற முற்படுகிறது.

7. இவ்வாறு இக்கலைத்திட்டத்துக்கு அடிப்படையாக ஒருபுறம் குழந்தையுள்ளத்தின் இயல்பாகிய மனோதத்துவ மும் மறுபுறம் சமூகத்தின் தேவைகளும் அமைந்துள்ளன. இவற்றால் பாடசாலைக் கல்விமூலம், மகாத்மா காந்தி குறிப்பிட்ட அமைதியான சமுதாயப் புரட்சியை இது உண்டு பண்ணுகிறது.

8. ஆனல் இக்கலைத் திட்டம் மாற்றமுடியாத கண்டிப்பான ஒரு திட்டமன்று. இது முறையாகத் துணிந்து வகுத்த ஒரு வாழ்க்கை யமைப்பைப் பிரதிபலிக்கிற ஒரு திட்டம். வாழ்க்கை மாறுகிறது ; அதன் கருத்தும் லக்ஷ்யமும் மதிப்புக்களும் மாறுபடுகின்றன. வாழ்க்கைக்குத் தயார் செய்வதாகிய கலைத்திட்டம் மட்டும் எப்படி மாருமல் இருக்க முடியும் ? ஒவ்வொரு நிலையிலும் குழந்தையின் உண்மையான தேவை எது என்று ஆராய்ந்து அதற்கேற்றபடி மாறுதல் செய்துகொள்ளவேண்டியே இருக்கும். இக் கலைத்திட்டம் இதை ஒப்புக்கொள்கிறது.

32. ஆதாரக் கல்வியின் பிரிவுகள்

காந்தியடிகளின் அபிப்பிராயப்படி ஆதாரக் கல்வியானது, குழந்தை பிறந்தது முதல் மரண பரியந்தம் பயில வேண்டிய கல்வியாகும். மனித வாழ்க்கையில் பல பருவங்கள் இருப்பதுபோல், இந்தக் கல்வியிலும் பல பருவங்கள் உள்ளன. அவை, பாலர் கல்வி (Pre—Basic Education), ஆதாரக் கல்வி (Basic Education), உயர் ஆதாரக்கல்வி (Post—Basic Education), சர்வகலாசாலைக் கல்வி (University Education), வயது வந்தோர் கல்வி (Adult Education) என்ற ஐந்தும் ஆகும்.

இவற்றுள் பாலர் கல்வி என்பது, குழந்தைக்கு ஆறு* வயது ஆகும் வரையில் அதற்கு அமைய வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள் அமையச் செய்து, சுகாதார வாழ்க்கை தன்னம்பிக்கை, பெரியோரிடத்தும் மற்றவர்களிடத்தும் மரியாதையுடன் பழகுதல் என்பவை போன்ற நல்ல குணங்

*1960இல் சென்னை அரசாங்கம் ஆறு என்ற வயது எல்லையை மாற்றியிருக்கிறது ஜூலை மாதம் 31உயன்று 5 வயது பூர்த்தியாகிவிட்டால் அந்தப் பிள்ளையை முதல் வகுப்பில் சேர்க்கலாம் என்பது விதி. இதை யனுசரித்துப் பார்த்தால், பூர்வாதார வகுப்பில் பிள்ளைகள் 5 வயது முடியத்தான் இருக்கவியலும்.

களை வளர்ப்பதாகும். இந்தப் பருவத்தில் குழந்தைக்குப் பாடங்கள் கற்பிப்பதோ, தொழில் கற்பிப்பதோ, முக்கிய மன்று. தேசத்தில் உள்ள நாட்டுப்புறக் குழந்தைகள் பெரும்பான்மையும் ஏழைப் பிள்ளைகள் ஆனமையினாலும், சிறந்த சமூகப் பயிற்சி அவர்களுக்கு இன்று இன்மையாலும், சமூகப் பயிற்சிதான் அவர்களுக்கு அவசியமான கல்வியாகும்.

ஆதாரக் கல்வி என்பது ஐந்து வயதில் தொடங்கி 14* வயதில் நிறைவு பெற வேண்டிய பூர்த்தியான கல்வியாகும். இந்த எட்டு வருஷ காலமென்பது பிள்ளைகளின் திறமையை ஒட்டிச் சற்று முன்பின் ஆகலாம். ஒவ்வொரு வருஷமும் அதற்கென்று குறித்த பாடம் முழுமையும் கற்பித்தாக வேண்டும் என்ற நியதி இல்லை. பையனுடைய ஒருமித்த வளர்ச்சியும் திறமையும், குறித்த ஒரு நிலைக்கு வந்திருக்கின்றனவா என்பதே முடிவு செய்யவேண்டியது.

உயர் ஆதாரக்கல்வி என்பது 14 வயதில் ஆதாரக் கல்வி முழுமையும் படித்துமுடித்த பையன் அதன்பின்னர் பயிலத் தக்க கல்வியாகும். இன்றைய சர்வகலாசாலைப் படிப்புக்கு இது சமம் என்றாலும் பொருந்தும். அவனுடைய விசேஷ கல்வித் திறமையையும் ஆர்வத்தையும் பொறுத்து இது வெவ்வேறு துறையாக இருக்கும்.

வயது வந்தோர் கல்வி என்பது இந்த நாட்டுப் பொது மக்கள் அனைவருக்கும் ஏற்ற கல்வியைப் புகட்டும் வேலையாகும். எழுத்துப் படிப்பில்லாத பாமர மக்கள் மிகுந்த இந்த நாட்டில், வயதுவந்தோர் கல்வி, குழந்தைகளுக்குரிய எட்டு வருஷக் கட்டாயக் கல்வியைவிட மிகவும் பெரிய வேலையாகும். ஆனால், இத்துறையில் கல்வி என்ற மாத்திரத்தில் எழுதப் படிக்கக் கற்பிப்பதுதான் என்று எண்ணுவது பொருந்தாது. வாழக் கற்பிப்பதே இந்தக் கல்வி.

சர்வகலாசாலைக் கல்வி : பின்னர் காண்க.

---

*புதிய திட்டங்களின்படி இவ் வயது எல்லை குறையும்.

33. பாலர் கல்வி

போதுக் குறிப்பு : பூர்வாதாரக் கல்வி என்றும் இதைச் சொல்வதுண்டு. ஆதாரக் கல்வியின் தொடக்க வயதாகிய ஆறுக்குக் குறைந்த வயதுடைய பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவதே இதன் பொருள். பாலர் என்றால் வயது 2½ முதல் 6 வரை இருக்கலாம். இவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் ஒருங்கே வளர்ச்சி ஏற்படும்படிச் செய்வதே நோக்கம். இளம்பருவத்தில் குழந்தையிடம் படிகிற பழக்க வழக்கங்களும் மனப்பான்மையும் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சியையும் போக்கையும் உருவாக்குவன ஆதலால், இப்பருவத்துப் பயிற்சி மிகவும் முக்கியமானது. நிர்மாணத் திட்டம் முழுமையும் பலன் அடைவது இப்பயிற்சியைப் பொறுத்தது. ஆதாரக்கல்வியின் பூரண வெற்றியும் பலனும், பாலர் கல்வியுடன் குழந்தையின் பயிற்சி தொடங்குவதாய் இருந்தால்தான் கிடைக்கும்.

பாலர் கல்வியும் வயது வந்தோர் கல்வியும் ஒன்றையொன்று சார்ந்தனவே. குழந்தையின் வீட்டு வாழ்க்கையே கல்வியில் முக்கிய அம்சமாதலால், குழந்தை வளர்ப்பு, பராமரிப்பு, கல்வி போதனை என்பவற்றில் பெற்றோரும் மற்றோரும் போதிய அறிவு பெறுதல், பாலர் கல்வி வயதுவந்தோர் கல்வி என்ற இரண்டு திறத்திலும் அவசியமாகும்.

ஆதாரக்கல்வி நடைபெறும் பாடசாலையுடன் கூடவே இப்பாலர் கல்வியும் நடைபெறலாம். திறந்த இடத்தில் பாடசாலை அமைய வேண்டும்; ஊரின் நடுவே பாடசாலை இருப்பது முக்கியம். பாடசாலையில் ஒரு வேளை உணவு அளிக்கும் முயற்சி வேண்டும்; பால் தருவது முக்கியம். ஏழைமை மிக்க நிலையில் நம் கிராமங்கள் இருப்பனவாதலால், பிள்ளைகளின் ஆரோக்கியத்தை ஒரு வைத்தியர் அவ்வப்போது கவனித்தல் அவசியம். பாடசாலையின் சமூகவேலை

அனைத்தையும் ஆசிரியரும் பிள்ளைகளுமே சேர்ந்து செய்து கொள்வார்கள்.

பொதுவாக எளிய கொட்டகைகளே போதும். மழைக் காலத்துக்கு மட்டும் சற்றே பாதுகாப்பு இருத்தல் நலம். வாழ்க்கை ஏறக்குறைய குடும்ப வாழ்க்கை போலிருத்தல் வேண்டும். ஓர் ஆசிரியர் பொறுப்பில் 20 அல்லது 30 குழந்தைகள் வரையில் இருக்கலாம். தகுதி வாய்ந்த கிரா மத்தார் அல்லது கிராமத் தொண்டர் தாமாக உதவி செய்ய முன்வந்தால், குழந்தைகளை நன்முறையில் பழக்க அவர் உதவியை ஏற்றுக்கொள்ளலாம்.

குழந்தைக் கல்விக்கேற்ற உபகரணங்கள் இடத்துக் கிடம் மாறுபடும்; சமூக நிலையைப் பொறுத்தும் மாறு படும். ஆங்காங்கு ஆசிரியர் தம் ஊரிலேயே இவற்றைச் செய்துகொள்ள முயல்வது நலம். கருவிகள் உண்மையான கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும்; பூரண அமைப்பு அவற்றில் வேண்டுவதில்லை. எளிமையாகவும் குழந்தையின் கற்பனைத் திறனை வளர்க்கத்தக்கபடியும் இருத்தல்வேண்டும்.

பாடங்கள் : 1. **உடல் வளர்ச்சி :** தகுந்த போஷணை, பால், தண்ணீர், சுத்தம் இவற்றைக் கவனித்தல்.

2. **வைத்திய வசதி :** சிகிச்சை, நோய் வராது காத்தல், சொறி சிரங்கு தீச்சுட்டது முதலான சாமானிய நோய் கள், மலேரியா, இன்புளூயென்சா, காலரா முதலான நோய்கள், உணவுச் சத்துக் குறைவால் வரும் நோய்கள் - இவற்றில் ஆசிரியருக்குப் பயிற்சி முக்கியம்.

3. **சுகாதாரம் :** உடல், உடை, படுக்கை, சுற்றுப்புறம், சாமான்கள், விளையாட்டு, சாப்பாடு—இவற்றில் தகுந்த துப்புரவுப் பயிற்சி.

4. **தன் முயற்சி :** பல் துலக்குதல், தலை வாருதல், துணி துவைத்தல், குளித்தல், ஆடை அணிதல், பாத்திரம் துலக் குதல் முதலியவற்றைத் தானே செய்துகொள்ளும் பழக்கம்.

5. சமூகப் பயிற்சி : உணவு, விளையாட்டு, நீராடுதல், பிள்ளைகளோடும் பெரியோர்களோடும் பழகுதல்.

6. உழைப்பு : குழந்தையின் வளர்ச்சிக்குத் துணை புரிவது, குழந்தை சந்தோஷமாய்ச் செய்யும் வேலை ; சமையல் துப்புரவு போன்ற வீட்டு வேலை, தோட்ட வேலை, நூற்றல், ஓலை முடைதல், தடுக்குப் பின்னுதல் முதலியன குறிப்பிடலாம்.

7. தாய்மொழி : தெளிவான உச்சரிப்பு, எண்ணத்தைத் தெளிவாக வெளியிடும் திறமை, சொல் வளப் பெருக்கம். இவற்றுக்குக் கருவி பாட்டு, கதை, நாடகம் ; எழுத்தும் படிப்பும் அவசியம் இல்லை.

8. கணக்கு : எண்ணறிவு, சாதாரணக் கூட்டல் கழித்தல் முதலியன, மனக்கணக்கு, பழக்கமான அளவைகள் - வட்டம் சதுரம் முதலிய வடிவங்கள் - இவற்றில் பயிற்சி வேண்டும். தனியான பாடம் இல்லை. தூரம் எடை பற்றிய சாமானிய உணர்ச்சி போதும்.

9. பொது அறிவு : சூழ்நிலையைக் கூர்ந்து நோக்கி அறிதல், சோதித்துக் காணல் ஆகிய பண்புகளை வளர்த்தல்.

10. சித்திரம் : மனம் போனபடி வரையலாம். ஞாபக சக்தியையும் கூர்ந்து நோக்கும் திறனையும் தூண்டி வளர்த்தல் நோக்கம்.

11. சங்கீதம் : பாடுவதில் இன்பத்தைப் பெருக்க வேண்டும். தாளக்கட்டு முக்கியம். தாளத்தோடு பொருந்திய கும்மி, கோலாட்டம், நடிப்பு, நடை முக்கியம்.

12. பிராணி வளர்ப்பு ; கிராமத்தில் பசு எருமை ஆடு கோழி முதலியவற்றை மேய்த்தும் பராமரித்தும் வருகிற பிள்ளைகளுக்கு, பாடசாலையில் நாய் பூனை முதலிய பிராணிகளை வைத்து வளர்ப்பது அவசியமில்லை.

13. விளையாட்டு : விளையாட்டும் வேலையும் ஒன்றாக இணைந்திருக்கும்.

14. ஆன்ம வளர்ச்சி : மரியாதை, அன்பு, பக்தி, ஒழுங்கு, ஒத்துழைப்பு ஆகிய பண்புகள் பாடசாலையில் வளர்ச்சி பெற்றால் போதும்.

விசேஷக் குறிப்பு : பொதுவாகப் பூர்வாதாரக் கல்வி என்கிற பாலர்கல்வியில் நாம் கொண்டிருக்கும் நோக்கம் குழந்தைகளின் கல்வித் தேர்ச்சியல்ல ; வாழ்க்கைக்கான நல்ல பயிற்சியின் அடிப்படையையே அவர்களிடம் உண்டு பண்ண நாம் முயல்கிறோம். படிப்பில்லாமல்வாழ்கிற பெரும் பான்மையான மக்கள் தொகுதியிலிருந்துவரும் இளங் குழந்தைகள் பின்னர் பாடசாலையில் சேர்ந்து கல்வி பயில் வதற்குரிய நல்ல பழக்க வழக்கங்களை இங்கு இவர்களிடம் உண்டுபண்ணுவதே நம் முயற்சி. பாடசாலையைச் சொந்த வீடுபோலப் பாவித்து, சந்தோஷமாய்ப் பாடசாலைக்குப் போய்வரும் உணர்ச்சி, பள்ளிக்கூடம் போவதையும் வரு வதையும் கஷ்டமாய்க்கருதாமல் விளையாட்டெனவே கருதி இன்பமடைந்து அதையே ஒரு கல்வியாய்க் கருதும் பழக்கம், துப்புரவாகவும் சுகாதாரமாகவும் வாழவும் எப் போதும் இருக்கவும் பழகுதல், பெரியோரிடம் மரியாதை யோடும் அச்சமில்லாமலும் பழகுதல், உடனொத்த பிள்ளை களிடம் அன்போடும் மரியாதையோடும் பழகுதல், கீழான சொற்களைப் பேசுவதை விட்டு,நல்ல அழகான சொற்களைப் பொருளுணர்ந்து திருத்தமாக உச்சரித்தும் பேசியும் பழகுதல், பள்ளிக்கூடத்தில் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ளுதல், பிறர் பொருளையும் சொத்தையும் மதித்து நடத்தல், உண்மையாகப் பேசுதல், நடத்தல், சொல்லுக்குக் கட்டுப்படுதல், செய்யும் செய்கைகளால் பூரணமாய்ப் புலனறிவை வளர்த்துக் கொள்ளுதல் - ஆகிய இவைகளே நாம் இங்கு நம் முன் வைத்துள்ள குறிக்கோள்.

நல்ல பழக்கம் என்பதற்குச் சில சாமானிய எடுத்துக் காட்டுக்கள் : நகம் கடிக்காமல், வாயில் விரல் வைக்காமல்

இருத்தல், எச்சில் பண்ணுமல் இருத்தல், வலக்கை நீட்டி வாங்குதல், கொடுத்தல் போன்றவை.

நீதி தருமத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூக அமைப்பைத் தயாரிப்பதே ஆதாரக் கல்விக்கான அடிப்படை. இவ்வடிப்படையை குழந்தைப் பருவத்தின் ஆரம்ப காலத்திலேயே போடவேண்டும். ஆராய்ந்து பார்த்தால், இதுவும் போதாது. படிப்பு வாசனையில்லாத முதியோர் கல்வியில் இது தொடங்க வேண்டும். முதியோர் கல்வி என்பது இங்கு பெற்ருேருக்கும் சமூகத்துக்கும் புதிய தத்துவங்களைப் பழக்குதல். இக்கல்வியானது, கருத்தரித்துள்ள தாய்க்கு வேண்டிய கவனிப்பில் பயிற்சி தருவதாகும். இங்கு தொடங்கி, குழந்தை பிறந்து சிசுப்பிராயமாகும்போது, பெற்ருேருக்குக் குழந்தைப் பராமரிப்பைப் பயிற்றுவதாயிருக்கும். தாயை விட்டுக் குழந்தை பிரியத்தக்க பருவம் வந்து பூர்வாதாரப் பாடசாலைக்கு நடந்து வரும் பருவம் அடைந்ததும், இப்பூர்வாதாரக் கல்வி பலமுகமாய் நடைபெற வேண்டும். அதாவது, வீட்டிலும் பொதுவாய் ஊரிலும் பாடசாலையிலும், குழந்தையையும் பெற்ருேரையும் சமூகத்தினரையும் பழக்குவதாக இது அமையும். பின் குழந்தை பெரியவனுகி ஆதாரப் பாடசாலைக்குச் செல்லும் வரையில் இது நடைபெறும்.

" இந்த ஆரம்பக் கல்வியில், சுகாதார வாழ்க்கை உணவுச் சத்து சாஸ்திரம், தன் முயற்சியோடு தன் வேலைகளைச் செய்து பெற்ருேருக்கு வீட்டில் உதவி செய்தல் ஆகியவை யாவும் அடங்கும் " என்று காந்தியடிகள் கூறினர்.

ஆதாரக் கல்வி முறைப்படி, எழு வயதுக் குட்பட்ட குழந்தைகளின் கல்விக்கான தத்துவமும் திட்டமும் இதுவே. இத்திட்டத்தின் பொருளாவது கிராம முழுமையும் இன்பம் நிறைந்த, ஆரோக்கியம் நிரம்பிய, துப்புரவு பொருந்திய சமூக வாழ்க்கைக்குப் பயிற்றுதல் ; பெற்ருேரைப் பிள்ளை

வளர்ப்புக் கலையில் பயிற்றுதல்; பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முன்னமே தொடங்கி ஏழு வயதுவரையில் பயிற்சி தருதல்.

நம் ஆதாரப் பாடசாலைகளில் இப்போது ஐந்துக்கு மேற்பட்ட வயதுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள முடியும். ஆகவே பூர்வாதார வகுப்பு என்பது ஐந்து வயது வரையில்.

34. ஆதாரக் கல்வி—பாடத் திட்டம்

போதுக் குறிப்பு: இக்கல்வி இந்த நாட்டில் வாழும் முப்பதுகோடி மக்களுக்கும், வாழ்க்கை வாழ்வதற்கு வாழ்வதன்மூலமே வழிகாட்டும் கல்வி என்று முன்னமே குறிப்பிட்டோம். ஏழு லட்சம் கிராமங்கள் கொண்ட இந்த நாட்டில் மக்களில் மிகப் பெரும்பகுதியினர் கிராமங்களில் வாழ்கிறார்கள். கிராமங்கள் எங்கும் மிகவும் சுகாதாரக் குறைவான நிலையில் உள்ளன. கிராமங்களை நாம் நெருங்குமுன் துர்நாற்றமும் அருவருப்பான காட்சிகளும் நம்மை எதிர் கொள்ளுகின்றன. கல்வியின் முதல்வேலை இந்தக் கிராம நிலையை மாற்றுவது. எனவே, ஆதாரக் கல்வி இந்த நிலையிலிருந்தே தொடங்குகிறது. ஆதாரப் பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களைப்பற்றிய பின்வரும் குறிப்புக்கள் இக்கருத்தை விளக்கும்.

காந்திய ஆதாரக்கல்வித் திட்டத்தில் ஆரம்ப வயது ஏழு என்று கணக்கிடப்பட்டது. சென்னை ராஜ்யத்தில் 5 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கிறோம். ஏழு வயதுப் பிள்ளை கற்கும் திறனும் ஐந்து வயது பிள்ளை கற்கும் திறனும் வெவ்வேறானவை. இது நினைவில் இருக்க வேண்டும்.

பள்ளியினுடைய முக்கிய கடமைகளில் ஒன்று, குழந்தையின் வாழ்க்கையில் அந்த அந்தப் பருவத்தில் எழும் பிரசினைகளைத் தீர்த்துக்கொள்ள அவனுக்கு வழி காட்டு

வது. ஆகவே பள்ளியில் இதற்கான அனுபவங்கள், கவனம், பழக்க வழக்கங்கள் பெற வாய்ப்பளிப்பது முக்கியம். சென்னை ராஜ்யத்தில் ஒரு ஆசிரியருக்கு 35 பிள்ளைகள் என்பது இப்போதைய திட்டம். ஆகவே ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிக் கவனம் மிக அவசியம். குழந்தையினுடைய தனிப் பண்புகளும், முழுத் திறன்களும்—அவனுடைய ஆளுமை—பூர்ணமாகப் பொலிவு பெறும்படி பயிற்றுவது சிறப்பாகும்.

குழந்தைகளின் முக்கிய சுபாவம் பின்பற்றுதல். உபாத்தியாயருடைய முக்கிய கவனம் இதிலிருக்க வேண்டும். தம் சொல்லைவிட தம் முன்மாதிரியே அவனைப் பழக்கும் என்பதை அவர் ஒவ்வொரு கணமும் உணர்ந்து நடக்கவேண்டும்.

பள்ளிவாழ்க்கையில் விளையாட்டு சிறப்பான அம்சம். வேறு வகையில் பழக்கமுடியாத அனேக பண்புகள் விளையாட்டால் வளர்ச்சிபெறும்.

1. துப்புரவு: தன் உடல் உடை சுற்றுப்புறம் தன் பொருள்கள் தன் வீடு மாட்டுக் கொட்டில் நீர்நிலை ஊர்ப் பொதுவிடங்கள் வகுப்பு முதலியன துப்புரவாக வைத்திருத்தல். குப்பை முதலியவற்றைப் போக்கி எருவாக்குதல். துப்புரவின் தத்துவம் : உடலைப்போல உள்ளமும் தூய்மையாக இருத்தல்.

கீழ் வகுப்புக்களில் துப்புரவுச் செயல்கள் முதன்மையானவை. இயன்றவரையில் கல்வி விளக்கம் உண்டு. மேல் வகுப்புக்களில் இயைபான கணிதம், விஞ்ஞானம், சமூகப் பாடம் முதலியன உண்டு. பள்ளியில் பயிலும் துப்புரவுக் கல்வி வீட்டிலும் தொடர்ந்து நடைபெற வேண்டும். ஆசிரியர், பெற்றோரிடத்துப் பழக்கம் கொள்ளுதல் மிகவும் அவசியம்.

2. தேகாரோக்கியம் : உடம்பின் நலத்துக்கும் உறுதிக்கும் வேண்டுவன யாவையென்று விஞ்ஞான ரீதியாய்

அறிந்து கடைப்பிடித்தல். அதேபோல, ஊரின் நலத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் ஏற்றன அறிந்து செய்தல். சாமானிய நோய்கள், தொத்துநோய், கொள்ளைநோய் முதலியவற்றுக்குச் சிகிச்சை செய்ய அறிதல். விபத்து நேர்ந்தால் உடன்உதவி செய்தல். சுகாதார வாழ்க்கை விதிகள், உடல்பற்றிய பூரண சாஸ்திர அறிவு, செயல் மூலம் வரவேண்டிய உணவு சாஸ்திர அறிவு.

சென்னை ராஜ்யத்தில் இன்று பள்ளி மத்திய உணவுத் திட்டம் பெரும்பாலான பள்ளிகளில் நடந்துவருகிறது. ஏழைப் பிள்ளைகளுக்கு வீட்டில் சமநிலை உணவு கிடைப்பது இல்லை. எனவே, மத்திய உணவுத் திட்டம் உணவைச் சமநிலை யாக்குவதற்குச் சிறந்த வாய்ப்புத் தருகிறது.

நோய், சிகிச்சை, தடுப்பு முறை என்பன பாடத்தில் முக்கியமான அம்சங்கள். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு சிறு மூலிகைத் தோட்டம் அமைப்பது சிறப்பானது. மணித்தக்காளி, கொடி வேலி, தழுதாழை, மருள், பெரியா னங்கை—போன்ற எளிய செடிகள் அங்குப் பயிரிடுவது நன்மை தரும்.

3. நூற்றல்: பருத்தி பயிரிடுவது முதல் துணி நெய்து முடிப்பது வரையில் செய்ய வேண்டிய எல்லா முறைகளையும் சாஸ்திரோக்தமாய்க் கற்றுத் திறமையாகச் செய்ய அறிதல், தொழில் பற்றிய கணக்கு. அவசியமானால் இத் தொழிலைச் செய்தே தன் ஜீவனத்தை நடத்திக் கொள்ளும் திறமை. தையல் தொழில், உடை தயாரித்தல், சாயம் போடுதல், அச்சுப்போடுதல், துணி வெளுத்தல்.

4. தோட்டவேலை: பயிர்த்தொழில், காய்கறி பயிரிடுதல் முதலான பிரிவுகள். நிலத்தின் தராதரம் அறிதல். தாவர சாஸ்திரம் அறிதல். தனக்கும் குடும்பத்துக்கும் வேண்டிய உணவுப் பொருள்களை விளைவிக்கத் திட்டமிட்டுச் செய்ய அறிதல். தோட்ட வேலையோடு இயைபுகொண்ட பிராணி சாஸ்திரம், ரசாயனம், பௌதிக சாஸ்திரம் முதலாயின.

தோட்டவேலை என்பதில் காய்கறி, புன்செய், தானியங்கள், சில எண்ணெய் வித்துக்கள், பருத்தி, விறகுக்கான பயிர்கள், சில நார் தரும் பயிர்கள், சில பூஞ்செடிகள், மூலிகைத் தோட்டம், மாட்டுத்தீவனப் பயிர் என்பன அடங்கும்.

5. தாய்மொழி : திருத்தமான தாய்மொழிப் பயிற்சியே மற்றெல்லாக் கல்விக்கும் அடிப்படை. திருத்தமாகவும் விளக்கமாகவும் பேசுவது, வாசிப்பது, எழுதுவது என்பவை இருந்தால்தான் மனம் தெளிவாகச் சிந்திக்கும். அன்றியும், சிறந்த மொழி அறிவு அமைந்திருந்தால்தான் நம் முன்னோர் நமக்கு வைத்துச் சென்ற அரும்பெரும் இலக்கியச் செல்வங்களை நாமும் பகிர்ந்துகொள்ள முடியும்; இது உத்தமமான சமூகப் பயிற்சிக்கு இடமாகி, நல்லொழுக்க உணர்ச்சியையும், தரும உணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் மனத்திற் புகட்டும் ; குழந்தையின் கலை உணர்ச்சி, இன்ப உணர்ச்சி என்பவை வெளிப்படுவதற்கும் இதுவே இடம். ஆகவே, பின்வரும் தகுதிகள் கல்வி பயின்ற பையனிடம் அமையத்தக்கன : தாராளமாய்த் தன் வாழ்க்கையைப் பற்றிய விஷயங்களை எடுத்துப் பேசி, உள்ளத்தில் தோன்றுபவற்றைப் பூரணமாக வெளியிடுதல், பொது விஷயங்களைப் பற்றித் தெரிந்த அளவு விளக்கமாய் எடுத்துச் சொல்லுதல், பத்திரிகைச் செய்திகளைப் புரிந்துகொண்டு உரத்து வாசித்தல், மனத்துக்குள் வாசித்தல், விவேகத்தோடு அவற்றை விவாதிக்க அறிதல், அகராதி முதலியவற்றை அறிவுடன் உபயோகிக்க அறிதல், வேகமாகவும் திருத்தமாகவும் எழுதுதல், அறிக்கை முதலியன திருத்தமாகவும் விரைவாகவும் எழுதுதல், சொந்தக் கடிதம் வியாபாரக் கடிதம் என்பன எழுதுதல், எளிய பாடல்களைப் படித்து இலக்கியச் சுவை அறிதல்.

6. ஹிந்தி : இந்தியப் பொதுமொழியை எல்லோரும் அறிதல் இன்றியமையாதது. இந்திய நாடு ஒன்று என்ற

ஒருமை உணர்ச்சி வரவும், இந்து முஸ்லிம் போன்ற பல வேற்றுமைகள் குறையவும், இம்மொழியறிவு பேருதவி யாய் இருக்கும். சுமாரான திறமையுடன் பேச அறிதல் அவசியம்.

7. சமையல்: பொறுப்புடன் சமையல் வேலைக்குத் திட்டமிட்டு, எளிமையான சத்துணவு சமையல் செய்ய அறிதல். தன் குடும்பத்துக்கு வேண்டிய வருஷத் திட்டம் போட அறிதல். உணவுப்பொருள் நிர்வாகம், கணக்கு, உணவுச் சத்துப்பற்றிய சாஸ்திர ரீதியான அறிவு.

8. கணிதம்: தொழிலிலும் வீட்டு வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் வரும் கணக்குகளையும், க்ஷேத்திர கணிதக் கணக்குகளையும், மாணவர் எளிதில் தீர்க்க அறிய வேண்டும். இப்பயிற்சி முழுமையும், நூற்றல், தோட்ட வேலை, சமையல், வருஷத் திட்டம், பள்ளிக்கூட வேலை என்பவற்றில் மாணவனுக்கு வரும் தினசரி அனுபவத்தி லிருந்து விளைவதாகும். அறிவு வளர்ச்சிக்குக் கணிதம் ஒரு முக்கிய கருவி. ஆகவே எல்லாப் பிள்ளைகளுக்கும் அதில் சிறந்த தேர்ச்சி வேண்டும்.

9. விஞ்ஞான அறிவு: பிரகிருதியை அறிவோடு ஆராய்ந்து உணர்தல், கூர்ந்து கவனிக்கும் திறனையும், தன் அனுபவத்தைச் சோதிக்கும் பழக்கத்தையும் வளர்த்தல், இயற்கை நிகழ்ச்சிகள், மனித வாழ்க்கைக்கு விஞ்ஞானம் உதவும் வகைகள் - ஆகியவற்றின் தத்துவங்களை அறிதல், உலகத்தில் விஞ்ஞானத்தை வளர்த்த பேராசிரியர்களின் வரலாற்றை உணர்தல் என்பவை இப்பாடத்தின் நோக்கங் கள். இயற்கை சாஸ்திரம்—பயிர்கள், பறவைகள், மிருகங் கள், பருவகாலங்கள், வானசாஸ்திரம், தாவர சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், மனித உடம்பு.

10. சமூக சாஸ்திரம்: மக்களினத்தின் வளர்ச்சியை யும் இந்திய நாட்டின் முன்னேற்றத்தையும் அறிதல், இயற் கைச் சூழ்நிலையையும் சமூகச் சூழ்நிலையையும் உணர்ந்து,

அவற்றை மேம்படச் செய்ய அறிதல், தாய்நாட்டுப் பற்று, சத்தியம், அன்பு, நீதி இவற்றை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவான சமுதாயந்தான் வேண்டுமென்று மனமார நம்புதல், பிரஜாதத்துவ அறிவு, பிறசமயங்களிடத்தில் பக்தி ஆகியவை இப் பயிற்சியின்மூலம் வரவேண்டும். சரித்திர பாடம், பூகோளம், ஆட்சிமுறை, நாட்டு நடப்பு, சமய வரலாறு என்பன சில பிரிவுகள். மக்கள் வாழும் இடமும் நிலையும், அதாவது மக்கள் எங்கு வாழ்கிருர்கள் என்பது பூகோளம். எப்படி வாழ்ந்தார்கள் என்பது சரித்திரம். இனி எப்படி வாழவேண்டும் என்பது ஆட்சிமுறை. சூழ்நிலையிலிருந்தே இக்கல்வி பிறக்கவேண்டும். சாதி மத பேதமோ உயர்வு தாழ்வோ அற்ற சமூகம் தான் வேண்டுமென்று மனமார விரும்புதல்.

11. கலைகள்: வர்ண பேதங்கள், உருவ பேதங்கள் ஆகியவற்றைக் கூர்ந்து அறிவதில் கண்ணுக்குப் பயிற்சி, உருவத்தை ஞாபகத்தில் நிறுத்துதல், சித்திரத்திலும் பிரகிருதியிலும் அழகைக் கண்டு ஆனந்தித்தல், சாமானிய வாழ்க்கையில் எளிதாக அலங்காரம் செய்ய அறிதல், பொருள்களுக்கு மாதிரிப் படம் வரைய அறிதல், உருவங்களைப் பார்த்து எழுதுதல், சொந்த மனோபாவத்தோடு எழுதுதல், வர்ண ஓவியப் பயிற்சி, படங்களை அளவுப்படி வரைதல், கேளிக்கை நாடகம் அபிநயம். தினசரி வாழ்க்கையில் கலை இன்றியமையாத அங்கமாக வேண்டும்.

12. உடற் பயிற்சி: சூரிய நமஸ்காரம், யோகாசனம், தண்டால், பஸ்கி, வரிசையாகத் தாளத்துக்கு ஏற்ப அடி வைத்துச் செல்லுதல், நீச்சல்.

13. சங்கீதம்: எல்லோரும் சேர்ந்து பாடுதல். பஜனை, தாளம் தவருது பாடுதல், சாமானிய ராக தாளங்கள் சிலவேனும் அறிதல், அருட் பாசுரங்கள், திருப்புகழ், தேசியப் பாடல்கள், நாட்டு வாழ்த்து, கொடி வணக்கப் பாடல்கள், விழாவுக்குரிய பாடல்கள், நாடோடிப் பாட்டு,

தொழிலுக்கேற்றவை, வழிநடைப் பாட்டுகள், சில கீர்த்தனங்கள், அகில இந்தியப் பாடல்கள் சில.

14. விளையாட்டு : யதேச்சையாக வரவேண்டியது ஆதலால், இது பாடத் திட்டத்துக்குப் புறம்பானது ; பல வகையான நாட்டுப்புற விளையாட்டுக்கள், குழாமாக ஆடும் ஆட்டங்கள், கேளிக்கைகள், சடுகுடு, பலவகைப் பந்தாட்டம், கும்மி, கோலாட்டம், குச்சியாட்டம், கரகம், கிளித்தட்டு போன்றன. உபகரணமில்லாத விளையாட்டுக்கள், கிராமத்தில் தயாரிக்கக் கூடிய உபகரணங்கள் கொண்ட விளையாட்டுக்கள். கிராமத்து உபகரணங்களே உபயோகிக்கத் தக்கவை ; பொருட் செலவு அற்பமா யிருக்க வேண்டும். பண்டைய தமிழ் நாட்டு விளையாட்டுக்களை ஆராய்ந்து அவற்றில் உடல் வலிமையையும் கூட்டுறவையும் வளர்க்க வல்லவற்றைப் பயிலுதல். உல்லாசப் பிரயாணம்.

35. உயர் ஆதாரக் கல்வி

இக்கல்வி மேலே கூறியபடி 15 வயது முதல் 18 வயது வரையில் 3 வருஷம் பயிலத் தக்கது என இப்போது வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படை முன்போல் உழைப்பின்மூலம் கல்வி என்பதேயாகும். முன்போலவே தனிப்பட்ட மனிதன் என்ற முறையிலும், சமூகத்தில் பையனும் ஓர் அங்கம் என்ற முறையிலும் மாணவனுக்கு எல்லாவித வளர்ச்சியும் வரச்செய்தல் இதன் நோக்கமாகும். இதற்கான பாடத்திட்டமென்பது அவரவருடைய மனப்போக்கையும், திறமையையும் ஒட்டிப் பலவிதமா யிருக்கலாம். அதற்கு ஏற்றபடி கல்வி நான்குவருஷமோ அதற்கு முன்பின்னாகவோ பயிற்றலாம். கல்விப் பயிற்சி தாய்மொழியில்தான். பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் எப்படியும் தங்கள் செலவைத் தங்கள் உழைப்பின்மூலம் சரிக்கட்டிக் கொள்ளவேண்டும். முன்னமே ஆதாரக் கல்வி பயின்றுவந்த பிள்ளைகள் ஆனமையால், திறமையாக

உழைக்கும் தன்மை அவர்களிடம் இருக்கும். எனவே, இப்போது முன்னிலும பெரியவர்களாய் அவர்கள் இருத்தலினால், உழைப்பின் மூலம் அதிக வருமானமும்பெறலாம். இந்த வருமானம் அவர்கள் உணவு முதலிய செலவுக்கும் சேர்த்து ஈடு செய்யவேண்டும்.

குடும்ப ஜீவனத்துக்கு வேண்டியவற்றைத் தேடுந் திறமை, உணவு, உடை, இருப்பிடம் இவற்றைத் தானே அமைத்துக் கொள்ளும் திறமை, ஆரோக்கியமான வாழ்க்கை நடத்தும் அறிவு, ஓய்வு நேரத்தை லாபகரமான முறையில் பயன்படுத்திக் கொள்ளப் போதுமான அறிவு, குழந்தை வளர்ப்பிலும் பராமரிப்பிலும் போதிய அறிவு—ஆகியவை இப் பயிற்சியின்மூலம் அமையவேண்டும்.

தேர்ந்தெடுத்த தொழிலைத் தன் ஜீவனத்தொழிலாக வைத்து, வாழ்வதற்குப் போதிய சாஸ்திரோக்தமான அறிவும் திறமையும் பெறுதல்; தொழில் பற்றிய புத்தகங்களைப் படித்து அறிவதற்கு வேண்டிய பூரணமான மொழி அறிவு, இத் தொழில்பற்றி விளக்கமாகத் தானே பேசவும், எழுதவும் திறமை பெறுதல்; நாட்டுப் பொது மொழியை நன்றாய்ப் பேசவும் எழுதவும் அறிதல்; உடல் நூல், சுகாதாரம், ஆரோக்கியம், உணவு சாஸ்திரம், சாமானிய நோய்களுக்குப் பாதுகாப்பு தடை முறை சிகிச்சை ஆகியவற்றை நன்றாக அறிந்திருத்தல்; பொதுவாக உலக முழுமையும், சிறப்பாக இந்தியாவிலும், ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதாரம், சமூகம், நாகரிகம்பற்றிய சிக்கல்களைத் தெளிவாக ஆராய்ந்துணர்தல்; இன்றைய வாழ்க்கைக்கு விஞ்ஞான சாஸ்திரம் என்ன உதவிசெய்யும் என்பதைச் செவ்வையாக அறிதல்—ஆகிய இந்தத் தன்மைகள் உயர் ஆதாரக் கல்வி பயின்ற மாணவனிடம் அமையவேண்டும்.

இந்தக் கல்வியில் மாணவர் தங்கள் மனப்போக்குக்கு ஒத்த விசேஷப் பாடங்களைப் பயின்று நிபுணர்கள் ஆக முடியும். தவிர, சிறப்பான விஞ்ஞான சாஸ்திரக் கல்வி,

TN3
108001

பிற தொழிற் கல்விகள், பிற மொழிக் கல்வி முதலியன இங்கு பயிலத் தக்கவை. உதாரணமாக சிறப்பான வைத்தியக் கல்வி, என்ஜினியரிங் தொழில் பற்றிய கல்வி, சிறப்பான ஆங்கிலக் கல்வி, வடமொழிக் கல்வி, ஆசிரியர் பயிற்சி முதலிய யாவும் இப்பிரிவினுள் அடங்கும்.

இதில் ஞாபகம் இருக்கவேண்டிய அம்சங்கள் சில :

1. பயில வரும் மாணவன் குறித்த துறையில் தனக்கு மேலான திறமையும், உண்மையான ஆர்வமும் இருத்தலினுல் இதைப் பயில வருகிருன். 14 வயதில் கல்விப்போதனை முடிந்துவிடாது. ஆதலால் மேலும் கல்விப் பயிற்சி வேண்டும். ஆர்வத்தை யொட்டியும், திறமையையொட்டியும் இது வெவ்வேறு விதமாயிருக்கும். நாடு இன்றுள்ள நிலைமையில், அரசாங்கமே இலவசக் கல்லூரிக் கல்விக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கூறவில்லை. 14 வயது வரையாவது கட்டாயக்கல்விப் பயிற்சிக்கான பொறுப்பை அரசாங்கம் இன்று ஏற்கவேண்டும். நாடு முழுமையும் இந்தக் கல்வி நடைபெற்று வருங்காலத்தில் பிந்திய கல்விக்கான திட்டம் தானே நடைமுறைக்கு வரும்.

2. உழைப்பின்மூலம் கல்வி என்ற நியதியை இங்கும் கடைப்பிடிக்கிறேம். அதாவது, இந்தக் கல்வி பயிலும் கால முழுமையும், பிள்ளைகள் தங்கள் உழைப்பின் மூலம், தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தாங்களே தேடிக்கொள்ளுகிருர்கள்.

3. இப்பருவத்தில் படிப்பவர்கள் ஒரு வகையில் கிராமத்தின் கிரமமான அங்கமாயுள்ளவர்கள். ஆகவே கிராம மக்கள் வாழ்க்கையில் பிரதானமாயுள்ள, தவிராத அம்சமாகிய உழைப்பு இவர்கள் வாழ்க்கையிலும் இருக்குமென்பது நியாயமே. உற்பத்தித் தொழில்கள் பலவாயிருக்கலாம். இவற்றுல் மாணுக்கர் சமூகம் பள்ளிச்செலவு மட்டுமன்றி, தன் செலவு முழுமையும் சரிக்கட்டுமென்று குறிப்பிட்டோம். முறையான பூரண அறிவும் பிள்ளைகள் இங்குப்

100801

பெறுவார்கள். இந்தப் பயிற்சியின் பயனாய்ப் பின்னர் குடும்ப வாழ்க்கையை ஏற்பதற்கான சிறந்த தகுதி இவர்களிடம் அமையும்.

4. 14 – 18 என்ற வயதில் பிள்ளைகள் தங்கள் எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தனைசெய்யும் உணர்ச்சியும், திட்டமிடும் உணர்ச்சியும் உண்டாகிறது. ஆகவே இப் பருவத்தில் விருப்பமான பாடங்களைத் தேர்ந்துகொள்ள வசதி இருப்பது நல்லது.

5. இப்பருவத்தில் படிப்பவர்கள் கிராம நல்வாழ்வுக்கான தொழில்களில் வல்லவர்களாதல் வேண்டும். கிராம ஆசிரியர், தேர்ந்த விவசாயி, வீடுகட்டும் என்ஜினியர், வைத்தியர் முதலிய தொழில்களுக்கான சிறப்பான தனித் தேர்ச்சிக்கு அடிப்படை இப்பருவக் கல்வியால் அமைதல் வேண்டும்.

உயர் ஆதாரப்பள்ளியில் கல்வி (உத்தர ஆதாரக்கல்வி) கிராமக் கைத்தொழில்களை அடிப்படையாகக்கொண்டு இயங்கவேண்டும். இதிலுள்ள பாடங்கள் யாவும், கலைத் திட்டங்கள் யாவும், கிராமக் கைத்தொழில்களிலிருந்தே விளைவனவா யிருக்கவேண்டும். உதாரணங்கள்: ஆசிரியர் பயிற்சி, விவசாயத் தேர்ச்சி, மாடுகளைப் பராமரிக்கும் கலை, கிராமத் தேவையின் பூர்த்திக்காகப் பருத்தி, தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், விறகு தரும் மரங்கள் இவைபோன்றவை பயிரிடுதல், கிராமத்துக்கான வீடுகள் பாலங்கள், மதகுகள், நீர்த்தாரைகள், கலுங்குகள், சாலைகள், கோயில்கள் அமைக்கவல்ல என்ஜினியர் பயிற்சி, நோய்களின் சிகிச்சைக்கும், தடுப்புக்கும் ஏற்ற பயிற்சி— போன்றன.

இன்று நாட்டில்-இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும்-உயர் ஆதாரக்கல்வி நடைபெறும் பாடசாலைகள் எண்ணிக்கையில் மிகவும் குறைவு—தமிழ் நாட்டில் மூன்றே பாடசாலைகள். ஆதாரக்கல்வித் திட்டமே வளர்ந்தும் பெருகியும் கொண்டு

போகும்போது மேல்படிப்புக்கான உயர் ஆதாரப்பள்ளிகள் பெருகத்தான் வேண்டும். அவ்விதம் பெருகி வந்தபின், இக்கல்வியின் போக்கும், திட்டமும் நடப்பும், நோக்கமும், தேர்ச்சியும், திட்டவட்டமான உருவம் பெறும். அதுவரையில், இவை யாவும் மாறிக்கொண்டு வருதல் இயல்பே.

1956 டிசம்பரில் கல்லுப்பட்டியில் கூடிய உயர் ஆதாரக்கல்வி விவாத அரங்கில், தமிழ் நாட்டில் ஆதாரக் கல்வித்துறையில் சிறந்தவர்களான பிரதிநிதிகள் அனைவரும் கூடி, இக்கல்வி பற்றி முக்கியமான சில முடிவுகள் செய்தார்கள். அவை விரைவில் அமுலுக்கு வருமென்று எதிர்பார்ப்போம். அவை வரும்போது, உயர் ஆதாரக்கல்வி தனக்குரிய உயர்ந்த நிலையில் அமையும் என்பது நிச்சயம்.

36. சர்வகலாசாலைக் கல்வி

இந்த நிலைக்கு ஆதாரக்கல்விமுறை இன்னும் வளர்ந்து வரவில்லையாதலால் இதுபற்றிய விரிவான திட்டமில்லை. இது மிகவும் சிந்தித்துத் திட்டமிடவேண்டிய பகுதி. சர்வகலாசாலையில் சிறப்பியல்பு, தனித்த அறிவுத் தேட்டமும், ஒப்பற்ற பாண்டித்தியமும். இவ்விரண்டையும் குறைக்காமலே, சர்வகலாசாலைத் திட்டத்தில் நிறைந்த உடலுழைப்பையும் ஊடுருவிச் செல்லும்படி செய்யத்தக்க புதுத் திட்டம் இனித்தான் வரவேண்டும்.

தமிழ் நாட்டில் இரண்டிடங்களில் இன்று மேல் படிப்புக்கான கிராம சர்வகலாசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவை இரண்டும், இந்திய அரசாங்க உதவியில் நடைபெறுவன. இவை பூரணமாய் ஆதாரக்கல்வி முறையில் நடை பெறவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கவில்லை. எனவே, உயர் ஆதாரக் கல்விக்கு அடுத்த நிலையைக் காட்டுகின்றன என்று கருதுவதற்கில்லை. காலக்கிரமத்தில் உயர் ஆதாரப் பள்ளிகளே இன்றுள்ள உயர்நிலைப் பள்ளிக்குப் பதிலாக அமைக்கவேண்டிய மேல்படிப்பு என்ற நிலைமை

அமுலுக்கு வரும்போது அதற்கு மேல்படிப்பாகிய சர்வ கலாசாலைக்கல்வியும் திட்டமான உருவம் பெறும்.

நாட்டிங்காம் சர்வகலாசாலைத் தலைவரான லார்ட் டிரெண்ட் என்பவர் கூறிய கருத்துக்கள் இங்கு அறியத் தக்கன :

"ஒரு சர்வகலாசாலையினுடைய வேலை கைத்தொழி லுக்கு வேண்டிய தொழில் நிபுணர்களைத் தயாரிப்பதல்ல. அது உண்மையான கற்றலுக்கு இருப்பிடமாயிருந்து, திட்டமாய்ச் சிந்திக்கும் பழக்கத்தை உதிப்பிக்கவேண்டும். கைத்தொழிற்சாலைகளில் இன்று உள்ள முக்கியமான அம்சம், மனித அம்சம். ஒருவன் கைத்தொழில் நிலையத்தில் மேலே போகப்போக, அவனது தொழில் போக்கியதாம் சங்கள் பிரதானமாக ஆவதில்லை. ஆனல் மனிதப் பண்புக ளான நடத்தை, தைரியம், மனேபாவம் போன்றனவே மதிப்புடையனவாக ஆகின்றன."

37. வயதுவந்தோர் கல்வி

முதலாவதாக இங்கு வயதுவந்தோர் கல்வி என்பது வெறும் ஏட்டுப் படிப்பல்ல என்பதை எப்போதும் கவனத் தில் இருத்துதல் வேண்டும். வயதுவந்தோர் வாழ்க்கையைத் திருப்தியும் இன்பமும் பொருந்தி,அறிவு நிரம்பச் செய்வதே நமது நோக்கம். வயது வந்தோருக்குக் கல்வியில் ஆர்வம் உண்டாகவேண்டும். அவர்கள் வாழ்க்கையில் தனியாகவும் கூட்டாகவும், தொழில், கிராமச் சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிய வேலை, குழந்தை வளர்ப்பு, எழுத்துப் படிப்பு என் பவற்றில் அவர்களைப் பயிற்ற வேண்டும். இந்தப் பயிற் சிக்கு உரிய பாடங்கள் முக்கியமாகப் பின்வரும் ஏழு என்று சொல்லலாம்.

1. தொழில் : ஜீவனத்தொழில். நாடு முழுமையும் பரவ வேண்டிய கல்வியில் ஜீவனத்தொழில் என்பது பொதுவாகப் பயிர்த்தொழிலாகத்தான் இருக்கும். பயிர்த்

தொழில்பற்றிய பயிற்சி அவர்களுக்கு வாழ்க்கையில் பூரண மாய் இருக்கிறது. ஆயினும், இத்துறையில் அவர்களுடைய அறிவை வளர்ப்பதற்கு இன்னும் இடமிருக்கிறது. தம் சொந்த வாழ்விலும், கிராமப் பொது வாழ்விலும், தொழிலின்மூலம் வரும் வருவாயை இன்னும் பெருக்கிக் கொள்ள இக்கல்வி உதவி செய்யவேண்டும்.

2. துணைத் தொழில் : பயிர்த்தொழிலில் ஈடுபட்ட மக்களுக்கு ஓய்வு நேரம் அதிகம். அந்நேரத்தை நூல் நூற்பது, நெய்வது போன்ற ஏதேனுமொரு துணைத்தொழிலில் செலவிடும்படி பழக்கவேண்டும். இங்கு வாழ்க்கைக்குத் தொழிலால் வரும் லாபத்தோடு கூட, அறிவு வளர்ச்சிக்கும் தொழில் இடமாயிருக்கும்.

3. சுகாதாரம், தேகாரோக்கியம் : கிராம வாழ்க்கையில் இவை இன்று இல்லை. ஆகவே, வயது வந்தோர் கல்வித் துறையில் இவற்றை எவ்வளவு வற்புறுத்திச் சொன்னாலும் மிகையாகாது. தங்கள் தங்கள் சமூகத்தையும், கிராமத்தையும், ஆரோக்கியமாக வைத்திருப்பதில் மக்களுக்குள்ள பொறுப்பை உணர்த்துவதே கல்வி.

4. குழந்தை வளர்ப்பு : அறிவோடு குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர் நம் நாட்டில் இல்லை. குழந்தை வளர்ப்புச் சம்பந்தமான எல்லாத் துறைகளிலும் - ஆரோக்கியம், நோய், உணவு, உடை, படிப்பு முதலியவற்றில் - பெற்றோருக்கு அறிவு வரச் செய்ய வேண்டும். பெற்றோரிடமுள்ள தீய பழக்கங்கள் குழந்தையிடம் படிகின்றன. குழந்தையை ஹிம்சைசெய்து, கஷ்டப்படுத்தி வேலைவாங்குவது, குழந்தையின் உழைப்பால் பெற்றோர் உயிர்வாழ்வது முதலிய கேடான நிலைமைகள் கல்விப் பயிற்சியால் நீங்க வேண்டும்.

5. எழுத்துப் படிப்பு : திருத்தமான உச்சரிப்பு, பேச்சு, வாசிப்பு, பிறகு எழுத்து என்ற வரிசையில் நம் திட்டத்தை வகுத்துக் கொள்ளவேண்டும். படிப்பில் வயது வந்தோர்

ஆர்வத்தைப் பெருக்கினால் எழுத்துப் படிப்பு பெரிய காரியமில்லை. பத்திரிகை படித்தல், எளிய புத்தகங்களைப் படித்தல், திருத்தமாகவும் வேகமாகவும் எழுதுதல் முதலிய திறமைகள் இங்கு எளிதாக வரும்.

6. கிராம நாகரிகம்: கோயில் வழிபாடு, சமய விழாக்கள், அரசியல் சமூகக் கொண்டாட்டங்கள், கிராமத்தில் உள்ள புராதனக் கலைகளையும் கைவினைகளையும் போற்றிப் பாதுகாத்தல், புத்தகசாலையைப் பயன்படுத்திக் கொள்ளுதல், விளையாட்டு கேளிக்கை கூத்து முதலியவற்றிலுள்ள நல்ல அம்சங்களைப் போற்றுதல் ஆகியவை கல்வி வளரத் தக்க இடங்கள்.

7. கிராமச் சீர்திருத்தம்: போட்டி மனப்பான்மையின்றிக் கூட்டுறவு மனப்பான்மை பெற்று, நல்ல ஜனநாயக வாழ்க்கையை வயது வந்தோரிடையே ஏற்படுத்துதல். பெண்கள் முன்னேற்றம், குடி, சூது முதலிய தீமைகளை விலக்கல், கோர்ட்டு விவகாரங்களைக் குறைத்தல், கிராம வாழ்க்கையில் மக்கள் உரிமைகளை உணர்த்தல், பஞ்சாயத்து ஆட்சி முறை, அரசியல் சரித்திரம், உலக அரசியல் நிலை முதலியன உணர்த்தல். அரசியலில் கிராமத்தார் பொறுப்பு. இந்தப் பொறுப்பு உணர்ச்சியே எதிர்கால வாழ்க்கையில் அவர்களுக்கு நன்மை தரவல்லது.

பொதுவாக வயது வந்தோர் கல்வியானது, ஆதாரப் பாடசாலை நடைபெறும் இடத்தைச் சூழ்ந்த சமூகத்தில் நடைபெறுவது சிறப்பு. இங்கு, ஆசிரியர் முயற்சியோடு, பாடசாலைப் பிள்ளைகளின் முன் மாதிரியும், கல்விப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் பெருந்துணை செய்கிறது. பிள்ளைகளிடம் உண்டாகிற கல்வி விளக்கம், நிச்சயம் அப்பிள்ளைகளின் வீட்டு வாழ்க்கையைப் பாதிக்கும். பிள்ளையின் மூலம் வீட்டு வாழ்க்கை திருத்தமடைவதென்றால், பெற்றோர் உடன் பிறந்தார் முதலான உறவினர் அனைவர் வாழ்க்கையும் மாறுதலடையும். எல்லா வீட்டுப் பிள்ளைகளும் பாட

சாலையில் பயிலும்போது, எல்லா வீடுகளும் விளக்கம் பெறவே, ஊரே விளக்கம் பெறுகிறது. இந்த முறையில் ஆதாரப் பாடசாலையானது வயது வந்தோர் கல்வித்துறையில் பெருங் காரியகளைச் சாதிக்க முடியும்.

38. செயல் திட்டம்

ஆதாரப் பாடசாலையின் செயல் திட்டமானது பின்வரும் தலைப்புக்களில் அடங்கும் ; 1. ஆரோக்கிய வாழ்க்கைக்கான பயிற்சி, 2. தன்னம்பிக்கைக்கான பயிற்சி, 3. பயனுள்ள உற்பத்தித் தொழிற் பயிற்சி, 4. குடிமைப் பயிற்சி, 5. கலைப் பயிற்சி என்பன.

கலைந் திட்டமாகப் பின்வரும் ஏழு அம்சங்களைக் கொண்டிருக்கிறோம் : 1. ஆரோக்கிய வாழ்க்கை, 2. தன்னம்பிக்கையுள்ள வாழ்க்கை, 3. ஆதாரத் தொழில்மூலம் சுயதேவைப் பூர்த்தி, 4. சாமானிய விஞ்ஞானம், 5. குடிமைப் பயிற்சியும் சமூக சாஸ்திரமும், 6. எண்ணும் எழுத்தும், 7. கலையுணர்ச்சி.

39. சமய போதனை

ஆதாரக் கல்வித் திட்டத்தில் குறித்த ஒரு சமய வழிபாட்டையோ அதன் தத்துவங்களையோ மட்டும் போதித்தல் என்பதில்லை. நம் நாட்டில் எல்லாச் சமயத்தாரும் வாழ்கிறார்கள். இவர்களிடையே நடைபெறும் பாடசாலையில் ஒரு சமயத்தை மட்டும் போதித்தல் என்பது பொருந்தாது. சமய உண்மைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டுவதுதான் பிரதானம். எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையான பேருண்மைகள் சில உள்ளன. இறைவன் ஒருவன் இருக்கிறான். உலகத்தில் வாழும் எல்லா உயிர்களும் அவன் படைப்பு. ஆகவே, எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதே அந்த இறைவனுக்குச் செலுத்தும் உண்மையான வழிபாடு. அந்த இறைவன்

நீதிமயமானவன். ஆதலால் அவனிடத்தில் பக்திபூண்டவர் யாவரும் நீதியை அதாவது சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை நடத்தவேண்டும்.

எல்லாச் சமயங்களும் அடிப்படையில் ஒன்று. நம் சமயத்தில் நமக்கு எவ்வளவு பக்தியிருக்கிறதோ அதே பக்தியை மற்றச் சமயங்களிடமும் நாம் காட்டவேண்டும். இந்தப் பக்தி நிறைந்த வாழ்க்கை ஆசிரியருக்கு அமைய வேண்டும். இதன்மூலம் இதே மனேபாவம் பிள்ளைகளுக்கு ஏற்படும்.

பாடசாலையில் மாதந்தோறும் வருகிற பல்வேறு சமய விழாக்களைக் கொண்டாடுதல், கொண்டாடுமிடங்களுக்குச் செல்லுதல், பக்தர்களுடைய அருட்பாசுரங்களைப் பாடுதல், பயிலுதல், பக்தர்களின் திருநாளைக் கொண்டாடுதல், அவர்கள் வாழ்க்கைத் தத்துவங்களை ஆராய்தல், கடைப் பிடித்து வாழ முயலுதல் முதலியவற்றின் மூலமாய்ச் சமய உணர்ச்சி பெருகும். அவரவர் தனிப்பட்ட சமய வழிபாட்டை வைத்திருக்கலாம்; ஆனல் பாடசாலையில் எல் லாச் சமயங்களும் சமம்என்ற பாவமே நிலவ வேண்டும்.

ஆசிரியரும் மாணவரும், பாடசாலை வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும், சமூகமாகவும் குடும்பமாகவும் சேர்ந்து, பொதுப் பிரார்த்தனை செய்வதே நியதியாகக் கொள்ளவேண்டும்.

“சமயம் என்ருல் எனக்கு சத்தியமும் அஹிம்ஸையும் என்றே பொருள்படும். ஆதலால் இந்த உண்மைகளைக் கடைப்பிடிக்கச்செய்யும் முயற்சியெல்லாம் உண்மையான சமய போதனையேயாகும். இதற்குச் சிறந்த வழி ஆசிரி யர்கள் தாங்களே இவ்வுண்மைகளைத் தங்கள்வாழ்க்கையில் கடைப்பிடித்தல். தாங்கள் இவ்விதம் ஒழுகுவார்களானல் பிள்ளைகளுக்குப் பள்ளியிலும், விளையாட்டிடத்திலும், வெளியிலும் ஆசிரியர்மூலம் சிறந்த சமயபோதனை ஏற்படு கிறது.

"நான் உபதேசிப்பது எல்லாச் சமயங்களுக்கும் மேலான சமயம். அதுவே சமயவாழ்க்கை.

"சமய போதனைக்கான திட்டத்தில் பிறமத உண்மைகளை அறிவதும் அமையவேண்டும். பயபக்தியோடும் விரிந்த சகிப்புத்தன்மையோடும், பிற மதக் கோட்பாடுகளை உணர்ந்து போற்றுகிற பழக்கம் பிள்ளைகளுக்கு வரவேண்டும். இது வருமானால் தங்கள் சமயத்தினிடம் முன்னிலும் அதிகமான உறுதியும் பக்தியும் பிறக்கும். பிற மத நூல்களைப் படிக்கும்போது, அந்த மத பக்தர் எழுதியவற்றைப் படிக்கலாமே தவிர, விரோதி எழுதியவற்றைப் படித்தல் முறையாகாது. பிற மதங்களை ஒருவன் கற்பதனால் தன் மதத்தில் பக்தி குறைந்துபோகாது. மதக் கல்வி என்பது நாகரிகத்தை யொத்தது. தன் நாகரிகத்தை ஒருவன் காப்பாற்ற முற்படுவது, பிறர் நாகரிகத்தைக் கண்டனம் செய்வதன்று. மற்றப்படி பிற நாகரிகங்களில் உள்ள சிறப்புக்களைத் தானும் தழுவிக்கொள்வதாகும். சமய போதனையும் அதுபோன்றதே."—காந்தியடிகள்.

"உலகத்தில் எல்லாவற்றிலும் மேலானது பிரார்த்தனை. பிரார்த்தனையே நம்மைக் கடவுளருகே கொண்டு செல்கிறது. நான் செய்த வழிபாடெல்லாம், உறுதியற்றது, நிலையற்றது, தொடர்பற்றது; எனினும் அதுவே நான் செய்தவற்றுள் உயர்ந்தது. இதுவே எங்கும் பொருந்துகிற உண்மை; அனைத்தையும் தழுவவல்ல உண்மையில்தானே ஆறுதல் பிறக்க முடியும்?"—ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங்.

40. சித்திரப் பாடம்

பேச்சும் எழுத்தும்போல இங்கு, சித்திர பாடமும் உள்ளத்துணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கான ஒரு கருவி. பயன், கலை என்ற இருவகை லாபமும் இதில் உள்ளன. தன் மனத்தில் உள்ளதை வெளிப்படுத்த ஒவ்வொரு பிள்ளைக்

கும் துடிப்பு உண்டு. அவர்கள் முறையான பயிற்சிபெறும் போது காலக்கிரமத்தில், உருவ அமைப்பு அளவு ஒற்றுமை ஆகிய அறிவெல்லாம் அவர்கள் பெறுகிறார்கள். கொஞ்சம் திறமை பெற்றுவிட்டவர்களுக்கு, சித்திரம் என்பது இன்பம் தரும் ஒரு கலையாக வாழ்க்கை முழுமையும் ஆகி விடுகிறது. வகுப்பில், மற்றெல்லாப் பாடங்களுக்கும் சித்திர பாடம் ஓர் அருந்துணையாகவும் இருக்கிறது. அழகாயும் விரைவாயும் கரும்பலகையில் வரையும் திறமை பெற்ற உபாத்தியாயர் பிள்ளைகள் கவனத்தைக் கவர வல்லவராக ஆகியிருப்பதைப் பார்க்கிறோம். இத்துறையில் தேர்ச்சி பெற்ற பிள்ளைக்கு, மற்றெல்லாப் பாடங்களும் கவர்ச்சியும் எளிமையும் உடையனவாகவே தோற்றும். பிற்கால வாழ்க்கையில், விஞ்ஞான ஆராய்ச்சி, சர்வகலாசாலை வேலை, என்ஜினியர் தொழில்—எதில்தான் சித்திரம் வரையும் தகுதி உதவி செய்யாது? இவற்றையெல்லாம் கவனிக்கும் போது குழந்தையின் ஆரம்பநிலைக் கல்வியில் சித்திரப் பாடத்துக்கு மிகவும் முக்கியமான இடம் உண்டு. இங்குக் காட்டியபடி இது உடனடியாகவும், பிற்பட்டும், காலரீதி யாகவும், பொருளாதார ரீதியாகவும் பயனுடையது. உற்பத்தித் தொழிலை அடிப்படையாகக் கொண்ட கல்வியில் இதற்கு இன்னும் முக்கிய பங்கு உண்டு. சித்திரம் தெரியாதவன், தச்சுத்தொழில், கருமான் தொழில் முதலியனவற்றில் எவ்விதம் நிபுணனாவான்? ஆதலால், பாடசாலையில் எது ஆதாரத் தொழிலாயினும், ஆரம்ப முதலே சித்திரப் பயிற்சி முக்கியமானது.

பயனுடைய சித்திரங்களும் கற்பனைச் சித்திரங்களும் ஆகிய இருவகையுமே வேண்டும்.

41. ஹிந்தி

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஹிந்திமொழிப் பயிற்சி எல்லோருக்கும் அவசியம். இதுவரையில் படித்த

மக்களுக்கு ஆங்கிலம் பொது மொழியா யிருந்தது. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியில் பணம் படைத்தோரும் உயர்ந்த வகுப்பாருமே ஆங்கில மொழியறிவு பெற்றவர்கள். சுதந்திர இந்தியாவில் அரசியல் சட்டத்தின்படி எல்லா மக்களும் கல்வியறிவு பெறவேண்டியவர்கள். ஹிந்தியும் நாட்டின் பொதுமொழி ஆகவேண்டியது. எல்லோரும் ஆங்கிலம் படிக்கப்போவதில்லை. ஆகவே, தாய்மொழிக்கு அடுத்து மற்றொரு மொழி பயில்வதென்றால் ஹிந்தி மொழியே பயில வேண்டி யிருக்கும். தாய்மொழிக்கு முதலிடம். அடுத்து வருவது ஹிந்தி; இது துணையான மொழியே யன்றி பிரதான இடம் இதற்கில்லை. இந்திய மக்களில் பெருந் தொகையினர் ஹிந்தி புரிந்துகொள்வார்கள். ஆதலால் சிறுபான்மையாக உள்ளவர்கள் இதைப் பயின்று கொள்வது பயனுடையது. சுமாரான பேச்சு பிரசாரங்களை நடத்திக் கொள்ளும் அளவுக்கு ஹிந்தி அறிந்தால் போதியதாயிருக்கும். ஒன்றிரண்டு தலைமுறைகளில் முயற்சி எடுத்து ஹிந்தி மொழியறிவு ஏற்படுத்திவிட்டால், பிறகு எல்லோருக்கும் பயிற்சி தானே ஏற்படும். பிரிட்டிஷ் ஆட்சியில் கூட, அயல்நாடுகள் சென்ற நம் ராணுவப்படையின் எல்லாப் பிரிவுகளிலும் ஹிந்தியே தேசப் பொது மொழியாக இருந்தது என்பதை இங்கு நினைவில் இருத்தவேண்டும்.

42. ஆங்கிலப் பாடம்

ஆதாரக் கல்வியில் ஆங்கிலத்துக்கு என்ன இடம் உண்டு என்பது அறியவேண்டிய ஒரு முக்கியமான அம்சம். முதல் முதலாக ஆதாரக் கல்வியைப் பற்றி மகாத்மா காந்தி சொன்னபோது, "ஆதாரக் கல்வியின் முழு வடிவமாவது, மெட்ரிகுலேஷன் தரமுள்ள அறிவு; இதில் ஆங்கிலம் நீக்கம், வாழ்க்கைக்கான தொழில் ஒன்று சேர்க்கை" என்று மொட்டையாகச் சொன்னார். ஆனால் அவரே இதை வெகு தூரம் மாற்றிக்கொண்டார். "ஆதாரக் கல்வி என்பது

வாழ்க்கைக்கான கல்வி, வாழ்க்கை மூலம் கல்வி " என்று முடிவில் சொன்னார்.

ஆனால் அவர் முதலில் சொன்ன கருத்திலிருந்து நாம் இப்போது வெகுதூரம் மாறிவிட்டோம். முதலாவது ஆதாரக் கல்வி மெட்ரிகுலேஷன் தரமேயல்ல. ஆதாரப் பள்ளியின் படிப்பு முடிவு பழைய உயர் ஆரம்பப் பள்ளியின் முடிவுக்கும், பழைய நடுத்தரப் பள்ளிப்படிப்பு முடிவுக்கும் சமம். இதில் ஆங்கிலம் பூரணமாக உண்டு. புதிய திட்டப்படி உள்ள எழு வகுப்புக் கல்விமுறையில் ஆங்கிலமானது ஐந்து, ஆறு, எழு வகுப்புக்களுக்குரியது. இந்த வகுப்புக்களுக்கான ஆங்கில போதனைத் திட்டம், கல்வி இலாகாவினரே விரிவாகத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் அரசாங்க உதவியோடு நடக்கின்றமையினால், அங்கு அவற்றில் அரசாங்கத் திட்டப்படி கட்டாயம் நடத்தியேயாகவேண்டும். அவர்கள் வழிகாட்டுகிறபடி நடத்துவது சுலபம். ஆகவே ஆசிரியர்கள் திறமையோடு ஆங்கில பாடத்தை நடத்தவே வேண்டும்.

காந்தியடிகள் ஆங்கிலம் வேண்டாம் என்று சொன்ன போது, பாடமெல்லாம் ஆங்கிலத்தின் மூலமாகவே நடைபெற்றுக்கொண்டிருந்தது. அது சுதந்திரம் பெறாத காலம். ஆனால் இன்று பள்ளிகளில் எல்லாப் பாடங்களும் தாய்மொழி மூலமே நடைபெறுகின்றன. ஆங்கில அறிவு பெறுவதற்காக மட்டுமே ஆங்கில பாடம் கற்பிக்கிறோம். எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆங்கில பாடம் வேண்டுமா என்பதை நாம் இங்கு முடிவு செய்யவேண்டியதில்லை. ஆனால் மேல்படிப்புக்குப் போகிறவர்கள் அனைவருக்கும் ஆங்கிலபாடம் பேருதவியாக இருக்குமாதலால் கீழ்வகுப்புக்களில் ஆங்கிலபாடம் இருப்பது மிகவும் பயன் உடையது. ஆதலால் ஆசிரியர்கள் இந்த நிலைமையை நன்கு மனத்தில் கொண்டு திறமையாக ஆங்கில அறிவு உண்டு பண்ணுவதில் ஈடுபடவேண்டும்.

செயல்கள் மூலமாகவும், இயற்கையில் நடைபெறுகின்ற சம்பவங்கள் மூலமாகவும் விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் மூலமாகவும், பத்திரிகைச் செய்தி வாயிலாகவும், பிள்ளைகளுக்கு எளிதில் ஆங்கிலபாடம் போதிக்க முடியும்.

43. உழைப்பின் உயர்வு

நம் நாட்டில்தான் பிறப்பை யொட்டிய சாதி வேற்றுமை உண்டு; உயர்ந்த சாதியில் பிறந்தவர் உடலை வருத்தி உழைக்கவேண்டியதில்லை; தாழ்ந்த சாதியில் பிறந்தவர் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும். இதன் விளைவாக, கஷ்டப்பட்டு உடலை வருத்தி உழைப்பது தாழ்வு, இது கௌரவம் அல்ல என்ற எண்ணம் சமூகத்தில் எல்லா வகுப்பாரிடையும் பெருகிவிட்டது. இவ்வெண்ணம் நெடுங்காலமாய் இருப்பது. இதன் பலன் சமூகத்தில் மிக்க விபரீதம். தச்சன் கொல்லன் கொத்தன் முதலியோர் உடல் வருந்தி உழைப்பவர்கள். அதிக ஊதியமும் சம்பாதிப்பார்கள். உபாத்தியாயரோ, கச்சேரிக் குமாஸ்தாவோ, சம்பளம் இன்னும் குறைவாய்ப் பெறுபவர். ஆனல் தச்சன் முதலியோர் சமூக அந்தஸ்தில் குறைவானவர்கள்! இந்த எண்ணத்தால் மேல்சாதியார் இந்த வேலை செய்ய முன்வருவதில்லை. இந்த வேலை செய்வோரும்கூட, தாங்கள் தாழ்வானவர்கள் என்றே தங்களை எண்ணியிருக்கிறார்கள்.

ஜனநாயக தத்துவத்துக்கு இது முரணனது. எல்லோரும் ஓர் குலம், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற லக்ஷ்யம் நம் கண்முன் இருக்கவேண்டியது. சாதி வர்க்க நிறபேதமற்ற சமூகம் நம்மிடையே உருவாகவேண்டும். உடலாலும் புத்தி கொண்டும் வேலைசெய்பவர் யாரும் சமூக நல்வாழ்வுக்கு இன்றியமையாதவர்களே. இருதரத்தாரும் சமமே. அவரவர் சேவை, சாதி அல்லது பிறப்பைப் பொறுத்ததல்ல. வேலை அல்லது ஆற்றலைப் பொறுத்தது.

உற்பத்தி பெருகவேண்டும். நாம் அனுபவிப்பதால் செல்வம் பெருகாது. உழைப்பால்தான் செல்வம் பெருகும். உற்பத்தியில் பங்கு கொள்ளாதவருக்கு இந்த ஏழை நாட்டில் இடமில்லை. சரசுவதி, படிப்புக்குத் தெய்வம் மட்டும் அல்ல; கைவருந்தி உழைப்பவருக்கும் தெய்வம். ஏட்டிலும் இருக்கிறாள், ஆயுதங்களிலும் (உழைப்புக்கான கருவிகளிலும்) இருக்கிறாள். சரசுவதி பூசையே ஆயுத பூசையும் அல்லவா ?

நம் சமூக வாழ்க்கையில் துப்புரவு குறைவு. இது நிறைவதெப்படி? எண்ணற்ற கட்டுவேலைகள் நாட்டில் நடைபெறுகின்றன. இவை நடப்பதெப்படி? எல்லோரும், வேலைசெய்வது - உடல்வருந்தி உழைப்பது உயர்வு என்ற எண்ணம் கொள்ளவேண்டும். உழைப்பை அரிய முறையில் ஆற்றவேண்டும். இதுவே ஆதாரக்கல்வி செய்ய முயல்வது. கல்விக்குக் கருவியே உழைப்பு. தங்கள் சொந்தக் கருத்தின்படி பிள்ளைகள் காரியம் செய்ய முன்வரும்போது, வெறும் எண்ணெழுத்தைவிட உடலுழைப்புக்கு உயர்ந்த ஸ்தானம் கிடைக்கும்.

தவிர யந்திர வேலைகளும், இன்று வளர்ந்தும் பெருகியும் வருகின்றன. நம் நாட்டில் எல்லாப்பிள்ளைகளும் பெண்களும் படித்தறிந்தபின், உட்கார்ந்தபடியே செய்யவல்ல உத்தியோகம் எல்லோருக்கும் கிடைக்கப்போவதில்லை. ஆனால் எல்லோரும் கைத்திறமை பெற்றிருந்தால், பிறவகை வேலைகள் ஏராளமாய் இருக்கும், தம் வாழ்வைத் தமக்கும் சமூகத்துக்கும் பயனுள்ளதாய்த் தாமே செய்துகொள்ள முடியும். ஓய்வு நேரத்தில் நம் இஷ்டம்போல் லாபகரமாய் வேலை செய்யவும் நாம் கற்போமானால், நாட்டின் நிலையும் எவ்வளவோ உயரும். இத்தகைய கைத்திறமையும், லாபமும் இன்பமும், இவற்றுடன்கூட, சிறந்த சமூகக் கூட்டுறவும், ஏற்படுத்துவதே ஆதாரக் கல்வியில் உடலுழைப்புக்கு முதலிடம் தந்திருப்பதன் பொருள்.

மூவகைப் பண்புகளின் ஒருமித்த வளர்ச்சி என்று குறிப்பிடுவது வெறும் வார்த்தையல்ல. தற்கால வாழ்க்கை மேலும் மேலும் சிக்கல் அடைந்துகொண்டு வருகிறது. மனத்தினுல் சிந்திக்கத் தெரிந்தால்மட்டும் போதாது. அனேக காரியங்களை அவனவன் தன் கையால் செய்து கொள்ளவும் நேர்கிறது. கைத்திறமை பெரிதும் தேவை. புதிய புதிய சந்தர்ப்பங்களில் புதிய புதிய விஷயங்களை அறியும் ஆற்றலும், அறிந்து சமாளிக்கும் ஆற்றலும் பெற வேண்டி யிருக்கிறது. மனவிழிப்பு தேவையாயிருக்கிறது. அறிவது மட்டுமல்ல, அறிந்ததைச் செய்யும் பழக்கமும் வேண்டியிருக்கிறது. ஆகவே, மனித சக்தியைப் பல துறைகளிலும் பயிற்றி வளர்த்துத்தருவது கல்வியில்மிகவும் முக்கியமானது, வாழ்க்கைக்கு அவசியமானது. தெரிந்ததைச் செய்ய முற்படுவதில், அதாவது கற்றபடி நிற்க முற்படுவதில், பிள்ளைகள் தாங்களே இன்பமும் காண்கிறுர்கள்.

44. உழைப்பின்மூலம் கட்டுப்பாடு

கட்டுப்பாடு எனினும் ஒழுங்குமுறை எனினும் இங்கு ஒன்றே. இன்று கல்விச் சாலைகளில் மாணுக்கரிடையே ஒழுங்குமுறை அறவே இல்லை என்று அனைவரும் கூறுகிறுர்கள். இதற்குப் பரிகாரம் ஏதேனும் காணமுடியுமா?—என்பது கேள்வி. ஒழுங்குமுறை என்பது பொதுவாக தன்னைச் சேர்ந்த சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள சில நியதிகளுக்கு உட்பட்டுத் தான் வாழுதல். தன் வாழ்க்கையால் பிறருக்குத் தீங்கு உண்டாகாது காத்தல். தேவையான போது சமூகம் ஒப்புக்கொண்டுள்ள தலைவருக்குத் தான் அடங்கி நடத்தல். இந்த ஒழுங்கு முறைக்கு விதியோ, சட்ட புத்தகமோ எதுவுமில்லை. வகுக்காத விதியும், எழுதாத சட்டமுமே இதை நிர்வாகம் செய்கின்றன. ஆதலால் தான் இதை அமுல் நடத்துவதும் கஷ்டமா யிருக்கிறது.

சுதந்திர உணர்ச்சி மிகுந்த இந்தக் காலத்தில் ஒழுங்கு முறையை வெளியார் நிலைநாட்ட முற்படும்போது, எதிர்ப்பு அதிகமாகிறது. நிலைநாட்டுவோரைக் கொடுங் கோலர் என்கிறார்கள். இந்த நிலைமைக்கெல்லாம் மாறு, புறக் கட்டுப்பாடு இல்லாமல், அகக் கட்டுப்பாடு தோன்ற வழி செய்வதுதான். அகக் கட்டுப்பாடு தோன்றுவதற்கு முதல்வழி, எல்லோருக்கும் பொறுப்புணர்ச்சியும் கடமை யுணர்ச்சியும், நல்லொழுக்கமும் அமைந்திருப்பது. ஆனால் துரதிருஷ்ட வசமாக, ஆசிரியர்கள், அதிகாரிகள் இவர் போன்ற அனேகரிடையே இவைபோன்ற நல்லியல்புகள் இன்று காணப்பெறுதல் குதிரைக் கொம்பு. ஆதலால் இவர்களைப் பார்த்துப் பிள்ளைகள் அகக் கட்டுப்பாடு கற்றுக் கொள்ளுதல் என்பது நடைபெறாது. இதற்கான ஒரு முக்கியமான வழியே உழைப்பின்மூலம் ஒழுங்குமுறை வருவிப்பது என்ற கொள்கை.

உழைப்பின் பயனாக, செய்தவேலை மேம்படவேண்டும், உற்பத்தி பெருகவேண்டும், லாபம் அதிகமாகவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமே. என்னென்ன பண்பு கள் அமைந்தால் உற்பத்தி பெருகும் என்பது ஆராய்தற் குரியது. பின்வரும் தன்மைகள் மிகவும் முக்கியமானவை: தன் வேலையைத் தானே திட்டமிட்டுச் செய்தல்; நேரத் தோடு ஆரம்பித்தல், நேரத்தோடு முடித்தல்; கருவிகளைத் திறமையாகச் சேகரித்தல்; நன்முறையில் வைத்திருத்தல்; பாதுகாப்பாக எடுத்துவைத்தல், கெடாது உபயோகித்தல்; குழுவிலுள்ள பலரும் பரஸ்பரம் ஒத்துழைத்தல்; ஒரு தலை வனுக்கு அடங்கி வேலைசெய்தல்; பிறர் குற்றம் பொறுத் தல்; பொறுப்புணர்ச்சியோடு தம் முழுத் திறமையையும் பயன்படுத்தித் தன் கடமையை முடித்தல்; கூடுமானவரை யில் அழகு பொருந்தவும், பிறர் தம் வேலையைப் பார்த்துப் பாராட்டத் தக்கதாகவும் வேலையை முடித்தல்; செய்கிற

வேலையை ஆர்வத்தோடு மட்டுமல்ல: ஆனந்தத்தோடும் செய்தல்.

இத்தகைய தன்மைகளிருந்தால், செய்கிற வேலை வெற்றிகரமாக முடிந்து, அதிகமான லாபத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை. இந்தப் பண்புகள் யாவும் அடிப்படையில் ஒன்றே. அதாவது, ஒழுங்குமுறை என்ற ஒரே நூலில் கோத்த பல இன மணிகள் என்று சுருக்கமாய்ச் சொல்லலாம். எனவே, பள்ளியில், செய்கிற வேலையில் பூரண வெற்றி காணவேண்டும் என்று மகிழ்ச்சியோடு திட்டமிடும்போது, இந்த இயல்புகள் தாமே வந்து பொருந்துகின்றன. இப்படிப் பொருந்தியதன் திரண்ட வடிவமே ஒழுங்குமுறை அல்லது அகக் கட்டுப்பாடு. ஆதலால் பள்ளிகளில் ஒழுங்குமுறையை வளர்ப்பதற்கான மிகச் சிறந்த சாதனம், பிள்ளைகள் தாங்கள் மனம்வைத்து உழைக்கும்படி பயிற்றுதல் என்பது தெளிவான உண்மை.

45. ஆதாரக் கல்வியில் ஒழுங்கும் கட்டுப்பாடும்

ஒழுங்கு முறையாவது, நன்னடத்தை என்பதைத் தக்கவாறு உணர்தல். விரும்பத்தகுந்த பழக்கங்களையும் மனப்பான்மைகளையும் வளர்த்துக்கொள்ளுதல், நியாயமும் அவசியமுமான ஒழுங்குகள் யாவையோ அவற்றுக்குத் தானுகப் பணிந்து நடத்தல் ஆகிய அம்சங்கள் அடங்கியது. இதில் பலர் ஒன்ருய்ச் சேர்ந்து வாழ்தலும், உழைத்தலும், சமூகத்தாருடைய நோக்கத்தை மேலாய்க் கருதித் தன்னேக்கத்தை மறுத்தலும் அடங்கும். இதனல் தனிப்பட்டவருக்கும் சமூகத்துக்கும் நன்மை. அன்றி, அவசியமானபோது தானுக மனம் ஒப்பி அடங்க நேருகிறது. ஜனநாயக சமூக வாழ்க்கையின் லக்ஷ்யங்களை நோக்கி ஒருவன் வளர்ந்து வரும்போது, அவனுக்குத் தன்மீது ஆட்சியும் இதனல் கைகூடுகிறது.

கட்டுப்பாடு என்பதற்குப் பரம்பரையாகக் கூறி வந்த கருத்துக்கு இது முற்றிலும் முரணனது. முன்னமே, வகுப்பில் அமைதி என்ருல், மாணுக்கன் உபாத்தியாயர் எது சொன்னலும் பயந்து அடங்கவேண்டு மென்பது பொருள். இன்றைய பொருள் அதுவன்று. ஒழுங்கு முறையின் நோக்கமானது இன்று, நற்பழக்கங்கள், சரியான மனப்பான்மைகள், பண்பு நிறைந்த ஆளுமை, நீதியான ஒழுக்கம்—இவற்றைவளர்த்தல் என்பதுபொருள். பழைய கட்டுப்பாடு புறத்திலிருந்து வந்தது. ஆதலால் அங்கு, சில சமயமல்ல, பல சமயம் அல்லது எப்போதுமே அதிகாரம் அல்லது பலாத்காரம் கட்டுப்பாட்டை நிறுவத் துணை புரிந்தது. ஆனல், இன்று அடக்கி ஆள்வதற்கு ஆதாரமாய் இருப்பது அகக் கட்டுப்பாடு: கூட்டுறவான கட்டுப்பாடு அனுபவங்கள், நீதி உணர்வு, ஜனநாயக ரீதியான நல்லெண்ணம் போன்றவை. இங்கு விளைகின்ற செயல் சுதந்திரம் அகக் கட்டுப்பாட்டைப் புதுப்பிக்கிறது.

சுதந்திரம், கட்டுப்பாடு என்ற இரு சொற்களில் ஒன்றுக்கொன்று முரண் என்று தோற்றும்; ஆனல் சுதந் திரம் இருந்தால் கட்டுப்பாடு எதேச்சையாகவும் நிலைத்த தாகவும் பூரணமாகிறது. கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சுதந்திரம்தான் தீங்கற்ற நன்மை தரவல்லது.

அன்றியும், ஒழுங்குமுறை பற்றிய புதிய கருத்துக் களின்படி, உழைப்பின் மூலம் வரும் கட்டுப்பாடுதான் உண்மையான கட்டுப்பாடு. ஏனெனில் மனேதத்துவ ரீதியாக ஆராய்ந்தால், பிள்ளைகள் அனுபவத்தின் மூலமே கல்வி பெறுகிருர்கள். பூரணமான வெற்றி பெறுவதற்கு அடிப்படையான அம்சங்கள், செயலில் ஆர்வம், கவலையின்மை, செய்கிற வேலையில் பெறுகிற மனநிறைவு ஆகியவை ஆகும். குழந்தைக்குப் புத்திசாலித் தனமாகத் தானே காரியங்களைத் தேர்ந்தெடுக்கவும் செய்யவும் செவ்வையாகச் செயல்புரியவும் சந்தர்ப்பங்கள் கிடைக்கக்

கிடைக்கத் தான் அவன் தன்னம்பிக்கை உடையவனுகவும் தன்னடக்கம் வாய்ந்தவனுகவும் திகழ்கிருன். சரியான செயல்களைச் சரியான விதத்தில் சரியான காலத்தில் செய்து செய்து பழகப் பழக, நன்னடத்தையும், தன்னடக்கமும் மேம்படுகின்றன. முன்னது இன்றிப் பின்னது இல்லை. ஆகவே, பிள்ளைகளுக்குக் கடினமான செயல்களைக் கொடுத்து அவற்றைச் செய்வதில் அவர்களுக்கு ஆர்வம் குன்றுமல் காத்து இடையூறுகளை வெல்லும் ஆற்றல் வரச் செய்யும்போதுதான், அவர்களுக்கு நன்முறையான கட்டுப்பாடு அமைகிறது. இந்தக்-கட்டுப்பாடு உடன்பாடான கட்டுப்பாடு. ஆசிரியனுக்குப் பயந்து வரும் கட்டுப்பாடு எதிர்மறையான கட்டுப்பாடு.

கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடப்பது மாத்திரம் கட்டுப்பாட்டுக்கு வெற்றியாகாது. கூட்டு வாழ்க்கைக்குத் தான் உதவுதல், தடைகளின் நியாயத்தை உணர்தல், நியாயத்துக்குக் கீழ்ப்படிதல் ஆகியவை உளநூல் ரீதியாகக் கட்டுப்பாட்டுக்கு முக்கியமானவை. சமூக தத்துவ ரீதியாகவும், உழைப்பின்மூலம் வரும் கட்டுப்பாடு மிகவும் சிறப்பானது. தன்னை மறந்து சமூகத்துக்குத் தான் அடங்குவது சிறப்பு. இங்கு யார் அடக்குகிருர் என்பது தெரியவில்லை. சமூகமே அடக்கலாம், அல்லது சமூகம் ஏற்றுள்ள வாழ்க்கை நியதிகளும் மேற்கொண்ட உழைப்பின் தேவைகளும் அடக்கத்தை அவசியமாக்கலாம்.

அன்றியும், இன்று கட்டுப்பாடு என்பது பள்ளியை மட்டும் பொறுத்த விஷயமல்ல. அடிப்படையான கல்வி நோக்கங்கள் கைகூடச் செய்வதற்கு இக்கட்டுப்பாடு ஒரு கருவி என்று நாம் கருதுகிருேம். இக்கட்டுப்பாடு செயலில் வெற்றி தருவது மட்டுமல்ல, கணக்கில் நிபுணனுக்குவது மட்டுமல்ல, அழகாக ஆங்கிலம் பேசச்செய்வது மட்டுமல்ல: செயலைக் கைவிட்டபின்னும், கணக்கை மறந்த பின்னும், ஆங்கிலத்தை அகன்ற பின்னும்கூட, குழந்தையின்

வாழ்க்கையில் அடிப்படையாக என்றும் நின்று நிலவவல்ல மனப்பான்மைகளையும், ஆளுமைப் பண்புகளையும் அமைத்துத் தருவது இக்கட்டுப்பாடு. உழைப்பின்மூல வரும் கட்டுப்பாடு இத்தனையும் தருகிறது.

ஆதாரக்கல்வியானது கட்டுப்பாடு பற்றி மனோதத்துவ ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேற்குறித்த அடிப்படைக் கருத்துக்களைக் கொண்டுள்ளது. இது அகக்கட்டுப்பாடு; குழந்தையின் சுதந்திரத்திற்கும் ஜனநாயக தத்துவத்துக்கும் பொருத்தமானது.

46. ஆதாரக் கல்வியில் பரிசும் தண்டனையும்

கல்வியில் தேர்ச்சி வரவேண்டுமென்பதற்காகப் பரிசு கொடுத்தல் என்ற பழக்கம் மிகவும் பழமையானது. பணமாகவும், பதக்கமாகவும், புத்தகங்களாகவும், பேனா பென்சில் போன்ற பொருளாகவும் பரிசுகள் வழங்கப்பெற்றுள்ளன. பாலர் வகுப்பு முதல் சர்வகலாசாலை வரை எங்கும் இவை வழங்குகின்றன.

ஆனால், புதுக் கல்வி முறைப்படி, பரிசு தருவது விரும்பத் தக்கதல்ல என்ற கருத்து வளர்ந்து வந்திருக்கிறது. படிக்கிறபடிப்பே, செய்கிறசெயலே, இன்பந்தந்து, தானே பரிசாகவேண்டும். புறத்திலிருந்து வரும் ஒரு பரிசுக்காக உழைப்பது, பூரணமான திருப்தி அளிப்பதன்று. புறப்பரிசு என்பது வேலையில் இன்பமில்லை என்று ஒப்புக் கொள்வதாகும்.

ஊக்கம் வேண்டுவது, திறமை குறைந்த பிள்ளைகளுக்கு. பரிசானது முதல் தரமாய் உள்ள பிள்ளைகளை மேலும் ஊக்கி விடுகிறது. நடுத்தரமான பிள்ளைகளுக்குப் பரிசு எவ்விதத் தூண்டுதலும் அளிப்பதில்லை. இது விரும்பத்தக்க நிலை அன்று.

நம்முடைய நோக்கம், மிக மிக அதிகமான பிள்ளைகளை ஊக்கமளித்து முன்னிலும் மிக அதிகமான வெற்றி பெறும்

படி செய்வது. இதன்பொருட்டுத் தனி ஒருவனுடைய சாதனைக்குப் பரிசு தருவதைவிட, பலர் ஒன்றாகச் சேர்ந்து ஒரு குழுவாக்கி அக்குழுவின் சாதனைக்குப் பரிசு தருவது, குழுவின் அங்கத்தினர் அனைவரின் ஆற்றலையும் மேம்படுத்து கிறது. ஆற்றல் மிகுந்த ஒருவன் தான் வெற்றி பெற எண்ணுவதோடு மட்டும் நில்லாமல், தன் குழுவினர் அனைவரின் ஆற்றலையும் உயர்த்துகிறான்.

அனேக பள்ளிகளில் சாதனைக்கு மட்டும் பரிசில்லை; தன் முயற்சி, சேவை முதலிய பலதிறப்பட்ட பண்புகளுக் குப் பரிசு அளிக்கிறார்கள். இதன் மூலம் அதிகமான பிள்ளைகள் பள்ளிப் படிப்பு அல்லாமல் மற்ற அம்சங்களி லும் பரிசு பெறுகிறார்கள்.

ஆதாரக் கல்வித் துறையில் பையனைப் பூரணமான பண்புகள் பெற்றுப் பூரணமான வாழ்க்கைத் தகுதிபெறச் செய்கிறோம். வாழ்க்கைத்தகுதி எல்லோருக்கும் வேண்டு வது. இதில் தோல்வி இருக்க முடியாது. ஆதலால் ஒருவனுக்குப் பரிசு என்பது விரும்பத்தகாத நிலை. ஒரு குழுவுக்குப் பரிசு என்று சொல்லும்போது இத்தீமை குறைகிறது. அதுமட்டுமன்று. இக்கல்வி முறையில் சிறுவன் தானே திட்டமிட்டுத் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து ஒரு காரியத்தை நிறைவேற்றுவதாக ஆசிரியர் அமைத்துக் கொள்வதால், ஒவ்வொரு சிறுவனும் தன் ஆற்றல் அனைத்தையும் வெளிப்படுத்தி முழு வெற்றி காண முயலுகிறான். இந்த நிலையில் வேலையே பரிசாகிறது. புறப்பரிசு என்பது இங்கு ஒரு பாராட்டுரையாகவும் ஒரு குழுவினத்தின் சாதனைக்கு அளிக்கின்ற கூட்டு நற்சான் றிதழ்களாகவுமே அமைகிறது.

பரிசு போலவே தண்டனையும். குற்றத்தின் காரணங் களைக் களைந்தால் தண்டனை அவசியமல்லாமற் போகிறது. தவறான நடத்தை என்பது ஒரு குற்றமல்ல. ஒரு நோயின் சின்னம் போல அது ஆராய்ந்து அகற்றுவதற்குரியது.

மனோதத்துவ ரீதியாகத் தண்டனைக்கு இரண்டு பொருள். ஒன்று பண்படுத்துவது ; இரண்டு காரிய சித்தி விதி என்ற கற்றல் விதியின் பிரயோகம்.

பண்படுத்துவது எளிதன்று. செய்த குற்றம் உடனே தெரிவதில்லை. வெளியான பிறகு தான் தண்டனை கொடுக்கிறோம். மற்றபடி உடனேயும் தண்டனை கொடுப்பதில்லை; பிற வேலைத் தொந்தரவுகளால் சாத்தியமுமில்லை. குறிப்பிட்ட ஒரு தவற்றைப் போக்கவே ஒரு தண்டனை அளிக்கிறோம். தவற்றுக்குப் பதிலாகச் சரியான குணங்கள் அல்லது வேறு நடத்தையை வளர்ப்பதற்கு முயற்சியில்லை. இனி குற்றம் செய்தால் எப்படியும் தண்டனை கிடைக்குமென்று உணர்த்துவதற்கே தண்டனை அளிக்கிறோம். ஆதலால், இது அச்சத்தை ஊட்டுமே தவிர, குற்றச் செயலைக் கைவிட்டு முறையான செயலை கைக்கொள்ளுமாறு சிறுவனை ஊக்கிவிடவில்லை.

பலன், தடை, திருத்தம் என்ற மூன்றில் எந்த நோக்கமாய் இருந்தாலும், ஆசிரியர் பயமுறுத்தல் என்ற நிலைக்கு இறங்கி விடக்கூடாது. குழந்தைகளுடைய நலன் ஒன்று தான் நம்முடைய நோக்கமாக இருக்கவேண்டும். சூழ்நிலைக்குத் தக்கவாறு தன்னைப் பொருத்திக் கொள்ளப் பையன் தவறும்போது மட்டுமே தண்டனை. அதுவும் பிறவகைத் தூண்டல்களுக்கு அவன் நேர்முகமாக இணங்கி வராதபோது தான் தண்டனை. சிறுவனுக்கு ஏற்றதாய் இருக்க வேண்டுமேயன்றி, கடுமையாய் இருத்தலாகாது. தண்டனை பெற்ற பையன் மனத்தில் கோபமோ, துவேஷமோ எதிர்ப்போ பிறத்தலாகாது.

பிரம்பால் அடித்தல் போன்ற தண்டனைகளைக் குறித்துத் திட்டமான விதிகள் இருக்கின்றன.

ஆதாரக்கல்வி முறையில் சமூகமே ஒரு ஜனநாயக வாழ்க்கை யானதால், பிறர் முன்னிலையில், தனக்கு தாழ்வு வரும் என்ற அச்சமே தவறு செய்யாமல் சிறுவனைக்

காக்கிறது. தன் தவறு தன் குழுவையே தாக்கிவிடும் என்ற அச்சம் பெரிது. தண்டனை என்பதிலுள்ள பயம் இங்கு நீக்கப்படுவதால் அவமானம் என்ற அச்சம்தான் மிஞ்சுகிறது. சிறுவன் பிறர் முன்னிலையில் தான் அவமான மடைய விரும்புவதில்லை. மேலும் தண்டனை கொடுப்பவர் இங்கு ஆசிரியரல்ல. மாணுக்கர் சமூகமே குற்றத்தை இங்கு எடுத்துக் காட்டுகிறது. ஆதலால், தனித்த ஒருவ ரிடம் அவன் வெறுப்புக் கொள்ள இடமில்லை. இந்த நிலையில் சிறுவன் பிறர் முன்னிலையில் தான் குற்றவாளி யாக ஆகாமல் காத்துக்கொள்ளவே முயலுகிறுன். செய்த குற்றத்தை மாணுக்கர் சமூகத்தில் ஒப்புக்கொள்ளுகிறதே அவனுக்குப் போதிய தண்டனையாகி, மேலும் அதை நிகழாமல் காக்கிற தடையாகவும் திருத்தமாகவும் ஆகிறது. இதுவே சிறந்த பலன்.

47. வயது 6—14

6 வயதில் கல்வி தொடங்குவது மிகவும் காலந் தாழ்த் தது என்று பலர் நினைக்கக் கூடும். இதற்கு முந்திய வய தில் குழந்தைகளுக்குத் தரவேண்டிய பயிற்சி முக்கிய மானது. இதுவே பாலர் (பூர்வாதாரக்) கல்வி; ஆனுல் இது கட்டாயக் கல்வி என்ற திட்டத்தில் வரவில்லை. (இன்று, ஜூலை மாதம் 31-வரையிலாவது 5 வயது பூர்த்தியானுல் முதல் வகுப்பு என்று சென்னை ராஜ்யத்தில் திட்டம் ஏற்பட் டிருக்கிறது.)

குழந்தை 14 வயதுவரை பாடசாலையில் பயில்வது முக்கியம். இப்பருவம் குழந்தைப் பருவமும், வாலிபப் பருவமும் அல்லாத இளம்பிள்ளைப் பருவம். மனேதத்துவ ரீதியாகப் பார்த்தால், சமூக வாழ்க்கைக்கும், ஜனநாயக வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைச் சிறுவன் இதற்கு முந்திய பருவத்தில் ஏற்கமுடியாது. பிரஜா தத்துவ உணர்வு இந்தப் பருவத்தில்தான் வரவியலும். இன்றுள்ள ஆரம்பப்

படிப்புப் படித்த பிள்ளைகள் பின்னர் அப் படிப்பையும் மறந்து எழுத்தறிவு அற்றவர்களாகி விடுகிருர்கள். ஆனல் 14 வயதுவரை கற்ற எழுத்துப் படிப்பைச் சிறுவன் பின்னர் மறந்து போகமாட்டான். மேலும், தான் பாடசாலையில் கற்ற ஆதாரத்தொழிலில் பூரணத் திறமைபெற்று, அவசியமானல் அதைக்கொண்டு பின் தன் வாழ்க்கை நடத்திக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படுவதானல், அதற்கு 14 வயதுவரை பயிற்சி இருப்பது இன்றியமையாதது.

ஆனல், 14 வயதோடு கல்வி முடிந்து போகவில்லை. 18 வயதுவரை கட்டாயக்கல்வி போதிப்பது என்ற கருத்து பிற நாடுகளில் நடைபெற்று வருகிறது. ஆதாரக் கல்வித் துறையிலும் இதை ஒப்புக்கொண்டே, உயர் ஆதாரக்கல்வி என்ற திட்டம் வகுத்திருக்கிருர்கள். 14 - 18 ஆகிய வயதுள்ள பருவமே சிறுபிள்ளையின் உடலிலும் உள்ளத்திலும் விசேஷ மாறுதல்கள் நிகழ்ந்து அவனுடைய எதிர்காலக் குணச் சிறப்பையும் தனியியல்பையும் திட்டமான உருவத்தில் அமைக்கிற பருவமாகும். ஆயினும், ஆதாரக் கல்வித் திட்டம் நாட்டின் இன்றைய பொதுவான நிலைமையை மனத்தில் வைத்து வகுக்கப் பெற்றதாகும். இந்த நிலைமைக்கு, இன்று 14 வயதுவரை கல்வி பயின்று முடித்தாலே பெரிய வெற்றியாகும். இந்த வெற்றி முழுமையும், ஏற்பட்ட பின்னர் ஒருவேளை, பிற்பட்ட சில வருஷகாலம் கட்டாயக் கல்விக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம். இக்கல்விக் குரிய திட்டத்தை உயர் ஆதாரக் கல்வியாகக் கருதியிருக்கிறோம்.

48. கல்வி பிறக்கும் சூழ்நிலைகள்

ஆதாரக் கல்வி என்பது தொழிற் கல்வி அல்ல. தொழிற் கல்வி என்று இதைச் சொல்வதும் முழுமையும் பொருந்தாது. ஏனெனில் இங்கு பிள்ளைகளுக்குத் தொழில் கற்பிக்கும்போது, பிள்ளைகளின் அறிவு விளக்கத்துக்கு

வேண்டிய எல்லாப் பாடங்களையும் போதிக்க எண்ணுகிறோம். இயல்பாகச் சிலவற்றைத்தான் தொழிலை ஆதாரமாக வைத்துப் போதிக்கமுடியும். தொழிலோடு பொருத்திக் கற்பிக்கத்தக்க பாடங்கள் போக, மற்றவற்றைக் குழந்தையினுடைய சூழ்நிலையிலிருந்து கற்பிக்கவேண்டும். சூழ்நிலை என்பது, குழந்தை வாழும் இடம், வீடு, ஊர், அயலார், உறவினர், இயற்கை, பருவ காலங்கள், பிராணிகள் முதலியவையாகும். இவ்விதம் கவனிக்கும்போது, கல்வி விளைவதற்கு அல்லது கற்பதற்குரிய இடங்கள் மூன்று எனச் சொல்லலாம். இவை, 1. தொழில், 2. இயற்கைச் சூழ்நிலை, 3. சமூகச் சூழ்நிலை என்பன.

தொழில் : நூற்றல் தொழிலோடு கூட, தாய்மொழி, விஞ்ஞான அறிவு, கணிதம், சமூக சாஸ்திரங்களான சரித்திரம் பூகோளம், சித்திரக்கலை முதலியன கற்பிக்க முடியும்.

"கைத்தொழில் முறைகள் முன் எக்காலத்தையும் விட இக்காலத்தில் பிரகிருதி சாஸ்திர உண்மைகளையும் விதிகளையும் சமூக சாஸ்திர உண்மைகளையும் விதிகளையும் பெரிதும் பொறுத்திருக்கின்றன. நம் ரயில்வே, நீராவிக் கப்பல், தொழிற்சாலை, விவசாயப் பண்ணை முதலியவைகளும், வீட்டில் சாமானியமாய் உபயோகமாகும் சாதனங்களும், இன்று இருந்து நடைபெறவேண்டுமானல், இதற்கு நுட்பமான கணக்கறிவும் பௌதிக அறிவும் இரசாயன அறிவும் உயிர்நூல் அறிவும் வேண்டியிருக்கின்றன. சமூக வாழ்வின் செய்திகளையும் தொடர்புகளையும் நன்ருய் அறிந்தால்தான், இவை தம்முடைய முடிவான சிறந்த பலனைத் தரமுடியும். உழைப்பாளிகளில்பெரும்பகுதியினர், கேவலம் தாங்கள் உபயோகிக்கும் கருவிகளின் பல்லுச் சக்கரமும் பல்லும்போல இருந்துவிடட்டும் என்று கருதினலொழிய, அவர்கள் தாங்கள் கையாளும் கருவிகளுக்குப் பின்னும் அவற்றுக்கு அப்பாலுமுள்ள பௌதிகச் செய்திகளையும்

சமூகச் செய்திகளையும் உணர்தல் வேண்டும். மரவேலை, உலோகவேலை, தையல், நெசவு, சமையல் முதலான வேலைகளை நாம் செய்யும்போது, தனியான பாடம் என்று இவற்றைக் கற்காமல், வாழ்க்கைக்கும் கல்விப் பயிற்சிக்குமான முறைகளென்றே செய்யவேண்டும். இந்த மாதிரியான வேலை முறைகளால்தான் சமூகம் இன்று நடந்து வருகிறது ; இவைகளே சமூகப் பொது வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளிற் சிலவற்றையேனும் குழந்தைக்கு உணர்த்துகின்றன ; அன்றியும் மனிதன் நாளுக்கு நாள் பெருகிவந்த தன்னுடைய புத்திக் கூர்மையாலும் நுண்ணறிவாலும் அத்தேவைகளை எந்தெந்த வழிகளில் பூர்த்திசெய்து கொண்டானே அந்த வழிகளே இவ்வேலைகள் ; இவ்வாறு இவ்வேலைகள் சமூகத்தில் என்ன பயன் தருகின்றனவோ அந்தப் பயன் உருவத்திலேயே இவற்றை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சுருங்கச் சொன்னல், அவன் கருவியாக இருந்து, பள்ளிக்கூடம் என்பது, பாடங்களைப் படிப்பதற்காக ஏற்பட்ட இடம் என்று மட்டும் கொள்ளாமல், ஜீவன் நிறைந்த சமூக வாழ்க்கையின் துறைகளில் ஒன்று என்று ஆக்கவேண்டும் ''—டியூயி.

இயற்கைச் சூழ்நிலை : இருவகைச் சூழ்நிலைகளும் கல்வியை வாழ்க்கையோடு தொடர்பு படுத்துவதற்குப் பெரிதும் உதவுவன. இவற்றுள் அடங்காத பாடம் எதுவும் இல்லை என்று கூறலாம். இயற்கைச் சூழ்நிலைமூலம், எளிதாகக் கற்பிக்கத்தக்க பாடங்கள் - துப்புரவு, தேகாரோக்கியம், தாய்மொழி, பூரண விஞ்ஞான அறிவு, சமூக சாஸ்திரங்களாகிய பூகோளம் ஆட்சி முறை சரித்திரம், சித்திரக்கலை, தாவர சாஸ்திரம், பிராணி நூல், வான சாஸ்திரம்.

இயற்கைச் சூழ்நிலை என்று நாம் குறிப்பிடுவதற்குச் சில உதாரணங்கள் : மலை, ஆறு, ஏரி, காடுபோன்ற நிலைமைகள் ; கிரகணம், வால் நட்சத்திரத் தோற்றம்,

விண்வீழ் கொள்ளிகள், அமாவாசை, பௌர்ணமி, ஆற்று வெள்ளம், புயல்காற்று, இடி, அடைமழை, வானவில், பூகம்பம் போன்றவை.

சமூகச் சூழ்நிலை : தன் வீட்டிலுள்ளோர், புதிதாக வீட்டுக்கோ பாடசாலைக்கோ வருபவர்கள், பிரயாணம், அயலூர்களில் நடக்கும் விழா முதலிய யாவும் இத் தலைப்பினுள் அடங்கும். துப்புரவு, தேகாரோக்கியம், பயிர்த் தொழில், விஞ்ஞான அறிவு, சமூக சாஸ்திரங்கள், தாய் மொழி, சித்திரக்கலை, இசை முதலான எல்லாப் பாடங்களையுமே, சமூகச் சூழ்நிலையோடு பொருத்திக் கற்பிக்கமுடியும்.

இயைபு முறை : பாடம் என்பது திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறதே என்பதற்காக மட்டும் கற்பிக்கவேண்டிய வறட்டுச் செய்தியாதல் கூடாது. குழந்தை சாமானியமாகப் பழகியதிலிருந்தே, குறித்த பாடம்பற்றிய நினைவு எழ வேண்டும். அந்த நினைவுக்கு வேண்டிய ஊட்டங் கொடுப்பது அல்லது அதைப் போஷிப்பதுதான் கல்வி. வாழ்க்கை என்பது இந்த மூன்றினுள் அடங்கிவிடுகிறது. ஆகவே, வாழ்க்கை வாழ்வதற்கான கல்வி இந்த மூன்றிலிருந்தும் தான் பிறக்க வேண்டுமென்று சொல்வது மிகையன்று. இந்த மூன்றில் அடங்காதது எது ? குறித்த ஒரு பாடமோ, குறித்த ஒரு செய்தியோ பாடப்பிரிவோ இந்த மூன்றிலிருந்தும் எழவில்லையென்றால், அதைக் கற்பிப்பதை நிறுத்திக்கொள்ளலாம். அன்றியும், புத்திக் கூர்மையோடு மனத்தினுள் ஆராய்ந்து கேள்வி கேட்கும் பழக்கத்தை ஆசிரியர் பிள்ளைகளிடம் வளர்ப்பாரானால், புதிதாக ஒவ்வொன்றையும் அறிவதில் அவாக்கொள்ளும் பிள்ளைகளுக்கு, எந்தச் செய்திகளையுமே வருவித்துக்கொள்ளலாம்.

நாட்டு நடப்பு : தவிர, உலக நடப்புப்பற்றிய அறிவு பிள்ளைகளுக்கு வரச்செய்வது மிகவும் அவசியம். பத்திரிகைச் செய்தி சொல்லுதல் அல்லது தயாரித்துப் படித்தல் மிகவும் பயனுடைய ஒரு திட்டம். வகுப்பின் அறிவுத்

தரத்துக்கு ஏற்றபடி, பத்திரிகைச் செய்தியைப் பெருக்கலாம் அல்லது சுருக்கலாம். செய்தியானது, அறிய வேண்டும் என்ற அவாவைத் தூண்டும். இதுவே கல்வி போதனைக்கான இடமாகவும் அமையும்.

49. கல்வியில் சுதந்திரம்

தன் முயற்சியால் பூரண வளர்ச்சி பெறுவதற்கான கல்வி என்று சொல்லும்போது, இங்கு பிள்ளைகள் ஆக்க வேலையில் ஈடுபடுவதால், தாங்களே சிந்திக்கவும், தங்களுக்குப் பிடித்ததைத் திட்டமிடவும், தங்கள் திறமை முழுமையும் காட்டிச் செய்யவும் காரணமான சுதந்திரம் இருக்க வேண்டும். ஞாபக சக்திக்கு மட்டும் முதன்மை தரும் கல்வியில் இச்சுதந்திரத்துக்கு வழியில்லை. ஏனெனில் அங்கு குறித்த காலத்துக்குள் குறித்த தகவல்களை மனத்தில் வைத்திருந்து ஒரு பரீட்சையில் காட்டுவது முக்கியமாக இருக்கிறது. ஆதாரப் பாடசாலையில் நாம் குழந்தைகளுக்கு உழைக்க முழுச் சந்தர்ப்பம் அளிக்கிறோம்; வேலை மூலம் அவன் கல்விபெறுவதோடு, அதில் இன்பமும் அடைகிறான். அவனுடைய தேவைகள் இங்கு நிறைவேறுகின்றன. பாடசாலை தனக்காகவே உள்ளது என்று அவன் உணர்கிறான்.

தன் இஷ்டம்போல் செய்வது சுதந்திரம் அல்ல. தன் பற்றுக்களும் தேவையும் என்பது ஒருபுறம்; சமூகத்தின் தேவை ஒருபுறம்; இரண்டையும் தழுவி எழுந்த வேலையை இஷ்டம்போல் செய்ய அவனுக்குச் சுதந்திரம் இருக்கிறது. இந்த வரையறைக்குள் அமைந்த சுதந்திரமானது தானாகவே ஒழுங்கு முறைக்கும் சுயக் கட்டுப்பாட்டுக்கும் வித்தாக அமைகிறது.

ஆசிரியருக்கும் இங்குச் சுதந்திரம் அதிகம். பாடத்திட்டம் இங்கு உயிர் உடையது, நெகிழ்ச்சி யுடையது, வளைந்து கொடுக்கக் கூடியது. பரீட்சைக்காகப் பாடப் புத்தகங்களை முடிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை.

தாமே சிந்தித்து, சோதித்துப் பார்க்க அவகாசம் உண்டு. அனுபவத்தையொட்டிப் பாடமுறையை, செயலை, மாற்றிக் கொள்ளலாம்; விடலாம், கூட்டலாம். திட்ட முழுமைக்கும் அவரே வழிகாட்டி; அவர் திட்டத்தை நிறைவேற்றும் கருவியல்ல: திட்டம் அமைத்து நடத்துபவர்; திட்டம் போடுபவர். இருவரும் இங்கு, வேலையும் தாமும் அபின்ன மாய்க் கலந்துவிடுகிறார்கள்.

இச்சுதந்திரத்தால் அவர் தம் பிள்ளைகளின் அறிவைத் தூண்டி அதிகமான வளர்ச்சி தரவேண்டியவர் என்பது வெளிப்படை. அவருக்குள்ள சுதந்திரமானது, பிள்ளைகளைத் தற்சார்புடைய வாழ்க்கையில் பயிற்றும். அவருக்கு அச்சமும் பிறர் சார்பும் இருந்தால், பிள்ளைகளும் அப்படியேதான் வளர்வார்கள். சுதந்திரம் ஒன்றுதான், தன்னம்பிக்கை, தற்சார்பு, தன்முயற்சி, ஆண்மை, அஞ்சாமை, ஒப்புரவு ஆகிய சிறந்த மனிதப் பண்புகளை வெளிப்படுத்தி மலர்விக்க வல்லது. சுதந்திரமாய்ப் பாடசாலை வேலைநடத்தும் ஆசிரியர் பிள்ளைகளிடம் சுதந்திரமான சிந்தனையை வளர்க்க வல்லவர். வேலையைச் செய்தல், திட்டமிடுதல், தொல்லையைச் சமாளித்தல், பொறுப்பேற்றல், முன்னேறுதல்— யாவும் சுதந்திர வேலையால் விளைவன. ஆகவே பகுத்தறிவு, ஜனநாயகப் பண்பு, விஞ்ஞான மனம்—இவை வளர இன்றியமையாத நிலையாகிய சுதந்திர நிலை இப்புதுமுறைக் கல்வியால் நிலவுகிறது.

50. பரீக்ஷை

நம் நாட்டில் இது வரையில் இருந்து வந்த பரீக்ஷை முறை கல்வி வளர்ச்சிக்கே பெருங் கேடானது. மாணவனுடைய தகுதியை அளப்பதற்குப் பரீக்ஷை தக்க கருவியன்று, அது பூர்த்தியானது மன்று. பரீக்ஷை மதிப்பு, குருட்டு மதிப்புத்தான். வருஷக் கடைசியில் கொஞ்ச நாள் ஓய்வு கொடுத்து, எல்லாவற்றையும் நெட்டுருப்

பண்ணச் செய்து, பின்னர் பரீக்ஷை என்று ஏதோ சில வற்றை எழுதிக் காட்டச் சொல்வது, படித்த மாணவனின் திறமையை அளக்கும் பரீக்ஷையே அன்று. அன்றியும், இப்போது பரீக்ஷகர் பரீக்ஷை நடத்தும் முறையானது, பையனின் அறியாமை எவ்வளவு என்று சோதிப்பதாயிருக் கிறதே ஒழிய, அவன் பெற்ற அறிவைச் சோதிப் பதாயில்லை.

கல்வி பயிலும் காலம் முழுமையும் மாணவனுடைய தகுதியை அவ்வப்போது திட்டமிட்டுக் கணித்தறிவதுதான் உண்மைப் பரீக்ஷை. நூற்றல் தொழில் கட்டாயமென்று நாம் பேசும்போது, குறித்த காலத்துக்கொரு முறை அத் தொழிலில் மாணவன் பெற்றுள்ள திறமையைக் கவனித் துக் கொண்டே வந்தால் இதுவே அவன் தகுதியை நிர்ணயிக்கிறது. வகுப்பில் பலமுறை தரத்தை அளக் கிருேம். வாழ்க்கையே கல்வி என்று நாம் சொல்லும் போது, வாழ்க்கையே பரீக்ஷையுமாகிறது.

இதனேடு கூட, கிராம சமூகத்தில் ஆசிரியரும் மாண வருமாகச் சேர்ந்து செய்திருக்கிற வேலை, அல்லது மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மேம்பாடு அல்லது மாறுதல், குறித்த பாடசாலையின் தகுதியை நிர்ணயிப்பதற்கான கருவியென்று சொல்லலாம். தனிப்பட்ட மாணவனுக்கு, குறித்த திறமை வரவேண்டுமென்று எதிர்பார்க்கிருேம். ஆகவே, இத்திறமை வந்தபோது, அவன் தகுதி பெற்றவ னுகிருன். வருகிற வரையில் அவன் அதே வகுப்பில் படிக்கிருன். தகுதியைத் தினசரி பார்ப்பதால், பொதுவாக வருஷக் கடைசியில் பரீக்ஷை தேவையில்லை.

கல்வி என்பது, மூவகைப் பண்புகளின் உண்மையான வளர்ச்சி என்பதை நாம் ஒப்புக் கொண்டால், மூன்று வகையில் ஒன்ருன மூளையின் திறமையை மட்டும், அன்றி அதில் ஒரு பகுதியாகிய ஞாபகசக்தியை மட்டும், கேள்வி கேட்பதன் மூலம் நிர்ணயித்தறியும் முறை

பரீக்ஷையே யாகாது என்பது புலப்படும். பிள்ளையினுடைய செயல் திறமையை இது பரீட்சிக்கவில்லை. ஒழுக்கத் திறமையை இது எண்ணிப் பார்க்கவே இல்லை. கேள்வி கேட்கிற அந்தச் சமயத்துக்குப் பையன் எதை ஞாபகம் வைத்திருந்து சொல்ல முடிகிறது என்பதை மட்டும் அப்பரீக்ஷை கவனிப்பதால், உண்மையான அறிவையும் கூட அது பரீட்சிக்கவில்லை.

பரீக்ஷை முறையினல், கல்வியில் குழந்தை பிரதானம் என்ற நினைவு இன்று மறைந்து, மார்க்கே பிரதானம் என்ற நினைவு நிலைகொண்டு விட்டது. நெட்டுருப் பண்ணி எழுதி மார்க்கு வாங்கும் பழக்கம் பெருகிவிட்ட நிலையில், கற்பித்ததைக் கேட்டால் பையன் சொல்லுவான்; கற்பியாததைக் கேட்டால் விழிப்பான். காரணம், நினைத்துப் பார்க்கும் பழக்கமில்லை. ஆனல் கல்வி மூலம் சுயபுத்தியும் சுயமுயற்சியும் வளரப்பெற்ற, பரீக்ஷைக்கென்றே தயாராகாத பையன், எதைக் கேட்டாலும் தானகச் சிந்தித்து விடைகூற முயல்வான். தெரியவில்லை என்று அஞ்சமாட்டான். கல்வியில் இத்தகைய முயற்சியே பெரிது. வழக்கமான பரீக்ஷை முறை இம்முயற்சிக்கு இடமளிக்கவில்லை.

எனவே, செய்யும் செயல் திறனும் ஒழுகும் நடைத் திறனும், அறிவின் திறனைப்போலவே பரீக்ஷைக்கான பிரிவுகள். இந்த நோக்கின்படி, வாழ்க்கையே பரீக்ஷையாகிறது. தனியான பரீக்ஷை பொருத்தமில்லை, சரியுமில்லை.

ஆதாரப்பாடசாலையில், பிள்ளைகள் தாங்கள் செய்கிற தொழில்பற்றித் தாங்களே குறிப்புப் பதிந்து வைக்கிருர்கள். இதனல் அவர்களுக்குத் திருத்தமான அறிவு எற்படுகிறது. மேலும் அவர்கள் பொருள் விளக்கப்படம் தயாரிக்கிருர்கள். பொருட்காட்சிக்கானவற்றையும் சித்தப்படுத்துகிருர்கள். இவை யாவும் ஓரளவுக்குப் பிள்ளையின் கல்வித்திறன் மேம்பட்டிருப்பதைக் காட்டவல்ல அளவுகோல்கள்

என்று கருத இடமுண்டு. பரீக்ஷை செய்வதை இவை செய்யக்கூடும்.

சிறு பையன் தான் செய்யும் வேலை பற்றிய எல்லாச் செய்திகளையும் கவனிப்பையும் முடிவையும் தானே எழுதி வைக்கிறான் என்பது மிகவும் புதிதான ஒரு கருத்து. கல்வி போதனாமுறைக்கே ஆதாரக் கல்வியால் விளைந்த பெரும் புரட்சி என்று இதைக் கருதலாம்.

51. சுயதேவைப் பூர்த்தி—செலவைச் சரிக்கட்டுதல் அல்லது பொருளாதாரக் கருத்து

சுயதேவைப் பூர்த்தியே ஆதாரக் கல்வியின் வெற்றிக்கு உரைகல் என்று காந்தியடிகள் பலமுறை கூறுவார். இதன் கருத்தாவது, கல்வியில் ஈடுபடும் பிள்ளைகள் உழைத்துப் பெறும் வருமானம் பள்ளியின் நடைமுறைச் செலவை யேனும் சரிக்கட்டவேண்டும் என்பது. நடைமுறைச் செல வென்றால் வகுப்பு ஆசிரியரின் சம்பளமும் தினசரிச் சில்லறைச் செலவுகளும் ஆகும். எந்தச் சூழ்நிலையில் காந்தி யடிகள் தம் புதுக்கல்வித் திட்டத்தை எடுத்துச் சொன்னார் என்பது இங்கு நினைவுகூரவேண்டும். கள்வருமானம் ஒழிந் தால், கல்வி போய்விடுமே என்ற கூக்குரலுக்கு எதிரொலி யாக முதலில் எழுந்தது இக்கருத்து. அதுபற்றியே சுய தேவைப் பூர்த்தி என்ற தத்துவம் பெரிதும் வலியுறுத்தப் பட்டது. எனினும், இந்தத் தத்துவம் அந்த நிலையையும் கடந்த ஆழமான கல்வித் தத்துவமாக உலகெங்கும் இன்று ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ளது.

ஏழை மக்கள் மிகுந்த நாட்டில் கல்வி கற்றவன், தான் சமூகத்துக்குப் பாரமாயிராமல், தன் தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்பவனாகவேண்டும். ஆதாரக் கல்வி இதற்குத் துணைசெய்யும் நோக்கமுடையது. பள்ளி வாழ்க்கை நிலையில் செலவைச் சரிக்கட்டுதல் எப்படி நிறை வேற இடமுண்டு என்பதைக் கவனிக்கலாம்.

ஆதாரக் கல்வித் துறையில் தொழில் மூலம் கல்வி என்று சொல்லும்போது, தொழிலால் வரும் வருமானத்தைத் திட்டமாய்க் கணக்கிட வேண்டும்.

முதலாவதாக, பாடசாலையில் பிள்ளைகள் உற்பத்தி செய்கிற பொருளின் விலைமதிப்பானது, குறைந்தபட்சம், உபயோகித்த மூலப் பொருள், பிள்ளைகளுடைய உழைப்புக்குரிய கூலி மதிப்பு—ஆகிய இரண்டுக்கும் சமமாய் இருக்க வேண்டும். அன்றியும், அந்தப் பொருள் எளிதாய் விற்பனையாகத் தக்கதாகவும் இருக்கவேண்டும்.

இரண்டாவதாக, வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்து உற்பத்தி செய்கிற பொருள்களால் மாதந்தோறும் அல்லது வருஷந்தோறும் பாடசாலைக்குக் கிடைக்கிற வருமானமானது, பாடசாலைக்கு ஆகும் மாதாந்த அல்லது வருஷாந்தச் செலவுக்கு ஈடு செய்யவேண்டும். பாடசாலையின் ஆரம்ப வகுப்புக்களில் அதாவது சுமார் 2 வகுப்புவரை, இது சாத்தியமாகாமற் போகலாம். ஆனல், பிற்பட்ட வகுப்புக்களையும் சேர்த்து எட்டு வகுப்பாகிய பூரண ஆதாரக் கல்வி என்று எடுத்துப் பார்க்கும்போது, வகுப்பின் தொழில் வருமானமானது, பள்ளிக்கூடத்தின் ஆசிரியர் சம்பளம் நடைமுறைச் செலவு என்ற இரண்டுக்கும் சரிக்கட்டவேண்டும். இது முடியும் என்று பின்வருமாறு உத்தேசமாய்க் கணக்கிட்டுக் காட்டலாம்.

நூற்றல்—நெசவு ஆதாரத் தொழிலாயுள்ள பாடசாலையில், இப்போது நம் ராஜ்யத்தில் அமுலிலுள்ள புது வீதப்படி ஓர் ஆசிரியருக்கு 35 பிள்ளைகள் இருக்கவேண்டும். இந்தப் பிள்ளைகள் வகுப்பில் பயிலும் தொழிலின் மூலம் வரும் வருமானம் இந்த ஆசிரியருடைய செலவுக்கும் சில்லறை நடைமுறைச் செலவுகளுக்கும் சமமாய் இருக்கவேண்டும் என்பது காந்தியடிகள் கருத்து, ஜாகிர் ஹுசேன் கமிட்டியாரின் திட்டம். பாடசாலையில் தினசரி குறைந்தபட்சம் 2½ மணிநேரம் தொழில்வகுப்பு நடக்கும்

என்று எதிர் பார்க்கலாம். நூற்றல் தொழிலில் இந்த $2\frac{1}{2}$ மணிநேரத்தில் பருத்தி அரைத்தல், பஞ்சு சுத்தம், பஞ்சு வெட்டிப் பட்டை போடுதல் ஆகிய வேலைகளுக்கு $1\frac{1}{4}$ மணிநேரம் ஒதுக்கிவிட்டு, $1\frac{1}{4}$ மணிநேரம் நூற்றலில் செலவிடுவதாக வைத்துக்கொள்ளலாம். சுமாரான திறமையோடு நூற்கவல்ல பையன் (வகுப்பு 4, 5) ராட்டையில் இந்த $1\frac{1}{4}$ மணிநேரத்தில் அரைச் சிட்டம் போடமுடியும். ஒரு மாதத்தில் 24 நாள் பாடசாலை நடக்குமென்று கொள்ளலாம். இதன்படி ஒரு மாதத்துக்கு ஒரு பையனுக்கு 12 சிட்டம் ஆகிறது. இன்று ஒரு சிட்டத்தின் கிரயம் நான்கு அணு. இந்தத்தொகையில் பருத்தியின் கிரயம் ஒன்றரை அணு நீங்கலாக, மிகுதி இரண்டரை அணு, பருத்தியை அரைத்தல் முதல் நூற்றல் முடியவுள்ள மாணவன் தொழிலுக்கு ஒரு சிட்டத்தில் கிடைக்கும் கூலி ஆகிறது. ஆகவே, 12 சிட்டத்துக்கும் ஒரு மாணவன் பெறும் கூலி ரூ. 1-14-0. 35 பிள்ளைகளுக்கும் சேர்ந்து கிடைக்கக்கூடிய கூலி மாதம் 65-10-0.

ஆதாரப் பாடசாலையில் நூற்றல் - நெசவுத் தொழிலோடுகூட, பயிர்த்தொழிலும் துணைத்தொழிலாக நடைபெறும்; பயிர்த்தொழிலானது தினம் ஒருமணி நேரம் நடைபெற வேண்டும். இதன்மூலம் மாதந்தோறும் குறைந்த பட்சம் ரூ 7-8-0 வரும்படி கிடைக்கலாம். ஆக, இரண்டும் சேர்ந்து, 35 பிள்ளைகள் கொண்ட ஒரு வகுப்பின் உழைப்பால் வரும் வருவாய் ரூ. 73-2-0. பாடசாலை வருஷத்தில் 11 மாதந்தான் வேலை செய்யுமாதலால், இந்த வீதப்படி 11 மாதத்தில் கிடைக்கும் வருவாயை 12 மாதத்துக்கும் சராசரியாக வீதமிட்டுப் பார்த்தால், மாதம் ரூ.67-0-6. ஆகிறது.

இந்தப் புள்ளி விவரம் பாடசாலையின் தொழில் வருமானத்தின் மூலம் செலவைச் சரிக்கட்டுவது எப்படி என்பதற்கு வழி காட்டும். இந்த விவரங்களில் சிற்சில மாறுதல்கள் இருக்கலாம். உதாரணமாக, 24 நாள் 25 ஆகவோ 20 ஆகவோ மாறலாம். 35 பிள்ளைகள் 30 அல்லது 25 ஆக மாற

லாம். $2\frac{1}{2}$ மணி என்பதை 3 மணி ஆகவும் அல்லது 2 மணி ஆகவும் வைத்துக்கொள்ளலாம். இவ்விதம் கூட்டிக்குறைப் பதனுல் நூற்றல் வருமானம் சற்றே மாறுபடலாம். இது போலவே விவசாய வருமானமும் குறையவோ, கூடவோ முடியும். இயன்றவரையில் தொழில் நேரத்தைத் தகுந்தபடி அமைத்துக்கொண்டு, மேற்கூறிய திட்டப்படிக்கான குறைந்தபட்ச உற்பத்தி இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்துகொண்டோமானுல், தொழில் வருமானம், பாட சாலைச் செலவைச் சரிக்கட்டும் என்பது உறுதி. வறுமை யும் சோம்பலும் எழுத்தறிவின்மையும் திகைப்பும் மலிந் துள்ள இந்த நாட்டில், இந்த முயற்சி எவ்வளவோ பய னுடையது என்பதில் சந்தேகமில்லை.

மேலும், வகுப்பு நேரத்தில் பிள்ளைகளுக்குத் தொழில் கற்பிக்கும் ஆசிரியர், தாமும் ஒரு மணி நேரமாயினும் தொழிலில் தினமும் செலவிடுகிருர். இந்த ஒரு மணி நேரத்திலும், பருத்தி அரைத்தல் பஞ்சுவெட்டுதல் நூற்றல் முதலான வேலைகளை இவர் செய்கிருர். இதற்கும் பொருள் மதிப்புண்டு. வருமானத்தைக் கணக்கிடும் போது இதையும் கூட்டிக் கொள்ள வேண்டும்.

இனி, நூற்றலுக்குப் பின், மேல் வகுப்புக்களில் செய் கிற நெசவு வேலைக்குரிய கூலியையும் சேர்க்க வேண்டும். நெசவில் இன்னும் கூலி அதிகம் கட்டிவரும். நேரத்தை வீண் போக்காமல், திறமையாகவும் திட்டமிட்டும் தொழி லில் பிள்ளைகளை ஈடுபடுத்திவரும் பட்சத்தில், மேலே குறிப் பிட்ட அளவு வருவாய்க்குரிய பொருள் உற்பத்தியாகும் என்பது உறுதி.

ஆதாரக் கல்வியானது, இந்நாட்டின் எதிர்காலப் பிரஜைகளைச் சரியான, பயனுள்ள, உத்தமக் குறிக் கோளுடைய வழியில் பயிற்றுவதற்கான ஆரம்பவேலை யானதால், இதற்காகும் மூலதனச் செலவு முழுமையும் பொது மக்களின் பொறுப்பு; அதாவது அரசாங்கமே

இதற்காகும் முழுச்செலவும் ஏற்கவேண்டும். கட்டிடச் செலவு, இடத்துக்காகும் செலவு, கருவி தளவாடங்களின் செலவு முதலியன யாவும் இத்தகைய மூலதனச் செலவாகும். ஆசிரியர் சம்பளமும் நடைமுறைச் செலவுகளும் மட்டுமே, பிள்ளைகளின் உழைப்பால் வரும் வருவாயைக் கொண்டு சரிக்கட்ட முயல்வது நம் நோக்கம்.

52. சுயதேவைப் பூர்த்தி—மனோதத்துவக் கருத்து

வருவாய் குறித்த மேற்கண்ட தன்மைகள் ஒருபுறமிருக்க, இக்கருத்தில் அமைந்த மனோதத்துவம் இங்கு உணர்தற்குரியது. அளவை என்பது பொருளுக்குப் பொருள் மாறும். துணியளப்பது ஒன்று. பால் அளப்பது ஒன்று. பாலின் தரம் அளப்பது ஒன்று. நெல் அளப்பது ஒன்று. வைரமும், மணியும் அளப்பது ஒன்று. நிலம் அளப்பது ஒன்று. இப்படியேதான் பாடசாலையின் கல்விப் பயிற்சியை அளக்கவும் ஒரு தனி அளவை உண்டு. பரீக்ஷை என்பது இந்த அளவை ஆகாது. கல்வியால், அதுவும் ஆதாரக் கல்விப் பயிற்சியினால், குழந்தையின் மூவகைப் பண்புகளையும் பழக்கி வளர்க்கிறோம். உடல்திறன் வளர்ச்சியையும் ஒழுக்க வளர்ச்சியையும் இன்றைய எழுத்துப் பரீக்ஷை எப்படி அளக்கும்? கேள்விகேட்டுப் பதில் எழுதச் சொல்லும் முறையால் மூன்றின் வளர்ச்சியையும் காண முடியாது. அன்றியும், செய்து காட்டுவதை விட்டுப் பதில் சொல்லிக்கொண்டு இருப்பதில் சிறு பிள்ளைகளுக்குப் பொறுமை இராது. இது அவர்களுக்குக் கஷ்டமானது.

குழந்தைகளுக்கு விளையாட்டுக்கும் வேலைக்கும் வேறுபாடில்லை. வேலையை விளையாட்டாகவே செய்து ஊதியம் உண்டாகும்படி செய்வது மிகவும் இயல்பான காரியம். மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடு அவர்கள் வேலைசெய்யும்போது, உழைப்பே உயர்வு என்ற தத்துவமும் உயிர்பெறுகிறது. பள்ளி வாழ்க்கை, எல்லாப்பண்புகளுக்கும் நிறைவு

தருவதால், விருப்பம் தருவதாயும் வெற்றியுடையதாயும் ஆகிறது.

அன்றியும் உற்பத்தியளவில் ஓர் எல்லை அல்லது தரத்தை நாம் வகுத்துத் தரும்போது, பிள்ளைகளிடம் ஆக்கச் செயலில் போட்டி வருகிறது. சாமானிய வாழ்க்கைப் போட்டிக்கு இது முற்றும் மாறுனது. இது பெரிதும் நன்மையானது, வளர்ச்சிக்கு ஏதுவானது.

தானும் சமூகத்தில் பயனுள்ள காரியம் செய்யும் ஆற்றல் வாய்ந்தவன் என்று சிறுவயதிலேயே அவன் அறியும் போது, எத்தகைய சிறந்த தன்னம்பிக்கை அவனுக்கு உண்டாகிறது என்று அளந்து சொல்லமுடியாது. இருவகைப் பிறர் சார்பையும்—பொருள் பற்றியும் மனம் அல்லது ஆன்மார்த்தத் துறைபற்றியும் உள்ள பிறர் சார்பை—போக்கி, இது நிலைத்த தற்சார்புணர்வை வளர்க்கிறது.

53. சுயதேவைப் பூர்த்தி—ஒழுக்கத்துறை

மேலும், செலவைச் சரிக்கட்டுவது என்பது, வெறும் பண வருவாயைத் தொழில் மூலம் பெருக்குவது என்ற கருத்தினும் உயர்ந்தது. எந்த வாழ்க்கையில் ஒழுங்கும் சிரத்தையும் நிறைந்த உழைப்பு இருக்கிறதோ, அங்கே திறமையும் அறிவும் மேம்படுவது உறுதி. ஆதலால், திறமையின் பெருக்கமே ஒழுங்கு சிரத்தை என்ற இரண்டையும் அளக்கும் அளவுகோலாகும். குறித்த பாடசாலை செலவைச் சரிக்கட்டுகிறது என்றால், அங்கு திறமை ஏற்பட்டிருக்கிறது, ஒழுங்கும் சிரத்தையும் உள்ளன என்பதும் தானே ஏற்படுகிறது. அன்றியும், படிப்பு என்பது திட்டமாய்ப் பெறுகிற அனுபவம். அறிவு இதன் மூலமாக வருவதாதலால், பிள்ளைகள் சிரத்தையுடன் மனவிழிப்புடையவர்களாயு மிருத்தல் வேண்டும். இந்த நிலை இருந்து தொழில் செய்தால்தான் அறிவு வளர்ச்சி ஏற்படுவதற்கான சந்தர்ப்

பங்கள் தோன்றும். இத்தகைய சந்தர்ப்பங்களை அளிக்கிற தொழிலின் பல்வேறு செயற் பிரிவுகளையும் பிள்ளைகள் சரியாகவும் சாஸ்திரோக்தமாவும் செய்திருக்கிருர்களா என்று பார்ப்பதே செலவைச் சரிக்கட்டுகிறதா என்று பார்த்தல். இது பற்றியே பொருள் உற்பத்தியை இங்குப் பிரதானமாய்க் கவனிக்கிருேம்.

இத்தகைய ஒரு திட்டத்தை உறுதியாய்க் கடைப்பிடிக்கும்போது, ஆசிரியர்களுக்குத் தன்னம்பிக்கையும் சுதந்திர உணர்ச்சியும் வளரும். இவ்விரு இயல்புகளும் இன்றிப் புதிய லக்ஷ்ய சமுதாயத்தை எவரும் சிருஷ்டிக்க முடியாது. மேலும், ஆசிரியர் தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளவும் வேண்டும்; அவர் இங்ஙனம் உழைப்பவரா யில்லாவிட்டால், பாடசாலையில் இவற்றை வலியுறுத்த வியலாது. இந்த நோக்குடன் பார்க்கும்போது, ஆதாரக் கல்வியானது, உத்தமமான தொண்டரையும் உண்மையான ஊழியரையும் திறமை மிகுந்த சிறந்த ஆசிரியராகத் தேர்ந்தெடுக்க ஒரு தகுந்த சாதனமென்று கருதலாம். இவ்வாசிரியர் தக்க உடல் வலிமை, மனவுறுதி, தொழில்தேர்ச்சி, அறிவு, ஆண்மை, ஒழுக்கம் ஆகியவை குறைவறப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது தெளிவு.

54. சுயதேவைப் பூர்த்தி—சமூகத்துறை

இவைமட்டுமன்றி, கிராம வாழ்க்கையிலும், சுகாதாரம் கூட்டுறவு சத்துணவு போன்ற பல துறைகளிலும், இது மேம்பாடு தரும். விவசாயம், பிற தொழில்கள், மாட்டு வளர்ப்பு, கட்டிடவேலை ஆகிய பகுதிகள் மேம்படும். இவ்வாறு சமூகத்துறையிலும், சுயதேவைப் பூர்த்தி என்ற தத்துவம் உண்மையான கிராம ராஜ்யம் ஏற்படப் பேருதவியாயிருக்கும். காந்தியடிகள் கூறிய உண்மைச் சுதந்திரமும் உண்மைச் சுயராஜ்யமும் இதனுல் கைகூடும்.

செயல் முறையில் உற்பத்தி என்ற அம்சத்தைக் கல்வியில் நடத்துவதால் விளையும் சமூகப் பலன்கள் பல: நாட்டின் எல்லாப் பிள்ளைகளும் உழைக்கிறார்கள்; ஒரு குறிப்பிட்ட தரம் தேர்ச்சி அடைகிறார்கள். ஏழை - செல்வர், உயர்ந்தசாதி - வேறுசாதி, உழைப்பாளி - முதலாளி, படித்த குடும்பம் - படிக்காத குடும்பத்துப் பையன்— எல்லா வேற்றுமையும் இங்கு அடிபட்டுப் போகிறது. உடல்வருந்தி உழைப்பது தாழ்வு என்ற மனப்பான்மை நீங்குகிறது. மனித குலத்தின் ஒருமையை உணர்த்த இதனினும் சிறந்த சாதனம் வேறு காணமுடியாது. சமூகத் துறையில், ஒழுக்கத்துறையில் (நீதித்துறையில்) இது மிக்க பொருளாழமுடையது.

ஒன்றாகக் காண்பதே காட்சி ; புலனைந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம் - என்றும்தான்
சாவாமற் காப்பதே கல்வி ; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்

என்ற பண்டைய அருமைத் திருவாக்குக் கூறுவது சுய தேவைப் பூர்த்தி என்ற தத்துவத்தைத்தான்.

"நான் கூறிய திட்டத்தை நிறைவேற்றும்போது, அதன் நேர்முகமான பலன், அக்கல்வி தன் செலவைத் தானே வகித்துக் கொள்ளும் என்பது. ஆனால் அதன் வெற்றிக்கு அளவுகோல், இத்தன்மையன்று; விஞ்ஞான முறையில் ஒரு கைத்தொழிலைக் குழந்தைக்குக் கற்பித்ததனால் அவனுடைய பண்புகள் யாவும் பூரண விளக்கம் பெற்றுள்ளன என்பது. உண்மையில், ஓர் ஆசிரியர் முன் வந்து எவ்வகையிலும் நான் இக்கல்வி செலவைச் சரிக்கட்டும்படி செய்துவிடுகிறேன் என்பது கூறினால், அவரை நிச்சயம் விலக்கி விடுவேன். மாணவன் தன் திறன்களில் ஒவ்வொன்றையும் உபயோகிக்கக் கற்றுக்கொண்டான் என்பதிலிருந்து நியாயமாய் விளையவேண்டிய பலனே,

செலவைச் சரிக்கட்டுதல் என்ற அம்சம். தினம் மூன்று மணி நேரம் மட்டும் வேலை செய்து பிழைக்கிற பையன் தன் வயிற்றுக்கு வேண்டியதைத் தேடிக் கொள்ள முடிகிறதென்றால், தன் மனத்துக்கும் உயிருக்கும் அபிவிருத்திக்குரியவற்றையும் சேர்த்துக் கற்கிற பையன் இன்னும் எவ்வளவு அதிகமாகத் தேடிக் கொள்வான் !"
—காந்தியடிகள்.

55. உற்பத்தி—கல்வி இலாகா திட்டம்

செலவைச் சரிக்கட்டுவது என்ற கருத்தை மேலே விவரித்துச் சொன்னோம். அதன் தத்துவமும் புள்ளி விவரங்களும் பார்த்தாயிற்று. சென்னைக் கல்வி இலாகாவில், வகுப்புவாரி உற்பத்தி, ஒவ்வொரு பிள்ளைக்கும் மாதந் தோறும் எவ்வளவு இருக்கவேண்டும் என்று ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார்கள். அது பின் வருவதாகும் : முதல் வகுப்பு 0—1—0 ; இரண்டாம் வகுப்பு 0—3—0 ; மூன்றாம் வகுப்பு 0—5—0 ; நான்காம் வகுப்பு 0—8—0 ; ஐந்தாம் வகுப்பு 1—0—0 ; ஆறும் வகுப்பு 1—8—0 ; ஏழாம் வகுப்பு ரூ. 2—0—0 ; எட்டாம் வகுப்பு ரூ. 3—0—0.

மேற்குறித்த நிலையில் இன்று சில மாறுதல்கள் உள்ளன. முதல் வகுப்பில் உற்பத்தியை வற்புறுத்தவில்லை. புதிய திட்டப்படி, ஏழே வகுப்புக்கள் உள்ளன. ஆரம்பப் பள்ளியிலும் ஆதாரப்பள்ளியிலும் எட்டாம் வகுப்பு இல்லை. ஆகவே எட்டாம் வகுப்பின் சாதனைகள் ஏழாம் வகுப்பிலேயே கைகூடவேண்டும்.

56. உற்பத்திக் குறைவுக்குக் காரணம்

1. நாட்டில் ஆதாரப் பாடசாலைகள் குறைவு. பெரும்பான்மையான ஆசிரியர்கள் பாடசாலைகளில் 'கஷ்டப் படாமல் காலந்தள்ள வேண்டும்' என்றே நினைக்கிறார்கள். உயர்ந்த லக்ஷ்யத்தோடு ஈடுபடுவோர் மிகவும் அரியர்.

ஆகவே அவர்களுக்கு ஆதாரக் கல்வியில் குறை சொல்லும் மனப்பான்மையும், பேச்சும் எளிதாயிருக்கிறது. நம்பிக்கையோடு வெற்றி தேடவேண்டிய வேலையில், நம்பிக்கையின்றி, பழிக்கும் மனமுடையவர்கள் ஈடுபடுவது வெற்றியின்மைக்கு முதற்காரணம்.

2. செயல் திறமை இவர்களுக்குப் போதாது. நூற்பு நெசவில் தேர்ச்சி காணாது.

3. ஒவ்வொரு வகுப்பிலும் ஓர் ஆசிரியருக்குத் தேவையான பிள்ளைகள் (35 பேர்) பூர்த்தியாய் இருப்பதில்லை.

4. தக்கபடி கருவிகள் இருப்பதில்லை. இருந்தால், பழுதின்றிச் சீரான நிலையில் இருப்பதில்லை.

5. மூலப் பொருள்கள் உயர்ந்த தரமாகவும் போதுமான அளவிலும் கிடைப்பதில்லை.

6. ஐந்து வகுப்புப் பாடசாலைகளே அதிகம். பையன் கொஞ்சம் தொழில் தேர்ச்சி பெற்றவுடனேயே பாடசாலையை விட்டு நீங்குகிறான்.

7. தேர்ந்தெடுத்த தொழில்கள் சுற்றுப்புறத் தேவைக்கு ஏற்றவையாய் அமையவில்லை.

57. சில பரிகாரங்கள்

1. எல்லாப் பாடசாலைகளும் எட்டு (அல்லது புது ஏழு) வகுப்புப் பூர்த்தியா யுள்ளவைகளாய் இருத்தல் வேண்டும். ஐந்தில் நிறுத்திவிடக்கூடாது.

2. ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகள் திட்டப்படி நிறைந்திருக்கவேண்டும். 20 அல்லது 35 - எது திட்டமோ அந்த எண்ணிக்கை முழுமையும்.

3. வசதியுள்ள இடங்களில் தோட்ட வேலைக்கு முதன்மை அளிக்கவேண்டும். தொழில் கருவிகள், தளவாடங்கள், கிணறு, உழவு மாடுகள் உள்பட, போதுமானபடி அமைக்கவேண்டும்.

4. திறமையும் தொழில் தேர்ச்சியும், இக்கல்வியில் நம்பிக்கையும், கூட்டுறவும், வாழ்க்கையில் லக்ஷ்யமும் அமைந்த ஆசிரியர் தொகுதி ஒவ்வொரு பாடசாலையிலும் இருக்கவேண்டும். இரண்டு ஆசிரியருக்கிடையில் மூன்று கட்சி என்ற நிலை நீங்கவேண்டும்.

5. சுற்றுப்புறமுள்ள மூலப்பொருள்களை லாபகரமாய் உபயோகித்துப் பாடசாலையில் உற்பத்திதரமும், ஒவ்வொரு பிள்ளையின் சாதனையும் மிகவும் மேலான தரமாக ஆக்கவேண்டும்.

6. அன்போடும் நம்பிக்கையோடும் தொழில் தரத்தையும் கல்வித்தரத்தையும் மேம்படுத்தவல்ல கல்விக் கண்காணிப்பாளர் ஏற்படுத்தவேண்டும். மேம்படுத்தும் திறமையற்றவர் கல்வியதிகாரியாக வரக்கூடாது.

58. மூவகைப் பண்புகள்

முன்னமே குறிப்பிட்டபடி கல்வியின் மூலம் மூளை ஒன்றை மட்டும் வளர்ப்பதோடு நிறுத்தாமல், குழந்தையினுடைய பண்புகள் அனைத்தையும் வளர்க்கிறோம். வாழ்க்கை யென்பது பூரணமான ஒன்று. பல பின்னங்களை ஒன்றாய்ப் பொருத்திய தொகுப்பு அன்று. ஆகவே குழந்தையின் கல்வியிலும் வளர்ச்சியிலும் ஒருமித்த பூரணப் பயிற்சிக்குத் திட்டமிட வேண்டும்.

1. உடற் பண்புகள் : ஆரோக்கியமான உடல், சாமானிய வேலைகளில் ஈடுபட்டுச் சோர்வின்றி நன்றாக உழைக்கும் தன்மை, ஞானேந்திரியங்கள் ஐந்தையும் கை கால்களையும் நன்றாய்ப் பழக்குதல், நீந்துதல், பயிர்த்தொழில் செய்யுந் திறமை, சமையல் திறமை, பக்திப்பாடல்கள் தேசியப் பாடல்கள் பஜனை முதலியன பாடுதல், கேளிக்கை.

2. உள்ளப் பண்புகள் : சமூக லக்ஷ்யத்தை உணர்தல். கிராமக் கைத்தொழில்களே இந்த நாட்டுக்கு நல் வாழ்வு தருவன என்று உணர்தல். சமையல் பற்றிய அறிவு,

உணவுச் சத்துப் பற்றிய அறிவு, உடைபற்றிய அறிவு, தேகாரோக்கியம், நோய்களுக்குச் சிகிச்சை செய்தல், கணக்குத் திறமை, பேச்சு, எழுத்துத் திறமை, இலக்கியச் சுவை அறிதல். ராட்டை முதலியவற்றில் அடங்கிய இயந்திர தத்துவம் அறிதல். இந்தியச் சுதந்திரப் போராட்டம், அரசியல், பண்டைய பண்பாடு முதலியவற்றை அறிதல்.

3. உயிர்ப் பண்புகள்: எல்லாச் சமயங்களிடத்திலும் ஒத்த பக்தி, வகுப்பு ஒற்றுமையில் ஆர்வம், சாதி உணர்ச்சியைப் போக்குதல், அன்பு, பரோபகாரம், சகிப்புத்தன்மை, நீதி உணர்ச்சி, கூட்டுறவு. உண்மையான தெய்வ நம்பிக்கையும், சத்தியத்திலும் அஹிம்சையிலும் தோய்ந்த மனமும், நல்லொழுக்கமும் இந்தப் பண்புகளுக்கு அடிப்படை என்று கூறுவது மிகையாகாது.

உழைப்பின் மூலம் கல்வி பயிற்றும்போது, இது, உடலின் அங்கங்கள் நரம்பமைப்பு முதலியவற்றின் சக்தியைப் பயிற்றி வளர்க்கிறது. நேர்முகமான அனுபவத்தின் மூலம் தன்னம்பிக்கையும் திட சித்தமும் வளர்கின்றன. சிறந்த ஆன்மப்பண்புகள் விளையுமிடமாக இவைகளே அமைகின்றன.

மேலும், "பாடசாலையில் சமய போதனைக்கு நான் ஏற்பாடு செய்யவில்லை. ஏனெனில், மேலான சமயமாகிய நடைமுறைச் சமயம் அல்லது காரியச் சமயத்தை நான் போதிக்கிறேன்; அதுவே தன்முயற்சியாகும்" என்று காந்தியடிகள் கூறுகிறார். தன்முயற்சியின் வழி மற்றெல்லா ஆன்மப் பண்புகளும் தாமே அமையும்.

செயல் செய்யச் செய்ய உடல் வலிமை பெறுகிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை; செயலால் அனுபவமும் பெறுகிறது. அனுபவமே திரண்டு முதிர்ந்து அறிவாகப் பரிணமிக்கிறது. இதனால், தானே விளைவது புத்திக்கூர்மை. உழைப்பினால் வரும் பக்குவமே நல்

லொழுக்கத்துக்கு வித்தாகி, ஆன்மப் பண்புகளையும் வளர்க்கிறது. ஆகவே, மூவகைப் பண்புகளும் செயல் வழியே எவ்வாறு விளக்கம் பெறுகின்றன என்பதை இங்குக் காணலாம்.

மூவகைப் பண்புகளையும் சேர்ந்து அழகாக வளரச் செய்வதைப் பூரணமான கல்வி அல்லது ஒருமித்த கல்வி என்கிருேம். உட்கார்ந்தபடியே புத்தியைக்கொண்டு உழைப்போர் ஒரு வகை: இவர்கள் எவுவோர்; உடல் வருந்தி உழைப்போர் மற்ருெரு வகை. இவ்வாறு சமூகத்தை இரு பிரிவாகப் பிரித்துவிட்டோம். இப்பிரிவு கேடானது. இதற்குப் பதிலாக இரு வகை உழைப்பையும் ஒன்று சேர்க்க வேண்டும்; பழைய முறையில் தொழிற் கல்வி என்ருல், இன்றுள்ள இந்த வேறுபாட்டை அப்படியே ஏற்று வருவது; பாடசாலைப் படிப்பு முடிந்து 18 வயதில் வெளி வரும் பிள்ளைகள் பெண்கள் எல்லோரும், விஞ்ஞானக் கலையில் பூரண அறிவு பெறத் தக்கபடி நாம் கல்வி போதிக்க வேண்டும். இவ்வறிவு, அறிவியல் துறையில் (விஞ்ஞானத் துறையில்) பயனுள்ள வேலை செய்பவர்களாக அவர்களை ஆக்கவேண்டும்; பாடம் போதிப்பதோடுகூட, தொழிற் கல்விப் பயிற்சிக்கு அடிப்படையானவற்றில் போதிய பொது அறிவையும்,எடுத்துக்கொண்ட கிராமத் தொழிலில் சிறப்பான திறமையையும் தரவேண்டும். இத்திறமையின் துணையால் அவர்கள், தங்கள் உழைப்பின்மூலம் செல்வத்தை உற்பத்தி செய்வது என்ற புதிய பரந்த உலகத்தில் தாங்களும் முறையான உயர்ந்ததொரு ஸ்தானம் பெறத் தக்கவர்கள் ஆகவேண்டும்.

59. ஆளுமையின் கல்வி

இக்கருத்து முன்னமே விளக்கப் பெற்றுள்ளது (பக்கம்-40). வெறும் எழுத்தறிவு கல்வியாகாது. முன் பகுதியிற் கூறிய மனிதனின் மூன்று திறப் பண்புகளின் –

உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றின் - அழகான ஒருமித்த பூரண வளர்ச்சிக்கு உதவுவது எதுவோ அதுவே கல்வி. இங்கு ஆதாரக் கல்வி இவ்வாறு உதவுவதால் அது ஆளுமையின் முழுக்கல்வி தருகிறது என்று கூறுகிறோம். காந்தியடிகள் பின்வருமாறு இதுபற்றிக் கூறுகிறார்:

" கருத்து வாயிலாகவே உள்ள வெறும் ஏட்டுப்பாடத்தைக் கண்டு சுறுசுறுப்பு நிறைந்த குழந்தையின் இயல்பானது எப்போதும் நன்முறையில் எதிர்க்கிறது. அப்பாடத்தின் கொடுங்கோலிலிருந்து இப்புதுக் கல்விமுறை குழந்தைக்கு விடுதலை நல்குகிறது. அனுபவம் இருவகை: புத்தி பூர்வமாக, செயல் பூர்வமாக; இவ்விரண்டையும் இக் கல்வி சமன்செய்கிறது. உடல், உள்ளம் இரண்டையும் ஒருமித்துக் கல்வி பயிற்றவல்ல சாதனமாக இதை ஆக்கலாம். எழுத்துப் படிப்பு மேலெழுந்த வாரியானது: இதன் பொருள், அச்சிட்ட ஏட்டைப் படிக்கும் ஆற்றல்; பல சமயம் அதுவும் கைகூடுவதில்லை. குழந்தை பெறுவது இப் படிப்பன்று. ஏதேனுமொரு ஆக்கச் செயலில் தன் கையையும் புத்தியையும் பயன்படுத்துவதே இதனினும் மிக முக்கியமானது. இங்கு குழந்தை இந்தத் திறனைப் பெறுகிறான். பூரண ஆளுமையின் கல்வி என்று நாம் கூறுவது பொருந்துமானால் இதுவே அக் கல்வியாகும்."

60. எழுத்துப் படிப்பும் கைத்தொழிலும்

பாடசாலையில் கைத்தொழில் வேண்டும் என்ற முயற்சி முன்னமே ஏற்பட்டிருந்தது. அம்முயற்சிகள் யாவும் நாளடைவில் தோற்றன. காரணம், கைத்தொழிலில் லாபத்தை வற்புறுத்தாமை. வேலைக்குப் பணமதிப்பு என்று வரையறை செய்யாமையால், அவ்வேலையானது, பயனில்லாத ஒரு கைத்தொழிலைத் திறமையில்லாமல் செய்வதாக வந்து முடிந்தது. அதில் திருத்தமான அறிவும் போதிய கவனமும் சேரவில்லை. கைத்தொழிலின் தரமும் கெட்டது,

கல்வியும் கெட்டது. மேலும் இது, கல்விக்காகும் செலவைப் பின்னும் அதிகமாக்கிற்று ; இது சர்வஜனக் கல்வி என்ற நோக்கத்துக்கே எதிராய் முடிந்தது.

பண மதிப்பு இல்லாமற் போகவே, அவ்வுழைப்பு வாழ்க்கையிலிருந்தும் உலக விவகாரத்திலிருந்தும் தொடர்பற்று நின்றதோடு, வெறும் சாதனம் என்ற நிலைக்குத் தாழ்ந்தும் போயிற்று. ஆதாரக் கல்வி முறையில், பாடசாலைக் கைத்தொழில், எழுத்துப் படிப்புக்கு ஒரு கருவி மாத்திரமன்று, அதுவே தனி நோக்கமுமாகும்.

எழுத்துப் படிப்பும் இவ்விதமே, தனி லக்ஷ்யம் மட்டுமல்ல, கைதொழிலைச் செவ்வையாகச் செய்வதற்கு அது ஒரு சாதனம். அப்படிப்பு இன்றிக் கைத்தொழில் வெறும் யந்திரம்போல், திட்டமில்லாமல் விஞ்ஞான முறை இல்லாமல், செய்வதாகிவிடும். இப்படிச் செய்கிற கைத்தொழிலுக்குப் போதனமுறை என்ற அளவில் பயன் சொற்பம். புத்திக்குத் தரும் கல்வி ஒரு கைத்தொழிலை மையமாக வைத்து வருவதனால், அதுவே தொழில் தேர்ச்சியையும் பயனையும் மிகுதியாக்குகிறது. இரண்டும் ஒன்றுக்கொன்று லக்ஷ்யமாகவும் சாதனமாகவும் ஆகின்றன. பரஸ்பரம் ஆக்கம் தருகின்றன. ஒன்றைப் புறக்கணித்து ஒன்றை வளர்க்க முயல்வது இரண்டுக்கும் பாதகமாக முடியும்.

61. ஆதாரக் கல்வியில் புத்தகம்

இக்கல்வி முறையில் புத்தகங்களே இல்லை, அல்லது வேண்டியதில்லை என்று சிலர் எண்ணியிருக்கிறார்கள். இவ்வெண்ணம் தவறு. ஆதாரக் கல்வியில் புத்தகங்கள் தேவை, நிரம்பவும் தேவை. வகுப்பில் ஆசிரியரின் மேற்பார்வையில் எல்லாப் பிள்ளைகளும் ஏககாலத்தில் படிக்கிற பாடப் புத்தகம் என்பதொன்று இங்குத் தேவையில்லை. மற்றப்படி, பையன் தனக்குப் படிக்கத் தெரியவருவது முதற் கொண்டு, புத்தகத்தை விரும்பித் தேடும்படி ஆசிரி

யர் பழக்கவேண்டும். பல பிள்ளைகளும் பல புத்தகங்கள் படிக்கவேண்டும். தொழில்மூலம் கல்வி ஆதலால், பையனுக்குப் பல துறைகளில் நேர்முக அறிவும், அனுபவமும் உள்ளன. இவ்விரண்டையும் பெருக்குவதற்கு மிகப் பலவான புத்தகங்கள் தேவைப்படும்; எளிய நடையுடைய மிகப் பல புத்தகங்கள், படங்கள் நிறைந்தவை, வாழ்க்கையின் பல்வேறு துறைகள் பற்றியவை பள்ளிக்குத் தேவை. தானாக எடுத்துப் பார்க்கவும், படிக்கவும் சந்தேகம் தீர்த்துக் கொள்ளவும் ஆசிரியர்கள் பையன்களுக்கு உதவ வேண்டும்.

திறமையற்ற ஆசிரியர், புத்தகத்திலுள்ள நாலு வரிகளைக் கற்பித்துத் தம்வேலை முடிந்தது என்று எண்ணிவிடலாம். பையனுக்கு இது போதாது. வளர்ந்துகொண்டே இருக்கிற அவனுடைய மனம் மேலும் மேலும் விஷயங்களைத் தேடுகிறது. ஆசிரியர் தம் பயிற்சி, படிப்பு, அனுபவம் இவற்றால் அவனுடைய தாகத்தைத் தீர்ப்பதோடுகூட, அவனுடைய ஆற்றலுக்கு ஏற்ற பல்வகையான புத்தகங்கள், கட்டுரைகள், பத்திரிகைப் பிரசுரங்கள் போன்றவற்றை அவனுக்கு அறிமுகப்படுத்தி அவனுக்குப் படிக்க உதவி செய்யவேண்டும். இதன்மூலம் அவனுடைய விஷய தாகம் தீர்வது ஒருபுறம்; மறுபுறம் படிப்பில் ஆசை, படிக்கும் தகுதியில் முன்னேற்றம் இரண்டும் வளரும். புத்தகசாலைப் படிப்பு என வாரத்தில் கொஞ்சநேரம் ஒதுக்குவதும் இதற்குப் பொருத்தமே.

எனவே, ஆதாரக் கல்வியில் புத்தகங்கள் இல்லை என்பார் கூற்று பெரிதும் தவறு. பையனுடைய மனம் பற்றுகின்ற ஸ்தூலமான எல்லை விரிந்து போயிருக்கிறபடியால், இன்னும் விரிந்துகொண்டே வருகிறபடியால், அதிகமான புத்தகங்கள் அவனுக்குத் தேவையாகின்றன. இவை உண்மையாகவே அவனுக்குச் சிறந்த பயன் விளைவிக்கின்றன.

62. இயைபு முறை

இயைபு என்பதைச் சமவாயமுறை என்றும் இணைப்பு முறை என்றும் சொல்வார்கள். இதன் பொருள், பைய னுடைய தொழிலிலும், சமூகம் இயற்கை ஆகிய இரு சூழ் நிலைகளிலும் பிள்ளையினுடைய வாழ்க்கையில் என்ன அனு பவம் ஏற்படுகிறதோ அந்த அனுபவத்தை ஒட்டியே, அவ னுக்கு எல்லாக் கல்வியும் போதிக்கவேண்டும் என்பதா கும். இப்படிக் கற்பிப்பதற்கு முந்திய அனுபவம் ஆசிரியர் களுக்கு இல்லை. எனினும், ஆர்வத்தோடு இந்த வழியில் முயன்றால் சாத்தியமாகாதது ஒன்றுமில்லை.

நூற்றலை எடுத்துக்கொண்டால் முதற் பொருள் பருத்தி. பருத்தியின் எடை, பஞ்சின் எடை, விதையின் எடை, பட்டையின் எடை, நூலின் எடை—இது நிறுத்த லளவை. பிறகு பட்டையை எண்ணுதல், நூல் சுற்றுக் களை எண்ணுதல்—இது சாமானிய எண்ணறிவு. நூலின் நம்பர் என்ன என்று அறிவதில் பலவகைக் கணக்குகள் அடங்குகின்றன. பிறகு பருத்தி விதை முளைத்தல், வளர் தல், பூத்தல் காய்த்தல், காய் வெடிக்கப் பருத்தி எடுத் தல்—இது தாவர சாஸ்திரம். கர்லையில் வரும் பூச்சி, புழு, நோய்—இது கிருமி சாஸ்திரம். பருத்திக்கு ஏற்ற மண், அதன் தரம், பருத்தியின் ரகங்கள், துசும்பின் நீளம், நீளமும் நூற்கும் எளிமையும்—இவை விஞ்ஞான சாஸ் திரப் பகுதிகள். குட்டைத் துசும்பு, நீளத் துசும்பு எங்கிருந்து வந்தது—இது சரித்திரம் பூகோளம் பற்றிய பாடம். நீளத்துசும்பு இந்தியாவுக்கு வந்ததனால் நமக்கு என்ன நஷ்டம், நெசவாலைகள் எப்படி உண்டாயின, இந்தியத் துணி உற்பத்தி எப்படி நசித்தது, மக்கள் எப்படி ஜீவனோபாயச் சுதந்திரம் இழந்தார்கள், இந்தியா எப்படி அடிமையாயிற்று—இது பொருளாதாரம், அரசியல் சாஸ் திரம்.

இவ்விதமாக, தக்ளி, ராட்டை, பயிர்த்தொழில், பயிர்கள், துணி, நெசவு முதலிய ஒவ்வொன்றையும் பற்றிக் குறிப்பிட முடியும்.

அடுத்தபடியாக, இயற்கைச் சூழ்நிலை சமூகச் சூழ்நிலையையும் இவ்விதமாகவே கல்விப் பயிற்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். அமாவாசை, பௌர்ணமி, கிரகணங்கள், பருவகாலங்கள், வால் நக்ஷத்திரத் தோற்றம், புயல் முதலியன யாவும் விஞ்ஞான சாஸ்திரப் பாடம் கற்பிக்கும் இடங்கள். கோயிலில் நடக்கும் திருவிழாவை ஒட்டிச் சமய போதனை, கோயில் கட்டிய காலத்துப் பெரியார்களின் வரலாறு, சமூகநிலை, நாகரிகம், இலக்கியம் முதலிய பல பாடங்கள் பிறக்கும். மாதந்தோறும் கொண்டாடத் தக்க சமய விழாக்கள், சமூக இலக்கிய விழாக்கள், பெரியார் தினங்கள், அரசியல் தினங்கள் முதலியன யாவும் விரிந்த கல்விப் பயிற்சிக்கே துணையாயிருக்கும்.

இவ்வாறு ஆராய்ந்தால், இன்றைய எட்டுப்பாட முறையில் என்னென்ன 'பாடங்கள்' அடங்கியுள்ளனவோ, அத்தனையும் கற்பிக்க இங்கேயும் வசதியுண்டு; வெறும் எட்டுப்பாடமாய் இராமல், அதே கல்வி இங்கு வாழ்க்கையோடு இயைந்த அறிவாக மாறும். கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்கு வழி காட்டுவது என்பதை உணர்ந்த பின், என்ன பாடங்களைப் போதிப்பது, எது முதன்மையானது, எதை விடுவது, எதைப் போதிப்பதற்குப் புதுவழி தேடுவது என்று முடிவு காண்பது கஷ்டம் இல்லை.

இயைபு முறை என்பது இசைவிக்கும் முறை; அதாவது செய்யும் வேலை, வாழும் வாழ்க்கை இரண்டுடனும் கல்வியை இயைத்துப் பிள்ளைகளின் உள்ளத்துக்குரிய வளர்ச்சியை அளித்தல். போதனு முறையில் இயைபு முறையின் சிறப்புத் தனியானது. உள்ளப்போக்கில் இது ஒருமைப்பாட்டையும் திடத்தையும் தருகிறது. வளரும் குழந்தைக்கு எல்லாப் பண்புகளையும் ஒருமைப் படுத்து

வதற்கும், செயல் மூலம் வரும் அனுபவத்தால் அறிவு பெருகச் செய்வதாகிய இம்முறை பேருதவியானது. தனித் தனிப் பாடமாய்ப் பயிலும்போது வரும் அனுபவமோ அறிவோ ஒன்றோடொன்று இயைவதில்லை. ஏனெனில், அங்குப் பல துறைகள் பரஸ்பரம் தங்களுக்குள்ளும், வாழ்க்கையுடனும், கலந்து ஒன்றுவதற்கான அடிப்படை இல்லை. செயல் என்ற அடிப்படையை நாம் தரும்போது, அந்த இயைபு தானாக ஏற்படுகிறது.

தவிர, செயல் உள்ளத்தைத் தூண்டிவிட்டு ஆராய்ச்சி செய்யும்போது, இவ்வாராய்ச்சி ஒவ்வொரு பாடமாக ஆராய்ந்து கொண்டே விரிந்து செல்லும்; இப்பழக்கம், ஆராய்ச்சி மனப்பான்மையை நேர்முகமான பொருள் மூலம் வளர்க்கும்; இதுவே இயைபுமுறைக்குள்ள சிறப்பு.

உழைப்பே ஒப்பற்ற தனிப்பெருங் கல்வி. இயைபு முறை இதிலிருந்து விளைவதே. இயைபுப் போதனை என் பதற்காக எதையும் தொழிலுடன் இயைக்க வேண்டும் என்று எண்ணுவது பிழை. எல்லாப் பாடங்களையும் ஓரளவுக்குத் தொழிலுடனும் இயற்கைச் சூழ் நிலையுட னும் சமூகச் சூழ்நிலையுடனும் இயைத்துக் கற்பிக்க முடியும். முடியாவிட்டால் பாதகமில்லை. வலிந்து ஒவ்வொரு பாடத்தையும் தொழிலுடன் கட்டாயமாக முடிச்சுப்போட வேண்டும் என்றெண்ணுவது சரியாகாது.

பாடசாலையில் தொழில் நடத்துவது கல்விக்குப் பயனுள்ள சாதனம் என்பதை நெடுங்காலமாக அனேகர் ஒப்புக்கொள்வது உண்மை. ஆனால், தொழிலை, கல்விக் குத் துணையான மற்றொரு காரியம் என்றுதான் எல்லோரும் கருதினார்கள். கல்விக்குத் தொழில் ஒரு கருவி, மிகவும் பிரதானமான கருவி என்று யாரும் முன்பு கருதியதில்லை. தொழில்மூலம் கல்விக்குத் திட்டம் செய்யும்போது, இயைபுமுறை உருவாகிறது. தொழில் என்பது எல்லாச் சூழ்நிலைகளும் கூடும் இடம். தொழில்

மூலம் கல்வி என்ருல், பிள்ளைகள் செய்வதில் வல்லவர்களா கிருர்கள். ஆனுல், படிப்பதில் ஆவதில்லை யென்ற தப்பான எண்ணம் இருக்கிறது. அறிவு வளர்ச்சி என்பது குழந்தை நிலையில் வெறும் சொல்லை வைத்து ஏற்படமுடியாது. திட்ட வட்டமான ஸ்தூலப் பொருள்களையும் காரியங்களையும் வைத்தே ஏற்படவேண்டும். பாடப் புத்தகம்தான் படிப்பு என்று எல்லோரும் இன்று கொண்டிருக்கிற எண்ணம் தவறு. பொருள் - காரியங்களில் ஈடுபட்ட பிறகு புத்தகம் துணையாயிருக்கிறது. செயல் செய்வதன்மூலம் புலன்களின் பயிற்சியும் கைத்திறமையும் கண் - மனங் களின் பயிற்சியும் பெற்று வளர்ந்த பையன் தன் பிரசினை களைத் தீர்க்க மேலும் மேலும் விஷய அறிவு தேடும்போது, புத்தகம் உதவுகிறது. விஷயமே வாழ்க்கையில் இடம் பெறும்போது, புத்தகம் வெறும் மயக்கமே தவிர, பொரு ளுடையதல்ல.

செயல் திறமை, அதன்மூலம் புத்திக்கூர்மை, இரண் டின் இடையேயும் மனவளர்ச்சி, நல்லொழுக்கம் - இவ்வித ஒருமித்த வளர்ச்சி, வாழ்க்கைத் தொழில் மூலம்தான் கை கூடுகிறது.

63. ஆதாரப் பாடசாலை—சுய ஆட்சி முறை

இங்கு ஆதாரப் பாடசாலை வேலை முறையையும் அதன் பயனையும் நினைவு கூர வேண்டும். பாடசாலையானது ஒழுங் கான அமைப்புடைய ஒரு சிறு சமூகம். ஓரளவு பாதுகாப் புக் குட்பட்டு, குழந்தை தன் சுயேச்சையான வாழ்வு வாழ இங்கு இடம் அளிக்கப் பெறுகிருன். இதுவே பிற்பட்டு அவனுக்குத் தேவையாகக் கூடிய சமூகப் பயிற்சி. இங்கு அவன் வாழும் கலையை வாழ்ந்தே கற்கிருன். ஆசிரியர் மூத்த சகோதரர் போல் உடன் இருந்து உதவுகிருர். தங்கள் விவகாரங்களைப் பிள்ளைகள் தாங்களே நிர்வகிக்கப் பயிலுகிருர்கள். பிள்ளைகள் சமூகம் ஒரு சுய ஆட்சி ஸ்தாபன

மாக இருக்கிறது. மந்திரிசபை, நியாயசபை முதலிய அமைப்புக்களால், பிள்ளைகள் தயக்கமும் கூச்சமும் நீங்கித் தைரியமாக விவகாரங்களை நடத்தும் ஆற்றல் பெறுகிறார்கள். புறக்கட்டுப்பாடு இல்லாமல் அகக் கட்டுப்பாடு இங்கு வளர்கிறது.

இந்தச் சுய ஆட்சி முறையினால் கிடைக்கும் நன்மைகள் பல.

1. பிள்ளைகள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள அறிகிறார்கள். ஆசிரியருடைய அதிகாரமும் புறம்பான கட்டுப்பாடும் குறைவாயிருக்கின்றன.

2. தாங்களே தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளுக்குக் கட்டுப்படவேண்டும். ஏன் என்பது தெரிகிறது. கீழ்ப்படிந்து நடக்கும் பழக்கம், பணிவு உண்டாகிறது.

3. சிறுவன் தனக்கும் சமூகத்துக்கும் என்ன தொடர்பு என்று உணர்கிறான். உணர்ந்து சமூகத் தேவை நிறைவேறும் வகையில், தான் நடக்கிறான். பிறருடன் ஒத்துழைப்பதில் பயிற்சி பெறுகிறான். சமூகத்தில் வழங்கி வரும் சம்பிரதாயங்களையும் தரங்களையும் உயர்த்தி நிலை நிறுத்துவது தன் கடமை என்று அறிகிறான். அவற்றில் பெருமையும் கொள்ளுகிறான்.

4. சமூகம் தனி மனிதனை எப்படிப் பாதிக்கிறது என்றும், மனிதன் சமூகத்தை எப்படிப் பாதிக்கிறான் என்றும், பிள்ளைகள் நேர்முக அறிவு பெறுகிறார்கள்.

5. அற்பத்தனம், கீழான பொறாமை, கோபதாபம் முதலியன நீங்குகின்றன. சொந்த விருப்பு வெறுப்புக்கள் அடங்குகின்றன. நீதியுணர்ச்சி ஓங்குகிறது. சமூக நன்மையை நாட எல்லோரும் பழகுகிறார்கள்.

6. மற்றவர்களைத் தராதரம் பார்த்து நிதானிக்கவும், தகுதியை அறியவும், சிறந்தோரைப் பொறுக்கவும், தவற்றை அஞ்சாமல் எடுத்துக்காட்டித் திருத்தவும் தேர்தல் முறை போன்றவற்றால் ஆற்றல் பெறுகிறார்கள்.

7. சில சமயம் தவருன தேர்தலால் இடையூறும் கேடும் விளைகின்றன. இவ்வனுபவம் மேலும் நல்லறிவு கொடுக்கிறது. இவ்வனுபவத்தினுல், எதிர்காலத்தில் நல்ல குடிமக்களாக வாழ்வதற்கு வேண்டிய தயாரிப்பும் இங்கே கிடைக்கிறது.

8. சமூக வாழ்க்கையில் கட்டுப்பாடு இருக்கத்தான் வேண்டும். இது சுதந்திரத்துக்கு முரண் ஆகாது. சொந்த விருப்புக்களைச் சமூகத்துக்கு அடங்கி ஒதுக்கி வைப்பது தான் வாழ்க்கையின் சிறப்பு என்று பயின்றே காண்கிருர்கள்.

9. தங்கள் பாடசாலை சிறிய பாடசாலையாய் இருந்தாலும், அது தங்களுடையது என்று போற்றி, அதில் பெருமை கொண்டு, அதன் புகழையும் நற்சம்பிரதாயங்களையும் மகிழ்ச்சியோடு தாங்களாக வளர்க்கிருர்கள்.

ஒரு சிறு மாறுதல் சூழ்நிலையை முற்றும் மாற்றிவிடும். சாமானியப் பாடசாலையில் பிள்ளைகள் உபாத்தியாயரை 'சார்' என்றே அழைக்கிருர்கள். உபாத்தியாயர் பெண்ணுயிருந்தால், 'டீச்சர்' என்கிருர்கள். (ஆண் பிள்ளை 'டீச்சர்' அல்ல போலும்!) இப்படியே சுற்றியுள்ள மக்கட் சமூகமும் இவர்களை சார் என்றும் டீச்சர் என்றுமே கூறுகிறது. ஆங்கிலேயன் அதிகாரத்தை விட்டுப் போயும், அவன் பாஷைக்கு, ஆரம்பப் பாடசாலை நிலையில் நாம் அடிமையாய் இருக்கவேண்டுமா என்ன? ஆதாரப் பாடசாலையிலோ, இருவரும் முறையாக **அண்ணுவும் அக்காவும்** ஆகிவிடுகிருர்கள். இந்தப் பெயர்களே பிள்ளைகள் - உபாத்தியாயரிடையே ஓர் உறவை ஏற்படுத்துகிறது. அதனேடுகூட, பாடசாலைச் சமூக அமைப்பில் ஆசிரியருக்குரிய ஸ்தானத்தையும் இவ்வெளிய சொற்கள் வரையறை செய்துவிடுகின்றன. அண்ணுவுக்கும் அக்காவுக்கும், சமூகத்தில் எவ்வளவு பொறுப்பு? மூத்த சகோதர சகோதரிகள்தானே!

அதிகாரம் எங்கோ மறைந்துவிடுகிறது. அன்பு யுகம் பிறக்கிறது.

64. ஆதாரக் கல்வியும் குடிமைப் பயிற்சியும்

1. பண்டைய முறையிலிருந்த சம்பிரதாயமான ஆரம்பக் கல்வியில் குடிமை பற்றிய கிரமமான உணர்வு அபிவிருத்தி அடைவதற்கான முறைகள் தினசரிக் கல்வி அங்கமாக இல்லை.

2. அன்றி, மனிதன் கூடி வாழும் உயிர். தனிப்பட்டு வாழ்பவனல்ல. ஆகவே கூடிவாழ்வதற்கான முறைகளும் தத்துவங்களும் பயிற்சியும் பள்ளிக் கல்வியில் பொருந்த வேண்டும்.

3. பிறப்பினுல் உயர்வு தாழ்வு, செல்வத்தால் உயர்வு தாழ்வு—இவை சமூக அநீதிகள். இவை நீங்க வேண்டும். சமூக வாழ்வில் புதிய நீதியுணர்வு பிறக்க வேண்டும். அதாவது செல்வ நிலையில் நீதி. அனைவருக்கும் பொருளீட்டவும் வாழ்க்கை வசதி தேடவும் சம சந்தர்ப்பங்கள். பிறர் உழைப்பைப் பயன்படுத்தி வாழும் சுரண்டல் வாழ்க்கையில்லாமல் தனக்காகத் தான் உழைத்து வாழும் வாழ்க்கை உழைப்பானது ஆக்கவேலை—உற்பத்தி; உற்பத்தியும் பொதுவாக சமூக வாழ்வுக்கு உதவவல்ல பொருள் உற்பத்தி. சமூகத்தில் அனைவருக்கும் பிறப்பு - செல்வம் என்பன கருதாத சம அந்தஸ்து. இக் கருத்துக்களின் திரண்ட பொருள், அனைவருக்கும் உழைக்கும் சந்தர்ப்பமும், செல்வம் ஈட்டும் சந்தர்ப்பமும் சமமாக வினியோகமாகின்றன என்பது.

4. சுதந்திர இந்தியப் பிரஜையாக வாழ்பவன் சமூகத் துறையில், பொருளாதாரத்துறையில், அரசியல்துறையில், பிறவற்றில், பண்டைய இந்தியப் பண்பாட்டை உணர்ந்து அதைப் பேணும் வகையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

குடிமை பற்றிய இவ் அடிப்படை கருத்துக்கள் ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

5. குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பான கருத்து கூட்டுறவு வாழ்க்கை. பண்டைய இந்திய நாட்டில் வாழ்க்கைத் தேவைகள் பண்டமாற்று முறை மூலமே பூர்த்தி அடைந்து வந்தன. அங்கு சுரண்டலுக்கோ, விலைவாசி ஏற்றம் என்பதற்கோ, கள்ள வியாபாரத்துக்கோ, இடமில்லை. இவற்றுக்கு அர்த்தமும் இல்லை. ஒருவர் தம்மிடம் உள்ளதைத் தாராளமாகப் பிறருக்குக் கொடுத்து, பிறரிடம் உள்ளதைச் சுதந்திரமாகப் பெற்றுக் கொண்டார். இத் தகைய ஒரு சமூகத்தைப் புதுப்பித்து எல்லா மக்களிடையிலும் கூட்டுணர்வைத் தோற்றுவித்து நின்று நிலைக்கச் செய்வதே ஆதாரக் கல்வியின் திட்டம்.

இவை குடிமைப் பயிற்சி பற்றிய சில கருத்துக்கள். விரிவை ஆதாரக் கல்வி - சுய ஆட்சிமுறை (பகுதி 63), ஆதாரப் பாடசாலையும் சமூகமும் (பகுதி 68) என்பவற்றுள் காணலாம்.

65. ஆதாரக்கல்வியும் ஜனநாயகமும்

ஜனநாயக வாழ்க்கைக்கு ஒவ்வொருவனையும் தயார்ரிப்பது ஆதாரக் கல்வியின் நோக்கங்களில் ஒன்று. (பக்கம் 14-15, 42). ஆதாரக் கல்வியின் பாடத் திட்டம், பாடசாலை வேலைமுறை, வகுப்பு நிர்வாகம் யாவும் இந்த அடிப்படையில் அமைந்துள்ளன.

எந்த ஆட்சியில் எல்லோருக்கும் சமமான உரிமையும், சந்தர்ப்பங்களும் கிடைக்கின்றனவோ அந்த ஆட்சியே சிறப்பானது. அதுபோல, அகத்திலிருந்து எழும் கட்டுப்பாடுதான் கட்டுப்பாடு. அன்றி, புறத்திலிருந்து வருவது கட்டுப்பாடு அன்று. பண்டைய ஆட்சிமுறைகள், குறிப்பாக பஞ்சாயத்து ஆட்சி போன்றன யாவும், இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் எழுந்தன. அனைவருக்கும் சம உரிமை,

அனைவருக்கும் சம சந்தர்ப்பங்கள், அனைவரிடத்திலும் தானாக எழுகின்ற ஒழுங்கு முறை—இவைகளே பண்டைய நாகரிகத்தின் இலக்கணம். இவற்றை ஜனநாயகப் பண்புகள் என்றாலும் சரி, குடிமைப் பயிற்சிக்கான திட்டங்கள் என்றாலும் சரி—இவையாவும் ஆதாரக் கல்வித் திட்டத்தில் அடிப்படையான கருத்துக்கள். இக் கருத்துக்களை அன்போடும், உண்மையோடும் பிள்ளைகளிடம் அமையும்படி ஆசிரியர் செய்கிறார். அப் பிள்ளைகள் வளர்ந்து வரும் காலத்தில் இந்தப் பண்புகள் அவர்களிடத்தில் விளக்கம் பெற்று, புதிய சமூக அமைப்பு உருக்கொள்ளுமென்று நம்பலாம்.

பகுதிகள் 63, 64, 68. பார்க்க.

66. ஆதாரக்கல்வியும் நிர்மாணத் திட்டமும்

நிர்மாணத் திட்டம் என்பது இந்திய மக்களுடைய அடிமை நிலையைப் போக்கிப் பிரிட்டிஷாருடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுத் தனி சுதந்திர மனிதனாக வாழ, ஒவ்வோர் இந்தியனும் தன் வாழ்க்கையை எவ்வாறு நடத்த வேண்டும் அல்லது நிர்மாணிக்க வேண்டும் என்று காந்தியடிகள் காட்டிய ஒரு வழியாகும். அவர் முதல் முதலில் தனிப்பட்டோர் சத்தியாக்கிரகம் தொடங்கியபோது, நாட்டின் சுதந்திரப் போர்வீரர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு இத்திட்டங்களைப் பதின்மூன்றாகத் தொகுத்து, பின் பதினெட்டாக விரித்து, சுருங்கிய நூலாக வெளியிட்டார். அவர் குறிப்பிட்ட பதினெட்டுத் திட்டங்கள் பின்வருவன:

1. கதர் அபிவிருத்தி.
2. இந்திய நாட்டு கைத்தொழில்களின் வளர்ச்சி.
3. மத (ஹிந்து-முஸ்லிம்) ஒற்றுமை.
4. பெண்களின் முன்னேற்றம்.
5. மதுவிலக்கு.
6. புதுமுறைக் கல்வியாகிய ஆதாரக் கல்வி.

7. வயது வந்தோர் கல்வி
8. தாய்மொழி வளர்ச்சி.
9. ஹிந்தி மொழி.
10. கிராம சுகாதாரம்.
11. சொந்தத் துப்புரவு.
12. ஹரிஜன முன்னேற்றம்.
13. பொருளாதார சமத்துவம்.
14. விவசாயிகள் முன்னேற்றம்.
15. குஷ்டரோகிகளுக்கான சேவை.
16. இந்தியப் பூர்வ குடிகளின் முன்னேற்றம்.
17. மாணுக்கரிடையில் தேசப்பணிப் பிரசாரம்.
18. தொழிலாளர் முன்னேற்றம்.

இந்த பதினெட்டுத் துறைகளில் தனி மனிதனுடைய கவனம் சென்று, ஒவ்வொன்றையும் சீர்படுத்த முற்பட்டாஞனல் அந்த நிலேயே சுயராஜ்யம், பிரிட்டிஷ் ஆட்சிக்கு அஞ்சி ஒடுங்க வேண்டியதில்லே என்று அவர் எழுதினர்.

இந்தப் பதினெட்டினுள்ளும், ஆதாரக் கல்வி என்ற திட்டம் மிகப் பெரியது, சிறப்பானது என்பது அவர் கருத்து. "ஆதாரக்கல்வி என்ற பெருங்கடலில் பிற நிர்மாணத் திட்டங்களாகிய சிற்ருறுகள் வந்து சங்கமமாகின்றன" என்று அவர் கூறுவார். அவருடைய நிர்மாணத் திட்டங்களின் அடிப்படை சத்தியமும் அஹிம்சையும்.

திட்டங்களில் முதன்மையானது கதர். இதுபற்றி விவரிக்க இங்கு இடமில்லே. கதர்த் தத்துவத்தின் சாரம், கிராம வாசியினுடைய ஜீவாதாரத் தேவைகளில் இரண்டாகிய உணவு, உடை ஆகிய இரண்டிலும் சுயதேவைப் பூர்த்தி ஏற்பட அது உதவுகிறது என்பது. ஒரு வழியும் அற்றவனுக்கு, கதர்த்தொழில் சோறுபோடும் என்பது கண்கூடு. எனவே, நம் பள்ளிகளில் கதருக்கு முதலிடம் கொடுத்திருக்கிருேம். நூற்றல் நெசவை வற்புறுத்துகிருேமென்ருல், அதன் பொருள், பரம ஏழைகூட அடிமை நிலே

யைக் கடந்து சுதந்திரமாக வாழ வழி காட்டுகிறோம் என்பதேயாகும்.

கதரோடு கூட, நாட்டுக் கைத்தொழில்களும் முக்கியமானவை. உதாரணம் பனைவெல்லம், தேனீ வளர்ப்பு, நாட்டுச் செக்கு, பாய் நெசவு போன்றன. இயந்திரப் போட்டி மலிந்த இந்த யுகத்தில் அதை மறந்து கிராமக் கைத்தொழில்களுக்கு ஆதரவு தந்தால் எளிய மக்களுக்கு நல்வாழ்வு கிட்டுமென்பது உறுதி. பாடசாலையில் உப தொழில்கள் இக் கருத்தோடுதான் கொள்ளப்படுகின்றன.

ஆதாரப் பள்ளியானது கூட்டு வழிபாடு, கூட்டு உழைப்பு, கூட்டு உணவு முதலான திட்டங்களால் மத வேற்றுமையையும், சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் போக்கி வருகிறது என்பது இன்று காண்கிற உண்மை. ஆண்பெண் வேற்றுமையின்றி, பள்ளியளவில் கலந்து கற்கவும், பழகவும், பொறுப்பு ஏற்கவும், வேலை செய்யவும் திட்டமிடும்போது, தானே மாதர் முன்னேற்றம் ஏற்படுகிறது. நூற்புத் திட்டத்தினால் திக்கற்ற ஏழைப் பெண்களுக்குக்கூட ஜீவனோபாயமும் சுதந்திரமும் கிடைக்கிறது.

பழைய இந்திய அரசியல் சட்டப்படி மதுவினால் வரும் வருமானம் கல்விக்கு என்றிருந்தது. கல்வி தனக்காகும் செலவைத் தானே சரிக்கட்டவேண்டும் என்று ஆதாரக் கல்வி திட்டமிடுவதால், மது வருமானம் வேண்டுமென்பதும் அடிபட்டுப் போகிறது.

கல்வித்துறையில் நான்கு நிர்மாணத் திட்டங்கள் உள்ளன. ஒன்று ஆதாரக் கல்வி. இதனுள் சர்வஜனக் கல்வி வேண்டும், வாழ்க்கை வாழக் கற்கவேண்டும், தாய்மொழி மூலம் கற்றால்தான் கல்வி வளரும், நாட்டுக்குப் பொது மொழியாக ஹிந்தி ஒன்று வேண்டும் என்ற கருத்துகள் அடங்கியுள்ளன. இவை பிறதிட்டங்களை நிறைவேற்றுவன.

சுகாதாரம் பற்றிய இரண்டு திட்டங்களையும் பள்ளியினுடைய துப்புரவு ஆரோக்கிய பாடத்திட்டம் தினசரி வாழ்க்கையில் நடத்தி வருகிறது. அவ்வாறே குஷ்டரோக சேவை என்ற செயல் பள்ளியில் நேர்முகமாய் இல்லாவிட்டாலும்கூட, அது பற்றிய அறிவைப் பிள்ளைகள் பெற இடமிருக்கிறது.

செல்வநிலை, சாதி முதலிய வேற்றுமை கருதாமல் எல்லோரும் பள்ளியில் உடல் வருந்தி உழைக்கவேண்டி வருவதால், பொருளாதார சமத்துவம், தொழிலாளர் முன்னேற்றம் ஆகிய கருத்துக்களும், குறித்த சூழ்நிலையில் ஆதிவாசிகள் இருந்தால் அவர்களுடைய சேவையும், நடைபெறுகின்றன. பள்ளியில் தோட்ட வேலையும் விவசாயமும் ஒரு துணை வேலையாகையால், உழவர் முன்னேற்றம் என்ற நிர்மாணத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இங்ஙனமாக, காந்திய நிர்மாணத் திட்டங்கள் பதினெட்டும் வேறுபாடின்றி ஆதாரக் கல்வித் திட்டத்தினுள் ஒன்றி இருப்பதைக் காணலாம். காந்தியடிகள் இறந்த பின், அவருடைய நிர்மாணத் திட்டத்தை அமுல் நடத்திய ஊழியர் பலரும் 1948 மார்ச்சுமாதம் ஒன்றுகூடி ஒரு சர்வோதயத் திட்டம் வகுத்தார்கள். இதில் நிர்மாணத் திட்டங்கள் பதினெட்டுடன், புதிய நான்கு பகுதிகள் சேர்த்திருந்தார்கள். அவை பின்வருவன :

19. பசுபாலனம்.
20. இயற்கை வைத்தியம்.
21. அகதிகள் சேவை.
22. மற்றவை.

இவற்றுள் பசுபாலனம் என்பது தோட்டத் தொழிலோடும் இயற்கை வைத்திய மென்பது துப்புரவுப் பாடத்தோடும் ஒன்றி இருக்கின்றன.

இங்குக் கூறியவற்றால், வெற்றிகரமான ஆதாரக்கல்விப் பள்ளி செய்யும் வேலை முழுமையும் நிர்மாணத்திட்ட வேலைதான் என்பது விளங்கும்.

67. ஆதாரக்கல்வியும் சர்வோதயமும்

1. சர்வோதயத் தத்துவத்தை ஆதாரக் கல்வியானது சிறப்பாக மூன்று அம்சங்களில் கைகூடச் செய்கிறது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்பது குறள். பொருளாதார சமத்துவம், பிறப்பினால் சமத்துவம் போன்ற கருத்துக்கள் சர்வோதயத்தின் அடிப்படை. சமூகத்தில் அனைவருக்கும் - ஏழைக்கும் செல்வருக்கும் பொருள் தேட, வாழ்க்கையில் முன்னேற, வாழ்வு நடத்த, தொழில் செய்ய சம சந்தர்ப்பங்கள் அமைய வேண்டும். வாழ்க்கையில் அனைவருக்கும் சமமான சமூக அந்தஸ்து இருக்கவேண்டும். இது சர்வோதயம். இது கைகூடவல்ல சமுதாயத்தையே ஆதாரக் கல்வி தோற்றுவிக்க முயல்கிறது.

2. சர்வோதயம் தனிப்பட்டோர் முன்னேற்றமாகும். உணவு உடை உறையுள் என்ற மூன்றில் சுயதேவைப் பூர்த்தி நிறைவேற வேண்டும் என்று திட்டமிட்டிருப்பதால், ஆதாரக் கல்வி தனிப்பட்டோர் முன்னேற்றம் கைகூடும்படி செய்கிறது.

3. பரவல் முறை குவியல் முறை என்ற சொற்கள் பொருளாதாரத் துறையில் இன்று உலவுகின்றன. தொழில்கள் யாவும் ஓரிடத்திலே சேர்ந்து செல்வம் ஓரிடத்திலே குவியக் காரணமாவது குவியல் முறை. நாட்டின் செல்வம் முழுமையும் சிறு சிறு பகுதிகளான தனி இடங்களில் தான் இருக்கவேண்டும். சிறு இடங்களின் பெருக்கமே பரவல்முறை. இது குவியல் முறையைப் போக்கும். இந்தச் சர்வோதயக் கருத்து ஆதாரக் கல்வியில் அப்படியே இடம்

பெற்றுள்ளது. தனிப்பட்டவரின் சுயதேவைப் பூர்த்தி என்ற ஆதாரக் கல்வி நோக்கமே இதையும் சாதிக்கிறது.

4. சர்வோதயம் என்ற சொல் மகாத்மா காந்தி படைத்தது. ஜான் ரஸ்கின் என்ற பிரிட்டிஷ் ஞானி எழுதிய "இவ்வளவு கீழானவருக்கும்" என்ற தலைப்புடைய கட்டுரையைப் படித்து, அதனுல் மனம் கவரப்பட்டு, அப்புத்தகத்தைச் சுருக்கி குஜராத்தி மொழியில் **சர்வோதயம்** என்ற பெயருடைய சிறுநூலாக மகாத்மா காந்தி வெளியிட்டார். சர்வோதயத்தின் ஒரு முக்கிய தத்துவம் காந்தியடிகளின் கருத்தின்படி தன் ஜீவனத்துக்காக மனிதன் உடல் வருந்தி உழைக்க வேண்டுமென்பது. கீதை, மூன்ரும் அத்தியாயம் இதையே கூறுவதாக அவர் கருதுகிருர். பைபிள் கூறுகின்ற கருத்தும் இதுவே. "உன் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து நீ சோறு பெறுவாயாக."

ஆகவே, காந்திய சர்வோதயத்தில் எல்லோரும் உழைக்கவேண்டியவர்கள். இந்த உழைப்பின் மூலம் எல்லா மக்களுக்கும் முன்னேற்றம் விளையவேண்டும். ஆகவே சுயராஜ்யமென்ருல் எல்லோருக்கும் உதயம், எல்லோருக்கும் சுதந்திரம், எல்லோருக்கும் புது வாழ்வு. அது மட்டுமல்ல. இன்னும் நுணுகிப் பார்த்தால் எல்லோருக்கும் எல்லா அம்சங்களிலும் புதுவாழ்வு; சர்வ சக்திகளுக்கும் புது உதயம். பொருளாதார மலர்ச்சிமட்டுமன்று: சமூக மலர்ச்சி, சமய மலர்ச்சி, கலைத்திறன் மலர்ச்சி போன்ற யாவும். காந்தியடிகள் இந்தப் பூரண மலர்ச்சி தருவதற்குத் தோட்டிவேலையே நல்வாழ்வு காட்டுமென்றும் கூறுவார். தோட்டிவேலையே மனிதனது சமத்துவத்தை நன்கு உணர்த்தவல்லது என்பார்.

ஆதாரக் கல்வியில் இந்தக் கருத்துக்கள் இடம் பெறுகின்றன. உடலுழைப்பு எல்லோருக்கும் நிர்ப்பந்தமாய் உண்டு. தோட்டிவேலை உண்டு. சகல திறன்களின் பூரண மலர்ச்சிக்கும் வழிவகைகள் உள்ளன. தொழிலால் இழிவு

இல்லை. சாதியால் இழிவு இல்லை. வளர்ச்சிக்கான சம சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் கிடைக்கின்றன. ஆதாரக் கல்வி உண்டாக்க விரும்பும் புது சமூகத்தின் லக்ஷ்யமே ஒரு சர்வோதய சமூகந்தான். (இதன் விரிவை பகுதி 1 சமூக லக்ஷ்யம் என்ற தலைப்பில் பக்கம் 9—14 காண்க.)

68. ஆதாரப் பாடசாலையும் சமூகமும்

இன்றைய கல்வி முறையில் பாடசாலையும் சமூகமும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் வளர்கின்றன. பாடசாலையின் வேலை, வரும் பிள்ளைகளுக்கு எழுத்தறிவூட்டுவது. சமூகத் தேவையை அது கவனிக்க வேண்டியதில்லை. சமூக வாழ்க்கைக்கு அது உதவ வேண்டியதில்லை. சமூக சேவை அதன் வேலை அல்ல.

ஆதாரப் பாடசாலையில், குழந்தையின் தேவையே முதன்மையானது. பாடம் அவ்வளவு முதன்மையுடையது அன்று. குழந்தையின் தேவை என்ருல், அதன் சூழ்நிலையைத் தழுவியதாகும். இதுவே சமூகத்தின் தேவை என்ருல் தவறில்லை. ஆகவே, குழந்தையின் உடல் வளர்ச்சி மன வளர்ச்சி இரண்டையும் ஆசிரியர் கவனிக்கும்போது, சமூகத்தைக் கவனிக்கவேண்டியவராகிருர்.

இனி ஆதாரக் கல்வி என்பது, காந்தியடிகளின் திட்டப்படி ஒரு சர்வோதய சமுதாயத்தை உருவாக்க வேண்டியது. சமூகங்களினிடையே ஒற்றுமை உண்டாக்குவது மட்டுமல்லாமல், கூட்டான சமூக வளர்ச்சிக்கும் இது திட்டமிடும். இதன் சமூக அமைப்பில் சாதி வேற்றுமைகள் மறையும், சமய வேறுபாடுகள் வாழ்க்கையைக் குலைக்க மாட்டா. பணக்காரர் ஏழை, ஆண்டான் அடிமை என்ற வேறுபாடுகள் காலக்கிரமத்தில் குறையும்.

மற்ருெரு புறம் இக்கல்வி, சர்வ ஜனக் கல்வித் திட்டம். மிகப் பெரிய ஜனத்தொகை உள்ள நம் நாட்டில், எழுத்துப் படிப்பும் மிகக் குறைந்துள்ள இந்த நாட்டில், சர்வ ஜனக்

கல்வி என்பது மிகவும் பெரிய திட்டம். பண வருவாயும் நம்மிடையே குறைவு. இதனுள், வயது வந்தோர் கல்வி என்பதும் மிகப் பெரிய திட்டம். திட்டத்தின் இவ்வம்சங்களை நிறைவேற்றுவதானால், பாடசாலையானது சமூகத்தோடு ஒட்டியே நடைபெறுதல்வேண்டும். சேவை மூலமும் தூண்டுதல் மூலமும், பாடசாலைக்கு வராத பிள்ளைகள் அனைவரையும் பாடசாலைக்கு வரச் செய்தாகவேண்டும். கிராம வாழ்க்கையில் போதிய இன்பந்தருவதற்கான கேளிக்கைகள் நாடகங்கள் இசைக் கச்சேரிகள், தாமே நடத்த முன்வரவேண்டும். இவ்வாறு பாடசாலை கிரமமாய்ச் சமூக வாழ்க்கைக்கு ஒரு மையமாக, நிலைக்களனாக, மாற அல்லது வளரவேண்டும். இதுவே இக்கல்வியின் திட்டம்.

கிராமக் கோளாறுகள் யாவும் பாடசாலையில் ஆராய்ந்து கவனிக்கப்பெறும். உதாரணம்: துப்புரவின்மை, குடிதண்ணீர் வசதியின்மை, நோய்கள், அறியாமை, சாதிக் கொடுமைகள், வறுமை, தாழ்வுணர்ச்சி, தெய்வ வழிபாட்டால் வரவேண்டிய நல்லொழுக்கம் குறைந்துபோனமை, எழுத்துப் படிப்பின்மை முதலாயின.

மனிதன் இயற்கையை வெற்றி கண்டான் என்று சொல்கிறோம். உடல் உழைப்பால்தான் வெற்றி கண்டான். ஆதிமுதல் அவன் தன் ஜீவாதாரத் தேவைகளான உணவு உடை இருப்பிடம் என்ற மூன்றையும் தேட முயன்று வந்தான். இத்தேட்டம் தொழில்களாய்ப் பரிணமித்தது. பாடசாலைத் தொழில் என்று சொல்லும்போது, இது நமக்கு நினைவிருக்க வேண்டும். தொழில்மூலம் உற்பத்தி தான் வாழ்க்கைக்கு வெற்றி தருவது. தொழில் என்பது கிரமமாய்ப் பாடசாலையின் சூழ்நிலையை அனுசரித்தே இருக்கும். சுற்றுப்புறத்தில் கிடைக்கும் மூலப்பொருள்கள், அங்குள்ள தொழில் வினைஞர்கள், அவர்களுடைய தேர்ச்சி, தனித் திறமை, செய்த பொருளுக்கு இருக்கக்கூடிய கிராக்கி—இவை யாவும் கவனிக்கவேண்டிய அம்சங்கள்,

இவற்றின் வழியே, பாடசாலை வேலையும் வாழ்க்கையும், சுற்றியுள்ள சமூகத்திலும் பரவுவதே நியாயம்.*

பாடசாலையில் தன்னம்பிக்கைப் பயிற்சி முக்கியமானது. இதன்மூலம் வரும் துணிவும் முதன்மையுணர்ச்சியும் தலைமைதாங்கும் தகுதியும்,சமூகத்தில் பெரிதும் தேவையானவை. ஜனநாயகத்தில் ஆங்காங்கு கிராமந்தோறும், நன்முறையில் முன்னிருந்து காரியங்களை நடத்தவல்லவர்கள் இன்று அதிகமாய்த் தேவை. தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டம், பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் போன்ற திட்டங்கள் செம்மையாக நடைபெற வேண்டும். பாடசாலையில் தலைமையேற்றுக் காரியம் நடத்துவதில் பிள்ளைகள் பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சி வாழ்க்கையிலும் வியாபிக்கும். இப்பாடசாலை அனுபவம் சமூகத்துக்குப் பெரியதொரு லாபம் என்பதில் தடையில்லை.

வின்ஷிப் என்பவர் கூறுகிருர்: "வீட்டையும் சமூகத்தையும் பள்ளியையும், படிப்பிலும் வேலையிலும் பொழுதுபோக்கிலும் இணைத்துவிடுக. பயனுள்ள எல்லாக் காரியங்களிலும் பிள்ளைகளுக்கும் சமூகத்துக்கும் ஆர்வமுண்டாக்கவல்ல விழா வகைகளைத் தேர்ந்துகொள்க. இதன் மூலம் எல்லா வகுப்பாரிடமிருந்தும் சோம்பலும், குறிக்கோளின்மையும் மனக்கசப்பும் நீங்கிவிடும்."

ஆசிரியர் தம்மைச் சமூக சேவகன் என்று எண்ணிக் கொள்வாராஞல், பிள்ளைகள் கல்வியும், அவர்கள் மூலம் சமூக வாழ்க்கையில் மேம்பாடும் வளர்ச்சியும், வாழ்க்கையின் பண்பும் பயனும், கைகூடும். ஆசிரியர் தாம் பொறுப்புவாய்ந்த ஜனநாயகப் பிரஜையாக இருப்பதோடு, இப்படி இருக்கத் தம் பிள்ளைகளைப் பயிற்றவும் வேண்டும். உடல்வருந்தி உழைத்தல், பொறுப்பு ஏற்றல், பிரசினை

*தோட்ட வேலை ஆசிரியர்—பக்கம் 2, 3 பார்க்க.

களுக்கு முடிவுகாணல், தான் தயங்காமல் செய்தல், பிறருடன் ஒத்துழைத்தல்—இத்தகுதிகளைப் பாடசாலையில் அவர் வளர்த்துத் தருவாரானல், பிள்ளைகளுக்கும் சமூகத்துக்கும் வேறு என்ன சிறப்பு வேண்டும் ?

இது பற்றி மாறுபாடான கருத்துக்கள் கூறுவோரும் உள்ர். அரசாங்க உதவி பெற்றுப் பள்ளிகள் நடப்பதால், சில பள்ளி வேலைத் திட்டங்கள் அரசாங்கத்தைப் பாதிக்குமோ என்று அஞ்சி, பள்ளிவேலை சமூகத்தைப் பாதிக்க முடியாது என்பார்கள். இதில் சொற்ப உண்மையுண்டு. விழிப்போடு நாட்டின் முன்னேற்றம் கருதிப் பிள்ளைகளைப் பயிற்ற எண்ணும் ஆசிரியர், எந்த அரசாங்கத்தின் கீழும், பிள்ளைகளை நல்ல சிந்தனை அறிவோடும் சுதந்திர மனப்பான்மையோடும் தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் வளர்த்து அவர்கள் தலைமுறையில் சமூகம் மாறுதல் அடையும்படி செய்யலாம். உண்மையில் இளம் பிள்ளைகளின் மனத்தைச் சிறு பிராயத்தில் பக்குவப்படுத்தும் பொறுப்பும் சக்தியும்வாய்ந்த பள்ளிகள் சமூகப்புரட்சியை ஏற்படுத்துவதில் மிகவும் சிறப்பானவை. ("பிள்ளைகளை என்வசம் ஒப்புவித்தால், நான் தேசத்தையே மாற்றிவிடுகிறேன்" என்று ஹிட்லரும் சொன்னர் ; காந்தியடிகளும் சொன்னர்.) அரசாங்க ஆதிக்கம் இதைப் பூரணமாய்ப் போக்கிவிட முடியாது.

பாடசாலையானது மாணக்கர் மனத்தில் நேர்முகமான புரட்சியை உண்டுபண்ணமற் போகலாம். ஆனல் பகுத்தறிவை வளர்த்துச் சுயமான சிந்தனையைப் பெருக்கிவரப் பள்ளிகள் முற்படும் பட்சத்தில், தேவையான போது இந்தப் பயிற்சி பெருத்த சமூகமாறுதலை நிச்சயமாக ஏற்படுத்தும். மேலும், சமூகம் என்னென்ன லக்ஷ்யங்களை மேற்கொள்ள விரும்புகிறதோ அத்தனையையும் பள்ளி வாழ்க்கையில் மேற்கொள்ளும்போது பள்ளியானது சமூகச் சீர்திருத்தம் ஏற்படுத்தும் சக்திகளில் முதல் சக்தியாக விளங்கும் என்பது

உறுதி. இன்றைய இந்தியக் கல்வி முன்னேற்ற ஸ்தாபனங்கள் அனேகம் இவ்வாறு புரட்சியும் முன்னேற்றமும் ஏற்படுத்தியுள்ளன. காந்தியடிகள் நிறுவிய ஸ்தாபனங்களெல்லாம் இத்தகையனவே. தாகூரின் சாந்தி நிகேதனம், இந்தியா முழுமையும் பரவியுள்ள ராமகிருஷ்ண மிஷன் கல்விச் சாலைகள், ஆதாரக் கல்விச் சங்கங்கள்—யாவும் தங்கள் தங்கள் அளவில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளன. சாதி வேற்றுமை யுணர்ச்சி ஒழிந்துவருவது சட்டத்தினாலில்லை, இவ்வகைப் பிள்ளைகளால்தான்.

69. ஆதாரக் கல்வியும் உலக சமாதானமும்

'ஒரே உலகம்' என்ற இன்றைய கருத்து பாடத் திட்டத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பார்க்க இது மிகவும் ஆடம்பரமான கருத்து என்று கருதத் தோன்றும். ஒரே விநாடியில், சொற்ப முயற்சியில், லட்சக்கணக்கான மக்களையும் மற்ற உயிர்களையும அடியோடு நாசம் செய்ய வல்ல அணுக்குண்டும் பிற நாசவேலைக் கருவிகளும் பெருகி வருகிற இன்றைய நிலையில், இது வீண் வார்த்தை என்று கருதுவது நியாயம்போல் தோற்றும். கேள்வி, மனிதன் அழியவும் அழிக்கவும் கற்றுக்கொண்டான் என்றால், மனிதன் அழிந்துபோக வேண்டுமா என்பது. வேண்டாம் என்பதே விடை. இதற்கு வழி?

1. உலக சமாதான நோக்கம் மாணவன் மனத்தில் உருவாவதற்கு ஆதாரக் கல்வியில் அனேக வழிகள் உள்ளன. முதலாவது சுயதேவைப் பூர்த்தி. இந்த நோக்கம் விசுவாசத்தோடு பள்ளியில் நிறைவேற்றப் படுமானால், உலக சமாதானத்துக்கு உறுதியான அடிப்படை பள்ளியில் ஏற்படும்.

2. பள்ளியினுடைய சமூகக் கூட்டு வாழ்க்கை மற்றொரு முக்கிய அம்சம். இதுவே சிறந்த குடிமைப் பயிற்சி. குடியாகவேயிருந்து பையன் பழகுகிறான். குழு அமைப்பு,

திட்டம், நிறைவேற்றல், கீழ்ப்படிதல் போன்ற பண்புகள் சிறந்த ஜனநாயகப் பண்புகளை உருவாக்கும். 'நாடெங்கும் வாழ நானும் வாழ்கிறேன்' என்ற உணர்வை இது ஊட்டும். சாதி வேற்றுமை இல்லாத வாழ்க்கை, பல மத விழாக் கொண்டாட்டங்கள் முதலியன ஒற்றுமை, தோழமை, சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளை வளர்க்கும். சர்வதேச சமாதானத்துக்கு வேண்டியவை இவையே.

3. அடுத்தது உடலுழைப்பு என்ற தத்துவம். உழைப்பது தாழ்வு என்ற உணர்வு நீங்கினால் வர்க்கபேதமற்ற சமூகம் உதயமாகும். சமாதானத்துக்கு இதுவே அவசியம். ஆதாரக் கல்வி இதைச் செய்கிறது.

4. பொதுவாக எங்கும் தனிப்பட்டவருடைய வெற்றியே பெரிதாகத் தெரிகிறது. ஆனால் ஆதாரக் கல்வி கூட்டு வெற்றியையே போற்றுகிறது. பரஸ்பர ஒத்துழைப்பும் கூட்டுறவான சாதனையுமே இதற்கு முக்கியம்.

5. சுரண்டலும், பொய்யும், ஹிம்சையும், போரின் தோற்றுவாய்கள். ஆதாரக் கல்வி உபதேசிப்பது சத்தியமும் அஹிம்சையும். இவையே சமாதான வாழ்வுக்கான அடிப்படைகள்.

நாடு என்பது மக்கள் தொகுதி. தனி மனிதர் சேர்ந்ததே மக்கள் தொகுதி. தனி மனிதன், தான்மட்டும் வெல்ல வேண்டும் என்ற போக்குடன் வளர்ந்தால், நாடும் வெல்லவே எண்ணுகிறது. அழிவு விளைகிறது. தான் வெல்ல வேண்டும் என்று மட்டும் திட்டமிடுவதில், போட்டியும், சுரண்டலும் விளைகின்றன. அப்படியின்றிக் கூட்டுறவான சமூகத் திட்டங்களை நடத்திவரும்போது பலர் வாழவேண்டும், பலர் வெற்றிபெற வேண்டும் என்று பிள்ளைகள் பழகி வருகிறார்கள். இளமையிலேயே ஒப்புரவு என்ற அரும் பெரும் மனிதப்பண்பை இவர்கள் நடைமுறையில் கடைப் பிடிக்கிறார்கள். "நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை" என்ற பொன்மொழி, இங்கு "கொம்பில் அரும்

பாய்க் குவிமலராய்க் காயாகிப் பழம்'' ஆகிறது. இதன் வித்து பிற்காலத்தில் அணுக்குண்டாய் இராது. சத்தியம், அஹிம்சை என்ற எருக்கொண்டு இது வளர்ந்தது ஆதலால், இது ஒரே உலகம் என்ற பயிராக முளைக்கும். போர் என்ற பேச்சு அருகி மறைகிறது. போட்டியும் சுரண்டலும் இன்றைய போர்களுக்கு வித்துக்கள். அவ்வித்துக்கள் இங்கு வறுபட்டுப்போய், முளைக்கமாட்டா ; அன்பு, சத்தியம், கூட்டுறவு, உபகாரம் என்ற புது வித்துக்கள் விதைக்கப் பெறுகின்றன. இங்ஙனம், இப் புதுக் கல்விமுறை உலக சமாதானத்துக்கான மனப்பான்மை, பற்றுக்கள், வாழ்க்கை மதிப்புக்கள்—இவற்றை, வளர்ந்துவரும் குழந்தையுள்ளத்தில் மெல்ல மெல்ல வளர்த்து வருகிறது.

70. ஆதாரக் கல்வியும் யந்திர யுகமும்

"மகாத்மா காந்தி யந்திரங்களை வேண்டாம் என்று சொல்லுகிறவர் அல்லவா? அவரால் தோற்றுவிக்கப்பட்ட இக்கல்வி யந்திரங்களில்லாமல் எல்லாம் கையாலேயே செய்துகொள்ள வேண்டும் என்று சொல்வது. தேசம் முழுமையும் மின்சாரம் மலிந்து வாழ்க்கையின் அம்சங்கள் பெரும்பான்மையும் யந்திர மயமாகும்போது, ஆதாரக் கல்வி என்ன ஆகும்? இந்த வாழ்க்கைக்கு அது உதவவும் உதவாது, இதில் அது நிற்கவும் நிற்காது'' என்று அனேகர் கூறுகிருர்கள்.

1. ஆதாரக் கல்வி என்பது மற்றெல்லாக் கல்வி முறைகளையும்போல் வெறும் ஒரு முறையல்ல. இது ஒரு வாழ்க்கை வேதாந்தம். சாதி வர்க்கபேதமற்ற ஒரு புதிய சமூகத்தைத் தோற்றுவிக்கும் லக்ஷ்யத்தை இது கொண்டிருக்கிறது. அ, ஆ எப்படிக் கற்பிக்கிறது என்பதுமட்டும் இதன் கவலையன்று. புதிய சமூகத்தில் வாழ்க்கை வசதிகள் எல்லோருக்கும் வேண்டும் என்பதை இது திட்டமிடுகிறது. வேறெந்தக் கல்வியும் இவ்வளவு உன்னதமான திட்டம் இடவில்லை.

இந்த லக்ஷ்யம் வேண்டாம் என்று யாரும் கூறமாட்டார்கள். ஜனநாயகக் குடியரசான இந்தியாவின் அரசியல் திட்டத்தின் லக்ஷ்யமும் இதுவேதான். ஆகவே, இந்த லக்ஷ்யத்தை உருவாக்கும் நோக்கமுடைய கல்வித் திட்டத்தை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

2. இரண்டாவதாக, காந்தியடிகள் யந்திரமே கூடாது என்று சொல்லியதில்லை. அவர் கூறியவற்றின் அடிப்படைத் தத்துவங்களை நன்ருய்ப் புரிந்துகொள்ள வேண்டும். மனிதன் தன் அடிப்படையான வாழ்க்கைத் தேவைகளுக்குப் பிறர் யாரையும் நம்பியிருக்கக்கூடாது; 'தன் கையே தனக்கு உதவி' என்ற முறையில், தானே இவற்றைச் செய்துகொள்ள வேண்டும் என்பது அவருடைய கருத்து. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் யந்திரங்களை நுழையவிடக்கூடாது. நுழையவிட்டால் இது சுரண்டலில் முடியும். சிலர் பலரை அடிமைப்படுத்தும் நிலை வரும். அப்போது சர்வோதயம் என்ற உன்னத சமூக லக்ஷ்யம் பாழ்படும். நெசவாலை வேண்டாம், கையால் நூற்கும் நூலும் கைத்தறி நெசவும் கொண்ட கதர்தான் வேண்டும் என்பதன் தத்துவம் இதுவே; மில்லரிசி கூடாது, கைக்குத்தலரிசிதான் வேண்டும் என்பதும் அப்படியே. கைக்குத்தலரிசியில் உணவுச் சத்து அதிகம் உண்டு என்பது வேறு தத்துவம். சோற்றுக்கும் துணிக்கும் பிறரை எதிர்பாராமல் தன் காரியத்தைத் தானே நடத்திக்கொள்ளும் பயிற்சியே கல்வி.

3. ஆதாரக் கல்வி ஆதாரப் பாடசாலைகளுக்கு மட்டுந்தான் என்று சொல்லிவந்த காலம் போய்விட்டது. கிராமம் நகரம் என்ற வேறுபாடில்லாமல் எல்லாப் பிள்ளைகளுக்கும் இக்கல்வி உரியது. கிராமத்துக்குக் கையால் செய்யும் தொழில், நகரத்துக்கு யந்திரத் தொழில், என்று சொல்லவியலாது. பொருத்தமான அளவு யந்திர தத்துவங்களும் அவற்றின் அடிப்படையான விஞ்ஞான அறிவும் எல்லாப்

பிள்ளைகளுக்கும் வரவேண்டியவை. பெரிய நகரங்களில் பார்க்கிருேம் ; வீடுகளில் மின்சாரம் பொருத்தியிருக்கிருர்கள் ; ஒரு சிறு விளக்கோ அதற்கு மின்சாரம் கொண்டு வரும் கம்பியோ கெட்டுப் போயிற்று என்ருல், அதைச் சரிசெய்ய, 'எலக்ட்ரீஷியன்' தேடுகிருர்கள். அந்த வீட்டுக்குரியவர் கல்லூரியில் பௌதிக சாஸ்திரம், மின்சார சாஸ்திரம் படித்தவராயும் இருப்பார். ஆனல் கெட்டுப் போன கம்பியைச் சரிப்படுத்த அவருக்குத் தெரியாது ! பிள்ளைகள் ஆதாரக்கல்வி பயிலும்போது, இவ்வித நிலைமை நகரத்திலும், கிராமத்திலும், எங்குமே இராது.

4. பையன் ஆதாரக் கல்வி பயின்ருன் என்ருல், கருத்து, மற்றவர்களைவிட, அவன் கண்ணும் கையும் மனமும் ஒருமித்து வேலை செய்யும் என்பதாகும். அவன் இனித்தான் புதிதாகப் பழகுவான் என்பதில்லை. தானுய்த் திட்டமிட்டு எக்காரியத்தையும் தன்னம்பிக்கையோடு அவன் செய்து பழகியவன். சுத்தமாயிருக்கத் தெரிந்தவன். சமூகத்தைச் சுத்தமாய் வைத்திருக்க அறிந்தவன். இக்கல்வி பெற்ற பையன், வளர்ந்துவரும் இந்தியப் பெருந் தொழில்களில் ஈடுபடும்போது, மற்றப் பையனைவிட அதே தொழிலைப் பன்மடங்கு மேலாகச் செய்வான். அவனுல் தொழிலின் தரமும் மேம்பாடு அடையும். குமஸ்தா வேலை முதல் எந்த வேலையா யிருந்தாலும்கூட, தன்னம்பிக்கை நிறைந்த பையன் மற்றவர்களைவிட உயர்வானவன் ; காரியங்களை நன்ருய்ச் செய்வான் என்று ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

5. எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டும் என்று அஞ்சி அஞ்சிச் சாகிற புத்தகப் புழுவைவிட, இதை நான் செய்தேன், இதை நான் சாதிப்பேன் என்று மார்தட்டி - பேசி அல்ல - செய்ய வல்ல சிறுவன் எவ்வளவோ உயர்வானவன் அல்லவா ?

6. மற்ருெரு முக்கியமான அம்சம். கடவுள் மனித னிடத்தில் பலவிதமான பண்புகளைப் படைத்திருக்கிருர். கல்வி முறையின் குறைபாட்டால், வாழ்க்கையில் எல்லாப் பண்புகளுக்கும் தேர்ச்சியோ திருப்தியோ நாம் பெறுவ தில்லை. உடல் பண்புகள், உணர்வுகள், புத்தி, ஒழுக்கம், ஆன்ம வாழ்வு, சமூக வாழ்வு, அழகுணர்ச்சி—இவை பண்பு களிற் சில பகுதிகள். புத்தகப் படிப்பில் வளர்ந்தவர்களுக்கு இவை எல்லாவற்றிலும் திருப்தி ஏற்படவில்லை. படிக்கா மலே பிழைக்கக் கற்றுத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் வாழ்க்கை திருப்தி யளிப்பதில்லை. இருவருக்கும் ஏக்கம் இருக்கிறது. தரக்குறைவான, சமூகக்கேடான, கேளிக்கை கள் ஏற்பட்டு, மக்கள்பணத்தை அவை கொள்ளைகொள்வது, இவ்வேக்கம் சமூகத்தில் இருப்பதால்தான். ஆனல், ஆதாரக் கல்வி ஒருமித்த குழந்தை வளர்ச்சிக்குத் திட்டமிடுகிறது. இக்கல்வியில், குழந்தைகளின் எல்லாப் பண்புகளும் ஒரு சேர, அழகாக, இயல்பாக, வளரவேண்டிய ஏற்பாடுகள் இருக்கிறபடியால், எது பற்றியும் ஏக்கமும் குறைபாடும் இருப்பதற்கில்லை. பிள்ளைகளின் எல்லாப் பண்புகளும் நிறைவு பெறுகின்றன. இவை, செய்யும் வேலை மூலமாகவே, படிப்பு மூலமாகவே, வாழ்க்கை மூலமாகவே நிறைவு பெறு வதால், பிந்திய வாழ்க்கையில் தனியான தாகம் இராது; இதைத் தணிப்பதற்கான கீழ்த்தரமான கேளிக்கைகள் தோன்றவே அப்போது இடமிராது.

7. இனி, வாழ்க்கையில் அனேகர் இன்று தங்களுக்கு விருப்பமான வேலையில் ஈடுபட்டிருக்கவில்லை. கைத்திறமை யுடையவரொருவர் ஒரு மெக்கானிக் ஆகாமல், குமாஸ்தா வேலையில் இருக்கிருர். படிப்பில் ஆர்வமுடையவர் டைப் அடித்து வருகிருர். இப்படி எத்தனையோ கோளாறுகள். காரணம், பிள்ளைகளின் மனப்போக்கை இளமையில் கண் டறிந்து, அவரவர்க்கேற்ற தொழிற்பகுதியில் செலுத்தும் ஏற்பாடு இல்லாமையே. நிலைமை ஆதாரக்கல்வி முறையில்

அபிவிருத்தி அடைந்துள்ளது. அறிவுடன் கூடிய மேற்பார்வையில், பிள்ளைகளிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களையும் பற்றுக்களையும் மனப் போக்குக்களையும் கண்டறிய முடிகிறது. அவனவன் எந்த முறையில் அபிவிருத்தி பெற்ருல் அவனுக்கும் சமூகத்துக்கும் நன்மையோ அந்த முறையில் ஒவ்வொரு பிள்ளையையும் பெண்ணையும் வளர்க்கும்போது, இவ்வுணர்ச்சியால் யந்திர யுகத்துக்கும் நன்மைதான் என்பதில் என்ன தடை ?

8. எல்லோரும் உழைக்கவேண்டும் என்று சொல்வதால், ஆதாரக் கல்வி, படித்தவர் - உழைப்பவர் என்ற இரு பிரிவுக்குமிடையுள்ள வேற்றுமையைத் தவிர்க்கிறது.

9. மற்றும் இக்கல்வி, யந்திரத்தைத் தனக்கு வேலை செய்ய வைத்திருக்குமேயன்றி, தான் யந்திரத்துக்கு அடிமையாகி விடாது.

71. ஆதாரக் கல்வியில் கண்காட்சி

ஆதாரக் கல்வி நடைபெறும் எல்லா வகைக் கல்விச் சாலைகளிலும் நிரந்தரமான கண்காட்சிச்சாலை ஏற்பட்டிருக்கிறது. விழாக்கள் நடக்கின்ற சிறப்பான சமயங்களில் தனியான பொருட் காட்சியும் அமைத்து வருகிருர்கள். இந்த இரண்டும் மிக்க பயனுடையன.

ஜாகிர் ஹுசேன் கமிட்டியார் பரீக்ஷையைக் குறிப்பிட்டபோது, ஜில்லாக்கள் தோறும் கல்விக் கண்காட்சி நடத்த வேண்டும் என்றும், அக் கண்காட்சியில் ஒவ்வொரு பள்ளியும் செய்கிற வேலையையும், செய்த சாதனையையும் காட்ட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். மகாத்மா காந்தியும் ஒருமுறை கண்காட்சியின் கல்விப் பயன் பற்றி எழுதி இருக்கிருர். ஒரு கடைத் தெருவில் சந்தை நடந்துகொண்டிருந்தது, கண்காட்சியும் இருந்தது. அங்கு மூலப் பொருள்களும், உற்பத்தியான சரக்குக்களும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அவர் பாராட்டிக் கூறி,

கடைத் தெருவில் சாமான்கள் என்ன விலைக்கு விற்கின்றனவோ அதைவிடக் குறைவான விலையில் விற்கமுடியும் என்பதைக் கண்காட்சி மக்களுக்குக் காட்டவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

சாதாரணமாய்க் கண்காட்சியில், சரக்குக்கள், சில மாதிரிப் பொருள்கள், மாதிரிக்கென்றே தயாரித்த சில உருவங்கள், பொருள் விளக்கப் படங்கள், கலைப்பொருள்கள் ஆகியவை அமைக்கப்படுகின்றன.

கல்விக்கு நேர்முக அனுபவம் தர இவை இரு வகையில் உபயோகம். இவற்றை வகுப்பில் கொண்டுவந்து வைத்துக் கையாளும்படி செய்வது ஒரு வகை. இது பள்ளிக் கண்காட்சி. மற்றொன்று பொது மக்களுக்காக நகராட்சி, ஆலயம்போன்ற ஸ்தாபனத்தார் நடத்தும் கண்காட்சி. அங்கு பிள்ளைகள் பார்ப்பதோடு சரி. இருவகை அனுபவங்களும் வேண்டும்.

கண்காட்சிக்கு இடமும், அலமாரியும், அதற்கென்று வேலை செய்ய வகுப்பும், வகுப்பு நேரமும் கொடுக்க வேண்டும். பொருள்களை, சுற்றுப்புறம், வீடுகள், வியாபார ஸ்தலங்கள் ஆகியவற்றிலிருந்து பெறலாம். பொருள்களை நன்முறையில் அடுக்கியும் காட்டியும் வைப்பது முக்கியம். பின்வருவன கவனிக்கத்தக்கன:—அபிவிருத்தி முறை; பல்வகை வேலை முறைகள்; ஒப்பிடுதல்; வேறுபடுத்திக் காட்டல் பொருள்கள் அனைத்துக்கும் அழகாகப் பெயர் எழுதி விளக்கிவைத்தல் அவசியம். வேடிக்கையான பொருள்களைக் குவித்துவைப்பது பொருட் காட்சியன்று. புத்தக சாலைபோல இங்கிருந்து இரவல் வாங்கி உபயோகிக்கத் தக்கபடியும் பொருள்கள் அமையவேண்டும். இவற்றால் பிள்ளைகள் மக்களையும் இடங்களையும் வஸ்துக்களையும்பற்றி அறியும் அவாவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

கண்காட்சி அமைப்பதில் எல்லா வகுப்புக்களும் பங்கு கொள்ள வேண்டும். இது ஒரு கூட்டு முயற்சிக்கான

செயல் திட்டம். பழைய நாணயங்கள், விளையாட்டுப் பொருள்கள், கலை அமைந்த வேண்டாத பாத்திரங்கள், கருவிவகை, உடை வகை, மண்பாண்டங்கள் முதலியன வீடுகளிலிருந்து பெறலாம். தபால் முத்திரை முதலியன.

கண்காட்சி அமைப்பதற்குப் பணச்செலவு அதிகம் தேவை இல்லை. ஊக்கமும், புத்திக்கூர்மையும் இருந்தால் போதும். பத்திரிகைத் துண்டுகள் மிகவும் பயன்படும். உடைந்த கள்ளிப் பலகை போன்றவை பொருட் காட்சிக்கு மிகவும் உதவும். விளம்பரக் கலையையும் பிள்ளைகள் இதன்மூலம் நன்கு பயிலலாம்.

மேற்குறித்தவை பொதுவான கருத்துக்கள். கதர் சம்பந்தமான கண்காட்சி, சென்னையில் பல இடங்களில் ஆண்டுதோறும் நடைபெற்று வந்து அதன்மூலம் பிரசாரம் அடைந்திருப்பது நாம் அறிந்த செய்தி.

காங்கிரஸ் ஸ்தாபனம் பொது மக்கள் தொடர்பையே தான் நோக்கமாய்க் கொண்டிருந்தது. காந்தியடிகள், நூற்புத் தொழிலை வற்புறுத்தியகாலம் தொட்டுக் காங்கிரஸ் விழாக்களில் பொருட்காட்சி அமைப்பது வழக்கம். இதில் ராட்டைகள், தக்கிளிகள், பஞ்சு, பருத்தி, நூல், சிட்டங்கள், பிற நூற்புக்கருவிகள், முறைகள், சிறப்பான துணிகள் போன்றன இடம் பெற்றிருந்தன. காந்தியத் திட்டங்களின் பிரசாரமே இக்காட்சிகளின் நோக்கம்—கதர், கிராமக் கைத்தொழில்கள், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, அன்னியரின் செல்வக்கொள்ளை போன்றன. இந்தக் காங்கிரஸ் முறையானது தேசமெங்கும் எல்லா ஸ்தாபனத்தாலும் தழுவப்பெற்று, இன்று விழாக்களிலும், கூட்டங்களிலும், பொருட்காட்சியும் கண்காட்சியும் ஒரு முக்கிய அம்சமாகி யிருக்கிறது.

அதுபோலவே ஆதாரப் பள்ளி வேலையைப் பிரசாரப் படுத்துவதற்கும், அறிவை வளர்ப்பதற்கும் கண்காட்சி

பயன்படும். பின்வரும் முக்கிய பகுதிகள் பற்றித் தனித் தனிக் கண்காட்சிப் பிரிவுகள் அமைக்கவேண்டும்.

1. **துப்புரவு ஆரோக்கிய பாடம்:** இவை பற்றிய கருவிகள், உணவுப் பொருள்கள், பலவகை அடுப்புக்கள் உணவுச்சத்து, சரீர அமைப்புப் பற்றிய பொருள் விளக்கப் படங்கள். பாத்திரங்கள், விறகு வகை.

2. **நூற்புத் தொழில்:** பருத்திவகை, விதை, துசும்பு அமைப்பு, இவற்றின் இயல்பு பற்றிய விளக்கப் படம், மணை வகை, வில் வகை, தக்கிளி, ராட்டை, வீசன வகை, சிட்ட வகை, நெசவுக் கருவி அமைப்புக்கள், வகைகள், முடிந்தவரை துணி வகை, சாயம், தையல், கதரின் சரித்திரம் காட்டும் விளக்கப் படம் முதலியன. மற்றும், பாய், ஜமக்காளம், கம்பளம், தொப்பி, செருப்பு போன்றவை.

3. **தோட்டத் தொழில்:** பலவகை விதைகள், காய்கறி வகை, கம்போஸ்டு முதலான உரவகை, ரசாயன உரவகை, புழு பூச்சி வகை. பூக்கள், விசித்திர இலைகள், கிழங்கு அமைப்பு, புல் வகை.

4. **சமூக சாஸ்திரம்:** இப்பகுதியில் பத்திரிகைத் துண்டுகள், பொருள் விளக்கப் படங்கள் நிரம்ப இருக்கலாம். நாணயம், தபால் தலை, போக்குவரத்துச் சாதனங்கள், பிற நாட்டுப் பொருள்கள், ஆயுதங்கள்.

5. **கட்டிட வேலை:** கல், ஓடு, உலோகம், மரம், ஆணி, வர்ணம் வகை, கூரை.

6. **விஞ்ஞானம்:** வான சாஸ்திரம், பூச்சி வகை, விஷ ஜந்துக்கள், பிற பிராணிகள், கிளிஞ்சில்.

7. **விளையாட்டுப் பொருள்கள்:** பொம்மைகள், பல வகைக் கருவிகள், மீன் காட்சி, பறவைக்கூடு.

8. **கலை:** கலைத்திறன் பொருந்திய விளக்கு, கத்தி, பாக்கு வெட்டி போன்ற பல்வகைப் பொருள்கள்.

9. **கல்வி:** பழைய சுவடிகள், சிறப்பான அலங்காரப் புத்தகங்கள், போன்ற பல.

இவற்றைப் பொருளுக்குத் தகுந்தவாறு காட்டிவைக்க வேண்டும். கறுப்புக் காகிதம், துணி, வெள்ளைக் காகிதம், துணி, கண்ணாடிப் பெட்டி, புட்டி முதலியன பயன்படும். சிலவற்றை ஒட்டியும், தைத்தும் வைக்கவேண்டி இருக்கும்.

இவற்றோடுகூட, பள்ளிகளினுடைய சாதனை முக்கியமான விளக்கப் படங்களாக வர வேண்டும். ஒவ்வொரு தலைப்பிலும், இந்தச் சாதனைகளை விளக்கப் படமாக எழுதி வைக்கவேண்டும். அப்போது, பார்க்கிற அனைவருக்கும், காட்சியில் மிகுந்த ஆர்வம் உண்டாகும். பிள்ளைகள், ஆசிரியர், பெற்றோர், விருந்தினர் ஆகிய அனைவரும் படங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ள முயலுவார்கள். நல்ல சாதனைக்கு இதில் பாராட்டு வருமாகையால், மேலும் மேலும் அபிவிருத்திக்கு இடமுண்டு.

72. தொழில் திறமை

ஆதாரக் கல்வி முறைப்படி பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் ஒரு தொழில் பயிலுவதால் மூன்று விதமான திறன்கள் அமைய வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.

1. தொழில் திறமையில் பெருக்கம்.
2. பழக்கங்கள் உருவாதல்.
3. மனப்பான்மை அமைதல்.

இம் மூன்றில் தொழில் திறமை வளர்வது பற்றித் திட்டமான முறைகளையும், கருத்துக்களையும், யாரும் சொல்லவில்லை. ஆதலால் அதுபற்றி இங்குச் சற்று விரிவாக நாம் பார்ப்போம்.

தொழில் நடத்தும்போது அதில் ஆசிரியர் பின்வரும் எட்டுப் படிகளை வகுத்துக் கொள்கிறார். இந்தப் படிகள் முதன் முதல் ஹெர்பர்ட் என்ற ஜெர்மன் தேசத்துக் கல்வி நிபுணர் வகுத்துக் காட்டிய படிகளைத் தழுவி அமைந்தவை:

1. நோக்கம் உணர்த்துதல்.
2. திட்ட மிடுதல்.

3. கருவிகள் சேகரித்தல்.
4. செயல் தொடங்குதல்.
5. செயலைச் செய்து முடித்தல்.
6. சீர்தூக்கிப் பார்த்தல்.
7. இயைபுப் பாட போதனை.
8. தொழில் திறமை, பழக்கம், மனப்பான்மை அபிவிருத்தி செய்தல்.

இந்த எட்டினுள் முதலாவதாகிய நோக்கம் உணர்த்துதல் என்பது, திறமை அமைவதற்கு முக்கியமானது. நோக்கம் உணரும்போதுதான் பிள்ளைகள் செயலில் ஆர்வம் கொள்கிறார்கள். ஆகவே நோக்கம் ஆர்வம், இரண்டையும் எவ்வளவு பெருக்கிச் சொன்னாலும் பொருந்தும்.

மனித குலமானது எத்தனையோ திறமைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறது—கை, கால், மெய் போன்ற கர்மேந்திரியங்களின் திறமை, கண், காது போன்ற ஞானேந்திரியங்களின் திறமை—இவை வாழ்க்கையில் பல நிலைகளிலும், திருப்பங்களிலும் பயன்படுகின்றன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புதிதாக ஒரு திறமையைக் கற்றுக் கொள்ள வேண்டியிராமல், தானாகவே திறமை வந்து பொருந்துவதுதான் வெற்றிக்கு வழி. பெறவேண்டியதாகிய திறமையைப் பையன் பெறுவதில் அவனைப் பாதிக்கிற அம்சங்கள் சில :

1. கற்கும் மாணாக்கனுடைய அந்த நேரத்தின் அவசரத் தேவை.
2. குறித்த திறமையானது பிற சந்தர்ப்பங்களிலும் பயன்படத் தக்கதாயிருக்கும் என்ற நினைப்பு.
3. நேரம், சக்தி, இவற்றில் சிக்கனத்தோடு குறித்த திறமையை மாணாக்கன் தேடிக் கொள்ளும் ஆற்றல்.

குறித்த திறமைகள் தாமாக மாணாக்கனிடம் ஒரு சமயம் அமைந்து பல சமயங்களிலும் பயன்பட வேண்டும்

என்று ஆசிரியர் எண்ணும்போது இந்த அம்சங்களைக் கவனிக்கவேண்டும்.

உடனடித் தேவைக்கு வேண்டாத திறமைகளைக் கற்றால் நிலைத்த பயன் வராது. திறமைகளைக் கற்பதில் கால விரயம்—ஆசிரியருக்கும் சரி, மாணாக்கனுக்கும் சரி—நல்ல தன்று. இந்த எண்ணத்தினால் விஷய அறிவை வளர்க்கும் நேரத்தையோ, ஆக்கக் கலைத்திறன் பொருந்திய உள்ள வெளிப்பாட்டையோ, உல்லாசத்தையோ, புறக்கணிக்கக் கூடாது. என்ன திறமைகளை அமைக்கவேண்டும், அவற்றில் எவை நிலைத்திருப்பவை, எவற்றைப் பிள்ளைகள் வெற்றிகரமாய்க் கற்பார்கள் என்பவற்றை ஆசிரியர் ஆராய்ந்து காணவேண்டும். கண்டபின், இத்திறமைகளின் உபயோகம் தானாக அமையுமாறு செய்ய வேண்டும். இதற்கான சில படிகள் பின்வருவன :

1. செயல் முறைப் பிரிவுகளைப் பிள்ளைகளுக்கு மிகவும் தெளிவாக்கி, அவர்கள் ஒவ்வொரு பிரிவையும் மிகவும் திருத்தமாய்க் கையாளும்படி பார்க்கவேண்டும்.

2. செயல் முறைகளைக் குறுகிய காலத்தில் பலமுறை செய்யும்படி பழக்கவேண்டும். இக் காலங்களுக்கிடையில் இடைவெளி விடவேண்டும்.

3. அவர்கள் செயலில் பெற்றுள்ள முன்னேற்றத்தைச் சோதித்து அறியவேண்டும்.

4. திருப்திகரமான முன்னேற்றம் இல்லாத பிள்ளைகள் நடத்தும் செயல் முறைகளை ஆராய்ந்து பார்த்து, அவர்கள் அப்பியாசத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிழைகளைக் களைந்து, மீண்டும் புது அப்பியாசம் கொடுக்க வேண்டும்.

5. மீண்டும் மீண்டும் சோதிக்கவேண்டும். செயல் முறைகளை ஆராய வேண்டும். திருப்திகரமான திறமை நிலைத்தது என்று தெரிகிறவரையில் தொடர்ந்து அப்பியாசம் கொடுக்க வேண்டும்,

6. திருத்தமான முறையில் தொடங்குவது முக்கியம். ஆசிரியருடைய திறமைக்குறைவு, அசட்டை இவற்றின் விளைவாகப் பிள்ளைகள் முதலில் தப்பான முறையில் போகிறார்கள். இதைத் தவிர்க்க ஆசிரியர் தாம் செய்து காட்டி விளக்கிச் சொல்லிப் பிள்ளைகளைக் கொண்டு அவ்விதமே செய்விக்க வேண்டும்.

திருப்பித் திருப்பிச் செய்தல் என்பது ஒரு சமயம் பெற்ற திறமை தொடர்ந்து நிலைத்து இருப்பதற்கு முக்கியம். அப்பியாசம் அல்லது செயலில் பயிற்சி கொடுக்கும்போது பின்வரும் தரங்களின்படி பயிற்சி நடைபெற வேண்டும்.

1. திருப்பிச் செய்தல் என்பது கற்பவனுக்குத் திருப்தி அளிப்பதாயும், இன்பந்தருவதாயும், இருக்கவேண்டும். நோக்கம் திட்டமாய்த் தெரிந்து பயனும் விளக்கமாய் இருப்பதால், அப்பியாசத்தில் ஆர்வம் குன்றாமல் பார்ப்பது எளிது. அப்பியாசத்தில் பிள்ளைகள் விருப்பத்தோடு ஈடுபடச் செய்ய, பின்வரும் அம்சங்களைக் கவனிக்கவும்:

(அ) திட்டமான குறிக்கோளை முன் நிறுத்துக.

(ஆ) மாணுக்கன் பெற்ற முன்னேற்றத்தை அவ்வப்போது அவனுக்கு அறிவிக்க.

(இ) சாதனையில் பெருமை உணர்ச்சியைப் பேணுக.

(ஈ) மந்த நிலையையும், தொடர்ந்த வெறுப்புத்தரும் மாறுதலில்லாத நிலையையும் தவிர்க்க. அப்பியாசம் சுறுசுறுப்புடையதாகச் செய்க. நேரப்படி, கணக்காக, கண்டிப்பாய்த் தொடங்குக.

2. கால அளவு சுருக்கமாய் இருக்கட்டும். மாணுக்கன் செய்கிற செயலை, பூரண கவனத்தோடு செய்வது மிகவும் முக்கியம். கவனமின்றிச் செய்யும் அப்பியாசம் பயனற்றது.

3. அப்பியாசம் திருத்தமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு பிழையும் தப்பான தொடர்பை உண்டாக்கி நிலை

நிறுத்துகிறது. புதிய நற்பழக்கத்தை மேற்கொள்ளுவதை விட, தப்பாகப் பழகிவந்த பழக்கத்தைப் போக்குவது மிகவும் கடினமானது.

4. செய்கிற செயல் முறையானது. தானே வருவதாயும், பெறுந்திறமை எதிர்பார்க்கிற அளவினதாக இருக்கப் போதியதாயும் இருப்பதற்குப் போதுமான தடவைகள் அப்பியாசம் செய்யவேண்டும். உதாரணமாக, தக்கிளியில் கைநூல் இழுத்தல் என்ருல், ஒரு முறை கைநூல் வந்து விட்டால் போதாது; அனேகமுறை கைநூலிழுத்து நினைத்த மாத்திரத்தில் கைநூல் வரும் அளவுக்கு அப்பியாசம் கொடுத்த பிறகுதான் நிறுத்தவேண்டும்.

5. குறுகிய, ஆனல் தீவிரமான, பயிற்சிதான் மிகவும் வெற்றிகரமானது.

6. பெரிய செயலில் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் வெற்றி கொள்கிற வரையில், அதில் மட்டும் அப்பியாசம் நடத்தவேண்டும்.

பெற்ற திறமை உபயோகத்திலிருந்தாலொழிய நிலைத்திராது. எனினும், முதல் தடவை கற்று விட்டால் இரண்டாம் தடவை மீண்டும் கற்பது கஷ்டமன்று. பழைய பாடப் பயிற்சி, பழைய செயல் பயிற்சி என்பது மிகவும் முக்கியம். பழைய பாடம் திருப்புதல் என்று சொல்லுகிற மாதிரி, தேர்ச்சி பெற்ற செயல் பிரிவுகளை மீண்டும் ஒவ்வொரு நாள், வாரமொரு நாள், மாதமொரு நாள், மூன்று மாதத்துக்கு ஒரு நாள் என்று இவ்விதமாக மீண்டும் ஒரு முறை செய்து செய்து பயிற்சி யளிக்க வேண்டும்.

73. பழக்கங்கள்

கட்டாயத்தின்கீழ்ப் பழகுபவை பள்ளி என்ற கட்டாயத்திலிருந்து விடுபட்டால் உடனே போய்விடுமென்று சொல்லுவார்கள். ஆதாரக்கல்வி இந்த அம்சத்தில் பெரிதும்

வேற்றுமையுடையது. பள்ளி முழுமையும் நிலைத்த ஆர்வத்தின் தூண்டுதலால் வேலைகள் நடைபெறுகின்றன; கட்டாயம் என்பதின்றிச் சுய ஆர்வத்தின்மேல் நடைபெறுகின்றன. தவிர, ஒவ்வொன்றைச் செய்வதிலும் சிறுவன் பிறர் பாராட்டுதலைப் பெற்று, லாபத்தையும் கண்டு மனத்தில் மகிழ்ச்சி கொண்டு வந்திருக்கிறான். ஆகவே, ஆரம்ப காலப் பழக்கங்கள் தொடர்பாக வளரவும் நிலைபெறவும் செய்கின்றன.

ஆதாரக் கல்வியில் கல்வி கற்கும் பையனுக்கு அமைய வேண்டிய இரண்டாவது முக்கிய அம்சம், தான் பெற்றவற்றை அனுசரித்து இடைவிடாது நடக்கும் பழக்கம், கற்ற தொழில்களை இடைவிடாது செய்துவரும் பழக்கம். காலையிலெழுதல், துப்புரவாக இருத்தல், ஓய்வு நேரத்திலும் பயனுள்ள காரியம் செய்தல், இனிமையாகப் பேசுதல், வாழ்க்கைக்குத் தேவையான லாபகரமான உற்பத்தித் தொழில் செய்தல், சுயதேவைப் பூர்த்தி என்ற முயற்சி, தன் கடமைகளைச் செய்தல் முதலிய பண்புகள் பள்ளியில் பையன் பழகி வருவன. பல ஆண்டுகள் பள்ளியில் பழகிய பின் இவை அவனிடம் நிலைத்து நிற்கின்றன.

பள்ளியில் நூல் நூற்கும்போது அதில் அவன் பூரண விருப்பம் கொள்ளும்படி ஆசிரியர் அவனைப் பழக்கிவிடுகிறார். பிற்கால வாழ்க்கையில் சிறிது ஓய்வு கிடைத்தாலும் அவன் நூற்கவே முயலுகிறான். பள்ளியில் தோட்டம் போட்டுப் பழகின பையன் பிற்கால வாழ்க்கையில் இடம் கிடைத்தால் தவறாமல் தோட்டம் போட முயலுகிறான். தன் துணியைத் தானே சவுக்காரம் போட்டுத் துவைத்து அழுக்குநீக்கி உடுத்திப் பழகிய பையன் பிற்கால வாழ்க்கையில் சலவைக்குத் துணி போடுவதைக் குறைத்துத் தானே துவைத்து உடுத்த முயலுகிறான். இவ்வாறாகப் பள்ளிப் பழக்கங்கள் பையனுடைய வாழ்க்கையில் நிலைபெறுகின்றன என்பது உண்மை.

ஜே. ஈ. ஓவன் என்பவர் கல்வி கற்பதில் பழக்கங்கள் எவ்வாறு துணை செய்கின்றன என்பதை விளக்கிக் கூறும் பின்வரும் கருத்துக்கள் அறியத்தக்கன.

"பொருள் பிரபஞ்சத்தை, அதாவது, ஸ்தூலமான பொருள்களைவைத்து மரமோ, உலோகமோ, கூடை பின்னுதலோ, கலைத்தொழில்களோ, நெசவோ, தோட்ட வேலையோ, எதுவாயினும் அதில் வேலை செய்வதைக் குழந்தைக்கு அறிமுகம் செய்விக்காத எந்தக் கல்வி முறையும் பூரணமானதன்று. ஆனால், வயதுவந்தவர்களில் அனேகர் தங்கள் கைகளால் ஒன்றைச் செய்வதில் - ஒரு வேலைச் சாலையிலோ, தோட்டத்திலோ, அழகு நிரம்பிய பொருள் ஒன்றையேனும் பயனுள்ள பொருளையேனும், தங்கள் சொந்தத் திறமையை உபயோகித்துச் செய்வதில், அல்லது தாங்கள் தினந்தோறும் வாலாயமாய்ச் செய்கிற வேலையில்வெளிப்படுகின்ற பழக்கங்கள், மனப்போக்குகள், திறன்கள், இவைகளைவிட வேறான பழக்கங்களையும், மனப் போக்குக்களையும், திறன்களையும் வெளிப்படுத்தவல்ல விருப்பமான ஒரு தொழிலையாவது, பொழுது போக்குக் கான வேலையையாவது செய்வதில் வரும் இன்பத்தை ஒரு போதும் அறிந்ததில்லை. இப்படிப்பட்ட வேலைகளால் என்ன இன்பம் வரும் என்று அனேக குழந்தைகளுக்குக் காட்டும் சந்தர்ப்பம் கலையிலும், கலைத்தொழிலிலும் பயிற்சி தருகிற ஆசிரியருக்கு உண்டு. பொருள்களையும் கருவிகளையும், இன்னும் திறமையாகவும், பக்குவமாகவும் கையாளும் பயிற்சியை அவர்களுக்குத் தரும் வாய்ப்பும், அவருக்கு உண்டு. இந்த யுகத்தில் தேர்ச்சிபெற்ற தொழில் வினைஞனுடைய கைவேலை, ஏறக்குறைய மறைந்துபோனகலையாக ஆகிவருகிறது. மனிதன் கைகள் செய்கின்ற வேலையைப் பெருமளவில் யந்திரங்கள் எடுத்துக்கொள்கின்றன. கையினுடைய லாகவத்தையும், கலைப்பண்பு நிரம்பிய கைவினை

யையும், வளர்க்கும் பழக்கங்களை உண்டுபண்ணுவது மிகவும் போற்றவேண்டிய ஓர் அம்சமாகும்.''

எனவே, பின்வரும் அம்சங்கள் பழக்கம் நிலைபெறுவதற்குத் திட்டமான நிபந்தனைகள் ஆகும் :

1. ஆர்வம்.
2. பயிற்சி அல்லது அப்பியாசம்.
3. முறையான தூண்டுதல்—ஆசிரியருடைய முன் மாதிரியும், பக்குவமறிந்து அன்போடு அவர் தரும் ஊக்கமும்.

இனி, ஆதாரக் கல்விப் பயிற்சி என்னென்ன அம்சங்களில் பழக்கங்களை அமைக்கும் என்பதையும் இங்குச் சுட்டிக் காட்டலாம்.

1. துப்புரவு—எல்லாவகையிலும் சுத்தம், அகம் புறம் இரண்டும். ஆரோக்கியம்.
2. உணவு—சத்தான உணவு கொள்ளும் ஆவல், நாவின் ருசிக்கு அடிமை ஆகாத பழக்கம்.
3. மரியாதை—இளையோரிடத்தும், தாழ்ந்தவரிடத்தும்கூட மரியாதை தவருத பழக்கம், எல்லோருடனும் கூட்டுறவு, உணர்ச்சிகளை அடக்கித் தலைவனுக்குக் கீழ்ப்படிதல்.
4. ஆண்மை—தன்னம்பிக்கை—தன் பொருள்கள், உடை, தோட்டவேலை, இருப்பிடம் ஆகிய அம்சங்களில். அஞ்சாமை.
5. உற்பத்தி—சுயதேவைப் பூர்த்தி, உணவு உற்பத்தி, உடை உற்பத்தி.
6. உழைப்பு—எந்த நேரமும் ஓய்ந்திராமல் ஆக்க வேலையிலும், உற்பத்தித் தொழிலிலும், கலைக்கான வேலைகளிலும் ஈடுபடுகின்ற பழக்கம்.

74. மனப்பான்மை

ஆதாரப் பாடசாலையில் சிறு பையன் உடல் வருந்தி உழைத்துப் பழகுகிறான். எப்பொழுதும் துப்புரவாக இருந்து பழகுகிறான். சமமான மத பக்தியோடு இருக்கிறான். சாதி வேற்றுமை பாராட்டாமல் கலந்து வாழ்கிறான். பொறுப்பேற்று நிறைவேற்றிப் பழகுகிறான். பிற்கால வாழ்க்கையில் குறித்த சந்தர்ப்பங்களிலும் தினசரி வாழ்க்கையிலும் அவன் இதே மனப்பான்மை கொண்டிருப்பான். எந்த உழைப்பும் தாழ்வென்று எண்ண மாட்டான். தன்னைவிட அறிவில் தாழ்ந்தவரைக் காணும் போது வேற்றுமை பாராட்டாமல் சகோதர மனப்பான்மையோடு இருப்பான். அசுத்தத்தைக் காணும்போது மனம் பொறுக்கமுடியாமல் அதைமாற்றித் துப்புரவு உண்டு பண்ண எண்ணுவான். பொறுப்பு வந்தால் தட்டிக்கழிக்க எண்ணமாட்டான். இதுவே ஆதாரக் கல்வியின் பயிற்சி: அதாவது பள்ளியில் வேலை முதலியன செய்வது மாத்திரமல்ல, செய்யவேண்டுமென்ற எண்ணம், அதற்கான பக்குவம், அவனிடம் எப்போதும் குடிகொண்டிருக்கும்.

இவ்வாறு எதிர்பார்க்கிற மனப்பான்மை உதிப்பதற்கு உதவியான அம்சங்கள்:

பள்ளி வாழ்க்கையிலுள்ள ஜனநாயகமும், சுய ஆட்சி முறையும், ஆசிரியருடைய முன்மாதிரியும், ஆசிரியர் செயல்களில் வெளிப்படுத்தும் மனப்பான்மையும்.

75. ஆசிரியர்

ஆதாரக் கல்வி போதிக்கும் ஆசிரியரிடம் அமைய வேண்டிய தகுதிகளைப் பின்வருமாறு நான்கு தலைப்புகளில் தொகுத்துக் கூறுவோம்:

1. சொந்தத் தகுதிகள்.
2. சமூகத் தகுதிகள்.

3. ஆசிரியத் தகுதிகள்.

4. கைத்தொழில் தகுதிகள்.

1. சொந்தத் தகுதிகள்: ஆரோக்கியமான உடல், உடலில் வலிமை, நிமிர்ந்த நடை, ஊனமில்லாத உடல் உறுப்புக்கள், கோளாறில்லாத மனம். சிறுபிள்ளைத்தன மில்லாத முதிர்ச்சி பெற்ற உணர்வுகள். வாழ்க்கைபற்றிய நன்மையான லக்ஷ்யம் அல்லது வேதாந்தம். நகைச் சுவை. விருப்பத்தொழில்கள் சில - உள்ளம் பற்றியவை, உடல் பற்றியவை, சமூகம் பற்றியவை, கலைபற்றியவை. புத்தகப் படிப்பில் விருப்பம். இசையிலும், பிற கலைகளிலும் விருப்பம். பயனுள்ள பல்வகைச் செய்திகள், பயனுள்ள திறன்கள் இவற்றில் சுமாரான பயிற்சி, புதியதை அறியும் அவா. புலமை பெறும் வேட்கை. திறமையான மொழி வளம். இனிமையான, கொஞ்சதூரம் எட்டக்கூடிய குரல். கவர்ச்சிகரமான தோற்றம். மாணுக்கர் பின்பற்றி நடக்க விருப்பங் கொள்ளத்தக்க வாழ்க்கை, பேச்சு, சிந்தனை, தெய்வபக்தி.

2. சமூகத் தகுதிகள்: ஆசிரியர் தினந்தோறும் பொது மக்களோடு பழகவேண்டியவராதலால் பின்வரும் தகுதிகள் அவரிடம் பொருந்தவேண்டும். மற்றவர்களோடு நன் முறையில் உறவாடத்தக்க ஆளுமை. ஒருவரை ஒருவர் சார்ந்து வாழவேண்டிய சமூகம் ஆதலால் ஒப்புரவாக ஒழுகும் தன்மை, தலைமை தாங்கும் ஆற்றல், கீழ்ப்படிந்து நடக்கும் இயல்பு, கூட்டுறவு, பிள்ளைகளோடும் இளைஞர்க ளோடும் உழைப்பதில் இன்பம். பள்ளிக்கு வெளியே நடக் கும் செயல்களை நிர்வகிக்கும் ஆர்வமும், திறமையும். கூட்டு வாழ்க்கைக்கு வேண்டிய சமூக இங்கிதங்கள். நட்புரிமை பூணத்தக்க பண்பு, அனுதாபம் காட்டத்தக்க இயல்பு. மக்கள்வாழ்க்கை பாழாவதன்று, மேல் நோக்கிச் செல்லும் என்ற நம்பிக்கை. கல்வி மூலம் ஜனநாயகத்தை வளர்க்க

வேண்டுமென்ற தணியாத ஆர்வம். சமூகம்—தன் நாடு—தேசம்—உலகம் வாழவேண்டுமென்ற ஆசை.

3. **ஆசிரியத் தகுதிகள் :** ஆசிரியர் தொழிலுக்குவேண்டிய உடல் தகுதி, நீதியுணர்ச்சி, நல்லொழுக்கம், குழந்தைகள் பற்றிய அறிவு, போதனை கற்றல் பற்றிய அடிப்படையான முறைகள் திறன்கள், பிள்ளைகளின் கல்விக்குச் சிக்கனமாகவும், வெற்றிகரமாகவும் உபகரணங்களையும் செயல்களையும் திட்டமிடும் ஆற்றல். பணலாபம் தராத கடினவேலையைக் கண்டு அஞ்சாமை, சேவையும் தியாகமும் வேண்டியிருக்கிற இந்தத் தொழிலில் அர்ப்பண மனப்பான்மை. வேறெந்த வேலையும் வேண்டாம்; உபாத்திமைத் தொழிலே சிறப்பு என்ற எண்ணம். புதியது காணும் தீரம். ஆக்கவேலை செய்யும் அவா. உழைப்பே உயர்வு என்ற எண்ணம், சாதிவேற்றுமை இல்லை என்ற நம்பிக்கை, மதவெறி இல்லாத மனம், கதரினிடத்தும் கிராமக் கைத்தொழில்களினிடத்தும் பற்றுதல், உணவு உடை இருப்பிடம் என்ற மூன்றில் சுயதேவைப் பூர்த்தியே நல்வாழ்வுக்கு அடிப்படை என்ற நம்பிக்கை. அகம் புறம் என்ற இருவகைத் தூய்மை நிறைந்த வாழ்க்கை. இந்திய நாட்டு ஆட்சியினிடத்தில் பக்தி.

4. **கைத்தொழில் தகுதிகள் :** உடலை வருத்திச் சில மணிநேரம் உழைக்கும் ஆற்றல், நூற்புக்கலையில் முழுத்தேர்ச்சி, கருவிகளைச் செப்பனிடும் திறமை, நெசவுத் தேர்ச்சி, இவை பற்றிக் கணக்கறிவு, தோட்டவேலை பற்றிய திட்டமான அறிவு, மண்ணில் இறங்கி வேலை செய்ய அஞ்சாமை, எளிய கருவிகளைத் தாமே செய்துகொள்ளும் ஆற்றல், தம் முன்மாதிரியால் பிள்ளைகளின் உற்பத்தித் திறமையை மேம்படுத்தும் சக்தி.

இந்தத் தகுதிகள் மிகவும் விரிவானவை. ஆனால் தொடக்கத்திலேயே இவ்வெல்லாத் தகுதிகளும் ஆசிரியரிடத்தில் அமைந்துவிடும் என்று சொல்ல முடியாது. காலம்

செல்லச் செல்ல ஆசிரியர் தம்மை இத்திசையில் முன்நோக்கிச் செலுத்திக்கொண்டு போக வேண்டும்.

ஆதாரக் கல்வியானது ஆசிரியரிடம் மிகுதியான தகுதியையும், சேவையையும், எதிர்பார்க்கிறது. வாழ்க்கையில் பண்பு நிறைந்தவராய், ஆதாரக் கல்வியின் லக்ஷ்யத்தை மனமார ஏற்று அதை நிறைவேற்றும் ஆர்வம் உடையவராய் இருக்கவேண்டும். கீழ் வகுப்புக்களுக்குத் திறமை அதிகமும், படிப்பு அதிகமும் உள்ள ஆசிரியர் வேண்டுமென்பது நியாயம். ஆனல் இன்று சொற்பப் படிப்பு உள்ளவர்களையே கீழ்வகுப்பு ஆசிரியராக நியமிக்கவேண்டி இருக்கிறது. இது திருப்திகரமான நிலைமை அல்ல. எல்லா ஆசிரியர்களும் மனப்பூர்வமாய்ப் பாடசாலையின் வெற்றிக்காக ஒத்துழைக்கவேண்டும். இன்று இந்த நிலை பல இடங்களில் இல்லை.

கல்வியால் அமையவேண்டிய மக்கட் சமூகம் எதிர்காலத்தில் எப்படி மாறவேண்டும் என்று தொடக்கத்தில் விவரமாய்க் கூறினேம். ஆசிரியர் இந்த உயர்ந்த லக்ஷ்யம் கொண்டவராய் இருத்தல்வேண்டும். “இந்த லக்ஷ்யம் அவருக்குக் கொள்ளமுடியாவிட்டால், அவர் உடனே பலசரக்குக் கடை வைக்கப்போவாராக. ஏனெனில், அதில் அவருடைய திறமைக்கு உவந்ததான ஒரு லக்ஷ்யம் காண்பதில் தடையில்லை” என்று கல்வியாளரொருவர் ஏளனமாய்க் குறிப்பிடுகிருர்.

“உள்ளம் வேகமாய் அபிவிருத்தியடைவதுபோல, அவ்வளவு வேகத்தில் குணச்சிறப்பு அபிவிருத்தியடைவதில்லை. பள்ளிக்கூடவேலை, நேர்முகமாக உள்ளத்தைப் பாதிக்கிறது; மறைமுகமாகத்தான் நல்லொழுக்கத்தைப் பாதிக்கிறது. மாணவனுடைய நல்லொழுக்கம் வளர்ந்தது என்ருல், அது முறையான பாடப்பயிற்சியினுல் அல்ல; ஆசிரியரின் குண விசேஷத்தாலும், அவருடைய பழக்கத்தாலுமே யாகும்.”

—ஆர்ம்ஸ்ட்ராங்.

76. ஆதாரப் பாடசாலையின் இலக்கணம்

ஆதாரப் பாடசாலையில் எல்லா அம்சங்களிலும் ஆசிரியர் மிகுந்த அக்கறைகொண்டு திருத்தமாக வைத்திருக்க முயலவேண்டும். அரசாங்கம் உதவி செய்யவில்லை, அல்லது ஜில்லா போர்டார் உதவி செய்யவில்லை அல்லது நிர்வாகத்தாருக்கு வசதி இல்லை என்ற காரணங்களால், அந்தத் திருத்த நிலைமைக்குக் குறைவு ஏற்பட நியாயமில்லை. பள்ளிக்கூடத்தின் அழகான நிலைமைக்குச் சிறப்பாக அவர் தம்மையும், தம் பிள்ளைகளையுமே நம்பி இருக்கிறார். இந்த நல்ல நிலை எல்லாப் பள்ளிகளிலும் அமையுமானால் எல்லாப் பள்ளிகளுமே மிகச் சிறப்பாக அமையும். ஆரம்பப் பள்ளிகள் யாவுமே இப்படி இருக்க வேண்டியவைதான். ஆனால் மிகச்சில பள்ளிகளே இப்படி உள்ளவை. பெரும்பாலான பள்ளிகளில் இத்திருத்த நிலை ஏற்படுவதற்கு ஆசிரியர் முயல்வதில்லை. இந்த முயற்சி தம் வேலைக்குப் புறம்பானது என்று அவர் எண்ணுகிறார். ஆனால் ஆதாரப்பள்ளி ஆசிரியர் இதற்கென்று பக்குவப்பட்டிருக்கிறார் என்று நாம் எதிர் பார்க்கிறோம். ஆதலால் ஆதாரப் பள்ளியின் இலக்கணம் என்று தனித்துக் கூற முடிகிறது. சில மாதிரிகளைப் பின்னே குறிப்பிடுவோம்.

1. **பிள்ளைகள் :** நிமிர்ந்த நடை, மலர்ந்த முகத்தோடு இருப்பார்கள். பல்துலக்கி, தலைசீவி, நெற்றிக்குப் பொட்டிட்டிருப்பார்கள். கண்ணின் கூர்மை பிரகாசமாய்த் தெரியும். உபாத்தியாயரை அண்ணா என்று உரிமையோடு அழைப்பார்கள். அச்சம் குறைவாயும், அன்பும் பொறுப்பும் அதிகமாயும் காணப்படும்.

2. **ஆசிரியர் :** மிக்க வறியவராயிருந்தாலும் முகம் பிரகாசமுடையவராயிருப்பார். பிள்ளைகளிடத்தில் தம்பி என்ற சொல் தவறி டேய் என்று ஒருபோதும் வராது. சட்டை போட்டால் பொத்தான் போட்டிருப்பார். திருத்த

மாகப் பேசுவார். பாடக் குறிப்பு முதலியன தவறுமல் எழுதுவார். நூற்பு மாத்திரமல்ல, வேறு சில தொழில்களி லும் வல்லவராயிருப்பார். கடமையில் வழுவமாட்டார். உடன் ஆசிரியர்களுடன் சண்டை போடமாட்டார்.

3. கட்டிடம்: கல் கட்டிடமாயிருந்தால் நன்கு சுண் ணும்பு அடித்து அலம்பப்பட்டிருக்கும். தரையில் எங்கும் மை உதறின அடையாளம், பென்சில் கோடு, கரிக்கோடு காணப்படாது. மாதிரிக்காகக்கூட ஒட்டறை காணப் படாது. சுவரெங்கும் பிள்ளைகள் சாய்ந்து தலை எண்ணெய் படிந்த அழுக்கு இராது. கரும்பலகை சுவரிலிருந்தால் அடிக்கடி செப்பனிடப்பட்டுக் கறுப்பாய் இருக்கும். கூரைக் கட்டிடமாயிருந்தால் ஒழுகாது. எட்டாத உயரத் தில் ஒட்டறை தொங்காது. மண் சுவராயிருந்தால் முறை யாகச் சாணம் பூசப்பட்டு, வெள்ளை அடிக்கப்பட்டிருக்கும்.

4. சுற்றுப்புறம்: எப்போதும் பெருக்கி, இலை, சருகு, காகிதக்கழிவு, பருத்திக்கழிவு முதலிய எந்தக் குப்பையும் காணப்படாது. முன்புறம் எப்போதும் அழகாக நீர் தெளித்துக் கோலம் போட்டிருக்கும். தோட்டமுள்ள இடமாயிருந்தால் நடைபாதை ஓரம் பொன்னுங்கண்ணி பயிரிடப்பட்டிருக்கும். பிற அலங்காரச் செடிகளும், பூஞ் செடிகளும் அழகு தரும். ஒரு மூலையில் குப்பைக்குழி இருக்கும். குப்பைக் குழியின் கரைகள் துப்புரவாக இருக்கும். அதில் குப்பைமட்டும் போடப்பட்டிருக்குமே அன்றி, குச்சி, பஞ்சு, கல், மண், காகிதம் முதலியன குவிக்கப்படமாட்டா.

5. தோட்டம்: முடிந்த அளவு பயிர்கள் சாகுபடி ஆகி இருக்கும். எந்தக் காலத்திலும் களை காணப்படாது. கோடையில்கூட பொன்னுங்கண்ணிக் கீரை, பசலை போன்ற பயிர்கள் வளர்ந்திருக்கும். ஆங்காங்கு சில செடி கள் பூத்துக் கவர்ச்சி தரும். வேலி துப்புரவாய்க் காட்டுக் கொடிகள் படராமல் ஒழுங்காய்க் கழிக்கப்பட்டிருக்கும்.

6. தகவல் பலகை: திருத்தமான விவரங்களோடு இருக்கும். ஜனக் கணக்கு, தொழில் விவரங்கள், பள்ளி உற்பத்திக் கணக்கு எழுதப்பட்டிருக்கும்.

7. கருவிகள்: மண், குப்பை, நூல் ஒட்டியிராமல் உரிய இடத்தில் முறைப்படி இருக்கும். அரிவாள் வாய் மடங்காமல், மண்வெட்டி காம்பு கழலாமல், தக்கிளி வட்டுக் கழலாமல், சக்கரம் கோட்டமில்லாமல், வீசனம் உடையாமல் இருக்கும். இப்படியே மற்றவை. நாற்காலி, மேஜை, பெஞ்சு போன்றன நல்ல வடிவத்தோடு ஆட்டமில்லாமல் எல்லாக் கால்களோடும் இருக்கும்.

8. கோடி மைதானம்: மேடு பள்ளமின்றி எப்பொழுதும் சுத்தமாய்க் கோணலின்றி முறைப்படி இருக்கும்.

9. குடி தண்ணீர்: ஒவ்வொரு வகுப்பிலும், மணல் போட்டுப் பானையில் தண்ணீரும், மூடியும் இருக்கும். தண்ணீர் மொள்ளுவதற்குக் கைப்பிடியோடுகூடிய குவளையும், குடிப்பதற்கு வேறு குவளையும் இருக்கும். நம் நாடு வெப்ப நாடாகையால் குழாய்வைத்த பித்தளைப் பாத்திரம் வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டாம்.

10. மலக்கூண்டு: மலக்கூண்டு அல்லது அடைப்பும், சிறுநீர்க் குழியும் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாக அமைந்திருக்கும். காற்றடிக்கும் திசையைக் கவனித்து இவை அமைக்கப்படும். நல்ல அடைப்பு இருக்கும். சுற்றுப்புறங்களில் அசுத்தம் செய்யாமல் முறையாக மண்போட்டு ஈ, கொசுகு மொய்க்காதபடி இருக்கும். ஒரு சிமெண்டுத் தொட்டியில் தண்ணீரும், தகரக் குவளையும் கால் கழுவுவதற்காக வைக்கப்பட்டிருக்கும்.

11. தொழில்: செம்மையாக நடைபெறுவதோடுகூட மூலப் பொருள்களும், முடிந்த பொருள்களும், எலி கடிக்காதபடியும், கெடாதபடியும், குழந்தைகள் எளிதில் எடுக்கவும், வைக்கவும், தக்கபடியும் இருக்கும். கழிவு தனியாகவும், பருத்திவிதை தனியாகவும், சிட்டம், துணி போன்றண

முறையாகவும், கணக்குப்படி வைக்கப்பட்டிருக்கும், காய் கறி போன்ற பொருள்களும் அவ்விதமே வைக்கப்பட்டிருக்கும்.

12. போதனை உபகரணங்கள்: சுவரில் நிரம்பப் பொருள் விளக்கப்படங்கள், தேசப் படங்கள், கால அட்டவணை, பாட அட்டவணை, செயல் திட்டம், விழாக் குறிப்பு போன்றவை அருமையாக எழுதியும், தொங்கவிட்டும் வைக்கப் பெறும். வகுப்பில் பயன்படக்கூடிய பொருள்கள் யாவும் ஆசிரியர் முயற்சியால் கையால் செய்தும் சேகரிக்கப்பட்டும் வைக்கப்பட்டிருக்கும். தேவையான புத்தகங்கள் மூலை மடியாமல், கிறுக்காமல் அட்டைபோட்டு வைத்திருப்பதோடன்றி, உபயோகிக்கவும் பெறும். பிள்ளைகளின் வயது, எடையைக் காட்டும் படம், உற்பத்தியைக் காட்டும் படம், நோய் பற்றிய குறிப்பு முதலியன சுவரில் தொங்கும்.

13. பதிவு ஏடுகள்: ஆஜர் பட்டி போன்ற பதிவு ஏடுகள் எந்த நேரமும் திருத்தமாகத் தயாராய் இருக்கும்.

14. கண் காட்சி: நன்முறையில் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் தழுவித் தயாரிக்கப்பட்டிருக்கும். அதில் உற்பத்தி சேகரம் ஆகிய இரண்டு அம்சத்திலும் ஒவ்வொரு பையனும் பங்கு கொண்டிருப்பான்.

77. சத்தியமும் அஹிம்சையும்

காந்திய ஆதாரக் கல்வியின் அடிப்படை சத்தியமும், அஹிம்சையும். இந்தக் கல்வி ஒரு சர்வோதய சமூகம் அமைக்கும் நோக்கமுடையது. சர்வோதய சமூகத்தில் வாழ்க்கைத் தொழில்களில் பரவல் முறை நிலவும். அதாவது அவரவர் தம் ஜீவனத்துக்கு அடிப்படையான தேவைகளைத் தம்முயற்சியினலேயே நிறைவேற்றிக்கொள்ளமுயலுவார். மற்றவர்களை அடிமையாக்கித் தான் வாழ்வது என்ற நிலை இங்கே இல்லை. அதாவது அரசியல் உலகில் சுரண்டல்

என்று பேசப்படுகிற விவகாரம் பூரணமாக ஹிம்சை நிறைந்தது. சுரண்டலற்ற வாழ்க்கை அஹிம்சை வாழ்க்கை.

மேலும், உலக நாடுகள் தங்கள் அடிப்படைத் தேவைகளை மிதமிஞ்சிப் பெருக்கிக் கொண்டமை காரணமாகவும், யாரும் தாம் உடல் வருந்தி உழைக்கத் தயாராய் இல்லாமையாலும், பிறரையும் பிற நாடுகளையும் சுரண்டுகிற வாழ்க்கைக்கே திட்டமிட நேரிடுகிறது. இந்தச் சுரண்டல் முயற்சியினால் நாடுகளுக்கிடையில் போட்டி. போட்டி முற்றிப் பூசல்—அணுக்குண்டு முதலான எல்லா நாச வேலைகளும். பிராணி நிலையையும் கடந்த, ஆறறிவுஉடையவனாகக் கடவுள் இந்த மனிதனைப் படைத்தது இந்த நாசத்துக்காகவா? ஆகவே, இந்த நாசம் சற்றேனும் உட்புகாத ஓர் இன்ப வாழ்க்கை வேண்டுமென்றால் இதற்கு அடிப்படை, தான் பிறரை எதிர்பார்க்காத வாழ்க்கை. இதையே அஹிம்சை வாழ்க்கை என்றும், அன்பு வாழ்க்கை என்றும் பேசுகிறோம்.

நீண்டகாலமாக ஆண்டான் - அடிமை நிலை, சுரண்டல் போன்ற கொடுமைகள் மிகுந்து இருந்தமையால், சாதி வேற்றுமை போன்ற கொடுமைகள் கிளைத்துவிட்டன. சாதியினாலே உயர்வு தாழ்வு என்ற போலி வாழ்க்கை மலிந்துவிட்டது. இதை மாற்றத்தான் இத்தகைய வேற்றுமையும் கொடுமையும் இல்லாத ஒரு சமூகத்தைத் தோற்றுவிக்கும் நோக்கம். அதையே சத்திய வாழ்க்கை என்று சொல்லுகிறோம். எந்தத் தொழிலும் இழிவு என்று கருதாத ஒரு சமூகம் தோன்றுமானால், சமூகத்தார் தவறாது உடல் வருந்தி உழைக்கத் தயாராக இருப்பார்களானால், அதுவே ஒரு சத்திய சமாஜமாகும்.

ஆதாரக் கல்வியினுடைய நோக்கம், இத்தகைய ஒரு லக்ஷ்ய சமூகத்தைத் தோற்றுவித்தல். எனவே, அதனுடைய அடிப்படைத் தத்துவங்கள் சத்தியமும், அஹிம்சையுமாகும்.

தான் வாழ்ந்தால்மட்டும் போதாது, பிறருக்குத் தன்னுல் தீங்கு நேரிடக்கூடாது. இதுவே உலகினர் எவர்க்கும் சம்மதமான, உயர்ந்த மதம் மட்டும் அல்ல, பூரணமான பண்டைத் தமிழர் மதமும்.

நல்லவை செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லவை செய்தல் ஓம்புமின்; அதுதான்,
பல்லோரும் உவப்பது; அன்றியும்,
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே

என்ற புறநானூற்றுப் பழம் பாடல் இம்மேலான மதத்தை உணர்த்துகிறது. இதுவே அன்பு மதம். தீமை செய்யாமையோடு ஒருபடித்தாக உணரவேண்டுவது, நன்மை செய்ய வேண்டும் என்ற தணியாத ஆர்வம். இதுவே காந்தியம், இதுவே ஆதாரக் கல்வி.

78. ஆதாரக் கல்வியின் சிறப்பியல்புகள்

கல்விக்குக் குழந்தை ஒரு மையமாக இருக்கிறுன். கல்வியால் வரும் அறிவு பின்னமானதன்று; பூரணமான ஒன்று. செயலாலும் தன் முயற்சியாலும் கல்வி வருகிறது. செயல் என்பது, பயனுள்ள உற்பத்தித் தொழில். ஜீவாதாரத் தேவைகளின் ஒன்றைப் பூர்த்தி செய்யும் ஒரு தொழிலைச் செய்வதன்மூலம் கல்வி வருகிறது. கற்பதிலேயே சுதந்திரம் உண்டு; குழந்தைக்கும் உண்டு, ஆசிரியருக்கும் உண்டு. உழைப்புக்கு உரிய மரியாதை இங்குக் கிடைக்கிறது. ஆசிரியரும் பிள்ளைகளும் சேர்ந்து சமூக மேம்பாட்டுக்கு உழைக்கிறுர்கள். அன்பும் சத்தியமும் அடிப்படைகளாதலால், இக்கல்விமூலம் உலக சமாதானம் நிலவ வழி பிறக்கிறது.

தாலிமி சங்கத்தாரின் பாடத் திட்டத்தில் பின்வரும் இரண்டும், புதுக்கல்வி முறையின் நோக்கங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. "ஆதாரக் கல்வியின் நோக்கங்கள்

இரு பகுதி; இரண்டும் ஒன்றோடொன்று அபின்னமாய்க் கலந்துள்ளன :

1. புதுக் கல்விமுறையானது கூட்டுறவான வேலையை அடிப்படையாய்க்கொண்ட ஒரு புதிய சமூக அமைப்பைத் தன் குறிக்கோளாய்க் கொண்டுள்ளது. இந்திய நாட்டுப் பிள்ளைகளும் பெண்களும் இவ்வமைப்பின் குடிமக்களாகவும், இவ்வமைப்புடைய சமூகத்தில் தங்கள் உரிமைகள் கடமைகள் பொறுப்புக்களை உணர்ந்தவர்களாகவும் வளர வேண்டும்.

2. ஒவ்வொரு தனிக் குழந்தையும் தன் திறன்கள் யாவும் ஒருமித்து அழகாக வளர்வதற்கான பூரண சந்தர்ப்பம் பெறவேண்டும்; சுத்தமான, ஆரோக்கியம் நிறைந்த, பண்பாடமைந்த வாழ்க்கை வாழ்வதற்கான தன்னம்பிக்கை எல்லா அம்சங்களிலும் பெறவேண்டும்; இவ்வித வாழ்க்கைக்குச் சமூகத்துறையிலும் நல்லொழுக்கத்துறையிலும் உள்ள உட்பொருளை உணர்தலும் வேண்டும்."

மேலே சமூக தத்துவம் முதல் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உண்டு. கல்வி நடைமுறைக்கும் அதற்கு அடிப்படையாயுள்ள சமூக தத்துவத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆதாரக் கல்வியில் தனிப்பட்டவருடைய நன்மைக்காக மாத்திரம் உழைப்பதற்கு இடமில்லை. தனிப்பட்டவர் முன்னேற்றமும் அவர் வாழும் சமூகத்தின் முன்னேற்றமும் ஒரு காசின் இரண்டு பக்கங்கள் போல. தனிப்பட்டவர் நலமே தனி நோக்கமன்று. பொது நலத்தில் அபின்னமாயுள்ள ஒரு பகுதியே அது :

ஆதாரக் கல்வியானது, உண்மையான நாகரிகத்தின் சிறப்பியல்புகள் என்று உலகினரால் கருதப்படும் நல்லொழுக்க இயல்புகளைத் தனி மனிதரிடம் வளர்க்கத் திட்டமிடுகிறது. இவற்றைப் போதிக்கவோ, அளந்து பார்க்கவோ, நேர்முகமாக முடியாது. பூ இருந்தால் மணம்

உண்டு. மணத்தைத் தனியே பிரித்து வைப்பது சாத்திய மில்லை. பாடசாலைச் சூழ்நிலை என்ற நறுமணமே பைய னுடைய ஒழுக்க மணமாக உருவெடுக்கிறது. ஆசிரிய ருடைய முன்மாதிரி இந்த மணத்தை மலரிலிருந்து வெளி வரச் செய்கிறது.

மேலும், ஆதாரக் கல்வியினுல் குழந்தையினிடம் விஞ்ஞான ரீதியான மனப்பான்மை உருவாக வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். விஞ்ஞான ரீதியான மனம் என்பது வேறு, விஞ்ஞானத் தகவல் அறிவது வேறு. விஞ் ஞான ரீதியான மனப்பான்மை என்பது,

1. செய்யும் அல்லது காணும் பொருள் ஒவ்வொன் றையும் ஏன், எப்படி என்று புத்திபூர்வமாய் அறியவேண்டும் என்ற அவா.
2. எல்லா நிகழ்ச்சிகளையும், கருத்துக்களையும் சம்பிர தாயங்களையும், உண்மை என்ற அளவுகோலால் அளந்து அறிவதற்கு வேண்டிய பெருமையும், நடுநிலைமையும்.
3. சுயமாகச் சிந்தனை செய்யும் ஆற்றலும், அதற் கான தைரியமும்.
4. கண்டறிந்த எல்லாத் தகவல்களையும் ஒட்டி நடக்க வேண்டும், பள்ளியிலும், வெளியிடத்திலும், இல்லாததைக் கற்பிக்கக்கூடாது என்ற புத்தி பூர்வமான, ஒழுக்கரீதியான, நேர்மை.

நமக்குத் தெரியாத துறைகள், அனுபவங்கள் பல்வகையாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக ஒப்புக் கொள்ளவேண்டும். பெருக்கத்து வேண்டும் பணிதல் என்ற அடக்கமே இது. நம் வசப்படாத சத்திய உபாசனை என்று சொன்னுலும் பொருந்தும். பிற மதத்தாருடைய கொள் கைகளை நாம் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளா விட் டாலும், அதனிடத்தில் மரியாதை காட்டுதலும் இதுவே.

ஹிந்து, கிறிஸ்துவர், முஸ்லிம், சீக்கியர், நிரீசுவரவாதி போன்ற யாராயினும், அவரிடத்திலும் சகிப்புத் தன்மை காட்டி, அவர் கருத்தைப் புரிந்து கொள்வதற்கான பக்குவமும் இதுவே.

சத்தியவழியே ஒழுக நினைப்பவருடைய வாழ்க்கை எளிய வாழ்க்கை. வாழ்க்கை மதிப்புக்கள் யாவை என்று உணர்ந்த மாத்திரத்தில் சிக்கல்களை எல்லாம் அவர் உதறி விடுகிறார். நேர்மையான தொடர்பு, நம்பிக்கை, ஒப்புரவு ஆகியவை அவருக்குக் கேவலம் இகலோகச் செல்வத்தை விட மேலானவை.

14-15 வயது ஆன பையனுக்கு இவ்வளவும் புரிந்து விடும் என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் ஆதாரக் கல்வியானது எல்லா நிலைகளிலும் இப்படிப்பட்ட ஒரு சிறந்த லக்ஷ்யத்தை எப்போதும் முன் நிறுத்துகிறது.

79. பிள்ளைகளின் தேர்ச்சி

ஆதாரக் கல்விப் பாடத்திட்டத்தை வெளியிட்ட அகில இந்திய தாலிமி சங்கத்தார், எட்டு ஆண்டுகள் ஆதாரக் கல்வி பயின்ற மாணவர்களிடத்தில் அவர்கள் எதிர்பார்க்கின்ற தேர்ச்சிகளைப் பின்வரும் ஏழு தலைப்புக்களில் தொகுத்துக் கூறுகிறார்கள் :

அ. ஆரோக்கிய வாழ்வுக்கான திறமை

1. ஒருமித்த வளர்ச்சி பெற்ற உடல், சுறுசுறுப்புடையதாயும், ஆரோக்கியமுடையதாயும், கடினமாக உழைக்கக் கூடியதாயும்.

2. ஆரோக்கியம் சுகாதாரம் பற்றிச் சரியான முறையான பழக்கங்கள், முதல்தரமான உடல் சுகாதாரம், ஒழுக்க ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சுகாதாரம் பற்றிய அறிவு.

3. சமூகத் துப்புரவுபற்றி நன்முறையில் வளர்ச்சி பெற்ற அறிவு, கிராம சுகாதார அடிப்படைத் தத்துவங்கள் பற்றிய அறிவு.

4. வீடு, பள்ளி, ஊர்ச்சமூகம் பற்றித் துப்புரவுக்கான வேலைத் திட்டங்கள் வகுத்து நிர்வகிக்கும் ஆற்றல்.

5. மனித உடலின் உறுப்புக்கள், அவை செய்யும் வேலை பற்றிய சாமானிய அறிவு, அடிப்படைச் சுகாதார விதிகள், சுற்றுப்புறத்தில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களை வைத்துச் சமநிலை உணவு தருவதற்கான உணவுத் தத்துவ அறிவு.

6. சாமானிய முதலுதவி அறிவு, சாமானிய மூலிகைகள், சாமானிய நோய்கள் வருங் காரணம், தடுப்பு, சிகிச்சை, பணிவிடை.

ஆ. தன்னம்பிக்கைப் பயிற்சி

உணவு, உடை, சாமானியக் கட்டிடம், கருவிகள், பழுது பார்த்தல், நிர்வகித்தல்.

1. பருத்தியிலிருந்து துணி செய்தல்.
2. சொந்தத் தேவைக்கு வேண்டிய உணவு உற்பத்தி. நிலம் அதிகம் இல்லாவிட்டால் காய்கறி மட்டும் போதும்.
3. சாதாரண உணவு தயாரிக்கும் திறமை.
4. குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் தேவையான உணவுப்பொருளைச் சேமித்தல், சமைத்தல், பரிமாறுதல். இவை பற்றிய தத்துவங்களும் வேலை முறைகளும். உணவு வரவு செலவு திட்டமிடுதல், கணக்கு வைத்தல்.
5. சாமானிய வீட்டு வேலைக் கருவிகளை உபயோகித்தல் பராமரித்தல்.
6. சைக்கிள் விடத் தெரிதல், சாமானிய பழுதுகளைச் சரிபார்த்து நல்ல நிலைமையில் வைத்தல்.

இ. ஆதாரத் தொழில்மூலம் சுயதேவைப் பூர்த்தி

தேர்ந்தெடுத்த ஆதாரத் தொழிலைச் செய்வதன்மூலம் அவசியமானால் மாணக்கன் தன்னுடைய பிற்கால ஜீவனத்தை நடத்திக் கொள்வதற்கு இன்றியமையாத அறிவையும், திறமையையும் பெறுதல். குறிப்பாக, சமநிலை உணவு, சாமானிய உடை, பிற குறைந்தபட்சத் தேவைகள்.

ஈ. அடிப்படையான விஞ்ஞான தத்துவங்கள், சமூக தத்துவங்கள், இயந்திர தத்துவங்கள் பற்றிய திறமை

சாமானிய வாழ்க்கையிலும் இயற்கையிலும் வெளிப்படுகின்ற அளவுக்கு.

1. ஆதாரத்தொழில், பிறதொழில் பற்றி உபயோகிக்கிற கருவிகள், தளவாடங்கள் சம்பந்தமான இயந்திர தத்துவங்கள், கணித உண்மைகள் பற்றிய அறிவு.

2. உணவுப் பொருள் பயிரிடுதல், பருத்தி பயிரிடுதல், சமையல், வீட்டு வேலைகள் செய்தல், ஆதாரத் தொழில், சுகாதார வேலைகளுக்கு ஆனமுறைகள் இவற்றில் அடங்கிய பௌதிக, ரசாயன, உயிர் நூல் தத்துவங்கள்.

உ. குடிமைப் பொறுப்பேற்கும் திறமை

1. கூட்டுறவான சமூக அமைப்பு என்ற லக்ஷ்யத்தை அறிதல், பிறரோடு ஒத்துழைக்கும் ஆற்றல்.

2. பிரதேச சுயதேவைப் பூர்த்தி, குடிசைத் தொழிற் பொருள்களை உபயோகித்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பரவல் முறைப் பொருளாதாரத்தின் நன்மைகளை உணர்தல். கிராமம், நகரம் இவற்றுக்கிடையே இருக்கவேண்டிய நல்லுறவு பற்றிய அறிவு.

3. கூட்டுறவுச் சங்கங்களின் ஸ்தானமும், அவற்றின் நன்மைகளும் பற்றிய சாமானிய அறிவு, அவை அமைப்பதற்கான கருத்துக்கள்.

4. பத்திரிகைச் செய்தி படிப்பதால் இந்தியாவையும், உலகையும் பற்றி வரவேண்டிய பொருளாதார, சமுதாய, அரசியல் பிரசினைகள் பற்றிய அறிவு.

5. இன்றைய நிலைகளை அறிவதற்கு அவசியமான அளவுக்கு இந்தியா, உலகம் பற்றிய பூகோளம், சரித்திரம் உலகத்துச் சிறந்த மதங்களை ஸ்தாபித்தவர்கள், அவர்களுடைய போதனைகள், ஆங்காங்கு நடைபெறும் விழாக்கள், சந்தைகள் முதலியவற்றின் சமய சமுதாய சரித்திரக் கருத்துக்கள்.

ஊ. கருவிப் பாடங்களில் போதிய திறமை

மொழியும் கணக்கும் கருவிப் பாடங்கள் என்று சொல்லப்பெறும். 'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' அல்லவா? இந்தப் பாடத் திறமைகள் பிள்ளைகள் தங்கள் தினசரி வேலைகளைச் செம்மையாய்ச் செய்வதற்கும் கல்வி முடிந்தபின் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் அவசியமானவை.

மொழி - தமிழ்

1. பொதுக் கூட்டத்திலும், பள்ளிக் கூடத்திலும், பள்ளிக்கோ, கிராம சமூகத்துக்கோ சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றித் தெளிவாக ஓட்டமாகப் பேசும் திறமை. கருத்துக்களைத் தெளிவாகவும், திருத்தமாகவும் எழுதும் திறமை.
2. திட்டமிட்ட அறிக்கை தயாரிக்கும் திறமை.
3. ஹிந்தி தாய்மொழியாக இல்லாதவிடத்து, எளிதாக ஹிந்தி பேச, வாசிக்க, எழுத அறிதல்.

கணக்கு

வாழ்க்கை சம்பந்தமாகத் திருத்தமாகவும், வேகமாகவும் கணக்குப் போடத் தெரியவேண்டும்.

1. எண்களின் கருத்து.

2. பல அளவைகளை ஒட்டிக் கூட்டல், கழித்தல் முதலியன.
3. செயல் முறையில் நில அளவு.
4. சாமானிய வரவு செலவுக் கணக்கு.
5. சதவிகிதம், விகிதம் போன்ற பலவகைக் கணக்கு.

எ. உண்மையான கலையை உணரும் தன்மை

நல்ல கலையுணர்ச்சி, சமூகத்தைக் கவரும் கேளிக்கை நடத்தும் ஆற்றல், ஓய்வு நேரத்தை லாபகரமாவும், இன்ப கரமாகவும் உபயோகிக்கும் ஆற்றல்.

1. தாய் மொழியில் நல்ல இலக்கியப் பயிற்சி.
2. ஓவியக்கலை, ஓவியம், வர்ண ஓவியம், மண் உருவம் முதலியவற்றில் பயிற்சி.
3. கர்நாடக சங்கீதம், நாடோடிச் சங்கீதம் இவற்றில் பயிற்சி.
4. தோத்திரப் பாடல்கள், தேசியப் பாடல்கள் சேர்ந்து பாடும் தன்மை.
5. சுற்றுப்புறம் நடைபெறும் அலங்காரக் கலைகளில் பயிற்சி. தன் உடையலங்காரம் வீட்டு அலங் காரம் முதலியவற்றில் நல்லது கெட்டது அறி யும் விவேகம்.
6. பள்ளிக்கும், சமூகத்துக்கும் ஏற்றவாறு நாடகம், விழாக்கள், கலா நிகழ்ச்சிகள் நடத்தும் ஆற்றல்.

80. முடிவுரை

ஆதாரக் கல்வி என்பது, புத்தகத்தை மையமாக வைக் கிற கல்வி முறையன்று; குழந்தையே மையமாகக் கருதிக் கல்வி வளர்க்கும் முறையாகும். எனவே இது வாழ்க்கையே மையமாகவுடைய கல்வி. உடல் உழைப்பே கடவுள் வகுத்த நெறி என்பது ஏசுநாதர் போதனை, டால்ஸ்டாயின்

மதம்; இது காந்தியத்தின் அடிப்படைகளில் ஒன்று. கீதை யின் போதனை இதுவே என்பது காந்தியடிகள் கருத்து. இந்த நிலையை ஏற்று, இம் முறையில் இந்தக் கல்விக்குத் தொழில் அடிப்படையாயிருக்கிறது.

இக்கல்வியால் நம் நாட்டில் இன்று காணப்படும் புற அழுக்கு, அசுத்தம் என்பன மறையும். அழுக்கும் அசுத்த மும் மண்ணுடன் சேர்ந்து மட்கினால் நிலத்துக்கு உரம், விளைவு பெருக இது வழி. இதனால், ஊரெங்கும் அழகு குடிகொள்ளும். உண்மையான செல்வம் பெருகும்.

மக்களிடம் நல்ல ஆரோக்கியம் நிலவும். உடல் வலிமை யும் ஒளியும் ஓங்கும். சோர்வு நீங்கும். நோய்களும் மரண வீதமும் குறையும். முயற்சியும் முயற்சி தரும் இன்பமும் எங்கும் பெரும் பலன் தரும்.

நாடெங்கும் பயிர்த்தொழில் செம்மையாய் நடக்கும். விளைவு பெருகும். மாடுகள் பெருகி, குழந்தைகளுக்குப் பால் ஏராளமாய்க் கிடைக்கும். ஏழை எனப்படுபவனும் பணக்காரனும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வேண்டிய (சமநிலை) சீருணவு பெறுவான். கிராமம் வாழ, நகரம் வாழும், நாடு முழுமையுமே வாழும்.

உடைக்கு வேண்டியன யாவும் இங்கேயே உண்டா கும். எல்லோருக்கும் கௌரவ வாழ்க்கைக்கு அவசிய மான உடை அவரவர் முயற்சியாலேயே வரும்.

எல்லோருக்கும் இதனால் சுதந்திரம் வரும். ஏழை யென்றும் அடிமையென்றும் எவனுமிரான். ஜீவனோபாயம் எல்லோருக்கும் தெரியும். சுதந்திரமாய் வாழ்வதற்கான துணிவும் தன்னம்பிக்கையும் அஞ்சாமையும் வழியும் அனைவருக்கும் பிறக்கும்.

எல்லோரும் கடமையை உணர்ந்து செய்து பூரண உரிமை பெறுகிற பிரஜைகளாக வாழ்வார்கள். 'சாதிமத வேற்றுமையும் பிணக்கும் அறும். ஆடவனை யொத்த பூரண உரிமை வாழ்வு பெண்ணுக்கும் வரும். தனி மனிதன்

தன் நலத்தை ஓரளவு மறந்து, சமூக வாழ்க்கைக்குத் தன் சேவையை மனப்பூர்வமாகத் தருவான்.

பொது வாழ்க்கை தூய்மை அடையும். இன்று காணப்படுகிற ஊழல்கள் நீங்கி எங்கும் தியாகமும், தன்னல மின்மையும், அர்ப்பண சேவையும் நிலவும். இதன்பயனுக இந்திய நாடு, ஆன்மத் துறையிலும், ஒரே உலகம் என்ற கருத்தளவிலும், உலகுக்கு வழி காட்டவல்ல உண்மையான தகுதி பெற்றிருக்கும்.

அருங்கலைகள் எங்கும் வளரும். கலை - ஓவியம், சிற்பம், இலக்கியம், நடனம் என்பன பெருகும்; நாகரிகமும் பண் பாடும் அனைவரிடமும் பொருந்தும்.

இக்கலைகள் மனிதனுடைய சித்தத்தைத் தூய்மை யாக்கி அவனை மேம்படுத்தும். அவனிடம் கடவுட் பக்தி நிலைபெற்றிருக்கும். அன்பே சிவமாகவும் கடவுளே சத்தியமாகவும் அவன் காண்பான். அவனுடைய நித்திய விவகாரங்களும் சமூகத்தின் பொது விவகாரங்களும் சர்வ தேச விவகாரங்களும் அன்பு சத்தியம் என்ற அடிப்படை யில் நிகழும்.

காந்திய ஆதாரக்கல்வி இத்தனையும் செய்யுமென்று எதிர்பார்க்கிருேம்.

சர்வகலாசாலைக் கமிஷன் அறிக்கையில் உள்ள பின் வரும் பகுதியை இங்குக் குறிப்பிடுதல் பொருத்தமாய் இருக்கும்: "நம் நாட்டுச் சரித்திரத்தின் போக்கை நிர்ணயிக்கத்தக்க இந்தத் தருணத்தில்(1949), அகில உலகத் துக்கும் அடிப்படையில் சிறந்த பயனுள்ள ஒரு கல்வியின் திட்டமும் வேதாந்தமும் எடுத்துக் கூறக்கேட்பது எங்களு டைய மிகச் சிறந்த பாக்கிய மென்று கருதுகிருேம். எந்த விதமான நவபாரதம் உருவாக வேண்டும் என்று நம்மில் அனேகர் விரும்புகிருேமோ அந்த விதமான நவபாரதத்தை இக்கல்வி தோற்றுவிக்கும். இக்கல்வித் தத்துவம் முழுமை யும் ஒன்ருய்க் கருதும்போது, மக்கட் பிறப்பின் குணச்

சிறப்பை நிறைவேற்றவும் செம்மை யாக்குவதற்குமான முறையின் வித்துக்களை இது கொண்டிருக்கிறது. இத்தத்துவத்தில் அடங்கிய ஞானமும் பெரும் சிறப்பும் ஆண்டுகள் செல்லச் செல்லத் துலக்கம் பெறுவதோடு, காலம், விமரிசனம் என்ற பரீட்சையையும் இது கடந்து நிற்கும் என்பது திண்ணம்.''

81. பிற்குறிப்பு

சென்னை ராஜ்யத்தில் ஆதாரக் கல்வியின் நிலைமை

சென்னை ராஜ்யத்தில் ஆதாரக்கல்வி வளர்ச்சி பற்றிய சில புள்ளி விவரங்கள் கீழே காணலாம். இவை கல்வி இலாகாவினர் வெளியிட்ட 1959 மார்ச்சு முடியவுள்ள அறிக்கையில் காணப்படுவன :

ஆதாரப் பாடசாலைகளின் தொகை: 3459.
உயர் ஆதாரப் பாடசாலைகள்: 3. பிள்ளைகள் : 713.
ஆசிரியர் பயிற்சிச்சாலைகள் : 105. மாணுக்கர்: 12,500.
ஆசிரியப் பயிற்சி பெறும் மாணுக்கருக்கு அளிக்கும் உதவித்தொகை ரூ. 18.

வழக்கம்போல் ஆசிரியர் மறுபயிற்சியும், ஆசிரியைகளின் மறுபயிற்சியும், பட்டம் பெற்ற ஆசிரியர்களின் மறுபயிற்சியும் நடைபெறுகின்றன. ஆதாரப் பள்ளிகளுக்கு ஆசிரியர் தொகை, பிள்ளைகளின் எண்ணிக்கை இரண்டையும் ஒட்டி, தொழில் செய்வதற்கான மூலப் பொருள் வாங்குவதற்காக அரசினர் மொத்தமாகப் பணவுதவி செய்கிறுர்கள். இதைப் பருத்தி போன்ற பொருள் வாங்கப் பயன்படுத்தி, ஆசிரியர்கள், கிடைக்கும் வருவாயில் பள்ளி மதிய இலவச உணவுத் திட்டத்துக்குப் பயன் படுத்தலாம் என்பது இப்போதுள்ள கல்விஇலாகாத் திட்டம்.

பகல் உணவுத் திட்டங்கள் (31-3-59) 12,000. உணவு கொள்ளும் பிள்ளைகள் 3,84,000. 1960 ஆகஸ்டு வரை

நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் 120. பயன் பெறும் பள்ளிகள் சுமார் 17,500.

பெரும்பாலான ஆதாரக்கல்விப் பயிற்சிச் சாலேகளேச் சுற்றியுள்ள ஆதாரப் பாடசாலேகளில் சுமார் 60 வரை ஆதாரப் பாடசாலேயாக மாற்றி அங்கு ஒரு தனி கண் காணிப்பாளரையும் கல்வி இலாகாவினர் ஏற்படுத்தியிருக் கிருர்கள். இப் பாடசாலேகள் சேர்ந்த பிரதேசத்துக்கே ஆதாரக்கல்வி வட்டாரம் என்று பெயர். இங்குள்ள ஆசிரியர் அனைவரும் ஆதாரக்கல்வி பயிற்சி பெற்றவர்கள். இவர்களுக்கென்று ஆண்டுதோறும் இரண்டு மாதத்துக் கொரு மகாநாடு அந்தந்தப் பயிற்சிச்சாலேயில் நடைபெறு கிறது. ஆண்டில் 5 மகாநாடுகள். இவை முழுநாள் மகா நாடுகள். இவற்றுக்காகும் உணவுச் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளுகிறது.

சிறப்பான பயிற்சிச் சாலேகளில் ஆதாரப்பள்ளித் தலேமையாசிரியர்களின் கருத்தரங்கு நடைபெறுகிறது. இது அரசினர் செலவில் 6 நாள் நடைபெறும். ஆண்டில் மூன்று கருத்தரங்கு.

இதுவுமன்றி, ஆண்டுதோறும் கல்வி இலாகாவினர் பிரதேச ஆதாரக்கல்வி மகாநாடுகள் நடத்துகிருர்கள். ஒன்று, மதுரைப் பிரதேசத்துக்கு, மற்றது கோயமுத்தூர்ப் பிரதேசத்துக்கு. எட்டு ஆண்டுகளாக ஒவ்வொரு முறையும் மூன்றுநாள் வீதம் இம் மகாநாடுகள் நடைபெறுகின்றன. இங்கு கல்வி இலாகாத்தலேவர், துணேத்தலேவர், ஜில்லா அதி காரிகள், கண்காணிப்பாளர், பயிற்சிச்சாலே ஆசிரியர்கள், பாடசாலே ஆசிரியர்கள் சிலர்—இவர்கள் கூடித் தங்கள் பிரசினேகளேயும் வேலேத் திட்டங்களேயும் பரஸ்பரம் பேசி முடிவு காண்கிருர்கள்.

ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் நடத்தும் அகில இந்தியக் கல்வி மகாநாடுகள் இரண்டு தமிழ் நாட்டில் நடை

பெற்றன. ஒன்று 1949இல் ராமகிருஷ்ண வித்தியாலயத்தி லும், மற்றது 1956இல் காஞ்சிபுரத்திலும். இரண்டிலும் ஆசாரிய விநோபா வந்திருந்தார். ஆதாரக்கல்வி அரங்கு கள் காந்தி நினைவு நிதியின் சார்பில் ராமகிருஷ்ண வித்தியா லயத்திலும், கல்லுப்பட்டியிலும் நடைபெற்றுள்ளன.

ஆதாரக் கல்விக்கான நூல்கள் பல காந்தி வித்தியா லயத்தில் வெளியாகியுள்ளன. சில ராமகிருஷ்ண வித்தியா லயச் சார்பில் வெளியாயின. காந்தி நினைவு நிதியார் ஆதாரக்கல்வி வெளியீடுகளுக்கு உதவி செய்கிறார்கள். சர் வோதயப் பிரசுராலயத்தாரும் பல நூல்கள் வெளியிட் டிருக்கிறார்கள். கல்வி இலாகாவினரும் வகுப்புவாரியான செயலை யொட்டிய வாசிப்புப் புத்தகங்கள் வெளியிட்டு வருகிறார்கள்.

எட்டு வகுப்பென்பது, புதுத்திட்டப்படி எழாகக் குறைந்திருக்கிறது. ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாயம்; பாடப் புத்தகம் அரசாங்கத்தாரே வெளியிட் டிருக்கிறார்கள்.

ஆசிரியர் சம்பள விகிதங்கள் புதிய திட்டத்தின்படி மிகவும் உயர்ந்திருக்கின்றன. இவ்வுயர்வினால் கவரப்பட்டு, முன்னிலும் திறமையான இளைஞர்கள் ஆசிரியத்துறைக்கு, எதிர்காலத்தில் வருவார்கள் என்றும் பெரும்பயன் விளைவிப் பார்கள் என்றும் நாம் நம்பலாம்.

பொருள் அகராதி

அகக்கட்டுப்பாடு 117, 153, 156
அட்டை வேலை 71, 72
அடிப்படைக் கல்வி 37
அடிமை நிலை 12
அண்ணாவும் அக்காவும் 154
அணுக்குண்டு 10, 167, 169
அவிநாசிலிங்கம் 153
அழகு 59
அறிவியல் ரீதியாகக் கற்றல் 69
அறிவு பூர்ணமான ஒன்று 60
அன்பும் சத்தியமும் 44, 203
அனுபவ அறிவு 16, 47, 48, 144
அனுபவம் 60, 79, 174
அஹிம்சையும் சத்தியமும் 158, 192, 203
ஆக்க உணர்ச்சி 77
ஆக்கமும் உடைமையும் 13
ஆக்கவேலை 67, 129, 138
ஆங்கிலக்கல்வியின் கேடு 22
ஆங்கிலப் பாடம் 111
ஆங்கிலப் பாடம் போதித்தல் 112, 113
ஆங்கிலமொழி 22, 39
ஆசிரியர் 165, 183, 188, 189
இலக்கணம் 189
ஆசிரியர் நூற்றல் 136
ஆசிரியரின் கைத்தொழில் தகுதிகள் 187
சமூகத் தகுதிகள் 186
சுதந்திரம் 129
சொந்தத் தகுதிகள் 186
தகுதி 139
தொழில் தகுதிகள் 187
முன்மாதிரி 95, 185
ஆண்டான் அடிமை 193
ஆண்மை தரும் கல்வி 17
ஆணும் பெண்ணும் சேர்ந்து படித்தல் 50
ஆதாரக்கல்வி 87, 94
ஒரு வாழ்க்கை வேதாந்தம் 169
ஆதாரக்கல்விக்கான வயது 32, 33, 35, 36
ஆதாரக்கல்வியின் நோக்கங்கள் 194 - 5
ஆதாரக்கல்வியின் பிரிவுகள் 40, 87
ஆதாரக்கல்வி - ஜூனியர், சீனியர் 37
ஆதாரத்தொழில் ஒரே தொழில் தான் 74
ஆதாரத்தொழில்கள் பல 73
ஆதாரப்பாடசாலையின் இலக்கணம் 189
ஆர்ம்ஸ்ட்ராங் 52, 80, 81, 109, 188
ஆரம்பக் கல்வி 57
ஆரம்பக் கல்வியே பிரதானம் 6, 27
ஆரோக்கிய நிலை 13
ஆரோக்கியப் பாடம் 95
ஆரோக்கியம் 58, 106
ஆரோக்கிய வாழ்வுக்கான திறமை 197

ஆளுமை 40, 121
ஆளுமையின் கல்வி 95, 145
ஆளுமையின் பொருள் 40
ஆன்ம வளர்ச்சி 92
இயற்கைச் சூழ்நிலை 126, 127, 150
இயைபு போதனை 128
இயைபு போதனை சேர்த்தலும் விடுத்தலும் 128
இயைபு முறை 149
இருப்பிடம் பற்றிய தொழில் 64
இலவசக் கல்வி 38
"இவ்வளவு கீழானவர்க்கும்"162
இளங்குமரப் பருவம் 50
இன்பம் இருவகை 13
இன்றைய கல்வியின் குறைபாடு 21
இன்றைய பாடத் திட்டத்தின் குறைபாடு 24
உடலுழைப்பு 162, 168
உடற் பண்புகள் 143
உடற்பயிற்சி 28, 99
உடைபற்றிய தொழில் 64
உணவளித்தல் 89
உணவு பற்றிய தொழில் 64
உத்தியோகம் 12, 78
உயர் ஆதாரக்கல்வி 87, 100, 125
உயர் ஆதாரக்கல்விக்கு அடிப்படை கிராமக் கைத்தொழில் 103
உயர் ஆதாரக்கல்விக்கு அடிப்படைத் திட்டங்கள் 102
உயிர்ப்பண்புகள் 144
உலக சமாதானம் 167
உலகத்துப் பிரஜை 13
உழைப்பில் இன்பம் 183
உழைப்பின் உடலும் ஆன்மாவும் [79
உழைப்பின் உயர்வு 41, 114
உழைப்பின் மூலம் கட்டுப்பாடு 114, 119
உழைப்பின் மூலம் கல்வி 41, 102, 144
உழைப்புக்கு மதிப்பு 12
உழைப்பே உயர்வு 137
உள்ளப் பண்புகள் 143
உற்பத்தி - கல்வி இலாகா திட்டம் 141
உற்பத்திக்குறைவுக்குக்காரணம் 141
உற்பத்திக் குறைவுக்குப் பரிகாரங்கள் 142
உற்பத்தித் திறன் 45
உற்பத்தி பெருகும் வழி 117
உற்பத்தி பெருகுவதற்குத் தேவையான பண்புகள் 117
உற்பத்தியான பொருளின் பண மதிப்பு 70
உற்பத்தி வேலையின் நற்பண்புகள் 70
எண்ணெய் ஆட்டுதல் 84
எழுத்தறிவு கல்வியன்று 5, 15
எழுத்தறிவு கற்பித்தல் 6
எழுத்துப் படிப்பு 106
எழுத்துப் படிப்பு கைத்தொழிலுக்குச் சாதனம் 147
எழுத்துப் படிப்பும் கைத்தொழிலும் 146
ஏசுநாதர் போதனை 202
எட்டுச்சுரைக்காய் 60
எட்டுப்படிப்பு 7, 47, 48, 65, 78
ஒத்துழையாமை இயக்கம் 29

ஒருமித்த கல்வி 145
ஒருமித்த வளர்ச்சி 17, 40, 41, 47, 49, 57, 77, 116, 146, 152
ஒரே உலகம் 167, 169, 203
ஒழுக்க அடிப்படை 138
ஒழுக்கப் பண்புகள் 15
ஒழுக்கப் பயிற்சி 28
ஒழுங்கும் கட்டுப்பாடும் 118
ஒழுங்கு முறையின் பொருள் 118
ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல் 10, 45, 77
ஓவன், ஜே. ஏ. 183
கட்டாயக் கல்வி 38
கட்டாயக் கல்வி வயது 175
கட்டிட வேலை 176
கட்டுப்பாடு 118
கடமையுணர்ச்சியும் நல்லொழுக்கமும் 117
கடமையும் உரிமையும் 113
கடையருக்கும் இங்கு கடைத்தோற்றம் 83
கண்காட்சி 173, 192
கண்காட்சிக்கான தலைப்புக்கள் 176
கண்காட்சிக்கான பொருள் 174
கண்காட்சியும் காந்தியும் 173
கணக்குப்பாடம் 91, 98, 200
கதர்த்தொழில் சோறு போடும் 157
கர்ப்பம் முதல் மயானம் வரை 26, 56, 93
கர்மேந்திரியம் 16
கருமான் வேலை 71, 72
கருவிப்பாடம் 200
கல்லுப்பட்டி உயர் ஆதாரக் கல்வி விவாத அரங்கு 104
கல்வி இலக்கணம் 143
கல்விக்கான வயது 124
கல்விக்கு உழைப்பு ஒரு கருவி 115
கல்விக்குக் கருவி புத்தகம் 69
கல்விக்குச் செலவு 23
கல்வித் திட்டத்துக்கு இரண்டு அடிப்படை 76
கல்வித்துறை அடிப்படை 48
கல்விப் பயிற்சிக்கு ஆனந்தம் அடிப்படை 75
கல்வி பிறக்கும் சூழ்நிலைகள் 175
கல்வி-முன்னேற்றப் பாதை 20
கல்வியில் சுதந்திரம் 128
கல்வியில் புரட்சி 7, 9, 25
கல்வியில் விரயம் 23
கல்வியின் நோக்கம் 14, 21
கல்வியின் பண்பும் பயனும் 16
கல்வியின் பொருள் 5
கல்வியும் கள்ளும் 30
கல்வியே லக்ஷ்யம், உற்பத்தி அன்று 50
கல்வி வயது 38
கலை 176, 183, 184, 203
கலை உணர்ச்சி 13, 71, 201
கலைத் திட்டம் 85, 108
மாறக்கூடியது 87
கலையின் பிறப்பு 19
கலைப் பாடம் 99, 201
கள் குடியும் கல்வியும் 30
காகிதம் செய்தல் 84
காங்கிரஸ் ஆட்சி 30
காங்கிரஸ் ஸ்தாபனம் 175

காந்தி 30, 33, 39, 52, 86, 112, 113, 163, 166, 169, 170, 173, 175
காந்தி செருப்புத் தொழில் கற்றது 5
காந்தியக் கல்வி 28, 37, 203
காந்தியடிகள் கருத்து 5, 76, 27, 31, 52, 53, 54, 56, 93, 101, 108, 133, 134, 141, 146, 157, 158, 292
கிராமச் சீர்திருத்தம் 107
கிராம சர்வகலாசாலை 104
கிராம நாகரிகம் 107
கிராமமும் நகரமும் 170, 202
கிராம ராஜ்யம் 139
கிராம வாழ்க்கை 23, 43, 44, 57, 69, 139
கீதை 162, 202
குடி தண்ணீர் 164, 191
குடிமைப் பயிற்சி 155, 167
குடிமைப் பொறுப்பேற்கும் திறமை 199
குமரப்பா 33, 42, 80, 84
குருட்டுப் பாடம் 66
குழந்தை இயல்பு 54, 55, 65
குழந்தையின் தேவையே முதன்மை 163
குழந்தையே பிரதானம் 54, 79
குழந்தை வளர்ப்பு 106
குற்றம் ஒரு நோய் போல 123
குறள் 11, 13, 62, 67
குறிக்கோள் இன்மை 23
குஷ்டரோக சேவை 158, 160
கூட்டு வெற்றி 168
கூட்டுறவு 12, 59, 156, 199
கூட்டுறவு வேலை 195
கெர் கமிட்டி 34
கெர் கமிட்டி சிபாரிசுகள் 35
கைத்தொழிலால் பணலாபம் 80
கைத்தொழிலால் மனிதப்பண்பு 80
கைத்தொழிலே நோக்கம் 147
கைநூல் இழுத்தல் 181
கொடிமைதானம் 191
கோலரிட்ஜ் 9
சங்கீதம் 91, 99, 201
சத்திய சமாஜம் 193
சத்தியமும் அன்பும் 10, 144, 168, 192, 193, 203
சத்தியமே கடவுள் 10
சத்திய வாழ்க்கை 197
சபர்மதி ஆசிரமம் 84
சம்பரான் சத்தியாக்கிரகம் 29
சமயபோதனை 108, 144
சமவாயமுறை 149
சமுதாய நலத்திட்டம் 165
சமுதாயப் புரட்சி 86
சமூக அடிப்படை 41, 139
சமூக அநீதிகள் 155
சமூகக் கூட்டு வாழ்க்கை 167
சமூகச் சீர்திருத்தம் 166
சமூகச்சூழ்நிலை 126, 123, 150
சமூகசாஸ்திரம் 98, 176
சமூக லக்ஷ்யம் 9
சமையல் 98
சர்வகலாசாலையின் ஆதிக்கம் 25
சர்வகலாசாலைக் கமிஷன் அறிக்கை 203
சர்வஜனக்கல்வி 27, 38, 39
சர்வஜனக்கல்வித் திட்டம் 163
சர்வோதய சமுதாயம் 163, 192

சர்வோதயத்தின் தோற்றுவாய், பொருள் 160, 162
சர்வோதயம் 78, 161, 192
சாஸ்வதித் தத்துவம் 115
சாதியால் வேற்றுமை 114
சாதியால் வேற்றுமையின்மை 11
சாதிவேற்றுமை போக்கல் 42, 159
சாந்தி நிகேதனம் 85, 167
சார்ஜெண்ட் 34
சிகாகோ பள்ளி 29, 83
சித்திரப்பாடம் 110
சித்திரம் 91
சிந்தனையை வளர்த்தல் 19
சிந்தித்தல் 132
சீனப்பழமொழி 14
சுகாதாரம் 90, 160
சுதந்திரத்தின் பொருள் 129
சுதந்திரமும் கட்டுப்பாடும் 118, 154
சுய ஆட்சிமுறை 185
சுய ஆட்சிமுறையினுல் நன்மை 153
சுய கட்டுப்பாடு 129
சுய தேவைப்பூர்த்தி 89, 133, 139, 162, 167, 187, 189, 199
சுயநலத்தை மறத்தல் 18, 203
சுரண்டல் 12, 21, 63, 193
சூழ்நிலை 15, 126
சூழ்நிலை மாறுதல் 61
செய்து கற்றல் 29, 64
செயல் திட்டங்கள் 108
செயலால் அனுபவம் 77
செயலால் ஆராய்ச்சி 157
செயலே பரிசு 121
செருப்புத் தைத்தல் 5, 71, 84
செலவைச்சரிக்கட்டுதல் 30, 32 133
கல்விக்கு உரைகல் 8
சென்னையில் ஆதாரக்கல்வி 204
சேவாகிராம ஆசிரமம் 73, 84
சேவாகிராமக் கல்வி 37
சோதனை அடிப்படை 79
சோப்பு செய்தல் 84
ஞாபகசக்தி 40, 131
ஞாபகசக்திக்குப் பயிற்சி 129,
ஞானேந்திரியமும் கர்மேந்திரியமும் 16
டஸ்கஜீ பள்ளி 82
டால்ஸ்டாய் 202
டால்ஸ்டாய் பண்ணை 28, 83
டிரெண்ட் பிரபு 105
டியூயி 29, 51, 83
டியூயி கருத்து 125
தகவல் பலகை 191
தச்சு வேலை 69, 71
தண்டனை 122,
தண்டனைக்கு இருபொருள் 123
தண்டனையின் நோக்கம் 123
தமிழ்நாட்டு விளையாட்டுகள் 100
தமிழ்ப்பாடம் 200
தற்சார்பு 130, 138
தன்கையே தனக்கு உதவி 170
தன்னம்பிக்கை 59, 119, 120, 129, 138
தன்னம்பிக்கைப் பயிற்சி 48, 165, 198
தனக்குத் தானே உதவுதல், 81
தாகூரின் சாந்தி நிகேதனம் 85, 167,
தாய்மொழிப் பாடம் 91,97,200

தாய்மொழியில் பாடம் 48
தாயுமானவர் 18
தாலிமி சங்கம் 34, 37, 38, 53, 73, 194, 197, 205
திருமூலர் 63
திறமை அடையும் வழி 178
திறமை, பழக்கம், மனப்பான்மை 20, 177
திறமையில் அப்பியாசம் 180
தினசரி வருமானம் 45
துணைத்தொழில்கள் 106
துப்புரவு ஆரோக்கியம் 176
துப்புரவுப்பாடம் 95
தூய்மை - அகம் - புறம் 13
தென் ஆப்பிரிக்கா சத்தியாக்கிரகம் 28
தேசிய ஆதாரக்கல்வி 28, 32
தேசியவிஸ்தரிப்புத்திட்டம் 165
தேவநிலை 9, 14
தேவைகள் மூன்று 62, 63
தொட்டில் முதல் மயானம் வரை 20, 40
தொல்காப்பியம், 13
தேசிய ஆதாரக்கல்வி 28
தொழில் கற்பிப்பதற்குக் காரணங்கள் 76
தொழில் பரிசோதனையன்று 75
தொழில் மூலம் கல்வி, 6, 8 37, 38, 41, 76, 134
தொழில் வளர்ச்சிப் பண்புகள் 70
தொழிலால் வருமானம் 135
தொழிலால் வேற்றுமைகள் நீங்குதல் 140
தொழிலாளி ஆக்குவது நோக்கமன்று 69
தொழிலில் சிரத்தை 138
தொழிலில் திறமை வரும் வழிகள் 177
தொழிலுக்கான சில அம்சங்கள் 164
தொழிலுக்குப் பண மதிப்பு 75
தொழிலுக்குரிய நேரம் 134
தொழிலுக்கு வேண்டிய தன்மை 69
தொழிலே விளையாட்டும் விஞ்ஞானமும் 76
தொழிலை விஞ்ஞான ரீதியாக் கற்றல் 5
தொழிற்கல்வி 38, 74
தொழிற் சூழ்நிலை 126
தோட்டத்தொழில் 176
தோட்டவேலை 71, 162,
தோட்டவேலைக்கு முதன்மை 142
தோட்டவேலைக்கு வயது வேண்டும் 71
தோட்டவேலைப் பாடம் 96, 97
தோட்டவேலை வருமானம் 135
தோல் தொழில் 71
நகர மோகம் 43
நடைமுறைச்செலவு 134
நயீதாலிம் 37
நன்னூல் 14
நாகரிக அழிவு 42
நாட்டுக் கைத்தொழில் 159
நாட்டு நடப்பு 128
நியாயசபை 153
நிர்மாணத்திட்டம், வகைகள் 157
நீக்ரோக்கல்வி 81
நீதி தரும அடிப்படை 92
நூற்புத்தொழில் 176

நூற்றல் ஏன் ஆதாரத்
தொழில் 71-3
நூற்றல் கலை 30
நூற்றல் நெசவு 69, 71, 189
நூற்றல் பாடம் 96
நூற்றல் மூலம் பாடம் 149
நெசவுத் தொழில் 73, 136
நோக்கம் உணர்த்துதல் 177
நோய் சிகிச்சைக்குத்தொழில்76
பகுத்தறிவே சிறந்தபேறு 18
பஞ்சாயத்துக்கௌன்சில் 165
பஞ்சு வெட்டுதல் 136
பண்டமாற்றுமுறை 156
பண்பாடு 16
பண்புகள் 172
பண்புகள் மூவகை 15, 165
பண்புகள் விளக்கம் பெறுதல்70
பண்பு வளர்ச்சி 39
பத்திரிகைச் செய்தி 128, 200
பயிர்த்தொழிலுக்குவரையறை72
பயிலும் போது பொருள்
தேடுதல் 49
பயிற்சி மூவகை 81
பரவல் முறை, குவியல்முறை
101, 199
பரிசும் தண்டனையும் 121
பரிசு வகைகள் 121
பரீட்சை 35, 130, 173
பரீட்சையின் பொருள் 131
பருத்தி அரைத்தல் 136
பழக்கங்கள் 177, 181
பழக்கங்கள் சில 92, 184
பழக்கமும் கட்டாயமும் 181
பள்ளிக் கண்காட்சி 174
பள்ளியில் பழக்கம் 182
பற்றுக்களை வளர்த்தல் 18
பனை வெல்லம் செய்தல் 84
பாடங்களின் ஒற்றுமை 86
பாடசாலைக்கட்டிடம் 190
பாடசாலைத் தோட்டம் 190
பாடசாலை தொழிற்சாலையல்ல
76
பாடசாலையில் சுய ஆட்சிமுறை
152
பாடசாலையில் பெருமை 154
பாடசாலையும் சமூகமும் 163
பாடசாலை விஞ்ஞான சாலை 76
பாடமே பிரதானம் 24, 61
பாதிநேரம் படிப்பு, பாதிநேரம்
வேலை 82
பாரதி 12, 59
பாரம்பரியம் 15, 55
பால் உணர்ச்சி 50
பால் தருதல் 89
பாலர் கல்வி 40, 87, 89
பிராணி வளர்ப்பு 91
பிராஜெக்டு முறை 62
பிள்ளைகள் 189,
பிள்ளைகளின் இலக்கணம் 189
பிள்ளைகளின் தேர்ச்சி 197
பிறப்பால் உயர்வு தாழ்வு
பீனிக்ஸ் 83
புக்கர் வாஷிங்டன் 80, 81, 82
புத்தகங்கள் 55
புத்தகத்தின் பயன் 148
புத்தகத்துக்குரிய இடம் 147
புத்தகப்புழு 171
புதியது காணும் அவா 66
புரோபல் 46, 54
புலன்கள்கள் மூலம் கல்வி 7
புலன் பயிற்சி 16, 46, 68, 75
புளூடார்க் 16

புறக்கட்டுப்பாடு 117
புறநானூறு 194
புனியாதி தாலிம் 37
பூர்வாதாரக் கல்வி 89, 124
பாடங்கள் 90
பாடசாலே 89
பொருள் 93
பூர்வாதாரப்பாடசாலேக்கட்டிடம் 90
பூர்வாதாரப் படிப்பு வயது 93
பூரண மனிதன் 15
பெண் சுதந்திரம் 11
பெண்ணின் தன்மையை யொட்டிச் செயல் 53
பெண்ணுக்கும் சுதந்திரம் 11
பெற்ரேருடைய அறிவுச் செல்வம் 28
பைபிள் 162
பேசிக் எஜுகேஷன் 37
பொதுக்கண்காட்சி 174
பொருட்காட்சி 132, 173
பொருளாதார அடிப்படை 45, [133
போட்டி 12
போட்டியும் சுரண்டலும் 168, 169, 193
போதனமுறை 25
போதனமுறையில் புரட்சி 133
போதனே உபகரணங்கள் 192
போதனேயும் கற்றலும் 79
போஸ்டு பேசிக் 54
மக்கள் ஓரினம் 41
மகன்வாடி 84
மணிமேகலே 63
மதங்களிடத்தில் மரியாதை 11
மதப்பொறை 43, 196
மதவேற்றுமை உணர்ச்சி 43
மதவேற்றுமையைப் போக்குதல் 159
மதிய உணவுத்திட்டம் 96, 204
மதுவிலக்கு 133, 159
மந்திரிசபை 153
மரியாதை 196
மலக்கூண்டு 181
மனப்பான்மை 177, 185
மனம் பூர்தொட்டியன்று 16
மனேதத்துவ அடிப்படை 46, 76, 137
மாகாண சுயாட்சி 30
மாண்டிசோரி 54, 76
மாண்டேக் செம்ஸ்போர்டு திட்டம் 30
மாதர் முன்னேற்றம் 159
மார்கன் 44
மார்வாரீச் சங்கம் 32
மீன் பிடித்தல் 81
முதியோர் கல்வி 93
மூலக்கல்வி, மூலாதாரக்கல்வி 37
மூலதத்துவங்கள் 39
மூலதனச் செலவு 136
மூலதனச் செலவு கூடாது 60
மூலப்பொருளின் தன்மை 70
மூலிகைத்தோட்டம் 96
மூவகைப் பண்புகள் 114, 131
வளர்ச்சி 5, 28, 137, 145
மூளேக்குப் பயிற்சி 21
மெட்ரிகுலேஷன் 6, 38, 114, 113
யந்திரயுகம் 169
ரஸ்கின் 17, 21, 83, 162
ராமகிருஷ்ண மிஷன் 167
ராஜாஜி மந்திரிசபை 31

TN3
N48—4

ரூஸ்ஸோ 14, 76, 54
வயது வந்தோர் கல்வி 87, 89, 105, 194
பாடத்திட்டம் 105
வர்தா கல்வித்திட்டம் 37
வர்தா கல்வி மகாநாடு 31
மகாநாட்டின் தீர்மானம் 32
வாழ்க்கைக்கான கல்வி 17, 19 40, 56
வாழ்க்கைத் தத்துவம் 9
வாழ்க்கை மூலம் கல்வி 58
வாழ்க்கையில் மாறுதல் 9
வாழ்க்கையின் தேவைகள் 62, 170
வாழ்க்கையின் பண்பும் பயனும் 27, 68, 165
வாழ்க்கையே பரீட்சை 132
வாழக்கற்பது கல்வி 26
வாழும் கலை 152
விகாரத்தைக் கண்டு அருவருத் தல் 78
விஞ்ஞான அறிவு 98, 199
விஞ்ஞான அனுபவம் 62
விஞ்ஞானம் 176
விஞ்ஞான மனப்பான்மை 196
விஞ்ஞானரீதியாகக்கற்பித்தல் 5
விவேகானந்தர் 17
விழாக்கள் 165, 169
விளக்கப் படம் 177
விளையாட்டின்மூலம் கல்வி 48, 79
விளையாட்டு 91, 95, 100, 106
விளையாட்டும் வேலையும் 48, 79, 137
வின்ஷிப் கருத்து 165
விநோபா 30, 33, 206
விஷமம் 67
வீட்டில் உற்பத்தித் தொழில்71
வேர்க்கல்வி 37
வேலைகள் கல்விப் பயிற்சிக்கு முறைகள் 127
வேலை மூலம் கல்வி 27
வைத்தியர் கவனிப்பு 89
வைத்திய வசதி 90
ஹரிஜன்பத்திரிகை 28, 31, 32
ஹாம்ப்டன் கல்விச்சாலை 80, 81, 82
ஹிட்லர் 166
ஹிந்தி 12, 39, 97, 111, 200
ஹிந்துஸ்தானி தாலிமிசங்கம்34
ஹெர்பர்ட் 15, 54, 177
ஸ்பென்ஸர்21
ஜனநாயகக் கல்வி 17
ஜனநாயகக் குடியாசு 42, 44, 58
ஜனநாயகம் 185, 186, 156, 165, 168, 170
ஜனநாயக வாழ்க்கை 79, 15, 13, 125, 118
ஜாகிர் ஹுசேன் கமிட்டி 33, 53, 134, 173
ஜீவாதாரத் தொழில் 68

No. ______
108001

ஆதாரக் கல்விக்கான புத்தகங்கள்

வாழ்க்கைக்கான கல்வி—ஆர்ம்ஸ்ட்ராங் ... 0 50
இன்றைய பேச்சு : ஆதாரக் கல்வி
—ஆசாரிய கிருபலானி ... 2 00
ஆதாரக் கல்விக்குச் சோதனை ... 0 62

பாடசாலைக்கேற்ற வாசக புத்தகங்கள்

தம்பி, உனது பல் ... 0 37
தம்பி, உனது தோல் ... 0 31
களை ... 0 25
ஈ ... 0 31
வயல் கரை ... 0 37
என்ன உண்பது? ... 0 37
சிறுவர்க்கான பாடல் ... 1 00

ஆசிரியர் துணைப் புத்தகங்கள்

ஆதாரத்தொழில்—நூற்றல்—வினோபா பாவே 1 00
பாடசாலை நோய்கள் ... 1 50
தோட்டவேலை ஆசிரியர் ... 2 00
ஆதாரக்கல்வி என்றால் என்ன ?(4 ஆம் பதிப்பு) 2 50
முதல் வகுப்பு ஆசிரியர் (அச்சில்)
பிரார்த்தனைப் பாடல்கள் ... 1 25
நான் கண்ட வினோபா ... 0 40

தோட்ட வேலை

பழத் தோட்டம் ... 10 00
சீமைத்தக்காளி பயிரிடுதல் (அச்சில்)
பூஞ்செடிகள் ... 3 00
வாழைத் தோட்டம் (அச்சில்)
காய்கறித் தோட்டம் ... 5 50

மற்றவை

புத்தகமும் வித்தகமும் ... 1 00
தாலாட்டு இலக்கியம் 1 00
முக்கூடற்பள்ளு 2 25
குமரியும் காசியும் 2 00
சிதம்பரக் குறவஞ்சி 0 62

காந்தி வித்தியாலயம்,
திருச்சிற்றம்பலம், குத்தாலம் வழி